
என் சின்னக்
குட்டிம்மா
அகிலா கோவிந்த்

## ஆசிரியரின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| பொன் மகள் வந்தாள் | 80.00 |
| வெற்றித் திருமகள் | 65.00 |
| மைவிழி ராணி | 60.00 |
| கண்ணான கண்மணி | 65.00 |
| அழகி... நீ.. பேரழகி...! | 65.00 |
| மௌனமே காதலாக | 65.00 |
| காதல் தேன் நிலா | 115.00 |
| என் இனிய கண்ணாளா | 65.00 |
| தோகை இளம்மயில் | 65.00 |
| அன்புள்ள மான் விழியே | 100.00 |
| எங்கே என் தேவதை? | 100.00 |
| ரதி என்னும் அழகுக்கு | 70.00 |
| மன்னவனே வரலாமா | 70.00 |
| கண்மணி நிமிர்ந்து நில்லடி | 65.00 |
| வருகிறேன் ராஜகுமாரி | 65.00 |
| வண்ணமயில் பெண்ணொருத்தி | 85.00 |
| விழியோரப் பார்வையிலே | 70.00 |
| காக்கைச் சிறகினிலே | 80.00 |
| பால்வண்ணம் பருவம் கண்டு | 75.00 |
| வா பொன் மயிலே | 70.00 |
| அழகு மயிலாள் | 70.00 |
| காத்திருப்பேன் ராஜகுமாரா | 70.00 |
| மைவிழி மானே | 90.00 |

# என் சின்னக் குட்டிம்மா

## 1

இரண்டு குதிரைகள் பூட்டிய சாரட் வண்டி தயாராய் நின்றது. அவள் ஒன்றும் செய்யவில்லை. மெல்ல இமைகள் விரித்து துயில் எழுகிறாள். யாரோ... ஒரு குவியலாய் பணிப் பெண்கள் எங்கிருந்தோ ஓடி வருகிறார்கள். அவளது பொன்நிறமேனியில் சந்தனத்தை தடவுகிறார்கள்... பன்னீரில் நனைத்து குளிக்கச் செய்கிறார்கள்... சுகமான குளியல் முடிந்ததும் அழகுக்கு அழகு செய்யும் ஒப்பனை வேறு!

ஒப்பனை முடிந்து ராஜகுமாரியாய் வெளிவரும் அவளுக்கு படைவீரர்களின் பவ்யமான வரவேற்பு. 'ராஜகுமாரி வருகிறார்கள்! பராக்! பராக்!' என பரபரப்பான அறிவிப்பு அறைகூவல்கள்!

அவள் கம்பீரமான ராஜநடை நடந்து தயாராய் இருக்கும் சாரட் வண்டியில் ஏறுகிறாள். குதிரைகளின் கடிவாளங்களை எடுத்து வேகமாய் சுண்டப் போகிறாள்.

மறுகணமே பெரிதாய் திடுக்கிடுகிறாள்! சாரட் வண்டியில்... இரண்டு குதிரைகளாய் குதிரைகளுக்குப் பதில் அவள் அண்ணன்கள் தனசேகரனும், பொன் சேகரனும்...!

'ஸ்ஸு...! இவர்கள் எப்படி இங்கு...?' என அவள் திகைத்து ''ஐயோ! அண்ணா... நீங்கள் இருவருமா?'' என திடுக்கிடலுடன் அவள் திகைப்பாய் கேட்க பூம்பூம் மாடாய் தலையசைத்தனர்.

''நாங்கள் இருவரும் இருக்கும் போது குதிரைகள் எதற்கு? குதிரைகளைவிட வேகமாய் பறப்போம். பார்க் கிறாயா?'' என்றபடி கால்களை இருவரும் வேகமாய் உதைத்து 'ததிங்கிணத்தோம்...' செய்ய... ஆரம்பிக்க... சிரிப்புத் தாளமுடியவில்லை.

கைகளால் வாயைப் பொத்திக் கொண்டு குலுங்க குலுங்க சிரிக்கிறாள்.

சட்டென கனவு கலைந்து போயிற்று!

நிஜமாகவே விழித்து, நினைவுக்கு வந்தவள் கைக ளால் வாயை பொத்தியபடி தான் இருப்பதைக் கண்டு மறுபடியும் சிரித்தாள்.



நல்ல கனவு இது! அவள் ராஜகுமாரியாம்! சாரட் வண்டியில் ஏறுகிறாளாம். வண்டியில் குதிரைக்குப் பதில் இரண்டு அண்ணன்மார்களுமாம்!

'ஐயோ...! நல்ல கூத்து இது...!' என செல்லமாய் தன் தலையில் குட்டிக்கொண்டு எழுந்தாள். பரபரவென முகம் கழுவி பல் தேய்த்து அறையைத் திறந்து வெளி வந்தபோது ''குட்மார்னிங் குட்டிம்மா!'' என்றனர் தனசேகரனும், பொன்சேகரனும்.

பதிலுக்கு வணக்கம் தெரிவித்தவள் கொண்டிருந்த முத்துப்பல் முறுவலை பெரிதாக்கி அடக்க முடியாமல் நகைக்க ஆரம்பிக்க புரியாமல் விழித்தனர் இருவரும்.

''என்ன... குட்டிம்மா...? என்ன விஷயம்? எதற்காக இந்தப் புன்னகை? கொஞ்சம் சொல்லேன்... நாங்களும் சிரிக்கிறோம்...'' என அவர்கள் பரபரத்தபோது பதில் சொல்லாமல் அதே சோபாவில் பொத்தென அவர்கள் இருவருக்குமிடையே அமர்ந்தாள்.

ஆவலாய் பார்த்த அண்ணன்மார்கள் இருவரிடமும் ''அது ஓர் இனிமையான கனவு...'' என விவரிக்க ஆரம் பித்தாள்.

அவள் அப்படி ஆரம்பிக்கவும் ஆவி பறக்கும் கப் அண்ட் சாஸர் காபியை நீட்டியபடி மூத்த அண்ணி சுலோச்சனா தோன்றினாள்.

பின்னாலே சின்ன அண்ணி கற்பகம்!

''எங்களுக்கும் சொல்லு தரங்கினி! நாங்களும் சிரிக் கிறோம்...!''என கற்பகம் சொன்னபோது சின்ன அண்ணன் பொன்சேகரன் அவள் பக்கம் திரும்பி வாயில்

விரல் வைத்து, ''உஷ்!'' என்றபடி ''பெரியவர்கள் பேசிக் கேட்டுக் கொண்டிருக்கிறோம் அல்லவா?'' என ஒரு விரட்டு விரட்டினான்.

''உத்தரவு...'' என்றாள் பதிலுக்கு சின்ன அண்ணி பயப்படுவது போல்.

''ஐயோ அண்ணியார்கள் முன் அந்தக் கனவு உங்களை மட்டம் தட்டும் கனவு... வேண்டாம் வேண்டவே... வேண்டாம்... எனக்காக ப்ளீஸ்... விட்டுவிடு... அண்ணா...!'' என்றாள் கெஞ்சல் குரலில் தரங்கினி.

''ஐயோ... குட்டிம்மா சும்மாவாகச் சொல்லேன்... உன் இனிமையான கனவு என்றாய்... ராஜகுமாரி என்று வேறு ஆரம்பித்துவிட்டாய்... சொல்லித்தான் ஆகவேண்டும்'' அடம்பிடித்தான் நாற்பது வயது தனசேகரன் சிறுபிள்ளையாய்.

''அது... அது...''

தரங்கினி மறுபடி தயங்க, ''நாங்கள் இருவரும் வேண்டுமானால் ஒளிந்து கொள்ளட்டுமா? அப்படியாவது உன் தயக்கம் போகட்டுமே கண்ணு?'' என மூத்த அண்ணி சுலோச்சனா கொஞ்சலாய் சிணுங்க... பதிலுக்கு அவளது கணவன் தனசேகரனோ, ''யானைகள் ஒளிந்து கொள்ள இந்த வீட்டில் இடம் ஒன்றும் இல்லையே?'' என்றான். சுலோச்சனாவின் பருத்த உடல் அழகை சிலாகித்து அவன் சொல்ல கொல்லென அங்கு ஒரே சிரிப்பலை!

சுலோச்சனாவும் அவர்களுடன் சேர்ந்து சிரித்தவள்... 'அப்படி ஒன்றும் நான் குண்டு இல்லை. போன



வாரம்தான் ஜிம்மிற்குச் சென்று நாலு கிலோ குறைந்திருக்கிறேன்!'' என்றாள். உடம்பை இருபுறமும் திருப்பி காட்டியபடி. ''நாலு குறைந்தால் போதுமா? நானூறில் நான்கு போனால் மீதி முன்னூற்று தொன்னூற்று ஆறை எங்கு கொண்டுபோய் போடுவது?''

''யம்மாடி! இது அநியாயம்! நானா முந்நூற்றி சொச்சம்? உங்கள் தொப்பையை மட்டும் கணக்கிட்டால் ஒரு ஐம்பது தேறாது...? பெரிதாய் பேச வந்து விட்டீர்களே...!''

அவள் முடிப்பதற்குள், ''அட... கழுதை! என்னையே கிண்டலடிக்கிறாயா...? உன்ன... உன்னை...'' என தனசேகரன் விரட்டப் போக... குடுகுடுவென தடிமனான சரீரத்தை தூக்கிக் கொண்டு ஓடினாள் சுலோச்சனா.

தரங்கினியும் மற்றவர்களும் குலுங்க குலுங்க சிரித்தனர்.

காலேஜ் செல்லும் இருபது வயது அழகுக்குமரியான தரங்கினி அந்த வீட்டின் செல்லப் பெண். கடைக்குட்டி! அதனாலே பாசமான அண்ணன்மார்கள் இருவருக்கும் அவள் ''குட்டிம்மா...'' ஆகிப் போனாள்.

'என் செல்லக் குட்டிம்மா...' 'என் சின்னக் குட்டிம்மா...' 'என் பப்பு குட்டிம்மா...' 'என் புஜ்ஜீ குட்டிம்மா...' என சிறு வயதில் கொஞ்ச ஆரம்பித்த இருவரும் கொஞ்சமும் தங்களை மாற்றிக் கொள்ளவில்லை.

அவள் வளர்ந்த பிறகும் அதே பாசத்துடன் விளித்து அவளை வீட்டின் செல்லக் குட்டியாகவே நடத்தினர். பரம்பரை பணக்காரர்களாக கார், பங்களா வசதியுடன்

இருந்தாலும் சிறுவயதிலே விபத்தொன்றில் தாய், தந்தையை பறிகொடுத்தவர்கள் தரங்கினிக்கும் அண் ணன்மார்களுக்கு ஐந்துக்கும் மேற்பட்ட வயது வித்தியாசம் வேறு.

அதனாலோ என்னவோ... பெண் பிள்ளை... தாய், தந்தை பாசத்திற்கு ஏங்கக்கூடும் என்ற நினைப்பில் தங்கள் மொத்த அன்பையும் அவள் மேல் காட்டி குளிப்பாட்டினர் பாசக்கார அண்ணன்மார்கள்.

தரங்கினி மட்டும் சும்மா இல்லை. அவளுக்கும் எல்லாமே அண்ணாக்கள் தான்! கல்லூரி விட்டு வீட் டிற்கு வந்தால், 'அண்ணா... அண்ணா...' என்றுதான் வால் பிடித்து அலைவாள்.

காலையில் தனசேகரன் காரில் கொண்டு போய் கல்லூரியில் விட்டால்... மாலை கல்லூரி விடும்முன் தயாராய் அவளை கூட்டி வருவதற்கு காத்திருப்பான் பொன்சேகரன்!

தரங்கினிதான் அவர்கள் வயதை உணர்ந்து, பிடி வாதம் பிடித்து அவர்களை சம்மதிக்கச் செய்து தரகர் மூலம் பெண் பார்த்து பெரிய மனுஷியாய் அவர்களுக்கு கல்யாணமும் கட்டி வைத்தாள்.

இரண்டு அண்ணிமார்கள்... சுலோச்சனா, கற்பகம்... என்று! அண்ணன்கள் இருவரும் ஆரம்பத்திலேயே தங்களது தங்கை பாசத்தைச் சொல்லி மிரட்டி வைத்த தாலோ என்னவோ அவர்களும் நாத்தனார் மேல் வந்தது முதல் பாசத்தை பொழிய ஆரம்பித்துவிட்டனர். சில சமயம் ஒருபடி மேலே போய்... ''குட்டிம்மா... குட் டிம்மா...'' என கூப்பிட்டு கொஞ்சவும் செய்ய தரங்கினி



சங்கடமாய் நெளிந்தவள், ''ஐயோ... உங்களுக்கும் நான் குட்டிம்மாவா? தரங்கினி என்றே கூப்பிடுங்கள்...!'' என்பாள் நாணிக் கொண்டு.

இன்றும் அப்படித்தான் கேலியும் கிண்டலுமாய் குதூகலத்துடன் பொழுதை ஆரம்பித்தார்கள். பொன் சேகரன்தான் கையிலிருந்த வாட்ச்சில் மணி பார்த்தவன், ''மணி எட்டு ஐம்பது. இன்னும் அரை மணி நேரத்தில் நீ காலேஜுக்கு ரெடியாக வேண்டும் குட்டிம்மா...'' என ஞாபகப்படுத்தினான். பின் சட்டென மனைவியிடம் திரும்பி, ''கற்பகம், குட்டிம்மா குளித்துவிட்டு வருவதற் குள் டிபனை எடுத்து வைத்துவிடு...'' என்றான்.

அவள் பேசாமல் தலையாட்டவும், ''புரிகிறதா கழுதை?'' என்றான்.

''புரிகிறது...'' என்றபடி சிரித்தாள் கற்பகம்.

''ஐயோ... என்ன அண்ணா நீங்கள் காலையிலேயே அண்ணியைப் போய் ஏசிக் கொண்டு...?'' எனச் சிணுங் கிய தரங்கினியிடம் பொன்சேகரன் கற்பகத்தை காட்டி னான்.

''நீயே திரும்பிப் பார் குட்டிம்மா! நான் கழுதை என்றதும்தான் அவள் முகத்தில் என்ன ஒரு சிரிப்பலை! அந்த சிரிப்பலையை அப்படி வரவைப்பதற்காகத்தான் சொன்னேன் சரிதானே...?'' என விளக்கமும் கொடுத் தான்.

''நான் கழுதை என்றால்... இந்த கழுதைக்கு மூன்று முடிச்சுப் போட்டு கூட்டி வந்த அது யாராம்? அதான் சிரித்தேன்!'' என்றாள் கற்பகம் மறுபடியும் சிரித்துக் கொண்டு.

பொன்சேகரன் கொஞ்சமும் கோபப்படாமல் தரங்கினியைப் பார்த்தான். ''பார் என்னை அவள் பதிலுக்கு கிண்டலடிக்கிறாளாம். பதிலாய் இதற்கு நானும் ஹி...ஹி... ஹிவென இளித்து விடவா?'' என்றான்.

''இளித்து விடு...'' என்றாள் தரங்கினி.

''என்ன சொல்கிறாய் குட்டிம்மா?''

''பொன் அண்ணா, நீங்கள் புன்னகைக்கும் போது பளீரென சிரிக்கும்போது பட்டென பத்து வயது குறைந்து விடுகிறது. அதான் உங்களை அடிக்கடி சிரிக்கச் சொல்கிறேன்...'' என்றாள் விளக்கத்தோடு.

''நீ சொன்னால் சரி... குட்டிம்மா. இனி அடிக்கடி சிரிக்கிறேன். சிரித்துப் பார்க்கிறேன். அப்படியே உன் பக்கத்தில் ஒரு உம்மணாமூஞ்சி உட்கார்ந்திருக்கிறதே... அதையும் கொஞ்சம் சிரிக்கச் சொல்...'' என்றபடி தனசேகரனைக் காட்டினான்.

எல்லோரும் முகத்தை உம்மென வைத்திருக்கும் அவனைப் பார்த்ததும் மறுபடியும் சிரித்தனர்.

''என்னை கிண்டலடிக்காவிட்டால் உனக்கு தூக்கம் வராதே...'' திரும்பி பொன்சேகரனை முறைத்தான் தனசேகரன்.

''என் கிண்டலை வாங்கிக் கொள்ளாவிட்டால் உனக்கும் தூக்கம் வராதுதானே?'' என்றான் பொன்சேகரனும் பதிலுக்கு.

''ஸ்டாப்! ஸ்டாப்!'' கைகளை உயர்த்தி நிறுத்தினாள் தரங்கினி! ''ஆரம்பித்து விட்டீர்களா... உங்கள் சண்டையை? நிறுத்துங்கள்!'' என்றாள்.



''இல்லை... குட்டிம்மா...! இது... சண்டையில்லை... சும்மா...'' என்றார்கள் இருவரும் கோரஸாய் அசட்டுச் சிரிப்புடன். பின் விடாது திரும்பி ''எங்களுக்கு சண்டையிடத்தான் ஆள் இருக்கிறதே...'' என்றபடி தத்தம் மனைவிமார்களைப் பார்த்தனர்.

சுலோச்சனாவும் கற்பகமும் தாடையில் கை வைத்து அதிர்ந்தவர்கள், ''பாரடியம்மா கூத்தை? சண்டை போட நாங்கள் இருக்கிறோமாம்...!'' என்று அலுக்க தரங்கினி தற்செயலாய் திரும்பி கடிகாரத்தைப் பார்த்தவள் அதிர்ந்து துள்ளினாள்.

''எட்டு நாற்பது! ஐயோ நேரமாச்சு. சீக்கிரம்...'' என்றபடி சோபாவை விட்டு எழ எல்லோரும் பரபரப்பாகினர்.

அடுத்து பத்து நிமிடத்தில் தரங்கினி குளித்து முடித்து சுலோச்சனா அண்ணி ஓடி வந்து கொடுத்த இரண்டு சாம்பார் இட்டிலிகளை ஸ்பூனால் விழுங்கி விட்டு கிளம்பினாள்.

அதற்குள் தனசேகரன், காரை ஷெட்டில் இருந்து எடுத்து ரெடியாய் இருந்தான். எல்லோருக்கு பை! பை! சொல்லிக் கொண்டு தாவியேறினாள் கார் கிளம்பியது.

''இந்த பரபரப்பு எதற்கு குட்டிம்மா? நீ மட்டும் உம்மென்று சொல். உனக்காக ஒரு காலேஜையே நாங்கள் கட்டி விடுகிறோம். பிறகு நீ நினைத்த நேரத்திற்கு போய்க் கொள்ளலாம். வந்து கொள்ளலாம்...'' என்றான் தனசேகரன்.

''நான் 'உம்' சொல்ல மாட்டேன். நீங்கள் கட்டினாலும் கட்டிவிடுவீர்கள்...'' என்றாள் தரங்கினி சிரிப்புடன்.

கூடவே அண்ணன்மார்கள் தன் மீது காட்டும் அபரீத மான திகட்டும் பாசம் அவளை ரொம்பவே நெகிழச் செய்தது.

'இந்த குட்டிம்மா இப்படியொரு பாசத்தைப் பெற நிஜமாகவே கொடுத்து வைத்தவள்தான்!' என தனக் குத்தானே பூரிப்புடன் நினைத்துக் கொண்டாள்.

ஆனால் விரைவிலே அந்த இரண்டு பாசக்கார அண்ணன்கள் மனம் கோணும்படி தான் நடக்கப் போகிறோம் என்பதை அவள் கொஞ்சமும் உணர வில்லை!

# 2

மதியம் மூன்று மணி.

கல்லூரியை ஒட்டிய சிறிய பூங்கா.

பூங்காவின் மரநிழலில் ஒன்றின் இருக்கையில் தரங்கினி, உதடுகளைக் கடித்துக் கொண்டு விழிப்பார் வையை தவிப்போடு பூங்காவின் முன்னும் பின்னும் நகர்த்திக் கொண்டு.

சிறிது வினாடிகளில் பூங்கா முன் டயர்கள் தேய கிறீச்சிட்டு நின்ற பளபளப்பான காரிலிருந்து வாட்ட சாட்டமான அவன் இறங்கினான். இருபத்தைந்து வயது



முகத்தில் கம்பீரமும், அவனது காந்தக் கண்களின் வீச்சில் வேகமும் இருந்தது.

பார்வையால் அவளைத்தேடி கண்டுபிடித்ததும் விறுவிறுவென நடந்து அவள் முன் போய் நின்றான்.

தன் முன் நின்றவளை முகம் சுருங்கிப் பார்த்தாள் தரங்கினி.

''யார் நீங்கள்?''

''நான்தான்... ஸாரி... தரங்கினி...!'' என்றான் அவன்.

''என்ன ஸாரியா...? ஹலோ... மிஸ்டர், யார் நீங் கள்...? எதற்காக என்னிடம் வந்து ஸாரி கேட்கிறீர்கள்?''

அவனும் பார்வையை கூர்மையாக்கினான்.

''நன்றாகப் பாருங்கள். என்னைத் தெரியவில்லை?'' என்றான்.

''தெரியவில்லை... என்பதால்தான் கேட்கிறேன். யார் நீங்கள் மிஸ்டர்? தனியாக பார்க்கில் உட்கார்ந்திருக்கும் பெண் பிள்ளையிடம் வந்து எதும் வம்பு பண்ணப் பார்க்கிறீர்களா?''

அவன் முகம் மாறி சிரித்தான்.

''ஓ... அந்தப் பெண்பிள்ளை... நீங்கள்... நீங்கள்தானா? சரியான காமெடி! பிசாசிற்கெல்லாம் இப்போது பெயர் வைக்க ஆரம்பித்து விட்டார்களா?'' என்றான் சீரியஸான குரலில்.

''என்ன நான் பிசாசா?'' என வெடுக்கென நிமிர்ந்து விழிகள் விரிய முறைக்கவும், ''அதை இன்னொரு பிசாசு சொல்லும்போது அது சரியாகத்தான் இருக்க

வேண்டும்?'' என அவன் தன்னையும் கிண்டலில் சேர்த்துச் சொன்னபோது பக்கென சிரித்து விட்டாள்.

''அப்பாடி... கோபம் தீர்ந்ததா?'' என்றபடி அவனும் சிரிப்புடன் அவள் பக்கத்தில் உட்கார்ந்தான்.

ஆனால் தரங்கினிக்கு கோபம் அடங்கியபாடில்லை.

''பிறகு என்ன நரேன்? உங்களுக்காக எவ்வளவு நேரம் காத்திருப்பது? கிட்டத்தட்ட பத்து நிமிடம்... அதாவது அறுநூறு விநாடிகள் மரத்தையும் இலையையும் பார்த்துக் கொண்டு இருந்திருக்கேன்...'' என்றாள் மூச்சு வாங்க.

அவன் விடாமல் புருவங்களை உயர்த்தியவன், ''மரத்தையும் இலையையும் பார்த்தவள் ஏன் அப்படியே கீழே கிடக்கும் புளியங்கொட்டைகளையும் எடுத்து எண்ணியிருக்கலாமே... என்ன... நேரமாவது போயிருக் கும்...'' என்றான் சிரிப்புடன்.

''விளையாடாதீர்கள் நரேன். நான் சீரியஸாய் பேசிக் கொண்டிருக்கிறேன்...'' என்றாள் அவள் சீற்றமாய்.

''நானும் சீரியஸாய்த்தான் சொல்லிக் கொண்டிருக் கிறேன்... இதுதான்... இப்படிக் காத்திருப்பதுதான் காதல்...!'' என்றான்.

''யாராவது என்னை பார்த்து விட்டால்... என்ன ஆகும்?''

அவன் மறுபடி சிரித்தான். ''யாராவது என்ன? உன் இரண்டு அண்ணன்மார்கள் பார்த்து விட்டால் அவ்வளவு தான். இன்றே உன்னை வீட்டிற்கு கூட்டிப்போய் டின்



கட்டி தோலை உரித்து விடுவார்கள். அது எனக்கும் தெரியும்தானே?''

''தெரிந்துமா... பின் இப்படிச் செய்கிறீர்கள்?'' அவள் மறுபடியும் எகிறவும் கைகளைக் குவித்து தலைசாய்த்து நிமிர்ந்தவன் ''அப்படி இல்லை.. பாப்பா! இந்த ஒரு முறை கொஞ்சம் வேலை அதிகமாகிவிட்டது. இனி அப்படி நடக்காது...!'' என்றான்.

அவள் மறுபடியும் கோபமாகவே, ''அது என்ன பாப்பா? நான் எப்போது உங்களுக்கு பாப்பாவானேன்?'' என்றாள்.

அவன் நரேன் தன் தலையை செல்லமாய் தட்டிக் கொண்டு ''அது...அது... என்னவோ சொல்வாயே... உன்னை அப்படி வீட்டில் அழைத்து விளித்து கொஞ்சு வார்கள்... என்று...? அது.. அது... பாப்பா... இல் லையே...? பின்... என்ன...? ஆங்... ஞாபகம் வந்து விட்டது... குட்டி...! குட்டிம்மா...!'' என்றான் அவன் உற் சாகமாய்.

''மரமண்டை! காதலியின் செல்லப் பெயரைக் கூட ஞாபகம் வைத்துக் கொள்ள முடியவில்லை. நல்ல ஞாபகசக்திதான்...!'' என்றாள்.

அவள் சலிக்க பதிலுக்கு பலமாய் தலையாட்டினான் நரேன்.

''நீ என்ன வேண்டுமானாலும் திட்டு குட்டிம்மா... நான் வாங்கிக் கொள்கிறேன். எனக்கு உன்னை ரொம் பவும் பிடிக்கும் குட்டிம்மா. நான் உன்னை நேசிக்கிறேன் குட்டிம்மா. இப்படி முறைத்துப் பார்த்து கோபப்படும்

போதுகூட நீ அழகாய் இருக்கிறாய் குட்டிம்மா... இன்னும்...''

அவள் காதுகளைப் பொத்திக் கொண்டு, ''குட்டிம்மா புராணம் போதும். விஷயத்திற்கு வாருங்கள்...'' என்றாள்.

''விஷயத்திற்கு வந்தேன்...'' என்றபடி அவன் அவள் கைகளை எடுத்து உயர்த்தி அதில் தனது இதழ்களை மென்மையாய் பதித்தான். மெல்ல முத்தமிட்டான்.

அதை அவள் ரஸிக்கவில்லை.

''பெரிய... மன்மதன்! குரங்குத்தனம்!'' என்றாள்.

அவனும் விடாமல், ''போதும் குட்டிம்மா. கோபத்தை குறைத்துவிடு. இல்லாவிட்டால் இன்னும் அதைக் குறைக்க நான் கொஞ்சம் முன்னேறி உன்னை ஒரு சின்ன அணைப்பு கட்டித்தழுவல் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். செய்யட்டுமா?'' என்றபடி கைகளை விரிக்க அதை அப்படியே தட்டிவிட்டு சீரியஸாகவே பார்த்தாள்.

''போதும் நரேன். எனக்கு பதில் சொல்லுங்கள். ஏன் லேட்?'' என்றாள் சீரியஸாய்.

நரேனும் முகத்தை சீரியஸுக்கு கொண்டு வந்தவன், ''வழக்கம் போல் ஒரு பிசினஸ் பார்ட்டி... நான் கிளம்பும் சமயமாய் வந்துவிட்டது. அவர்களிடமிருந்து தப்பித்து என் கம்பெனி மேனேஜரை கை காட்டிவிட்டு வருவதற்குள் இவ்வளவு நேரமாகிவிட்டது...''

''என்னால் இப்படியெல்லாம் ரொம்ப நேரம் காத்திருக்க முடியாது நரேன்... யாராவது நம்மை பார்த்து



விடக் கூடுமோ... என ஒவ்வொரு நிமிடமும் பயந்து சாக வேண்டியிருக்கிறது...''

பதிலுக்கு, ''எனக்கும் அப்படித்தான் குட்டிம்மா. என்னாலும் அப்படி காத்திருக்க முடியாது. சீக்கிரமே கல்யாணத்தை நடத்தி விடுவோம். கணவன் மனைவியாய் ஆகிவிடுவோம்...'' என்றான்.

''இன்னும் விளையாடுகிறீர்களா?'' என்றபடி அவள் அவன் முகத்தைப் பார்க்க... இறுக்கமாய் உறுதியுடனே தலையாட்டினான் அவன்.

''விளையாட்டில்லை... நிஜமாய்த்தான் சொல்கிறேன். எத்தனை நாள் தான் இப்படி காதலித்து வருவது? நாம் என்ன சினிமாக்காதலர்களா... மரம் மரமாய் ஓடி டூயட் பாட...? பார்த்தோம். பிடித்துவிட்டது. காதலித்தோம். ஒருவரையொருவர் புரிந்தாயிற்று. இன்னும் என்ன தயக்கம்? அடுத்த நிலைக்கு கல்யாணத்திற்கு சென்று விடலாம் தானே?''

''அது.. அது... முடியாது...?'' என்றாள் தரங்கினி.

''ஏன்.. குட்டிம்மா?''

''படிப்பு முடிய வேண்டும் என்று சொல்வார்கள்...''

''ஏன்... கல்யாணம் கட்டிக் கொண்டு படிக்கக் கூடாதா? கல்லூரிக்குள் விட மாட்டேன் என்று யாராவது சொல்லி விடுவார்களா?''

''அப்படி இல்லை...'' என்றாள்.

''பின் எப்படி குட்டிம்மா?''

''விஷயம் அது மட்டும் இல்லை. இன்னொரு முக்கியமான ஒன்றும் இருக்கிறது.''

''அது... என்ன குட்டிம்மா?''

''என் அண்ணன்மார்கள் காதலுக்கு எதிரி! ஒரு போதும் சம்மதிக்க மாட்டார்கள்.''

''அது தெரிந்ததுதானே?'' கைகளை விரித்துச் சிரித்தான் நரேன்.

''ஆனால்... அவர்களுக்கு என் காதல் தெரியாததுதானே?'' என்றாள் அவள் பதிலுக்கு.

''தெரியாவிட்டால் என்ன? ஒரு நாள் உட்கார வைத்து சொல்லி விடு. என்னதான் நடக்கிறது என்று பார்த்து விடு...!''

''அந்த தைரியம் எனக்கில்லை...!'' கைகளைப் பிசைந்தாள் தரங்கினி.

''அப்படியானால் பேசாமல் நான் சொல்வதற்கு ஒத்துக் கொள். என் வழிக்கு வா...!'' என்றான்.

''என்ன வழி உங்களது?'' - நடுங்கும் குரலோடு அவள் ஆவலாய் கேட்க நரேந்திரன் நிதானமாய் அந்த வார்த்தைகளை உச்சரித்தான்.

''திருட்டுக் கல்யாணம்...!'' என்றான்.

# 3

நரேந்திரன் சொன்னதைக் கேட்டு தரங்கினிக்கு மயக்கம் வராத குறைதான்!



''என்ன திருட்டுக் கல்யாணமா?''

அவள் கண்களை விரித்து உதட்டால் அதிர்ந்து நிலையைக் கண்டு நரேந்திரன் சிரிக்கவே செய்தான்.

''என்ன... என்னமோ ஷாக் அடித்தது போல் அதிர்கிறாய்?'' என்றான்.

''பின்... என்ன நரேன்? போயும்... போயும்... திருட்டுக் கல்யாணம் என்கிறாய்?''

நரேந்திரன் அதற்கு சிரித்தபடியே விளக்கம் அளித்தான்.

''அதாவது ஊர் அறிய கல்யாணம் என்பதற்குப் பதில்... நாலு சுவருக்குள் நம் இருவரும் அறிய கல்யாணம்...''

''புரியவில்லையே...''

''அட... கோயிலில் வைத்து தாலி கட்டி மாலை மாற்றினால் போச்சு...''

அவள் திகைக்க மறுபடியும் விளக்கினான்.

''ஊர் உலகம் அறிய பண்ணுவதற்குப் பதில் கல்யாணம் முடிந்ததும் ஊர் உலகத்துக்கு அறிவிப்போம். அதுதான் வித்தியாசம்!''

''என்ன நரேன்? எவ்வளவு எளிதாக சொல்லிவிட்டீர்கள்... அப்படியானால் அண்ணன்களுக்குத் தெரியாமலா?''

அவள் கேட்க அவள் பக்கம் மேலும் வந்து அவள் முகத்தை நிமிர்த்திப் பார்த்தான் நரேந்திரன்.

''என்ன... இது...? விடிய விடிய கதை கேட்டு கடைசியில் சீதைக்கு ராமன் சித்தப்பாவா என கேட்பது போல் கேட்கிறாய்?''

''என்ன சொல்கிறீர்கள் நரேன்?''

''பின்ன என்ன தரங்கினி? விஷயமே உன் அண்ணன்மார்களுக்குத் தெரியாமல் கல்யாணம் பண்ண வேண்டிய சூழ்நிலைதானே...? அதற்காகத்தான் இவ்வளவு ஏற்பாடுகளும்?''

நரேன் விளக்க விளக்க லேசாய் தலையாட்டினாள் தரங்கினி.

''புரிகிறது...'' என்றாள் மெல்ல.

''என்ன புரிகிறது? நான்... டியூப்லைட், மரமண்டை என்றெல்லாம் உன்னை திட்ட நினைத்து அடக்கிக் கொண்டேனே... அதுவும் புரிகிறதா?''

''நரேன்...''

''பின் நீயே... சொல் தரங்கினி, நான் எவ்வளவு சீரியஸாய் சொல்லிக் கொண்டிருக்கிறேன்... நீயோ எதைச் சொன்னாலும் திருவிழாவில் தொலைந்து போன குழந்தை போல் பேந்தப் பேந்த முளிக்கிறாய்? அதற்கு அர்த்தம்தான் என்ன?''

''ஒரு விஷயத்தை நீங்கள் மறந்து விட்டீர்கள் நரேன்...''

''என்ன விஷயம் அது?''

''எல்லாவற்றையும் செய்ய வேண்டியது நான்... எல்லாவற்றையும் எதிர்கொள்ள வேண்டியது நான்... பின் எனக்கு பயம் இருக்காதா?''

''இருக்கும். ஆனால் அதைப் போக்கத்தான் நான் இருக்கிறேனே?'' என்றபடி நரேந்திரன் மறுபடியும் அவள் கைகளை வளைத்துப் பிடித்து தன் கைகளோடு சிறையிலிட்டான்.



பின் அப்படியே தன் முகமருகே கொண்டு வந்து அவள் கரங்களில் மென்மையாக இதழ்களை பதிக்கவும் செய்தான்.

''இப்போது பயம் போயிற்றா?'' என்றான்.

''இல்லை... பயம் அதிகமாகிவிட்டது...'' என்றாள் தரங்கினி.

''என்ன சொல்கிறாய்?''

''நரேன்... நமக்குப் பிரச்சனையே காதலை வெறுக்கும் காதல் பிடிக்காத அண்ணன்மார்கள் தான். அதற்காகத்தான் இப்படி திருட்டுக் கல்யாணம் பண்ணுவது வரை யோசிக்க வேண்டியிருக்கிறது...''

''நான் 'ம்ம்...' கொட்டுகிறேன். தொடர்ந்து சொல்லு...'' என்றான் நரேந்திரன் சிரிப்பை அடக்கியபடி.

''அதனால் இந்த விஷயத்தை காதல் இல்லாமல் காதலை கலக்காமல் செய்ய முடியுமா? அப்படி நாம் முயற்சித்துப் பார்க்கலாமா?''

அவள் சொல்ல நரேந்திரன் அதை டக்கென புரிந்து கொள்வது போல் தலையாட்டினான்.

''தரங்கினி நீ சொல்ல வருவதும் நல்ல பாயிண்ட் தான். அப்படியும் நான் எப்போதோ முயற்சி பண்ணி பார்த்து விட்டேன்... ஆனால்...'' என இழுத்தவன் தலையை வேகமாய் மறுத்தும் அசைத்தான்.

''ஊகூம்...! நான் நினைத்த மாதிரி எதுவும் நடக்க வில்லை...''

தரங்கினி மறுபடியும் கண்களை விரித்து விழித்தாள்.

''சொல்கிறேன்... தரங்கினி. நீ சொல்ல வரும் பாயிண்ட் காதல் என்றெல்லாம் சொல்லாமல் முறைப் படி யார் மூலமாவது உன் அண்ணன்களிடம் உன்னை பெண் கேட்டு முயற்சிப்பது பற்றித்தானே?''

''ஆமாம்! கரெக்ட்டாக சொல்லி விட்டீர்கள்!'' தலையசைத்தாள் தரங்கினி.

''அதையும் நான் எப்போதோ முயற்சித்துப் பார்த்து விட்டேன் தரங்கினி. எனக்குத் தெரிந்த தரகர்கள், கல்யாண புரோக்கர்கள், ஏன் சமூக அந்தஸ்து உள்ள கௌரவமான பெண்மணிகள் வரை எல்லோரையும் உன் அண்ணன்களிடம் அனுப்பி... என் பெயரைச் சொல் லாமல் பெரிய தொழிலதிபர் என்றெல்லாம் சொல்லிக் கேட்டுப் பார்த்து விட்டேன்... ஆனால் ஒன்றும் பல னில்லை...''

''ஒன்றும் பலனில்லையா?''

''ம்ம்... இப்போதைக்கு தரங்கினிக்கு கல்யாணம் செய்வது பற்றி நாங்கள் யோசிக்கவில்லை. யோசிக்கும் போது பார்த்துக் கொள்ளலாம்...'' என்ற விட்டேற்றியான பதிலைத்தான் உங்கள் அண்ணன்கள் சொல்லியிருக் கிறார்கள்...

''அப்படியா?''

''என்ன அப்படியா? விட்டால்... உன்னை சின்ன குட்டிம்மா... சின்ன குட்டிம்மா என கொஞ்சிக் கொண்டே காலம் முழுவதும் கன்னியாய் வைத்து விடுவார்கள் போலிருக்கிறதே...''



அவன் சொல்ல அதிராமல் சிரிப்புடன் தலையசைத் தாள் தரங்கினி.

''அவ்வளவு பாசம் என் மீது வைத்திருக்கிறார்கள்?''

''அந்தப் பாசத்தை பங்கு போடத்தானே நானும் நுழையப் பார்க்கிறேன்...''

''அப்படியா? நம்ப முடியவில்லையே...? பார்த்தால் தெரியவில்லையே?'' கைகளை விரித்து குறும்பாய் அவனைப் பார்த்தாள் தரங்கினி.

''நீ என்ன சொல்கிறாய்?''

''புரியவில்லையா உங்களுக்கு? எப்போது பார்த் தாலும் உங்களுக்கு கிண்டல் கேலிதான் போதாக் குறைக்கு சில சமயம் சண்டை வேறு. நீங்களா என் மேல் பாசத்தைக் காட்டுகிறீர்கள்?''

அவள் சொல்ல, ''அட... அதுதானே உன் பிரச்சினை? அப்படியானால்... இப்படி கொஞ்சம் பக்கம் வா! உடனே தீர்த்து வைக்கிறேன்... கூடவே நான் உன் மீது எவ்வளவு பாசம் வைத்திருக்கிறேன் என்பதையும் உனக்குப் புரிய வைக்கிறேன்...'' என்றபடி நரேந்திரன் தன் இரு கை களையும் பரவலாய் விரித்தபடி அவளை நெஞ்சார இறுக அணைக்கப் போனான்.

சிரித்தபடி அவன் கைகளைத் தட்டியபடி விலகி நின்றவள், ''சரி விளையாட்டு போதும். விஷயத்திற்கு வருவோம் நரேன்...'' என்றாள் சீரியஸான குரலில்.

நரேந்திரனும் முகம் மாறினான்.

''சொல் தரங்கினி...''

''திருட்டுக் கல்யாணம்... என்கிற வார்த்தையே பயங்கரமாய் பெரிய தப்பைச் செய்வது போல் தெரிகிறது. அதைத் தவிர வேறு வழியே இல்லையா நரேன்?''

''ம்ம்... நானும் எவ்வளவோ யோசித்துப் பார்த்து விட்டேன். வேறு வழி ஒன்றும் சிக்க மறுக்கிறதே தரங்கினி...

தரங்கினியின் முகம் தீவிர சிந்தனைக்குப் போனது.

''அண்ணன்களுக்குத் தெரியாமல் கல்யாணம் செய்வதை என்னால் கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை? அவ்வளவு பயமாய் உடம்பே நடுங்குவது போல் திகிலாய் இருக்கிறது...''

''ஆனால் அதை விட்டால் வேறுவ்ழி இல்லையே தரங்கினி...''

நரேந்திரன் சொல்ல ஏதோ சிந்தனை தாக்க மறுபடியும் நிமிர்ந்தாள் அவள்.

''நரேன், எனக்கு இன்னொரு சந்தேகம்...''

''என்ன தரங்கினி?''

''எல்லாம் நம் பிளான்படி செய்து கடைசியில் அண்ணன்மார்கள் முன் போய் மாலையும் கழுத்துமாய் நின்றால் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமே? அப்படி நடக்குமா?''

அவள் கேட்க அதையே எதிர்கேள்வியாய், ''ஏன் நடக்காது?'' எனக் கேட்டான் நரேந்திரன்.

''ஒருவேளை அப்படி அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல்... வெளியே போ... என கோபமாய் விரட்டி விட்டால்...?''



''ம்ம்... அப்படி நடந்தால் வேறு வழியில்லை. சகித்துக் கொள்ள வேண்டியதுதான்! அவர்கள் ஏற்றுக் கொள்ளும் வரை காத்திருக்க வேண்டியதுதான்!''

''என்ன காத்திருக்க வேண்டுமா?''

''ஆமாம் தரங்கினி! அதிலென்ன தயக்கம்? என்ன... ஒரு மூன்று மாதம்... அதிகபட்சம் ஆறு மாதம் அப்படி கோபத்தில் இருப்பார்கள். அதற்கு மேல் அவர்களால் உன்னைப் பார்க்காமல், பேசாமல் இருக்க முடியாது. அதனால் சீக்கிரமே மன்னித்து ஏற்றுக் கொள்வார்கள்!''

நரேந்திரன் சொல்லச் சொல்ல அப்படியெல்லாம் நடக்க வேண்டுமே என கவலைப்பட ஆரம்பித்தாள் தரங்கினி.

## 4

நரேன் என்கிற நரேந்திரனை தரங்கினி காதலித்தது இருவரும் காதல் வலையில் வீழ்ந்ததே தனிக்கதைதான்.

தரங்கினி இயற்கையாகவே கொள்ளை அழகு என்பதால் சக தோழியரே அழகுராணி, ஸ்மைல்லிங் பியூட்டி, 'செம ஃபிகருப்பா... நீ...' என ஆதங்கமாய் பாராட்டுவது உண்டு.

இது தவிர நடைபாதையிலும் யதேச்சையாய் அவள் செல்லும் பஸ் பயணத்திலும் ரோமியோக் கூட்டம்

ஒன்று அவளை விழுங்குவதைப் போல் பார்ப்பதை அடிக்கடி உணர்ந்திருக்கிறாள்.

சில ரோமியோக்கள் ஒருபடி மேலே போய் காதல் வசனம் பேசி காதல் கடிதங்களை அவளிடம் நீட்டிய அனுபவமும் உண்டு. அப்போதெல்லாம் புன்னகை மாறாமல், "ஸாரி, இதுவெல்லாம் எனக்குப் பிடிக்காது. வேறு ஆளைப் பாருங்கள்!" என்றபடி அகன்று விடுவாள்.

அவளைப் பொறுத்தவரையில் இந்தக் காதல் கத்திரிக்காவெல்லாம் நம் நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்து வராத சமாச்சாரம். கதைகளுக்கும் சினிமாக்களுக்கும் மட்டுமே இந்த காதல் ஒத்து வரும். அதனால் காதலிப்பது... காதல் உணர்வுகளை கொண்டு ஒருவரையொருவர் முகத்தை பேஸ்தடித்தது போல் வைத்துக் கொண்டு ஏங்கி அலைவது எல்லாம் பெரும் முட்டாள் தனம்! என கடுமையாகச் சாடுவாள் அவள்.

ஆனால் அப்படிப்பட்ட அவளே காதல் கடலில் தொபுக்கடீர் என மந்திரித்தது போல் விழுவாள்... என்பது அவள் சற்றும் எதிர்பாராதது! அந்த அனுபவம் அவளுக்கு நேர்ந்தது 'லியோ கிளப்' வளாகம் ஒன்றில்.

லயன்ஸ் கிளப்பின் உபரியான லியோ கிளப்பில் அண்ணன்மார்கள் இருவரும் பிடிவாதமாய்த்தான் அவளை உறுப்பினராய் சேர்த்து விட்டனர். கிளப்பை ஒட்டி இருக்கும் கலைக் கூடம் ஒன்றில் பிடித்தமான இன்டோர் கேம்ஸை அவள் விளையாடலாம் என அவர்கள் ஊக்குவிக்க... தினம் கல்லூரி முடிந்ததும் தனது ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு கிளப்பிற்கு வந்து விடுவாள் தரங்கினி.



கொஞ்ச நேரம் செஸ் விளையாடுவாள் போரடித்தால் பேட்மிட்டன்... டென்னிஸ் என்று கிளம்பி விடுவாள்.

அப்படி டென்னிஸ் விளையாட்டில் அவளுக்கு கோச்சாக வந்தவன்தான் இந்த நரேந்திரன். அவளுக்கும் அவளைப் போன்ற மூன்று ஜூனியர் பெண்களுக்கும் தினம் விளையாட பயிற்சியளித்தான் அவன்.

அந்த மூன்று பெண்களும் தரங்கினியைப் போல கல்லூரி மாணவிகளே. அதிலும் நரேந்திரன் சொல்லிக் கொடுக்கும் விதம் அளவோடு தேவையானதை மட்டும் பேசும் அவனது சுபாவம் எல்லாமே தரங்கினியை வசீகரித்தது.

மேலும் மற்ற ஆண்களைப் போல வழியாமல் அவன் பாட்டுக்கு தனது வேலையை மட்டும் கவனிக்கும் லாவகம் அவளை ஆச்சரியப்படுத்தியது. மற்ற பெண்களை மட்டுமல்ல. அவளையும் ஒரு சாதாரணப் பார்வை தான் பார்த்தான். இயல்பாய் அதை விலக்கிக் கொள்வான்.

தனது அழகு அவனை வசீகரிக்கவில்லையா... அவனுள் உறுத்தல் ஏற்படவில்லையா... சரியாக பார்க்கக்கூட மாட்டேங்கிறானே? என அவளுக்குத்தான் நாளுக்கு நாள் திகைப்பாயிற்று.

அப்படி தன் மீதும் மற்ற பெண்கள் மீதும் எவ்வித ஈடுபாடும் காட்டாத அவனது அந்த சுபாவம் தரங்கினி இதுவரை யாரிடமும் பார்த்திராதது. அதுவே அவளை அவன்பால் ஈர்த்து கவனம் கொள்ளவும் செய்தது.

கிளப்பிலும் சரி வெளியில் யதேச்சையாய் பார்த்தாலும் சரி ஒரு ஹலோ, ஒரு சிறிய புன்னகை அத்தோடு அகன்று விடுவான் அவன்.

அவனைப் பற்றி தரங்கினி விசாரித்த போது அவன் இளம் வயது தொழிலதிபன் என்பதும் பிசினஸில் பல சாதனை புரிந்து வெற்றி கண்டவன் என்றும் தகவல் கிடைத்தது.

வாட்ட சாட்டமாய் திடகாத்திர உருவத்துடன் சிவப்பு முன் நெற்றியில் சுருள் முடி தவழ அவன் வருவதை அவள் தான் தினம் தினம் ஆவலாய் பார்க்க ஆரம் பித்தாள். அபூர்வமாய் அவனது உதடுகள் உதிர்க்கும் சிறிய பளீர் புன்னகை கூட அவளை ரொம்பவும் பரவசப் படுத்தியது. அவன் புருவம் உயர்த்தி காந்தக் கண்களை சுழற்றியபடி பேசும் பேச்சுக்களை முத்துமணிகளாய் தன்னுள் வாங்கிக் கொண்டாள்.

கிளப் முடிந்து வீடு வந்தாலும் சரி கல்லூரி சென் றாலும் சரி தொடர்ந்து அவனது நினைவு தன்னை விரட்டுவது கண்டு முதலில் திகைப்பானாலும்... பின் அதுவே அப்படி எண்ணுவதே, மனதில் இனம் புரியா இன்பம் ஒன்றை எழுப்புவதையும் இனிமையாய் உணர்ந் தாள்.

நெருங்கிய தோழிகள் கூட அவள் வகுப்பில் அடிக்கடி சிந்தனையாய் இருப்பதைப் பார்த்து, ''என்னடி விஷ யம்... உன் மை விழிக்கண்கள் அடிக்கடி கனவுலகில் படபடக்கிறதே?'' என்று விசாரித்த போதும், ''ஒன்று மில்லையே...'' என்றுதான் நழுவினாள்.

ஆனால் உள்ளுக்குள் தான் எது பிடிக்காது தனக்கு ஒத்து வராது என இவ்வளவு நாள் நினைத்திருந் தோமோ... அந்த விஷயத்தில் நம்மையறியாமலே உள் ளுக்குள் விழுந்து ஆழமாய் போய் கொண்டிருக் கிறோமோ? என்ற பயமும் உண்டாயிற்று.



அந்த பயமே கொஞ்ச நாளில் பரவசமாய் மாறி அவளை இன்புறவும் செய்தது. கிளப்பிற்கு செல்லும் போது வேண்டுமென்றே உடைகளில் ஒப்பனைகளில் அதீத கவனம் செலுத்தினாள்.

தினம் அவன் தன்னை கவனிக்கிறானா...? என ஆவலாய் அவனது முகக்குறிப்பை தேடுவாள். ஆனால் நரேந்திரனோ மற்ற எல்லா பெண்களையும் பார்ப்பது போல்தான் பார்த்தான். பேசினான். அவளுக்கு எந்த 'ஸ்பெஷல்' பார்வை, ரெஸ்பான்ஸ், முக்கியத்துவம் என எதுவுமே இல்லை.

என்ன மனிதன் இவன்? இங்கு ஒரு ஆள் தினம் தினம் இவனுக்காக மினுக்கிக் கொண்டு வந்து போஸ் கொடுத்தால் நிமிர்ந்து பார்க்கக் கூட மாட்டானா? சே! என சலித்துப் போனாள் அவள்.

என்ன ஆச்சரியம்! அவள் அப்படி சலித்து ஒதுங்க நினைத்த சமயம்தான் அவனிடமிருந்தும் ஒருவித 'ரெஸ்பான்ஸ்' வர ஆரம்பித்தது.

வழக்கமாய் அவளைப் பார்த்து உதிர்க்கும் புன்ன கையை கூட ஐந்து சென்டி மீட்டர் கூட்டினான். முத்து உதிரும்போல் பேசும் வழக்கத்தை மாற்றி முத்துமணி களாய் கொட்டினான். அவள் எதிர்பார்த்த மாதிரியே அவளது அழகை, கண்ணாடி முன் அதிக நேரம் நின்று மேட்ச் பார்த்து, மெனக்கெடுத்து அவள் செய்து வரும் உடையழகை வெகுவாய் அதிசயித்து ''வாவ் பிரமாதம்! பியூட்டிஃபுல்! அழகுக்கு அழகு சேர்க்கும் மேட்சிங்!'' என பிரமித்து பாராட்டினான்.

அடுத்த ஒரு வாரத்தில் இருவரும் அந்த 'மூன்று' வார்த்தைகளை ஒருவருக்கொருவர் சொல்லி நிஜமா கவே காதலிக்கவும் ஆரம்பித்து விட்டனர்!

# 5

தரங்கினி நரேந்திரன் மீது முழுவதுமாய் காதல் கொள்ள ஆரம்பித்ததும் தன்னையறியாமல் அந்தக் கடலில் தொபுக்கடீர் என விழுந்துவிட்ட போது... முதல் நினைப்பாய் அண்ணன்களை நினைத்துதான் பயந்தாள்.

அவளுக்கு நன்கு தெரியும். தனசேகரனுக்கும் சரி பொன்சேகரனுக்கும் சரி காதல் என்றால் சுத்தமாக ஆகாது. காதல் சமாச்சாரங்கள் அறவே பிடிக்காது என்று.

அலுவலக ஸ்டாப்களில் யார் மீதாவது காதல் புகார் வந்தாலே உடனே டிஸ்மிஸ்தான்! கொஞ்சமும் யோசிக் காமல் ஸீட்டை கிழித்து விடுவார்கள்.

அப்படி காதல் மீது அளவு கடந்த வெறுப்பு இரு வருக்கும் வர ஒரு சரியான காரணமும் இருந்தது. சொல்லி வைத்தாற்போல் தனசேகரனும், பொன்சேகர னும் தங்களது கல்லூரிப் பருவத்தில் காதல் வலையில் விழுந்தவர்கள். கடைசி நேரத்தில் எவ்வித காரணமு மில்லாமல் தங்கள் தங்கள் காதலியால் ஏமாற்றப்பட்டு, கைவிடப்பட்டு விரக்தியானவர்கள்.



தங்களை காதலித்த பெண் எவ்வித பாதிப்பும் இல்லாமல் இன்னொருவருக்கு கழுத்தை நீட்டி மணந்து கொண்ட போது அதிர்ந்துதான் போயினர்.

அப்போதே இருவருக்கும் காதல் வேப்பங்காயாயிற்று. தங்களை ஏமாற்றி விட்ட காதலிகள் மீது இருந்த கோபம் அப்படியே காதல் மீது திரும்பி, அந்தப் பெயரைக் கேட்டாலே கொலை வெறி வரும் அளவுக்கு எரிமலை யாகவும் ஆகி விட்டனர்.

அந்தக் காதல் தோல்வி காரணமாகவே தங்களது கல்யாண எண்ணத்தை வெகு நாட்கள் தள்ளிப்போட்டு ஐந்து வருடங்களுக்குப் பிறகு தரங்கினியின் பிடிவாதத் திற்காக சம்மதித்தனர். சுலோச்சனா, கற்பகம் என்ற இரண்டு அண்ணிமார்களையும் கட்டிக் கொண்டனர்.

ஆக, தரங்கினி புரிந்து கொண்டாள். இந்த தனது விஷயத்தை அண்ணன்மார்களிடம் மட்டும் கண்டிப்பாக கொண்டு போக முடியாது. அதே நேரத்தில் அவர் களிடம் சொல்லாமலும் இருக்க முடியாது. என்ன செய்ய? என தவித்தவள் கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தாள்.

விஷயத்தை இரண்டு பாசக்கார அண்ணிமார்களிடம் சொல்லி அவர்கள் மூலமாக அண்ணன்களிடம் சொல்ல முயலலாமே என தீர்மானித்தாள்.

ஒரு நல்ல நாள் பார்த்து அண்ணிகளிடம் காதல் விஷயத்தைச் சொல்லி சம்மதமும் வாங்கி விட்டாள் தரங்கினி.

ஆனால் நேற்று பார்க்கில் நடந்த நரேந்திரனுடனான விவாதம்தான் அவளை பெரும் அதிர்ச்சியடையச் செய்திருந்தது.

அங்கு நரேந்திரன் உச்சரித்ததைக் கேட்டு தரங்கினி அதிர்ந்தே போய் விட்டாள்.

''என்ன திருட்டுக் கல்யாணமா?''

அவள் புருவம் உயர கண்கள் விரித்து, 'அச்சச்ச்சோ!' என உதடுகள் துடிக்க எழுந்தே விட்டாள்.

''அடாடா! இந்த 'போஸ்' எவ்வளவு நன்றாக ஓவியம் போல் இருக்கிறது... இன்று பார்த்து என் கையில் காமிரா இல்லை. வேண்டுமானால் செல்போன் காமிராவால் படம் பிடிக்கட்டுமா?'' என்றான் அவன் விளையாட்டுச் சிரிப்புடன்.

''உதைப்பேன்...'' என அவனைப் பார்த்து கோபமாய் பற்களைக் கடித்தவள், ''சீரியஸ் நரேன். முக்கியமான விஷயம். விளையாட்டுத் தனமாய் என்ன சொல்கிறீர் கள்?''

''நான் விளையாடவில்லை. நானும் சீரியஸாய்த்தான் சொல்கிறேன். திருட்டுக் கல்யாணம் ஒன்றுதான் நமக்கு சாய்ஸ்...!'' என்றான்.

''திருட்டுக் கல்யாணமா? அதுவும் எனது அண்ணாக் களுக்கு தெரியாமலா? நடக்கவே நடக்காது...!'' என்றாள் தரங்கினி ஆணித்தரமாக.

''நான் அப்படிச் சொல்லவில்லையே... உன் பாசக்கார அண்ணன்களுக்கு சொல்லி விடலாம். காதல் பிடிக்காத



அவர்கள் ஒப்புக் கொள்ள மறுப்பார்கள். பின் என்ன செய்வது?''

''அதற்காக... அதற்காக... இப்படியா...? சே! ஒரு போதும் என்னால் முடியாது. கற்பனையால் நினைத்துப் பார்க்கக்கூட முடியாது. வேறு ஏதாவது வழி சொல் லுங்கள்...''

நரேந்திரனும் பதிலுக்கு அவளைப் போலவே உதடுகளைப் பிதுக்கினான். ''நாம் கல்யாணம் செய்வ தற்கு இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் திடுதிப் பென்று கல்யாணம் செய்து கொண்டு உன் அண்ணன் மார்கள் முன் நிற்பதுதான் எனக்குத் தெரிந்த ஒரே வழி...!'' என்றான்.

''வேறு வழி இருக்கும். நாம் யோசித்துப் பார்க்க வில்லை...'' என்றாள்.

''சரி... நீ சொன்ன மாதிரியே யோசித்துப் பார்க்கிறேன். பார்க்கட்டுமா?'' என்றபடி நரேந்திரன் ஓரிரு நிமிடம் தீவிர சிந்தனைக்கு போவது போல் முகத்தை வைத்துக் கொண்டு பின் நிமிர்ந்தான்.

''ஒன்று இருக்கிறது. அதுவும் அடைப்பட்ட வழி தான்...!''

''அது என்ன அடைப்பட்ட வழி?''

''அதாவது... முறைப்படி உன்னை பெண் கேட்கும் வழி! யாராவது தரகரை அனுப்பி உன்னை முறையாய் பெண் கேட்பது போல் ஏற்பாடு செய்யலாம். ஆனால் அதற்கும் 'இப்போதைக்கு கல்யாணத்திற்கு அவசர மில்லை... உங்கள் சம்பந்தம் பிடிக்கவில்லை...' என்று

அதற்கும் முகத்திலடித்தாற்போல் கூறி விட்டால்... பின் என் செய்வது?'' என கேள்வியுடன் நிறுத்தினான் நரேந்திரன்.

''புரிகிறது...'' என விழிகளை அசைத்து தலையாட்டி னாள் தரங்கினி.

நரேந்திரன் குனிந்து தன் கைகளால் அவள் முகத்தை நிமிர்த்திப் பார்த்தவன், ''நன்றாக யோசித்துப் பார்த்து விட்டேன் தரங்கினி. இப்படி தடாலடியாய் ஏதாவது செய்தால்தான் நாம் வாழ்க்கையில் இணைய முடியும். இல்லாவிட்டால் உன் அண்ணன்களுக்கு இருக்கும் பணத்திற்கும் செல்வாக்கிற்கும் நான் எந்த விதத்திலும் பொருத்தமில்லாதவனாய்த்தான் இருப்பேன்'' என முடித்தான்.

தரங்கினியும் கொஞ்ச நேரம் பேசாமல் அமைதியாகி விட்டாள்.

நரேந்திரன் சொல்வது எல்லாம் சரிதான். இரண்டு அண்ணன்களுக்கும் மற்ற தொழிலதிபர்கள், அரசியல் வாதிகள், உயர் அதிகாரிகள் என பல பேரைத் தெரியும். அவ்வளவு செல்வாக்காய் சமூகத்தில் இருக்கும் அவர் களை எதிர்த்து நரேந்திரனால் ஒன்றும் செய்ய முடியாது.

அவளுக்குத் தெரிந்த, இருக்கிற ஒரே வழி அண்ணி மார்கள்தான்!

அவர்களிடம்தான் யோசனை கேட்க வேண்டும்.

முடிவுக்கு வந்து நரேந்திரனிடம் சொன்னபோது அவன் திகைத்தான்.



''என்ன... நம் விஷயத்தை அவர்களிடம் சொல்லி விட்டாயா? எப்போது?'' என்றான் பெரும் ஆச்சரிய மாய்.

''இரண்டு நாளுக்கு முன்புதான்!'' என்றாள்.

''அவர்கள் ஒன்றும் சொல்லவில்லையா?''

''ம்ம்... அவர்களுக்கும் பெரும் அதிர்ச்சிதான்! நீயா... இப்படி காதல் வலையில் மாட்டிக் கொண்டு... என அதி சயித்து... உங்களைப் பற்றி விலாவாரியாய் விசாரித்து கேட்டார்கள். சொன்னேன். கடைசியில் அனுமதிப்பது போல் தலையையும் அசைத்தார்கள்...''

''என்ன சம்மதம் சொல்லிவிட்டார்களா?'' மறுபடியும் நரேந்திரன் வியக்க விளக்கினாள் அவள்.

''என் அண்ணன்களைப் போலவே என் அண்ணி மார்களும் என் மீது அதீத பாசம் வைத்திருப்பவர்கள். அதனாலே என் ஆசையைப் புரிந்து சம்மதிக்கவும் செய் தனர்! அது நான் செய்த பாக்கியம்!'' என்றாள் அவள் பெருமிதமாக.

''அதுபோதும்...!'' என உற்சாகமாய் கைகளைத் தட்டினான் நரேந்திரன்.

''தரங்கினி அவர்கள் சம்மதம் கொடுத்தாலே கிட்டத் தட்ட உங்கள் அண்ணன்கள் சம்மதித்த மாதிரிதான். மேலும் அவர்கள் துணையிருந்தால் நாளை திடீரென்று நாம் மணக்கோலத்தில் போய் அண்ணன்கள் முன் நின்றாலும், அவர்கள் சமாதானப்படுத்தி நம்மை ஏற்றுக் கொள்ளவும் வைத்து விடுவார்கள். அதுபோதும் தானே?''

''போதும்தான்! ஆனால் இப்படியெல்லா... ஆக்குமா? சாத்தியம்தானா?'' அவள் நம்ப முடியாமல் ... பிளந்தாள்.

''நடக்கும்! சாத்தியம்! என அடித்து உறுதியாய் சொன்ன நரேந்திரன், ''தரங்கினி, முதலில் உன் அண்ணிமார்களை நான் சந்தித்துப் பேச வேண்டும். அதற்கு ஏற்பாடு செய். நாம் எல்லோரும் கூடிப் பேசி ஆலோசனை செய்வோம். ஒரு நல்ல முடிவு எடுப்போம்!'' என்றான் தெளிவான குரலில்.

தரங்கினிக்கும் அவன் சொல்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதாய் தோன்றியது. அதுவே சரி...! என அவனிடம் விடை பெற்று கிளம்பினாள் அவள்.

மறுவாரம் ஒரு மதிய நேரம் அதேபோல் ஒரு ஹோட்டலில் வைத்து சந்திப்பும் நடந்தது.

நரேந்திரனை தன் அண்ணிமார்களுக்கு அறிமுகம் செய்து வைத்தாள் தரங்கினி.

பவ்யமாய் சுலோச்சனாவையும் கற்பகத்தையும் பார்த்து வணங்கினான் நரேந்திரன்.

பின் கூடிப் பேசினார்கள்.

நரேந்திரன் தெளிவாய்ப் பேசி காரணங்களை விளக்கினான். ''கண்டிப்பாய் பொன்சேகரனுக்கும் தனசேகரனுக்கும் தெரியாமல்தான் தரங்கினியின் கையைப் பிடிக்க முடியும். இல்லையெனில் காதலுக்கு பெரும் எதிரியான அவர்கள் ஒரு போதும் சம்மதிக்கப் போவதில்லை..'' என எடுத்துரைத்தான்.

மேலும் இரண்டு மூன்று முறை அந்த சந்திப்பு நடந்தது.



எல்லோரும் கூடிப் பேசினார்கள்.

கடைசியில் அந்த விபரீத முடிவையும் எடுத்தார்கள்.

தனசேகரனுக்கும் பொன்சேகரனுக்கும் தெரியாமல் தரங்கினிக்கு திருட்டுக் கல்யாணம் பண்ணுவது என்று!

# 6

தரங்கினிக்கு ஆனாலும் ஆற்றாமை. மனது சமாதானம் ஆகவில்லை!

நரேந்திரன்தான் 'திருட்டுக்கல்யாணம்' என ஒரே பிடியாய் பிடித்து குதிக்கிறான் என்றால் அண்ணிமார்களும் அது சரி என ஒத்து ஊதுகின்றனரே?

இவர்களுக்கு அண்ணன்களைப் பற்றித் தெரியாதா?

என்னதான் பாசம் காட்டினாலும் இப்படியொரு துரோகத்தை, கழுத்தறுப்பைச் செய்தால் அவர்களால் தாங்க முடியுமா? இல்லை அதை அவர்களால் சகித்துக் கொள்ளத்தான் முடியுமா?

மனம் பதைத்தவளாய் அன்றிரவு அண்ணன்மார்கள் தூங்கிய பிறகு வரச் சொல்லி அண்ணிமார்கள் இருவரையும் மொட்டைமாடிக்கு அழைத்துச் சென்றாள்.

மொட்டைமாடி திண்டு பக்கம் சென்று, ''இப்படி உட்காருங்கள்! இப்போது சொல்லுங்கள்!'' என்றாள்.

''எதைச் சொல்ல தரங்கினி?'' என்றார்கள் அப்பாவியாய் இருவரும் முகத்தை வைத்துக் கொண்டு.

''அட! எல்லாம் என் காதல் விஷயம்தான். அதற்குள் மறந்து விட்டீர்களா?''

''மறக்கவில்லை... தரங்கினி! அதான் முடிவு பண்ணி விட்டோமே... திருட்டுக் கல்யாணம் என்று...!''

''அதான்... அதைத்தான் சொல்கிறேன்! இந்த திருட்டுக் கல்யாணம் சரிதானா? கொஞ்சம் யோசியுங்கள்?''

தரங்கினி ஆவலாய் கேட்க அண்ணிமார்கள் சிரித்தனர்.

''என்ன தரங்கினி... நாங்கள், நீ, நரேந்திரன் மூவரும் கூடிப் பேசிதானே துணிச்சலாய் இந்த முடிவை எடுத்தோம். பிறகு எதற்கு வீணாக குழம்புகிறாய்?''

''குழம்பவில்லை. பயமாய் இருக்கிறது.''

''பயமா? எதற்கு?''

சின்ன அண்ணி கற்பகம் கேட்க அவளை போலியாய் முறைத்தாள் தரங்கினி.

''இது என்ன கேள்வி அண்ணி? என் அண்ணன்களை உங்கள் கணவன்மார்கள் பற்றி உங்களுக்குத் தெரியாதா? விஷயம் தெரிந்தால் வெட்டிப் போட்டு விட மாட்டார்கள்?''

தரங்கினி கேட்க மறுபடியும் இருவரும் சிரித்தனர்.

''அதான் இல்லை...! அப்படி ஒரு போதும் நடக்காது...!''

''ஏன் நடக்காது?''



''காரணம்... பாசம்தான்! அன்புதான்! உன் அண்ணன்கள் உன் மேல் அவ்வளவு பாசம் வைத்திருக்கிறார்கள்...''

''அதாவது நான் இவ்வளவு பெரிய தப்பைச் செய்தாலும் அதை மன்னிக்கும் அளவுக்கு பெருந்தன்மையாக...!''

''ஆமாம் தரங்கினி...''

''அதனால் என்னை மன்னித்து விடுவார்கள்?''

''ம்ம்... கண்டிப்பாக!''

''எப்படி அண்ணி அது சாத்தியம்? ஆசை ஆசையாய் வளர்த்து பாசத்தை பொழியும் அவர்களுக்கு இத்தகைய துரோகச் செயல் பெரும் ஆத்திரத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தாதா?''

''ஏற்படுத்தாதுதான்!'' என்றார்கள் இருவரும் கோரஸாய்.

''எதை வைத்து இப்படிச் சொல்கிறீர்கள்?''

''வேறு என்ன தரங்கினி? உங்கள் அண்ணனுடைய பிடிவாதம் கோபம் எல்லாம் மற்றவர்களிடம் தான்! உன்னைப் பார்த்தால் போதும். அப்படியே மாறி விடுவார்கள். பல்லை இளித்துக் கொண்டு நீ எது சொன்னாலும் தலையாட்டி விடுவார்கள்...''

''நிஜமாகவா?''

''நிஜமாகத்தான்...!''

''அப்படியானால் எனக்கு இன்னொரு யோசனை தோன்றுகிறது. நாம் அப்படிச் செய்யலாமே?''

''என்ன யோசனை?''

''அப்படி... என் மீது பாசம் வைத்திருக்கிற அண்ணன்களிடம் ஏன் விஷயத்தை மறைக்க வேண்டும். பேசாமல் உண்மையை உடைத்துக் கூறி சம்மதம் பெற முயற்சிக்கலாமே?'' தரங்கினி கண்கள் விரிய ஆவலாய் கூறியதை அசட்டையாய் மறுபடியும் கேட்டு சிரிக்க ஆரம்பித்தனர் இருவரும்.

''அது... விஷப்பரீட்சை தரங்கினி...'' என்றனர்.

தரங்கினி புரியாமல் விழிக்க விளக்கவும் செய்தனர்.

''தரங்கினி, ஒன்றைத் தெளிவாக தெரிந்து கொள். உன் அண்ணன்கள் உன் மீது அபரீதமான பாசத்தை வைத்திருக்கிறார்கள். அதுதான் நம் பலம். அதை வைத்தே உன் அண்ணன்களை மயக்கி சம்மதிக்க வைப்பது தான் நமது திட்டமும் கூட. அதனால் சட்டென கோயிலில் வைத்து மாலை மாற்றி அவர்கள் முன் போய் உன்னை நிறுத்தி விடுவோம்...''

அவர்கள் விவரிக்க யோசித்துப் பார்த்த தரங்கினிக்கு எல்லாமே இலகுவாய்த்தான் தோன்றியது. ஆனால் அதுபோல எல்லாம் நடக்க வேண்டுமே?

அவள் அப்படி திரும்பவும் யோசிப்பது கண்டு பக்கத்தில் வந்தாள் சுலோச்சனா.

''தரங்கினி, ரொம்பவும் யோசித்துக் குழம்பாதே. எல்லாம் நல்லபடியாக நடக்கும். நீ மட்டும் தைரியமாய் இருந்தால் போதும். எல்லாவற்றையும் நாங்கள் பார்த்துக் கொள்வோம்!''

கைகளை அழுத்தியபடி சுலோச்சனா அண்ணி தைரியம் கொடுக்க பாரம் இறங்கியவளாய் நிம்மதி அடைந்தாள் தரங்கினி.



# 7

அண்ண[illegible]னும் சரி, நரேந்திரனும் சரி அது ஒன்றுதான் வழி...' என கிட்டவட்டமாய் கூறி விட்டார்கள்.

ஆனால் தரங்கினியால் அதை அவ்வளவு சுலபமாய் ஏற்றுக் கொள்ள முடியவில்லை!

எவ்வளவு பெரிய விஷயம் அது!

அண்ணன்களுக்குத் தெரியாமலா?

தனசேகரனும் சரி பொன்சேகரனும் சரி அவள் வீட்டிலிருந்தால் நொடிக்கொருதரம், 'குட்டிம்மா... குட்டிம்மா...' என்று சுற்றி வருபவர்களாச்சே...!

அவர்களுக்குத் தெரியாமல்... அவர்கள் நம்பிக்கையை குலைப்பது போல் இப்படி ஒன்றைச் செய்யலாமா? அது எவ்வளவு பெரிய துரோகம்!

யோசித்தவள் விஷயத்தை இலைமறை காயாய் அவர்களிடம் பேசி அவர்களது எண்ணத்தை முழுமையாக அறிந்து கொள்ளலாமே... என திட்டமிட்டாள்.

அதனால் மறுநாளே பேச்சுவாக்கில் இருவரிடமும் கதையளந்தாள்.

கல்லூரியில் நிறைய காதல் ஜோடிகளாய் இருப்பதாகவும் அதனாலே காதல் ரோமியோக்கள் நிறைய பேர்

ஜொள் விட்டபடி கல்லூரி வாசலிலும் பஸ் ஸ்டாப்பிலும் அலைவதாகவும்... பேச்சுவாக்கில் சொல்லி அவர்களது முகக்குறிப்பை ஆராய்ந்தாள்.

அவள் நினைத்தது போலவே இருவரது முகமும் இறுக ஆரம்பித்தது.

தனசேகரன், ''சொல் குட்டிம்மா. ...படி அந்த ரோமியோக்களில் யாராவது உன்...டம் வாலாட்டினார்களா? அப்படியே அவர்... உண்டு இல்லை... என பண்ணிவிடலாம். ...ங்க... பொன்சேகரனோ அதற்கு ஒரு படிமே... போய், ''தனா சொல்வது உண்மைதான் குட்டி...மா. இப்போது ரவுடி கேங்கைச் சேர்ந்த ஒருவன் ...க்கு நல்ல பழக்கம். அவனிடம் சொன்னால் கையைக் காலை என்ன ஆளின் தலையையே எடுத்து விடுவான். எதுவும் செய்ய வேண்டுமா?'' என்றான் கடையில் கேக் செய்ய ஆர்டர் கொடுப்பது போல்.

தரங்கினிதான் பதறிப்போய், ''ஐயைய்யோ...! அப்படியெல்லாம் ஒன்றுமில்லை...! என்னிடம் யாராவது வாலாட்டுவார்களா? நீங்களே சொல்லுங்கள்!'' என்றாள் பேச்சைத் திருப்பிவிட்டவாறு.

''அதானே பார்த்தேன்...'' என்றபடி இரு உடன் பிறப்புகளும் புன்னகை புரிந்தனர்.

ஆனாலும் தரங்கினி விடாமல் பேச்சை இழுத்து வேறு விஷயத்திற்கும் வந்தாள். ''அதாவது அண்ணா எனக்கு சற்று பழக்கமான கல்லூரித் தோழி அவள். அவள் செய்த காரியத்தைச் சொல்கிறேன். நீங்களே நியாயத்தைச் சொல்லுங்கள்!'' என்றபடி விவரித்தாள்.



''அந்தத் தோழி ஒருவனை உயிருக்குயிராய் சினிமாவில் காட்டுவது போல் காதலித்தாள். அவள் வீட்டில் எதிர்ப்பு காட்டுவார்கள். இந்தக் காதல் சமாச்சாரங்களை எல்லாம் ஒத்துக் கொள்ளமாட்டார்கள் என்று பயம். பார்த்தாள் தோழி... யாருக்கும் தெரியாமல் கோவில் ஒன்றில் வைத்து காதலனுடன் மாலை மாற்றிக் கொண்டாள். திருட்டுக் கல்யாணம் பண்ணிக் கொண்டாள். பின் மாலையும் கழுத்துமாய் போய் வீட்டில் நின்றாள். அவள் வீட்டில் என்ன செய்திருப்பார்கள்? நீங்களே சொல்லுங்கள்!'' என்றாள். பெரும் கேள்வியை எழுப்பி ஆவலாய் அவர்களது முகத்தைப் பார்த்தவாறு.

கேட்ட இரு சகோதரர்களும் சிரித்தபடி, ''வேறு என்ன...? கோபத்தை எல்லாம் மறந்து ஆசீர்வாதம்தான் பண்ணியிருப்பார்கள். வேறு என்ன நடந்திருக்க முடியும்?'' என்றனர் எதிர்கேள்வியுடன்.

''அப்படியானால்... தங்களுக்குத் தெரியாமல் திருட்டுக் கல்யாணம் செய்திருந்தாலும் மன்னித்து ஏற்றுக் கொண்டு விடுவார்களா?''

பிரயாசையுடன் அவள் கேட்டதற்கு மறுபடி சிரித்தார்கள்.

''வேறு... வழி? என்ன இருந்தாலும் அவள் பெற்ற மகள்தானே? எவ்வளவு பாசம் வைத்திருப்பார்கள்? அந்த பாசத்திற்காகவாவது அவளை மன்னித்து ஏற்றுக் கொண்டுதானே ஆக வேண்டும்?''

அப்படியும் தரங்கினிக்கு திருப்தி அடையவில்லை. மேலும் தெளிவு கொள்ள விரும்பியவளாய், ''ஆக... பாசம் வைத்திருந்தால் கண்டிப்பாக மன்னித்து விடு

வார்கள். அதைத்தானே நீங்கள் சொல்லி வருகிறீர்கள். அண்ணா?'' என்றாள் ஆர்வமாய்.

''அதேதான்.. குட்டிம்மா...!'' என்று மறுபடி கோரஸ் பாடினர். சிரித்தனர். உள்ளத்தில் பெரும் நிம்மதியும் உவகையும் பொங்கியவளாய் நிமிர்ந்து கொண்டாள் தரங்கினி.

மறுவாரம் நரேந்திரன், அண்ணிமார்களுடன் ரெஸ்ட்டாரண்ட் ஒன்றில் கூடி விவாதித்தபோது தன் சம்மதத்தையும், தான் சம்மதிப்பதற்கான காரணத்தையும் விளக்கினாள்.

அவள் சொல்லி முடிப்பதற்குள், அண்ணிமார்கள் இருவரும், ''பார்த்தாயா? பார்த்தாயா...? நாங்கள்தான் முன்பே சொல்லியிருந்தோமே... உனது பாசக்கார அண்ணன்மார்கள் கண்டிப்பாக நீ செய்யப் போவதை மன்னித்து ஏற்றுக் கொள்வார்கள் என்று...? அதேபடிதான் நடந்திருக்கிறது. சொல்லியிருக்கிறார்கள். இனியும் தயக்கம் வேண்டாம் தரங்கினி!'' என்றார்கள்.

பக்கத்திலிருந்த நரேந்திரனும் சட்டென அவளது கைகளை பிடித்து அழுத்தினான். ''ரொம்பவும் புத்திசாலித்தனமாய் செய்திருக்கிறாய். அவர்களைப் பற்றி அவர்கள் வாயில் இருந்தே பதிலை வரவழைத்திருக்கிறாய். கிரேட் ஜாப்... தரங்கினி!'' என்றான் பாராட்டியவாறு.

பின் நால்வரும் ஒரு மனதாகி திட்டமிட ஆரம்பித்தார். மறுவாரம் வரும் சுபமுகூர்த்த நாள் ஒன்றில் கல்யாணம். கல்யாணம் நகரின் நுழைவாயிலில் இருக்கும்



மலையடிவார முருகன் கோவிலில் நடத்துவது என்றும் தீர்மானித்தார்கள்.

சிம்பிளாக ஐயர் ஒருவரை வைத்து மந்திரங்கள் சொல்லி சுவாமியின் சன்னதியில் மாலை மாற்றிக் கொள்வதுதான் அவர்களது ப்ளான். கல்யாணம் முடிந்ததும் உடனே... வீட்டிற்கு வந்து அண்ணன்மார்களின் காலடியில் விழுதல். திகைத்து ஸ்தம்பிக்கும் அவர்களை கூட வரும் இரண்டு அண்ணிமார்களும் ஆறுதல் படுத்தவேண்டும். சமாதானப்படுத்தி ஆசீர்வாதம் செய்ய வைக்க வேண்டும். அது அவர்களது வேலை!

திட்டம் போட்டு ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது என்னவென்று வகுத்தார்கள். அண்ணிகள் சுலோச்சனாவும் கற்பகமும் உரத்த குரலில், ''நாங்களாச்சு. உன் அண்ணன்களை சமாதானப்படுத்தி விடுகிறோம்'' என உறுதி கொடுக்க நடக்கப் போகும் விஷயங்களுக்கு அரைமனதுடன் தலையாட்டினாள் தரங்கினி.

ஆனாலும் உள்ளுக்குள், 'ஊரறிய கோலாகலமாய் நடக்க வேண்டிய அவளது திருமணம் இப்படி யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாய் நடக்கப் போகிறதே?' என்ற பயம் ஆதங்கம் அவளுள் எழாமல் இல்லை.

அதற்கும்... 'அப்படி கோலாகலமாய் திருமணம் நடக்கலாம். ஆனால் பின் அது அவள் மனதுக்கு பிடித்தவனுடன் நடக்காமல் போய் விடுமே? அதற்கு என்ன செய்வது? என்ற கேள்வி எழும்பிய போது முந்தைய எண்ணம் காணாமல் போயிற்று.

ஒருவழியாய் நால்வரும் மறுபடி மறுபடி கூடிப் பேசினார்கள். கவனமாய் திட்டமிட்டார்கள். கல்யாண முகூர்த்த நாள் நெருங்க ஆரம்பித்தது.

வரப் போகும் விபரீதத்தை உணராமல், கல்யாணத்தை எதிர்கொள்ள தயாரானாள் தரங்கினி.

# 8

தரங்கினியின் முழு சம்மதத்துடன் ஒரு நல்ல நாள் ஒரு நல்ல முகூர்த்தம் குறிக்கப்பட்டது.

நரேந்திரன் எல்லா விஷயங்களையும் கச்சிதமாய் பிளான் செய்திருந்தான்.

ஊருக்கு வெளியாக இருக்கும் மலையடிவார முருகன் கோவிலில் அனுமதிச் சீட்டு ஐயர் சகிதம் தயாராய் காத்திருந்தான்!

இனி அவள் கிளம்ப வேண்டியதுதான் பாக்கி.

சஞ்சல மனதுடன் வீட்டிலிருந்து கிளம்பினாள் தரங்கினி. அண்ணன்கள் இருவரும் காலையிலேயே சென்று விட்டனர். அண்ணிகள் இருவரிடமும் கண்கலங்க விடைபெற்றாள்.

சுலோச்சனாவும் கற்பகமும் அவளுக்கு ஆறுதலாய் பேசி தைரியமூட்டினர். மேலும் சரியான முகூர்த்த



நேரத்திற்கு அங்கு வந்து விடுவதாய் உறுதி கூறி அனுப்பி வைத்தனர்.

தரங்கினி ஆட்டோ பிடித்து மலையடிவார முருகன் கோவிலை அடைந்தாள். பட்டு வேஷ்டி, பட்டுச்சட்டை சகிதம் புன்னகையுடன் எதிர்கொண்டான் நரேந்திரன்.

நரேந்திரனைப் பார்த்ததும்தான் அவளுக்கு ஓரளவு தைரியமே வந்தது.

இருந்தாலும் இனம் புரியாத தவிப்பும் ஒரு வித படபடப்பும் மனதுள் எழுவதை அவளால் தடுக்க முடியவில்லை.

ஊரறிய அண்ணன்கள் முன்னிலையில் ஜாம்... ஜாம்...மென நடக்க வேண்டிய அவளது கல்யாணம் இப்படி யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாய் அல்லவா நடக்கப் போகிறது?

கூடவே அந்த திகிலான பயமும் அவளுள் எட்டிப் பார்த்தது.

நரேந்திரனும் அண்ணிமார்களும் சொன்னது போல் நடக்க வேண்டுமே?

கல்யாணம் முடிந்து மாலையும் கையுமாய் அண்ணன்மார்கள் முன் போய் நின்றால் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமே?

அப்படி ஏற்றுக் கொள்வார்களா? மன்னிப்பார்களா? இதுவெல்லாம் நடக்கக் கூடிய விஷயங்கள்தானா?

கேள்விகள் வரிசையாய் எழுந்து அவளை இம்சிக்க ஆரம்பித்தன.

ஆனால் அதற்கு மேல் எல்லாம் சிந்திக்கவோ கவலைப்படவோ அவளுக்கு நேரமில்லை.

யாரோ அவளை அவசரப்படுத்தினர். யாரோ அவளை உள் ரூம் ஒன்றிற்கு கூட்டிப் போயினர். விதம் விதமாக அலங்கரித்தனர்.

அடுத்த நிமிடங்களில் அவள் மணப்பெண்ணாய் நரேந்திரன் பக்கத்தில் உட்காரவும் வைக்கப்பட்டாள்.

அவளுக்குத்தான் பதைப்பும் பதட்டமும் இருந்ததே தவிர நரேந்திரன் எவ்வித சலனமுமில்லாமல் அமைதியாக உட்கார்ந்திருந்தான்.

மணமேடையில் உட்கார்ந்த தரங்கினியின் கண்கள் அடிக்கடி வாயில்புறம் பார்த்தது. இன்னும் அண்ணிகள் வரவில்லையே? ஏன் நாலாபுறமும் மேய்ந்தது.

நேரம் விரைந்து கொண்டிருந்தது. இதோ... முகூர்த்தம் நெருங்கிவிட்டது. இன்னும் அண்ணிமார்கள் வந்த பாடில்லை. வேறு வழியில்லாமல் தவித்தாள். தரங்கினி - கொஞ்ச நேரத்தில் கல்யாண கெட்டிமேளமும் நடந்தது. ஒலி அவள் காதுகளில் ஒலிக்க... தாலியைக் கட்டி மூன்று முடிச்சு போட்டான் நரேந்திரன்.

ஐயோ! கடைசி வரை அண்ணிகள் வரவில்லையே! என தவித்துப் போனாள் அவள்.

அப்படியே நண்பர்களின் ஆசீர்வாதங்களை வாங்கி மாலையும் கழுத்துமாய் இருவரும் கோவிலின் முன்புறம் வந்தனர்.

வந்தவர்கள் அப்படியே அதிர்ந்து நின்றனர்.

எதிரே...



விஷயம் கேள்விப்பட்டு படபடப்புடன் வந்து நிற்கும் அண்ணன்கள் தனசேகரனும் பொன்சேகரனும்! அவர்களுக்குப் பின் அண்ணிமார்கள் சுலோச்சனாவும் கற்பகமும்!

தரங்கினிக்கு நிமிர்ந்து அண்ணன்களின் முகத்தையே பார்க்க முடியவில்லை!

கடைசியில் அவளே என்ன ஒரு காரியம் பண்ணி விட்டாள்? எப்படி கரியைப் பூசிவிட்டாள்? திருட்டுக் கல்யாணம்!

பச்சைத் துரோகம் அல்லவா?

அவள் மனதுள் பதைப்பாய் நினைக்க, இருவரும் முன் வந்து, ''பச்சைத் துரோகி! என்ன ஒரு காரியம் பண்ணிவிட்டாய்...?'' என அடக்க முடியாத வசவுகளை ஆரம்பித்து விட்டனர்.

காதுகளை செவிடாகிப் போனது போல் உணர்ந்தாள் தரங்கினி.

## 9

தரங்கினிக்கு மூச்சே நின்று விடுவது போலிருந்தது. பூமி அப்படியே பிளந்து தன்னை விழுங்கிவிடக் கூடாதா என்றிருந்தது.

எது நடக்கக் கூடாது என்று நினைத்தாளோ அது நடந்து விட்டது!

யார் முன்னிலையில் அந்தக் கோலத்தில் நிற்கக் கூடாது என்று நினைத்தாளோ அது நிகழ்ந்து விட்டது!

நரேந்திரனும் அவளும் மாலையும் கழுத்துமாய். கண் கொள்ளாக் காட்சி! அதுவும் இரண்டு அண்ணன்மார்கள் முன்!

அவள் முகம் குன்றி கூனிக் குறுகி... உடம்பே நடுங்க... துடிக்கும் உதடுகளுடன் சிவந்த தனது முகத்தை எங்கே கொண்டு போய் வைப்பது எனப் புரியாமல் தவித்தாள் அவள்!

ஐயோ! இப்படி நடந்து விட்டதே! கல்யாணம் தெரியாமல் செய்து தாமே போய் அவர்கள் முன் நிற்பதற்கு முன்னால் அண்ணன்மார்களே நேரில் வந்து விட்டார்களே!

எப்படி வந்தார்கள்? யார் சொன்னார்கள்? அவர்களுக்கு இந்த விஷயம் கொஞ்சமும் தெரிய வாய்ப்பில்லையே!

அந்த நேரத்திலும் தரங்கினிக்கு திகைப்பாய் கேள்விகள் எழுந்தாலும், அதற்கு இதுவா நேரம்? என தன் எண்ணத்தை அடக்கி அப்படியே குனிந்தாள்.

குனிந்தால் மட்டும் போதுமா? தப்பிவிட முடியுமா?

சூரியனைப் போல் தகதகவென சுட்டெரிக்கும் பார்வையால் இரண்டு அண்ணன்களும் துளைத்து எடுக்கிறார்களே!

அதை எப்படித் தாங்குவது?

ஆனாலும் வேறு வழி? முகத்தை எவ்வளவு நேரம் தான் குனிய வைத்துக் கொண்டு இருக்க முடியும்?



மெல்ல நிமிர்ந்தாள். தலை நிமிர்ந்தாலும் விழிகள் தரை தாழவே பார்வையை உயர்த்தினாள்.

இரண்டு அண்ணன்களும் அவள் கழுத்தில் புதிய தாய் தொங்கும் தாலிச் சரடையும் நரேந்திரனையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தனர்.

சரி, நரேந்திரன் என்ன செய்கிறான் எப்படி இதைச் சமாளிக்கப் போகிறான் என பக்கவாட்டில் அவனைப் பார்த்தவளுக்கு சற்று அதிர்ச்சிதான்!

நரேந்திரன் எவ்வித பாதிப்பும் இல்லாதது போல் அசால்டாய் முகத்தை வைத்துக் கொண்டு அண்ணன் மார்களைப் பார்த்து பயப்படாத ஒரு இளிப்பு வேறு இளித்துக் கொண்டிருந்தான்.

என்னாயிற்று இவனுக்கு?

எவ்வளவு கோபமாய் கடித்துக் குதறிவிடுவது போல் முறைக்கிறார்கள்... இவன் ஒன்றுமே உணராதது போல் இளித்துக் கொண்டு அல்லவா இருக்கிறான்?

ஒருவேளை நடந்த அதிர்ச்சியில் புத்தி இவனுக்கு பேதலித்து விட்டதா?

தரங்கினி திகைத்துப் பார்க்க நரேந்திரன் அவள் பார்ப்பதை உணர்ந்து அவள் பக்கம் திரும்பி, ''ஒன்றும் பயப்படத் தேவையில்லை தரங்கினி. கழுத்தில் தான் தாலி கட்டியாகி விட்டதே! கவலையை விடு...!'' என்றான் கொஞ்சம் உரத்த குரலில் அண்ணன்மார்கள் காதில் படும்படியாகவே!

மேலும் திகைத்து தவித்தாள் தரங்கினி.

அட! இவன் எல்லாவற்றையும் பார்த்து புரிந்துதான் பேசுகிறான்.

ஆனால் என்ன...? எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல் அல்லவா அலட்சியமாய் சிரித்து, பயப்படாதே தாலி கட்டியாயிற்று... என உரக்கச் சொல் லிக் கொண்டு...? அண்ணன்கள் காதில் விழும் இந்தப் பேச்சு... அவர்களை எப்படி கொதிப்படையச் செய்யும்...? அதை உணராமல் முட்டாள் மாதிரி இப்படி உளறு கிறானே இந்த நரேந்திரன்?

அவள் திகைத்து செய்வதறியாமல் தவிக்க அவளை மேலும் அதிர்ச்சியாக்கும்படி முறைத்த அண்ணன் மார்கள் இருவரும் அவள் பக்கத்தில் வந்தனர்.

கொள்ளிக்கட்டை போல் ஜொலித்த அவர்களது கருவிழிகளின் சக்தியைத் தாங்காமல் குனியப் போன வளை அவர்களது கடுமையான வார்த்தைகள் நிமிர வைத்தது.

''முட்டாள்! போயும் போயும் இவனையா திருட்டுக் கல்யாணம் பண்ணியிருக்கிறாய்? உன் அறிவு எங்கே போயிற்று?''

கோபமாய் அவர்கள் கேட்ட கேள்வி அப்படியே அவள் காதுகளில் விழுந்து மூளையில் உரைத்தது.

என்ன.. என்ன சொன்னார்கள்?

போயும்... போயும் இவனையா?

அப்படியானால் இவர்களுக்கு நரேந்திரனை தெரியுமா? முன்பே இவர்களுக்கு பழக்கம் பரிச்சயம் உண்டா?

அவள் மறுபடியும் திகைக்க அவர்களோ நேரிடையாக அவள் கண்களை துளைப்பது போல் பார்த்து, ''ஆனா லும் என்ன ஒரு நெஞ்சழுத்தம்! எவ்வளவு அன்பு பாசம்



காட்டி உன்னைச் சீராட்டி குழந்தை போல் வளர்த்தோம்? எல்லாவற்றையும் இந்த ஒரு இழிவான காரியம் மூலம் சிதைத்து விட்டாயே...! வடிகட்டிய முட்டாள் நீ...!'' என காறி உமிழாத குறையாய் வார்த்தையை உதிர்த்தார்கள்.

என்ன செய்ய? என்ன நடந்தாலும் இனி தாங்கித் தான் ஆக வேண்டும். என்ன சொன்னாலும் கேட்டுத் தான் ஆக வேண்டும்!

ஒரு ஐந்து பத்து நிமிட மாற்றத்தில் அவள் போட்ட கணக்கெல்லாம் மாறிவிட்டதே! மாலையும் கழுத்துமாய் எதிரில் போய் நின்று காலில் விழுந்து கெஞ்சி விடலாம் என பார்த்தால் அவர்களே எதிரில் வந்து கையும் களவு மாய் பிடிப்பது போல் அவளைப் பிடித்து விட்டார்களே!

இனி அவள் கெஞ்சவும் முடியாது! நியாயம் பேசவும் முடியாது. பலிகடா போல் வகையாய் மாட்டிக் கொண் டாள் அவள்!

ஆனால்... எதனால் இப்படி நிகழ்ந்தது?

இவர்கள் விஷயம் தெரிந்து வர வாய்ப்பே இல்லையே?

யார் சொன்னார்கள்?

இவர்களை விடுவோம். முன்பே வரவேண்டிய அண்ணி மார்கள் ஏன் வரவில்லை?

ஒருவேளை அண்ணன்மார்கள் வெளியே எங்கும் செல்ல விடாமல் தடுத்து விட்டார்களா?

அப்படியானாலும் ஏதாவது சாக்கு போக்கு சொல்லி கிளம்பி வந்து விடுவார்களே! பின் எப்படி இது நடந்தது?

திகைத்தவளாய் தரங்கினி அண்ணிமார்களை உற்றுப் பார்க்க... அவர்களும் முகத்தில் எந்தவித சலனமு மில்லாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

எந்தவொரு ஜாடையோ, கண்ணசைப்போ அவர்கள் ஆதரவாய் கொடுக்காதது தரங்கினியை ஆச்சரியப்படுத் தவே செய்தது.

ஒருவேளை அண்ணன்கள் தங்களது நிலையை வெளிக் காட்ட தயங்குகிறார்களோ என நினைத்தாள் தரங்கினி.

அவள் நினைத்தது போலவே அவர்களும் பக்கத்தில் வந்து, "என்ன காரியம் செய்து விட்டாய் தரங்கினி? உன் அண்ணன்கள் உன் மீது எவ்வளவு பாசம் வைத்திருந் தார்கள். எல்லாவற்றையும் பாழ்படுத்தி விட்டாயே! எவ் வளவு பெரிய அவமானம்... தலைகுனிவு அவர்களுக்கு ஏற்படும் கொஞ்சமாவது யோசித்துப் பார்த்தாயா?" என அதட்டுவது போல் பேச தரங்கினி முதலில் திடுக்கிட் டாலும் பின் அண்ணன்கள் முன்னால் அப்படி நடிக் கிறார்கள் என்பதை புரிந்து கொண்டாள்.

ஆனால் அவளால் மேலும் எதையும் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. வசவுகளாய் விழும் வார்த்தைகளை காதுகளால் கேட்க முடியவில்லை.

அப்படியே பேசாமடந்தையாய் திடீரென கற்சிலை ஆகிவிட்டது போலவே நின்றாள்.

பல்லைக் கடித்துக் கொண்டு குனிந்தவள் அவர்கள் ஆத்திரம் தீர திட்டித் தீர்த்து விட்டு போகும் வரை நிமிரவே இல்லை...!!



# 10

கல்யாணம் முடிந்த அன்று இரவு இவ்வளவு பயங் கரமானதாக இருக்கக்கூடும் என தரங்கினியே எதிர் பார்க்கவில்லை!

"ரொம்பவும் அதிர்ந்து விடாமல் நான் சொல்வதை அமைதியாக நீ கேட்க வேண்டும்..." என்று நரேந்திரன் ஆரம்பித்தபோது அவன் ஏதோ விளையாடுகிறான் என நினைத்தவள் அவன் சொன்னதைக் கேட்டு அதிர்ந்தே போய் விட்டாள்!

"உன் அண்ணிமார்கள் கல்யாண மண்டபத்தில் அப்படி நடந்து கொண்டது அதிர்ச்சியாய் இருக்குமே...? ஏன் என்று யோசித்தாயா?" என்றான்.

அவள் அதற்கு பெரிதும் வியப்பு காட்டாமல், "நானும் யோசித்தேன். அது... அது... அண்ணன்மார்கள் முன் இரு வரும் அப்படி தெரியாதது போல் காட்டிக் கொண்டு... அப்படிப் பேசினார்கள் என்பது என் யூகம்..."

"உன் யூகம் தவறு! அவர்கள் நிஜமாகவே பேசி னார்கள். தங்களது உண்மையான எரிச்சலை உன் மீது காட்டினார்கள்."

அவள் புரியாமல் திகைக்க, அவள் மைவிழி கண் களுக்கு நேராக சொடுக்கிட்டவன், "அது இருக்கட்டும். உன் அண்ணன்மார்கள் அப்படி திடுதிப்பென்று

கரெக்டாக கோவிலுக்கு அதுவும் நம் கல்யாணம் முடிந்த அடுத்த சில வினாடிகளிலேயே பதைப்புடன் வந்தார் களே... அதை... அதை... கவனித்தாயா? யார் அவர்களுக்கு விஷயத்தைச் சொன்னார்கள் என்று யோசித்தாயா?''

அவன் கேட்டதும் அவளுக்கு அப்போதுதான் சுரீரென உரைத்தது. ஆமாம். அவள் அப்படி யோசிக்கவே இல்லையே...! ''எப்படி... எப்படி... வந்தார்கள்? தெரிந் திருக்க வாய்ப்பில்லையே! யார் சொன்னார்கள்?''

அவள் வியப்பாய் யோசித்தாள்.

மறுநிமிடம் மின்னல் வெட்டி இடியொன்று இறங்கியது.

''நான்தான் சொன்னேன்! போனில் தகவலைச் சொல்லி அவர்களை வரச் செய்தேன்!'' என்றான் நரேந் திரன் அமைதியாக.

அவள் அதிர்ச்சியில் எழுந்தே விட்டாள். ஒருவேளை தன் காதுகளில் மாற்றி விழுந்து விட்டதோ...? என்பது போல் அவனைப் பார்க்க... ''என்ன பார்க்கிறாய்? நான்... நானேதான்... போன் செய்து வரவழைத்தேன்'' என்றான் ஆணித்தரமான குரலில் கைகளை இறுக்கமாய் கட்டிக் கொண்டு.

அவளால் இன்னமும் நம்பமுடியவில்லை. ''ந... நரேன்... நரேன்... நீங்களா? நீங்களா?'' என்றாள் அதிர்ச்சி விலகாமல்.

''உண்மையைச் சொல்லட்டுமா?'' என்றான் அவன் மறுபடியும்.

''உண்மையா... என்ன அது?''

''நீ நினைப்பது போல் நான் உன் வாழ்க்கையில் வந்த கதாநாயகன் இல்லை. வில்லன்...!'' என்றான்.



''வில்லனா...?''

''ம்ம்... அதே தான்...! உன்னைக் காதலித்தது... ரகசியக் கல்யாணம் பண்ண ஏற்பாடு செய்தது பின் கல் யாணம் முடிந்ததும் உன் அண்ணன்களை வரவழைத்தது எல்லாமே... பிளான்தான்... நான் போட்டு வைத்திருந்த திட்டம்தான்... ஆனால் இதுவெல்லாம் எதற்காகத் தெரி யுமா?''

அவன் நிறுத்தினான். ஜீவனில்லாதவள் போல்தான் அவள் குரல் ஒலித்தது.

''எதற்காக?''

''உன் இரண்டு அண்ணன்மார்கள் முகத்தில் கரியைப் பூச...! அவர்களை பெரிதும் அவமானப்படுத்தி மன உளைச்சலுக்கு ஆளாக்க...! அதுதான் நான் போட்ட திட்டம். அது... அது... இப்போது வெற்றிகரமாக நடந்து விட்டது...''

அவள் முழுதும் புரிந்து கொள்ள முடியாமல் விழிக் கத்தான் செய்தாள். அவன் குறுக்கும் நெடுக்குமாய் நடந்தவன் நின்று நிதானமாய் அவளைப் பார்த்தான்.

''உனக்கு இப்படிச் சொன்னால் புரியாதுதான். விளக்க மாகச் சொல்லுகிறேன்...'' என்றபடி நரேந்திரன் ஆரம் பித்தான்.

''நானும் உனது அண்ணன்மார்களைப் போல் கிரா னைட் கம்பெனி வைத்து ஏற்றுமதி தொழில் செய் கிறேன் என்பது மட்டும் தான் உனக்குத் தெரியும். ஆனால் எனது கம்பெனி உனது அண்ணன்மார்கள் இருவரும் இந்தத் தொழிலுக்கு வரும் முன்பே எனது தந்தையாரால் தொடங்கப்பட்டது. சொல்லப் போனால் தனது கடும்

உழைப்பால் முன்னேறி இந்த கிரானைட் பிசினஸில் கொடி கட்டிப் பறந்தவர் எனது தந்தையார்...

அதனால் கிரானைட் பிசினஸில் நாங்கள்தான் நம்பர் ஒன் கம்பெனியாக இருந்து வந்தோம். ஆனால் உனது அண்ணன்மார்கள் இந்த கிரானைட் தொழிலில் நுழைய ஆரம்பித்ததுமே பெரும் சரிவு ஏற்பட ஆரம்பித்தது எங்களுக்கு. உங்களது அண்ணன்மார்கள் பிசினஸில் எப்படியாவது ஜெயித்தாக வேண்டும் என்பதற்காக எத்தனையோ குறுக்கு வழியை கையாண்டனர்.

அரசு அதிகாரிகள் சில பேரை லஞ்சப்பணம் மூலம் கைக்குள் போட்டுக் கொண்டு எங்களுக்கு நியாயப்படி வர வேண்டிய அரசாங்க காண்டிராக்ட்களை எல்லாம் தங்களுக்காக எடுத்துக் கொண்டனர்.

போதாக்குறைக்கு எங்களது கம்பெனியின் முக்கிய மான ஊழியர்கள் சில பேருக்கு பண ஆசை காட்டி எங்களது தொழில் முறைகளை உளவு பார்த்தனர். நாங் கள் அப்ளை செய்யும் டெண்டர்களின் விலை விகிதத்தை முன்பே தெரிந்து கொண்டு கூடுதல் விலைக்கு அவர்கள் அப்ளை செய்தனர். முக்கியமான டெண்டர் களை எங்களுக்கு கிடைக்க விடாமல் செய்தனர்.

இப்படி பல குறுக்கு வழியிலான தில்லுமுல்லு வழி களால்... எங்களது கம்பெனியின் வியாபாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. முக்கியமான ஆர்டர்கள் லாபம் ஈட்டி தரும் காண்டிராக்ட்கள் என ஒவ்வொன்றாய் நாங்கள் இழக்கத் தொடங்கினோம்.

எனது தந்தை நடப்பதைக் கண்டு மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகினார். தான் கட்டிக் காத்த கம்பெனி



இப்படித் திடீரென சரிய ஆரம்பித்ததை அவரால் கொஞ்சமும் தாங்க முடியவில்லை.

இதனால் பெரும் வேதனைக்கு உள்ளானவர் அந்தக் கவலையிலையே உடல்நலம் பாதிக்கப்பட்டார். ஒரு நாள் தாங்க முடியாமல் நெஞ்சு வலி வந்து... அது ஹார்ட் அட்டாக்கில் முடிந்து மூன்று மாதங்களுக்கு முன் இறந்தும் போய்விட்டார்!''

முகம் இறுக சொல்லிய நரேந்திரன் கணத்த குரலுடன் அப்படியே நிறுத்தினான்.

ஓரிரு நிமிடங்கள் கண்களை மூடி அமைதியாக இருந்துவிட்டு... அதிர்ச்சியில் உறைந்து கொண்டிருந்த வளை ஓரக் கண்ணால் பார்த்தவாறே மேலும் தொடர ஆரம்பித்தான்.

''நானும் எனது தந்தைக்கு உதவியாகத்தான் கிரானைட் பிசினஸை பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் திடீரென ஏற்பட்ட அவரது மறைவு என்னை வெகு வாய் ஸ்தம்பிக்க வைத்து விட்டது. இடிந்து போனேன்... என்று சொல்வார்களே... அப்படியொரு நிலைக்குத்தான் நான் போய் விட்டேன். கொஞ்ச நாட்கள் அப்படியே அதிர்ச்சியில் பிரமை பிடித்தவன் போல் இருந்த நான் மெல்ல சுதாரித்தேன். கடுமையாய் உழைத்து கம்பெனி யின் நிலைமையை ஓரளவு சீராக்கினேன்.

ஆனாலும் உனது அண்ணன்மார்களின் தகிடுதத்தங் களால் குறுக்கு வழிகளால் எனது கம்பெனியை முதல் தரமாய் நம்பர் ஒன் கம்பெனியாய் ஆக்குவது சிரமமா யிருந்தது.

அப்போதுதான் என்ன செய்வது என்று யோசித்து அலைந்தேன். தற்செயலாய் ஒரு பார்ட்டியில் உன்

அண்ணன்களோடு உன்னைப் பார்த்தேன். என் மனம் குஷியாகிவிட்டது. அன்றே என் மனதில் திட்டம் ஒன்று உருவாக ஆரம்பித்து விட்டது.

அப்படியே இரண்டு மூன்று நாட்கள் உன்னையே பின் தொடர்ந்தேன். உன்னைப் பற்றிய விஷயங்களை கிரகிக்க முயற்சித்தேன்.

அப்போதுதான் அந்த ஆச்சரியம் நடந்தது. பழம் நழுவி பாலில் விழுந்தாற் போலான.. ஆச்சரியம்! என்னாலே நம்ப முடியவில்லை. ஆனால் அது நடந்தது!''

அவன் நிறுத்த முகத்தில் எரிச்சல் பரவ கேட்டாள் அவள்.

''என்ன அது?''

''உன் அருமையான அண்ணிமார்களின் சந்திப்பு... அவர்களின் நட்பு!''

''என்ன... என்ன... சொல்கிறீர்கள்?'' என்றாள். அவள் பலமான அதிர்வுடன்.

அதிராமல் சிரித்தான் நரேந்திரன்.

''ரொம்பவும் அதிர்ச்சி காட்டாதே. இதைவிட அதிர்ச்சிகளை இன்னும் நிறைய சொல்ல வைத்திருக்கிறேன்...'' என்றவன் அதே விஷமப் புன்னகையுடன், ''விஷயம் என்னவென்றால் நான் உன்னை பின் தொடர்ந்தது... உன்னையே வைத்த கண் மாறாமல் பார்த்து அலைந்தது... என என் நடவடிக்கை எல்லாவற்றையும் அவ்வப்போது உன் கூட வரும் அண்ணிமார்கள் கவனித்திருக்கிறார்கள். நான் உன் பின்னால் சுற்றும் விடலை ரோமியோவாய் உன் காதலுக்காக அலைவதாய், என்னை நினைத்துக் கொண்டார்கள். அதனால்...''


நரேந்திரன் வேண்டுமென்றே நிறுத்தினான். திரும்பி அவள் முகத்தை உற்றுப் பார்த்தான்.

''அதனால் என்ன ஆயிற்று?'' என்றாள் அவள் கொண்டிருந்த எரிச்சலை சற்றும் குறைக்காமல்.

நரேந்திரன் மறுபடி விஷமப் புன்னகையை பரவ விட்டான்.

''அதனால் வேறு ஒன்றுமில்லை. அவர்களது சதித் திட்டத்திற்கு உன்னைப் பழி வாங்கும் படலத்திற்கு என்னை உபயோகித்துக் கொள்ள முடிவு செய்தனர்!''

நரேந்திரனின் வார்த்தைகள் மறுபடியும் இடியாய் அவளுள் இறங்கியது. அதிர்ந்தாள் அவள்!

## 11

தரங்கினி அதிரத்தான் செய்தாள். அவளால் கொஞ்சமும் ஜீரணிக்க முடியவில்லை!

நரேந்திரன் கடைசியில் அவளது அண்ணிமார்களை நோக்கி கைகாட்டி விட்டான்!

அவனது எல்லா சதித்திட்டத்திற்கும் உடந்தையாய் மூலகாரணமாய் இருந்தது அவளது அண்ணிமார்கள் சுலோச்சனாவும் கற்பகமும்தான்!

நம்ப முடிகிறதா?

ஆனால் உண்மை போல் சொல்கிறானே இந்த நரேந்திரன்?

அவளுக்கு முன்பே கல்யாணத்தின் போது மனதை நெருடிய ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வந்தது.

அவள் நரேந்திரன் அண்ணிமார்கள் எல்லோரும் கூடி சேர்ந்து பேசிய திட்டப்படி கல்யாணம் கோவிலில் நடக்கும் போது அண்ணிமார்கள் வந்திருக்க வேண்டும்!

ஆனால் அவர்கள் அப்படி வரவில்லையே?

அண்ணனுக்குப் பதிலாக முன் நின்று நடத்துவதாய் சொன்னவர்கள் அப்படி வராமல் இருந்தது ஏன்?

அதற்கான சரியான காரணத்தையும் அவர்கள் சொல்ல வில்லையே?

ஒருவேளை நரேந்திரன் சொல்வது போல் அண்ணி மார்கள் மனதில் விபரீதமாய் விஷமங்கள் ஏற்பட்டிருக் குமோ?

இரண்டு அண்ணன்களும் நம் மீது வைத்த அளவு கடந்த அபரீதமான பாசத்தை வேறு விதமாய் பொறாமை யாய் நினைத்து விட்டார்களோ?

தரங்கினி யோசித்தவள் முன்பு அண்ணிமார்கள் தன் மீது அண்ணன்கள் காட்டும் இந்த பாசத்திற்காக கோபப் பட்ட ஒரு தருணத்தையும் நினைத்துப் பார்த்தாள்.

அது... இரண்டு மாதங்களுக்கு முன் நடந்த விஷயம். அன்று ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை. சினிமாவுக்கு போவோம் என எல்லோரும் கிளம்பி விட்டனர்.

புதுப்படம் என்றாலும் தனசேகரன் முன்பே ரிசர்வ் செய்திருந்ததால் பிரச்சனையில்லாமல் தியேட்டரினுள் நுழைந்தார்கள். வீட்டிலேயே எப்போதும் அடைந்து கிடந்த அண்ணிகளுக்கும் அன்று ஒரே குஷி! குதி



போடாத குறையாகத்தான் தியேட்டருள் மகிழ்ச்சி பொங்க நுழைந்தனர்.

தியேட்டரில் நுழைந்து இருக்கைகளில் உட்காரப் போனபோது தரங்கினி அண்ணன்மார்கள் ஜோடியாய் உட்காரட்டும் என சற்று ஓரமான இருக்கை ஒன்றை தேர்ந்தெடுத்து உட்காரப் போக... சட்டென அவள் கையைப் பிடித்த அண்ணன்மார்கள் அவளை வற்புறுத்தி தங்களுக்கு நடுவே உள்ள இருக்கையில் உட்கார வைத்துக் கொண்டனர்.

அத்தோடு மட்டுமில்லாமல் படம் ஆரம்பிப்பதற்கு முன்னால் இருந்து படம் முடியும் வரை அவளிடம்தான் சிரித்துச் சிரித்து கேலியும் கிண்டலுமாய் ஒரே பேச்சு.

ஒரு ஒப்புக்காகக்கூட தங்களின் மறுபுறம் உட்கார்ந் திருந்த மனைவிமார்கள் பக்கம் திரும்பவில்லை. அவர்களிடம் ஒரு பேச்சு பேசவில்லை.

அதனால் அண்ணிமார்கள் இருவரும் களையிழந்து இடித்தபுளி போல் அசையாமல் உட்கார்ந்து விட்டனர். பார்த்த தரங்கினிக்கு அது ரொம்பவும் கஷ்டமாய் பரிதாபமாய் தோன்றியது.

அதனாலே, ''ஐயோ! அவர்களிடமும் ஏதாவது பேசுங் கள் அண்ணா...! அவர்களுக்கு இல்லையெனில் போர டித்துவிடும்!'' என்றெல்லாம் சொல்லிப் பார்த்தாள்.

அண்ணன்மார்களோ அதற்கு அசால்டாக, ''அந்தக் கழுதைகளை விடு. அவர்கள் பாட்டுக்கு எங்காவது பராக்கு பார்த்துக் கொண்டு நேரத்தைப் போக்கி விடுவார்கள்'' என்று சொல்லி, அண்ணிமார்களை மேலும் எரிச்சலாக் கினர்.

'ஐயோ! இவர்களை திருத்த முடியாது. பொது இடத்தில் இப்படியா நடந்து கொள்வது?' என மனம் பதைத்த தரங்கினியும் அன்று செய்வதறியாமல் தவிக்கத் தான் செய்தாள்.

அன்று சினிமா முடிந்து வீடு திரும்பியதும் அண்ணி மார்களின் கையைப் பிடித்துக் கொண்டு ''நடந்ததற்கு மன்னித்து விடுங்கள்'' என கெஞ்சலாய் வருத்தம் தெரிவிக்க, டக்கென கோபமாய் அவளது கையை உதறினர் இருவரும்.

''ஆமாடியம்மா...! நல்ல பாசம் வைத்தீர்கள். பாசமலர் அண்ணனும்... பாசமலர் தங்கையுமாக! இடையில் நாங்கள் எதற்கு இடைஞ்சலாய்? இனி சினிமா போக வேண்டும் என்றால் எங்களை கூப்பிடாதீர்கள். பாசக்கார நீங்கள் இருவரும் மட்டும் போய் வாருங்கள்! பொல்லாத பாசத்தை பிழியுங்கள்!'' என இருவரும் பொரிந்து தள்ள அதை கொஞ்சமும் எதிர்பார்க்காத தரங்கினி தடுமாறித் தான் விட்டாள்.

இருந்தாலும் சமாளித்தவாறு, ''ஐயோ! அண்ணி... அண்ணன்கள் அப்படி நடந்து கொண்டது தப்புதான்! மிகப் பெரிய தவறுதான்! அதற்காக என்னை மன்னித்து விடுங்கள்! இனி இதுபோன்று நடக்காது. நடக்காமல் நான் பார்த்துக் கொள்கிறேன்!'' என கெஞ்சல் குரலில் சொல்லித்தான் பார்த்தாள்.

ஆனால் அதற்கு அண்ணிமார்கள் கொஞ்சமும் ஏற்றுக் கொள்வதாய் இல்லை.

''ம்ஹூம்! அதெல்லாம் நடக்கவே நடக்காது. நீ தங்கையாய் இந்த வீட்டில் இருக்கும் வரை எங்களுக்கு



எங்களது கணவர்களின் அன்பு முழுதாய் கிடைக்காது. அது மட்டும் நிச்சயம்...!'' என்று சொன்னபோது தரங்கினி அதிரத்தான் செய்தாள்.

''ஐயோ...! என்ன சொல்கிறீர்கள்? நான் வீட்டிலிருக்கும் வரை உங்களுக்கு அன்பு கிடைக்காதா? அப்படியானால் நான் இடைஞ்சலாய் இருப்பதாய் சொல்கிறீர்களா?''

தரங்கினி நேருக்கு நேராய் பொட்டிலடித்த மாதிரி கேட்டதும் சட்டென தங்களை மாற்றிக் கொண்டவர்களாய், ''அப்படி எல்லாம் ஒன்றுமில்லை. நீ கல்யாணம் செய்து கொண்டு புது வீடு புகும் வரை எங்களுக்கு அன்பு கிடைக்காது என்பது போல் சொல்ல வந்தோம்...'' எனக் கூறியவர்கள் கூடவே, ''ஆனால் இன்னொன்று... தரங்கினியம்மா... இப்படி நாங்கள் கோபமாய் உன்னிடம் சொன்ன வார்த்தைகளை அப்படியே உன் அண்ணன் மார்களிடம் போட்டுக் கொடுத்து... எங்கள் நிலையை சந்தி சிரிக்க வைத்து விடாதே! உன்னை கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறோம்!'' என்று கைகூப்பலாய் அவர்கள் சொன்னபோது அவர்கள் மேல் இரக்கமும் பரிதாபமுமே கொண்டாள் தரங்கினி.

மேலும் அதற்குமேல் அந்தப் பிரச்சினையை பெரிது படுத்தாமல் அப்படியே விட்டுவிட்டாள். முன்புபோல் அண்ணிமார்களிடம் அவள் சிரித்துப் பேச அவர்களும் கலகலவென சிரித்துப் பேசினர்.

அவர்களும் தன்னைப்போல் நடந்தவைகளை மறந்திருப்பார்கள் என்று தான் நினைத்திருந்தாள் தரங்கினி.

ஆனால் நரேந்திரன் சொல்வதைப் பார்த்தால் அவர்கள் மனதில் அந்த சம்பவத்தை வைத்துக் கொண்டு

வன்மத்தை விஷமமாய் வளர்த்தது போல் அல்லவா தெரிகிறது!

# 12

தரங்கினி திகைப்பு மேலிட நரேந்திரன் மேலும் மேலும் அதிர்ச்சிகளைச் சொன்னான்.

அவளால் கொஞ்சமும் நம்பமுடியவில்லை! அவளது அண்ணிகள் சுலோச்சனாவிற்கும், கற்பகத்திற்கும் அவளை சுத்தமாய் பிடிக்காதாம். உள்ளுக்குள் அவள் மீது இருவரும் பயங்கர வெறுப்பு கொண்டிருந்தனராம். அதை மறைத்து பாசத்தை பொழிவது போல் அவளிடம் நடித்தார்களாம்!

நம்பாதவளாய் உதட்டைச் சுழித்து முகம் வெட்டி, ''நீங்கள் சொல்வது பொய். எதற்காக அவர்கள் நடிக்க வேண்டும்?'' என்றாள் தரங்கினி ஆத்திரமாக.

நரேந்திரன் பதிலுக்கு வினோதமாய் முறுவலித்து விட்டு, ''காரணம் ரொம்ப சிம்பிள். உனது இரு அண்ணன்களும் உன்னை தலையில் தூக்கி வைக்காத குறையாய் உன் மீது அன்பு காட்டி ததிங்கிணத்தோம் ஆட்டம் தினம் போடுவார்களே... அதுதான்! கட்டிய மனைவி அன்பிற்காக ஏங்கிக் கொண்டிருக்க... இன்னமும் அன்பு தங்கச்சி... செல்ல... குட்டிம்மா... என உன்னை வால் பிடித்துக் கொண்டிருந்தால்... அவர்களால் அதை எப்படி



சகித்துக் கொண்டிருக்க முடியும்? அதனால் உன் மேல் பொறாமை கொண்டு பொருமிக் கொண்டிருந்தார்கள். எப்படியாவது உனக்கும் உன் அண்ணன்களுக்கும் இடையே பகைமை மூட்டி பிரிவை உண்டாக்க வேண்டும் என வழி தேடிக் கொண்டிருந்த நிலையில்தான் என்னைப் பார்த்தார்கள். எனது நோக்கத்தை அறிந்து கொண்டார்கள்.''

''அது எப்படி? புரியவில்லையே...!''

மறுபடியும் விழித்தாள் அவள்.

''புரியவில்லை? கொஞ்சம் யோசித்துப் பார். உன் அண்ணன்களை பழி வாங்க... அவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் இடைஞ்சல் கொடுக்க... உன் மீது அவர்கள் வைத்திருக்கும் பாசம் பற்றி அறிந்து... அப்படி உன்னை நான் பின் தொடர்ந்து கொண்டிருந்த நிலையில்தான் உன் அருமையான அண்ணிமார்கள் என்னைப் பார்த்தார்கள். எதிரிக்கு எதிரி நண்பன் என்பது போல அவர்களே வலிய வந்து என்னுடன் பேசினார்கள். என்னைப் பற்றி விசாரித்து என் நோக்கத்தை அறிந்தார்கள். பின் தங்களது நோக்கத்தையும் வெளிப்படையாகச் சொல்லி... எனக்கு புரிய வைத்தார்கள். அன்றே நாங்கள் நண்பர்களாகி விட்டோம். பின் அவர்கள் தான் நீ தினம் போகும் இடங்களை... உனது விருப்பு வெறுப்புகளை எல்லாம் தெளிவாக சொல்லிக் கொடுத்து உனக்கு காதல் வலை விரிக்கச் சொன்னார்களே... நானும் அப்படியே உன் முன் நடித்து உன் மனதைக் கவர்ந்தேன். நீயும் வலையில் சிக்கிய புள்ளிமானாய் எனது காதல் வலையில் விழுந்தாய். ம்ம்... என்ன இப்போது எல்லாம் புரிகிறதா? புரிந்ததா...?'' என்றபடி அவன் கடகடவென ஒரு அடக்க முடியாத விஷமச் சிரிப்பை உதிர்த்தான்.

''ஆ...! என்ன ஒரு சதித்திட்டம்...!''

நிஜமாகவே அதிர்ச்சியாகி வாய் பிளந்து விட்டாள் அவள்.

ஆனாலும் அவள் மனதில் ஒரு உறுத்தல்.

இவன்...நரேந்திரன் வேண்டுமானால் இவன் சொல்வது போல் நடித்திருக்கலாம். இருந்திருக்கலாம். ஆனால்... அவளது அன்பான அண்ணிமார்கள்... பாசத்தைப் பொழிந்த அந்த அன்பு உள்ளங்கள்... போட்டது வேஷமா? இருக்காதே... இருக்க வாய்ப்பில்லையே...!

''என்ன யோசிக்கிறாய்?'' என்றபடி மறுபடியும் சொடுக்கிட்டான் அவன்.

''எனது அன்பான அண்ணிகளைப் பற்றித் தெரியும். நீங்கள் சொல்வதை நான் நம்பமாட்டேன்...''

''நம்ப வைக்கட்டுமா?'' என்றான்.

''எப்படி?''

''நாளையே ஒரு ஹோட்டலில் சந்திக்க வைக்கிறேன். உண்மையை உனக்கு புரிய வைக்கிறேன். சரிதானே?''

''சரி!'' என்றாள்.

கோபமாய் முகம் வெட்டினான் அவன்.

''இப்போது அது முக்கியம் அல்ல. முக்கியமானது என்னைப் பற்றி நீ தெரிந்து கொள்ள வேண்டியது. நான் ஒன்றும் காதல் பித்து பிடித்து உன்னை மணந்து கொள்ள வில்லை. சதித்திட்டம் தீட்டி பழிவாங்க... செயல்படுத்தியிருக்கிறேன்...''

அவள் குறுக்கிட்டாள்.



''அதாவது என் அண்ணன்களை பழிவாங்க?''

''அப்படித்தான்...''

அவள் திடீரென சிரிக்க ஆரம்பித்தாள்.

''என்ன சிரிக்கிறாய்?''

''உங்கள் திட்டத்தைப் பற்றி நினைத்தேன். சிரிப்பு வந்து விட்டது. வடிகட்டிய முட்டாள் தனம்!''

''என்ன உளறுகிறாய்?''

''உளறவில்லை. ஒரு விஷயத்தை யோசித்துப் பாருங்கள். என்னதான் என் மீது அபரீதமான அன்பை பாசத்தை அண்ணன்மார்கள் கொண்டிருந்தாலும் அவர்களுக்குத் தெரியாமல் எப்போது நான் திருட்டுக் கல்யாணம் செய்தேனோ... அந்த நொடியே... என்மீதுள்ள அன்பு போய் வெறுப்புடன் என்னை தங்கள் மனதை விட்டு தூக்கி எறிந்திருப்பார்கள்... அப்படி என்மீது வெறுப்பு வந்துவிட்ட பிறகு... என்னைக் கல்யாணம் செய்தது மூலம் அவர்களை எப்படி பழிவாங்குவது போல் ஆகும்?''

அவள் கேள்வியைக் கண்டு ஓரிரு நிமிடங்கள் திகைக்கத்தான் செய்தான் நரேந்திரன். பின் தலையை மெல்ல ஆட்டியபடி ''ஆனால் நான் என் பழி வாங்கும் படலத்தை இன்னும் முழுமையாக ஆரம்பிக்கவே இல்லையே...?'' என்றான் விட்டேற்றியாய்.

அவள் இம்முறை திகைத்தாள். கண்களை அகல விரித்து பார்வையாலே முறைத்தாள்.

''இனிதான் அவை ஆரம்பம்...'' என அலட்சியமாய் சொன்னவன் தொடர்ந்து, ''அதற்கான முதல்படி உன்னை நான் மனைவியாக ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப்

போவதில்லை. பெயருக்குத்தான் நீ என் மனைவி!'' என்றான்.

அவன் முடிப்பதற்குள் அவளும் சிரித்தாள்.

''நானும் அப்படித்தான்! என்று இவ்வளவு சதித் திட்டம் தீட்டி என்னை மணந்தீர்களே, அதனாலே அந்த காரணத்தினாலே, நானும் உங்களை ஒரு போதும் கணவராக ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. பெயருக் குத்தான் நீங்களும் எனக்கு கணவர்!'' என்றாள் பதிலடி யாய்.

அவன் கைகளைத் தட்டி சிரித்தவன், ''ஒன்றைப் புரிந்து கொள். என்ன இருந்தாலும் வெற்றி பெற்றவன் நான் தான்! நான் நினைத்தது போலவே திருட்டுக் கல் யாணம் செய்து பெரும் அவப் பெயரை உண்டாக்கி உனது அண்ணன்களை உன்னிடமிருந்து பிரித்து விட்டேன் தானே! இனி முகத்தில் கரியைப் பூசிய உன்னை அவர் கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை!'' என்றான் ஏகதாளமாக.

அவளுள்ளும் வீராப்பு கூடியது.

"ஏன் முடியாது? அவர்கள் மனம் மாறி உண்மை புரிந்து ஏற்றுக் கொண்டுவிட்டால்...?'' என்றாள் பிரயாசையாய்.

''ஒருபோதும் அப்படி நடக்காது...!'' கைகளை வேகமாய் ஆட்டி எரிச்சல் படுத்தினான் அவன்.

''நடந்தால்... என் அண்ணன்கள் பழைய பாசத்துடன் என்னை ஏற்றுக்கொண்டால் என்ன செய்வீர்களாம்?''

டக்கென அவள் கேட்டதற்கு பதிலளிக்க முடியாமல் ஓரிரு நிமிடம் திகைத்தவன் மறுவினாடி திரும்பி அவளை நேருக்கு நேராய் பார்த்தான்.



''அப்படி அவர்கள் ஏற்றுக் கொண்டால்... நானும் எனது தோல்வியை ஒப்புக் கொண்டு உன்னை மனைவி யாய் ஏற்றுக் கொள்கிறேன்!'' என்றான் இறுக்கத்தோடு.

# 13

அன்று அத்தோடு நில்லாமல் நரேந்திரன் தான் செய்திருக்கும் நிறைய ஏற்பாடுகளையும் விளக்கினான்.

''பார் தரங்கினி, உன் அண்ணன்களை பழி வாங்கும் நோக்கில் உன்னை கட்டியிருந்தாலும் அதற்காக சினிமா வில்லன் போல் உன்னை கொடுமைப்படுத்தும் எண்ணம் எல்லாம் எனக்கு கிடையாது. இந்த விஷயத்தில் நான் மிகவும் பெருந்தன்மையானவன். நான்தான் உன்னை மனைவியாய் ஏற்றுக் கொள்ளவில்லையே தவிர இந்த வீட்டில் என் மனைவியாய் முழு அதிகாரத்துடன் நட மாட உனக்கு உரிமையுண்டு. வேலை செய்வதற்கு பணியாட்கள், உன் செலவுகளுக்கு தேவைப்படும் பணம், நினைத்தபோது வெளியே உனக்கென சென்று வர எப்போதும் டிரைவருடன் தயாராய் இருக்கும் கார் என சகல வசதிகளும் இங்கு உனக்கு உண்டு...''

அவன் முடிப்பதற்குள் வேகமாய் குறுக்கீட்டு, ''அதா வது உண்ண உணவு... உடுத்த உடை... தேவைக்கு ஒரு கார்... அவ்வளவுதானே? அவ்வளவுதானே... உங்கள் பெருந்தன்மை?'' என அவள் சீறவும், அவள் கோபத்தைச் சற்றும் பொருட்படுத்தாமல் குமுறும் சிரிப்பை அடக்கிக்

கொண்டு. ''அண்ணன்களின் அன்புப்பிடியில் இருந்த இந்த 'சின்ன குட்டிம்மா'வுக்கு இவ்வளவு வசதிகள் போதும்தானே?'' என்றபடி வாய்விட்டுச் சிரித்தான்.

ஆ...! என்ன ஒரு கேலி...! அவளது அன்பான செல்லப் பெயரை வைத்து அவளையே கிண்டலடித்துக் கொண்டு...?

''இன்னொருமுறை அந்தப் பெயரை நீங்கள் உச்சரித்தால் தொலைத்து விடுவேன் தொலைத்து...!'' என கைகளை உயர்த்தி எச்சரிப்பது போல் ஆட்டியவள், ''அதை உச்சரிக்க உங்களுக்கு எந்த அருகதையும் இல்லை...'' என்றாள் அதே எரிச்சலோடு.

நரேந்திரன் புன்னகை மாறாமல் பதிலுக்கு தலையாட்டியவன், ''ஆமாம்... ஆமாம்... அந்த அருகதை எனக்கு இல்லைதான். உன் அருமையான அண்ணன்மார்களுக்கு மட்டும்தானே உண்டு. அவர்களே சொல்லிக் கொள்ளட்டும். ஆனால்...'' என மறுபடி நிறுத்தி அவளை நிமிர்ந்து பார்த்தவன், ''என்ன... எங்களது அன்பு குட்டிம்மாவை... இப்படி கொடுமைப்படுத்திவிட்டாயடா...? என அவர்கள் என் சட்டையைப் பிடித்து கேட்டுவிடக் கூடாதல்லவா? அதனால்தான் இந்தக் கரிசனம்... புரிகிறதா... குட்டிம்மா?'' கேட்டபடி அவள் கன்னங்களை ஒரு தட்டு தட்டிக்கொண்டு குறும்பாய் அகன்றான் அவன்.

உள்ளூர அவனது வார்த்தைகளால் கொதித்தாலும் அவன் கன்னங்களை தட்டிய செய்கை அந்த ஸ்பரிசம் முந்தைய காதல் விஷயங்களை டக்கென அவளுக்கு நினைவுபடுத்தியது.



காதலிக்கும் போது இப்படி குழைந்தது... சீண்டிச் சீண்டி... விளையாடியது தான்... எத்தனை...? அப்படியானால்... அவைகள்... அவைகள்... எல்லாம்... நடிப்பா? பொய்யா...? வேஷமா?

குபீரென எழுந்து அனலாய் சுட்ட கேள்விகளில் துடித்தவள் நழுவப் போனவனை நிறுத்தி வாய்விட்டு கேட்டும் விட்டாள்.

அந்தக் கேள்வியை ஒரு கணம் எதிர்பாராது நரேந்திரன் திகைத்தவன் மறுகணமே சமாளித்துக் கொண்டு, ''அவைகளில் அந்தக் காதல் நாடகங்களில் பாதி உண்மை... பாதி வேஷம்!'' என்றான் பூடகமாய்.

''ஒளிக்காமல் சொல்லுங்கள்! எது உண்மை? எது வேஷம்?''

மறுபடியும் அவள் சீற, ''போகப் போக உனக்கே புரியும்!'' என்றபடி வேகமாய் அங்கிருந்து அகன்றான் அவன்.

புரியாமல் திகைத்தவளுக்கு அன்றைய இரவு முழுவதும் குழப்பத்திலேயே தூங்க விடாமல் நகர்ந்தது.

அவளால் எதையும் நினைக்க முடியவில்லை. எந்த முடிவிற்கும் வரமுடியவில்லை. நரேந்திரன் சொல்லிய பழிவாங்கிய விஷயம், சதித்திட்டம் எல்லாம் அண்ணிமார்களை சந்தித்த பின்தான் உண்மையா... என்று தெரியும்.

காலையில் உற்சாகமாய் வந்து 'குட்மார்னிங்...' சொன்னவனிடம் பதிலுக்குச் சொல்லாமல் முறைத்தவள் விஷயத்தை அவனுக்கு ஞாபகப்படுத்தினாள்.

''கவலையே வேண்டாம் உனக்கு! இன்று மாலை நான்கு மணிக்கு மெரிடியன் ஹோட்டலுக்கு உன்

அண்ணிகளை வரச் சொல்லியிருக்கிறேன். தாராளமாய் போய் தெளிவுபடுத்திக் கொள். அவர்களது வேஷத்தை புரிந்து கொள்!''

''அதையும் பார்த்து விடுகிறேன்! யார் வேஷதாரி... என்று!'' என அவளும் விடாமல் சீறி அகன்றாள்.

மாலை நான்கு முன்னதாகவே நரேந்திரன் சொன்ன மெரிடியன் ஹோட்டலுக்குச் சென்று ரெஸ்ட்டாரண்டின் இருக்கைகளில் காத்திருந்தாள்.

சரியாக பத்து நிமிடங்களில் அண்ணிகள் சுலோச்சனாவும் கற்பகமும் அங்கு பிரசன்னமாகிவிட உற்சாகத்தோடு அவர்களைப் பார்த்தாள்.

நரேந்திரன் சொன்ன எல்லாவற்றையும் மறந்தவளாய், ''என்ன... என்னாயிற்று? அண்ணன்கள் எப்படி இருக்கிறார்கள்? அவர்களை சமாதானப்படுத்த முடிந்ததா?'' என்றாள் ஆவலாய் பிரயாசையுடன்.

அவள்தான் அப்படி பதட்டம் கொண்டாளே தவிர, கற்பகமும் சுலோச்சனாவும் எவ்வித சலனமே இல்லாதவர்களாய் அவள் பக்கத்தில் உள்ள இருக்கைகளில் உட்கார்ந்தனர். முகம் இறுக அவளைப் பார்த்தனர்.

''நாங்கள் ஏன் உன் அண்ணன்களை சமாதானப்படுத்த வேண்டும்? நாங்கள் ஆசைப்பட்டதுதான் நடந்து விட்டதே!''

விட்டேற்றியாய் காற்றில் அவர்கள் உதிர்த்த வார்த்தைகள் அவள் காதுகளில் அதிர்ச்சியாய் இறங்கியது. நூலிழை அறுந்து போன தவிப்புடன் அவர்களைப் பார்த்தாள்.

''என்ன சொல்கிறீர்கள் அண்ணி? நான்... கேட்டது... உங்களுக்குப் புரியவில்லையா?'' என்றாள் திகைப்பாய்.



''நீ சொல்வது இருக்கட்டும். மிஸ்டர் நரேந்திரன் சொன்னது உனக்குப் புரிந்ததா... இல்லையா?'' என்றனர் பதிலுக்கு.

மிஸ்டர் நரேந்திரன்?

அவர்கள் உச்சரித்த விதம் அதில் கொடுத்த அந்த மரியாதை எல்லாம் தரங்கினிக்கு சந்தேகத்தை முதல் முறையாய் கிளப்பியது.

கடவுளே! நரேந்திரன் சொல்வது போல் நடந்தது எல்லாம் இவர்கள் கூட்டாய் போட்ட சதித்திட்டம் தானா? அவள்தான் நடுக்கிணற்றில் விழுவது போல் வசமாய் மாட்டிக் கொண்டு ஏமாந்து போய் விட்டாளா?

பதைப்புடன் விழிகள் விரிய அவள் பார்த்த பார்வையை அலட்சியத்துடன் எதிர்கொண்டனர் இரண்டு அண்ணிமார்களும்.

''என்ன அப்படி முளிக்கிறாய்? இன்னுமா உனக்குப் புரியவில்லை....? உன் கொட்டத்தை அடக்க உன்னை வீட்டை விட்டு துரத்தத்தான் மிஸ்டர் நரேந்திரனோடு இப்படி ஒரு பிளான் போட்டு செயல்படுத்தினோம். உன் அண்ணன்களுக்கு ஆயுசு முழுக்க உன் மீது வெறுப்பு வரும்படி உன்னைத் தூண்டினோம். நீயும் கிளிப்பிள்ளையாய் நாங்கள் சொல்வதைக் கேட்டு அப்படியே செய்தாய். எல்லாமே தான் வெற்றிகரமாக நடந்து... நாங்கள் நினைத்தபடி சாதித்து விட்டோம்தானே? சரியான முட்டாள்... எங்களிடம் ஏமாந்த முட்டாள் பெண் நீதான்...!''

இருவரும் கைகளால் ஒருவரை ஒருவர் தட்டிக் கொண்டு சிரிக்க ஆரம்பிக்க அவளுக்கு தலையே சுழன்று விழுவது போல் ஆயிற்று.

# 14

தரங்கினி அந்த மெரிடியன் ரெஸ்ட்டாரண்டில் இருந்து ஓடாத குறையாய் வீடு வந்து விட்டாள்.

அவளால் கொஞ்சமும் நம்ப முடியவில்லை!

சுலோச்சனாவும் கற்பகமும் என்னவெல்லாம் பேசி விட்டார்கள்.

அவ்வளவு ஆத்திரம் ஆக்ரோஷமா... அவர்களுக்கு?

எதனால்?

அண்ணன்கள் தன் மீது காட்டிய அதீத பாசம் அவர்களை எரிச்சல்படுத்தி இருக்கிறது. தங்களுக்கு கிடைக்க வேண்டிய அன்பை பறித்துக் கொண்டாள் தங்கை என்றெல்லாம் தவறாக எண்ணியிருக்கிறார்கள்!

அதற்காக... இப்படியா?

நெஞ்சம் முழுவதும் வஞ்சத்தை பரப்பிக் கொண்டு... பெரிய எதிரி போல் அவளை பாவித்து திட்டம் போட்டு... இந்த நரேந்திரன் மூலம் ஏற்பாடுகள் செய்து...?

அவளால் ஒரு விஷயத்தை தெளிவாய் புரிந்து கொள்ள முடியவில்லைதான்!

அண்ணிமார்கள் நரேந்திரனை சந்தித்திருக்கிறார்கள். அவனது பழி வாங்கும் காதல் நோக்கத்தை அறிந்து உடனே உதவ தீர்மானித்தார்களாம். அவள் தரங்கினியின் குணம், சுபாவம் அவளுக்கு பிடித்தது பிடிக்காதது, அவள் போகும் இடங்கள் பற்றியெல்லாம் விளக்கி கூறினார்களாம்.



அதை கவனமாய் கேட்டுக் கொண்ட நரேந்திரனும் மானுக்கு வலை விரித்து காத்திருக்கும் வேடன் போல அவளுக்கு காதல் வலை விரித்தானாம். அவளுக்கு பிடித்த மாதிரி தனது பாவனையை மாற்றிக் கொண்டு அவளைக் கவரும்படி அவள் முன் நடமாடினானாம்.

அவளும் அதில் ஈர்க்கப்பட்டு காதல் கடலில் தொபுக்கடீர் என விழுந்து விட்டாளாம். அவனைக் காதலிக்க ஆரம்பித்து விட்டாளாம். அவ்வளவு பெரிய குமுட்டையா அவள்?

அவள் எழுப்பிய கேள்விகளுக்கு மனதே எதிரொலியாய் பதிலடியும் கொடுத்தது.

சந்தேகமென்ன? குமுட்டைதான்! ஒன்றும் தெரியாத குமுட்டைதான் நீ! அவர்கள் சொல்லியது போலவே உன் முன் நடித்திருக்கிறார்கள். நீயும் அதை உண்மை என்று நம்பி நரேந்திரன் மீது பார்வையை பதித்தாய். உன்னையறியாமல் மனச்சலனம் கொண்டு காதல் கொள்ளவும் ஆரம்பித்தாய்.

அதுவும் எப்படிப்பட்ட காதல்?

வீட்டுக்கு அண்ணன் மார்களுக்கு தெரியாமல் திருட்டுக் கல்யாணம் செய்து கொள்ளுமளவுக்கு அபரீதக் காதல்!

அப்படியொரு காதலையா அவள் நரேந்திரன் மீது கொண்டிருந்தாள்?

ஒரு கணம் விழிகள் விரித்து திகைப்பாய் யோசித்து பார்த்தவளுக்கு அது உண்மை என்பதும் புரிந்தது.

நரேந்திரன் மேல் அப்போதெல்லாம் பைத்தியம் பிடிக்காத குறையாகத்தானே நடமாடி இருக்கிறாள்.

காணாததைக் கண்டது போல் தினம் அவனை ஆவலாய் பார்த்துக் கொண்டு.... இரவிலும் பகலிலும் அவனது நினைவுகளையே மனதில் ஓட விட்டுக் கொண்டு... அவன் சொன்ன அனைத்திற்கும் ஈயென இளித்து... தலையாட்டிக் கொண்டு 'காதல் கிறுக்கு' பிடித்து தானே அவள் அலைந்திருக்கிறாள். அது உண்மைதானே?

என்ன... அவன்... அவன்... நரேந்திரன் தான் நடித்திருக்கிறான். தெளிவாய் அவளை ஏமாற்றி இருக்கிறான்!

கச்சிதமாய் ஒரு நாடகத்தை மூவரும் நடத்தியிருக்கிறார்கள். கண்ணைத் திறந்து கொண்டே கிணற்றில் விழுவது போல் அவளும் விழுந்திருக்கிறாள்!

மேலும் அவள் காதல் கடலில் அப்படி விழுந்ததற்கு நரேந்திரனின் நடிப்பு மட்டும் காரணமல்ல. நரேந்திரனின் கம்பீர பர்ஸனாலிட்டியும் ஒரு காரணம் தானே?

பரந்த நெற்றியில் சுருள் முடிகள் தவழ... நெடுநெடு உயரத்தில் அப்படி ஒரு அசாத்திய வலிமையான உடற்கட்டுடன், காந்தக் கண்கள் வசீகரிக்க சுடர் விடும் புன்னகையாய் அவன் வந்து பேசும் அழகை அவள் வெகுவாய் ரஸித்தவள் தானே? தன்னை மீறி கண் கொட்டாமல் அடிக்கடி பார்த்து மகிழ்ந்தவள் தானே?

எல்லாம் சரிதான்! பருவ வயது, வயதுக் கோளாறு... என்று என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம் காதலில் விழுந்தது கூட பெரிய தப்பில்லை தான்!

ஆனால் அதற்காக சொந்த அண்ணன்களை, சிறு வயதிலிருந்து அன்பு காட்டி தினம் தினம் பாசத்தில்



குளிப்பாட்டி உயிருக்குயிராய் நேசம் காட்டி வளர்த்தவர்களை பகைக்க துணிந்து விட்டாளே!

ஈவு இரக்கமில்லாமல் அவர்கள் மனம் நோகும்படி திருக்கல்யாண ஏற்பாடுகளுக்கு மதியிழந்து சம்மதித்து விட்டாளே!

எவ்வளவு பெரிய... வஞ்சினம்... துரோகம் அது! அவளது செய்கையைக் கண்டு அண்ணன்கள் எப்படியெல்லாம் துடித்திருப்பார்கள்.

மதியிழந்து இப்படியொரு முட்டாள் தனமான கேவலமான செயலை செய்து விட்டாளே! வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத பழி ஒன்றுக்கு ஆளாகி விட்டாளே...!

தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள் தரங்கினி. அண்ணன்களை எப்படி ஏமாற்றி விட்டோம்... என்பது அதுவரையில்லாமல் பூதாகரமாய் அவளுள் எழுந்து அவளை வெகுவாய் இம்சித்தது. கண்கலங்கியவளாய் படபடவென கண்ணீர்த் துளிகளையும் சிந்தினாள்.

எல்லாம் கொஞ்ச நிமிடம் தான்!

எப்போதும் எந்தவித பிரச்சினை வந்தாலும் அடுத்து என்ன செய்வது? எப்படி நடந்து கொள்வது? என கவலைகளை ஓரந்தள்ளி விட்டு அதன்படி நடக்கத் தொடங்கி விடுவாள்.

ஆனால் இந்த விஷயத்தில் இவ்வளவு நடந்த பிறகு, இனி என்ன செய்வது என்பது பற்றி அவளது மூளை யோசிக்கவே மறுத்தது.

நடக்கக் கூடாத விஷயங்கள், செய்யக் கூடாத தவறுகளை செய்து விட்டாற் போல் மனம் குற்ற உணர்ச்சியில் குன்றிப் போனது.

இப்படி ஒரு தவறைச் செய்து விட்டோமே.....? என திகைத்து ஸ்தம்பித்தவள்... மெல்ல மெல்ல... அந்த

தவிப்பில் இருந்து மீள முயன்றாள்.... மீள முயற்சித்தாள் என்றே கூறலாம்.

ஓரளவு மனதை திடப்படுத்திக் கொண்டு நிமிர்ந்து கொண்டவளாய், அடுத்து என்ன செய்வது? என்பது பற்றி திட்டமிடலானாள் ;தரங்கினி.

# 15

பங்களாவிற்கு திரும்பிய தனசேகரனும் பொன் சேகரனும் நிலைக்கு வராமல் குறுக்கும் நெடுக்கும் நடமாடிக் கொண்டிருந்தனர்.

''தனா, இப்படியே விடக் கூடாது... எதாவது நாம் செய்தாக வேண்டும்...'' என்றான் பொன்சேகரன்.

தனசேகரனும் தனது கைகளால் மறுகையை ஓங்கிக் குத்திக் கொண்டு ஆத்திரத்தோடு முறைத்தான்.

''விடக்கூடாது. நாம் ஏதாவது செய்தாக வேண்டும். அதுவும் உடனடியாக...!''

''என்ன செய்யலாம்?''

கேள்வி கேட்ட பொன்சேகரனை தனசேகரன் திரும்பிப் பார்த்தான்.

''முதலில் நீ கேள்விப்பட்ட விஷயத்தை எல்லாம் சொல்லு...'' என்றான்.



''எல்லாம் அந்த நரேந்திரன் போட்ட பொல்லாத பிளான் தான்! அவன் தான் கள்ளத்தனமாக காதல் வலை ஒன்றை விரித்து நம் தங்கையை வீழ்த்தியிருக்கிறான். இவளும் காணாததை கண்ட குமுட்டை போல் அவன் நடிப்பில் மயங்கியிருக்கிறாள். ஆனால்...''

''சொல்லு...''

''என்னதான் காதலித்தாலும் விஷயத்தை அந்த குமுட்டை உடனே நம்மிடம் சொல்ல வேண்டியது தானே... எதற்காக மறைத்தாள்?''

''புரியவில்லையா...? அதில் தான் விஷயமிருக்கிறது தனா...'' என்றான் பொன்சேகரன்.

''என்ன விஷயம்?''

''நாம்தான் காதலுக்கு எதிரி.... நமக்கு இந்த காதல் கீதல் சமாச்சாரமெல்லாம் சுத்தமாய் பிடிக்காது என்று அவளுக்குத்தான் நன்றாகத் தெரியுமே....?''

''ஓ... அதனால்தான் பயந்து விஷயத்தை மறைத்து விட்டாளோ...?''

தனசேகரன் கேட்க பொன்சேகரன் புருவம் விரிய நெற்றியைச் சுருக்கியவன் பிரகாசமாய் நிமிர்ந்தான்.

''நம் தங்கை மறைத்ததற்கு அது மட்டும் காரணம் அல்ல. இன்னொரு காரணமும் கண்டிப்பாக இருக்கிறது....''

''இன்னொரு காரணமா... என்ன அது?''

''நரேந்திரன்...'' என்றான் அமைதியாய் பொன்சேகரன்.

''நரேந்திரனா?''

''ம்ம்... அவன் தான் முக்கியமான வில்லன். தரங்கினி விஷயத்தில் காய்களை சாதூர்யமாய் நகர்த்தியதும் அவன் தான்...''

''என்ன சொல்கிறாய்?''

''நீயே யோசித்துப் பார்... தொழில் போட்டியாகவும் நம் பரம எதிரியாகவும் இருப்பவன் இந்த நரேந்திரன். அவன் நமக்கிடையே உள்ள பகைமையை தரங்கினி யிடம் மறைத்து விட்டான். அதை அவள் கொஞ்சமும் கண்டு பிடித்து விடாத வண்ணம் நடிக்கவும் செய்திருக் கிறான்....''

அவன் சொல்ல பதிலுக்கு ஆமோதிப்பவனாய் கைகளைத் தட்டினான் தனசேகரன்.

''ம்ம்... நீ சொல்வது உண்மைதான். அப்படித்தான் நடந்திருக்க வேண்டும். நரேந்திரன் நம் பரம எதிரி என்கிற விஷயம் மட்டும் தரங்கினிக்கு முன்பே தெரிந் திருந்தால் அவள் அவனை ஏறெடுத்துப் பார்த்திருப் பாளா? இல்லை காதலிக்கத்தான் செய்திருப்பாளா?''

''அதைத்தான் நானும் சொல்கிறேன். எல்லாம் அந்த நரேந்திரனுடைய சூழ்ச்சி. சரியான குள்ள நரித்தனம்...''

''ஆனாலும் வகையாக நம்மை ஏமாற்றி விட்டானே... நம் கைகளை வைத்தே நம் கண்களை குத்தப் பார்க் கிறானே...?

மறுபடியும் சிந்தனை வயப்பட்டது போல் இருவரும் அமைதியாய் குறுக்கும் நெடுக்கும் நடந்தனர்.

''பேசாமல் தரங்கினியை உனக்கு நடந்ததை எல்லாம் மறந்து விடு.... என தூக்கி வந்து விடுவோமா...?''

''அது முடியாத காரியம்...'' என சிரித்தான் தனசேகரன்.



''ஏன் தனா?''

''நம்மிடம் மறைத்தாலும் ஊர் அறிய கோவிலில் வைத்து தான் நரேந்திரன் தாலி கட்டியிருக்கிறான். நாம் தூக்கி வந்தால்... போலீஸுக்கு போய் விடுவான். பின் பத்திரிகைச் செய்திகளில் எல்லாம் இந்த விஷயம் வந்து நம் மானம் கப்பலேறி விடும்...''

''உண்மைதான்... அந்த நரேந்திரன்... விஷமக்காரன்... லேசில் விடமாட்டான் தான்...''

''பின்... என்னதான் செய்வது?''

''எனக்கு வேறு ஒரு யோசனை தோணுகிறது...''

''என்ன தனா?''

''வேண்டுமானால் நம் குமுட்டைத் தங்கையை தனியே சந்தித்து பேசிப் பார்ப்போமா? இந்த நரேந்திரன் ரொம்ப கெட்டவன் உன்னை நன்றாக ஏமாற்றியிருக் கிறான் என்று புரிய வைப்போமா?''

''புரிய வைக்கலாம்... அப்படியொரு முயற்சி கூட செய்யலாம். அதனால் என்ன பயன்? உடனே நாம் சொல் வதைக் கேட்டு தரங்கினி அப்படியே தனது தாலியைக் கழற்றி நரேந்திரன் கையில் கொடுத்து விட்டு வந்து விடுவாள் என்று நினைக்கிறாயா?''

''அப்படி நடக்க வாய்ப்பிருக்கிறது அல்லவா?''

தனசேகரன் சொல்ல பொன்சேகரன் கடகடவென சிரித்தான்.

''ஒருவேளை தரங்கினிக்கு புத்தி வந்து அப்படி செய்ய நினைத்தாலும் முடியாது...''

''ஏன்...?''

''வேறென்ன? தாலியைக் கழற்றிக் கொடுத்தால் போதுமா? நரேந்திரன் சும்மா விட்டு விடுவானா? மறுபடியும் அவனிடமிருந்து அவளைக் காப்பாற்ற டைவோர்ஸ் கேஸ் போட வேண்டும்... கோர்ட்டுக்கு நடையாய் அலைய வேண்டும்... அப்போதும் இந்த வீட்டு மானம் சந்திக்கு வந்து விடும்...''

''நீ... சொல்வது புரிகிறது...'' என புரிந்தவனாய் தலையாட்டினான் தனா.

பின் அவனே சிந்தனை வயப்பட்டவனாய் நிமிர்ந்து பொன்சேகரனைப் பார்த்தான்.

''ஒரு விஷயத்தை யோசித்துப் பார்த்தாயா?'' என்றான்.

''என்ன தனா?''

''தரங்கினியை தினமும் காலையில் காரில் கொண்டு போய் விடுகிறேன். மாலையில் நீ போய் கூட்டி வருகிறாய். இதில் திடீரென நரேந்திரன் எங்கிருந்து முளைத்தான்? எப்படி அவளை காதலிக்க ஆரம்பித்தான்?''

தனா சொல்ல அதை ஆமோதிப்பவன் போல் பொன்சேகரனும் தலையாட்டினான்.

''நீ சொல்வது கரெக்ட் தனா. நானும் அந்தக் கோணத்தில் சிந்தித்தே பார்க்கவில்லை. எப்படி அது நிகழ்ந்தது?'' என்றான்.

பதிலுக்கு உதடுகளை பிதுக்கினான் தனசேகரன்.

''அதான் எனக்கும் புரியவில்லை. காலேஜ் காம்பஸில் சென்றெல்லாம் தினமும் போய் பார்ப்பது பேசுவது எல்லாம் நரேந்திரனால் முடியாத காரியம். வேறு எங்கோ தான் பிளான் செய்து போயிருக்கிறான். காதல் வலை விரித்து தரங்கினியை மயக்கியிருக்கிறான்...''



அதற்குள் பொன்சேகரன் பிரகாசமாய் நிமிர்ந்து. ''எனக்கு புரிந்து விட்டது...'' என்றான்.

''என்ன...?'' என்றான் தனா.

''தனா, நம் தரங்கினி தினமும் லியோ ஜிம்கானா கிளப்பிற்கு டென்னிஸ் விளையாட சென்று வருவாளே... ஞாபகமிருக்கிறதா?''

''ம்ம்... ஞாபகமிருக்கிறது...''

''அங்கு அந்த கிளப்பிற்கு தினம் அந்த நரேந்திரன் வருவதை கவனித்திருக்கிறேன்....'' என்றவன், ''இப்போது எல்லாம் புரிந்து விட்டது. தப்பு அங்கு தான் நடந்திருக்கிறது. இந்த நரேந்திரன் பயல் அங்கு தான் காதல் வலையை விரிக்க ஆரம்பித்திருக்கிறான். நம் தங்கையையும் ஏமாற்ற ஆரம்பித்திருக்கிறான்!'' என்றான் எல்லாவற்றையும் கண்டுபிடித்தவனாய்.

''சரியாகச் சொன்னாய் அப்படித்தான் நடந்திருக்க வேண்டும். ஆனாலும் நம் தங்கையை இப்படி பிளான் போட்டு வகையாய் ஏமாற்றிய அந்த நரேந்திரனை சும்மா விடக் கூடாது...!''

கைகளை குத்திக் கொண்டு ஆத்திரமானான் பொன்சேகரன்.

## 16

தரங்கினிக்கு ஒரு பக்கம் நடப்பதையெல்லாம் பார்க்க விசித்திரமாகவும் இருந்தது. நரேந்திரனின் பங்களாவில் ஒன்றுக்கு மேற்பட்ட தனியறைகள்.

அவளுக்கு ஒரு அறை ஒதுக்கப்பட அதற்கு நேர் எதிராய் நரேந்திரனின் அறை. வேலை செய்ய காத்திருக்கும் பணியாட்கள் கூட்டம் ஒன்று. பெரிய வாசல் இரும்பு கேட்டில் இருந்து. கிச்சன் வரை அவர்களது ராஜ்யம் தான்.

இவ்வளவு பெரிய வீட்டில் இவன் தனியாளாகவா இருந்திருக்கிறான்? உடன் பிறப்புகள்... சொந்த பந் தங்கள்...?

கேட்ட போது இரு கைகளையும் அசால்டாக விரித் தான் நரேந்திரன். என் தந்தைக்கு ஒரே பையன் நான். சிறு வயதிலேயே தாயாரை பறி கொடுத்து விட்டேன். என் தந்தையுடன் ஏற்பட்ட சிறிய பிணக்கு ஒன்றினால் உறவினர் கூட்டம் முழுவதும் பகைத்துக் கொண்டு ஓடி விட்டது... எனவே.... தந்தையும்... அவரது அரவணைப் பில் நானும் மட்டுமே இந்த பங்களாவில் வளர்ந்தோம். தந்தை மறைவுக்குப் பின் அவரது மலரும் நினைவு களுடன் நான் மட்டும் இங்கு தனியே...! சொந்தக் கதை சோகக் கதை... இதுதான். போதுமா?'' என கேட்கவும் செய்தான்.

ஆனால் நரேந்திரனுக்கு கொஞ்சம் கலா ரசனை உண்டு போலும். வீட்டைச் சுற்றி பெரிய பெரிய மரங்கள் பின்புறம் புல்தரையுடன் கூடிய அழகான தோட்டம். விதவிதமான செடிகள். வண்ண வண்ண மலர்கள்.

அவளுக்கு அந்த வீட்டிலேயே தோட்டத்தைத்தான் ரொம்பவும் பிடித்திருந்தது. பொழுது போகாமல் அதையே சுற்றிச் சுற்றி வந்தாள். ஆனாலும் எவ்வளவு



நேரம் தான் அப்படியே வருவது? இயற்கையே ரஸித்துக் கொண்டிருப்பது...?

யோசித்தவள் ஒரு முடிவிற்கு வந்தாள். நரேந்திர னிடம் பேசினாள். ''நானும் உங்கள் அலுவலகம் வருகிறேன்...'' என்றாள். ''அலுவலகமா எதற்கு? அங்கு வந்து என்ன செய்யப் போகிறாய்?''

''இப்படி திடீரென திருட்டுக் கல்யாணம் செய்தவள் கல்லூரிப் படிப்பை பாதியிலேயே விட்டவள் எதாவது செய்தாக வேண்டுமே?'' என்றாள் சீரியஸான குரலில்.

''என்ன செய்யப் போகிறாய்? பேசாமல் படிப்பைத் தொடர வேண்டியது தானே?'' என்றான்.

உதட்டைப் பிதுக்கினாள் அவள்.

''முதலில்... பழி பாவத்திலிருந்து வெளி வர வேண் டும் அதற்காக படிப்பை அப்படியே விட்டு விடப் போவதில்லை. கரஸ்பாண்டஸில் தொடரப் போகிறேன். இப்போது நான் பேச வந்தது அது பற்றி அல்ல...''

''பின் எது பற்றி...? நீயே சொல்லு...!'' வியப்பாய் பார்த்தான் நரேந்திரன்.

''நம் இருவருக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் ஒரு சவால் இருப்பது ஞாபகம் இருக்கிறது அல்லவா?''

''சவாலா?'' புருவங்களை உயர்த்தினான் நரேந்திரன்.

''அறுந்து போன என் அண்ணன்மார்களின் உறவை பாசத்தை மறுபடியும் பெற முயற்சிக்கப் போகிறேன். அப்படி பெற்று விட்டால் நீங்கள்... நீங்கள்...''

அவள் சொல்ல வந்ததைச் சொல்லாமல் தயக்கத் துடன் நிறுத்தினாள்.

பதிலுக்கு நரேந்திரன் அலட்சியப் புன்னகையுடன், ''ஏன் தயங்குகிறாய்? அப்படி அவர்கள் ஏற்றுக் கொண்டால்.... உன்னையும் பெரிய மனது பண்ணி நான் ஏற்றுக் கொள்வேன்...'' என்றான் ஏளனம் பொங்க.

''நான் அதற்காக ஒன்றும் அலையவில்லை...'' என்றாள் அவள் வெடுக்கென.

''பின் எதற்காகவாம்....?''

''இழந்து விட்ட என் அண்ணன்களின் உறவைப் பெற விரும்புகிறேன். அதுவே இப்போது எனக்கு முக்கியம்....''

''அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறாய்?''

அவள் கண்களை அகல விரித்துக் கொண்டு தன் திட்டத்தை விளக்கினாள். ''அண்ணன்களின் உறவைப் மீண்டும் பெற வேண்டுமானால்... அதற்காக சும்மா வீட்டில் உட்கார்ந்து கொண்டு இருந்தால் போதாது. நான் அடிக்கடி அவர்களை சந்திக்க வேண்டும். பேசும் சந்தர்ப்பம் ஏற்பட வேண்டும்.... அப்படி நான் செய்தால் தான் என் எண்ணம் ஈடேற வாய்ப்புகளும் எனக்கு அமையும்...''

''சுற்றி வளைக்காமல் விஷயத்தைச் சொல்லு...!''

''சொல்கிறேன். எனது அண்ணன்கள் செய்யும் கிரானைட் பிசினஸைத்தான் நீங்களும் செய்து வருகிறீர்கள். அதனால் நானும் தொழிலில் இறங்குகிறேன். உங்களுடன் அலுவலகம் வருகிறேன். கிரானைட் தொழில் சங்க மீட்டிங்... நிர்வாகிகள் கூட்டம் என்று



ஏற்படும் போதெல்லாம் உங்கள் கம்பெனி சார்பாக நான் கலந்து கொள்கிறேன். அங்கு கண்டிப்பாய் என் அண்ணன் மார்கள் வருவார்கள். பின் நடக்க வேண்டியவை களை கவனிப்பது என் சாமர்த்தியம்...!'' என அவள் முடித்தாள்.

பிரயாசையாய் அவன் முகத்தையே பார்த்தாள்.

ஓரிரு நிமிடம் சிந்திப்பது போல் பேசாமல் இருந்த நரேந்திரனும் கடகடவென சிரிக்க ஆரம்பித்தான்.

''என்ன சிரிக்கிறீர்கள்?''

''அத்தைக்கு மீசை முளைத்தது என்று சொல்வார்களே... அது போல் தான் இருக்கிறது... நீ சொல்லும் கதை... அபாரக் கற்பனை...!''

''கற்பனையல்ல... நிஜம்...! நடத்திக் காட்டுவேன்...!'' என்றாள் அவள் உறுதியான குரலில் உள்ளுக்குள் எழுந்த உதறலை மறைத்தவாறு.

''அதையும் பார்த்து விடுவோம்...'' என்றபடி நரேந்திரன் அகன்றான். மறுநாளே அவள் அவனுடன் அலுவலகம் செல்ல ஆரம்பித்தாள்.

அவள் நினைத்தது போலவே ஒவ்வொரு கிரானைட் ஏற்றுமதி விலையை நிர்ணயம் செய்ய சங்க நிர்வாகிகள் கூட்டம் அதற்கான யூனியன் கூட்டமைப்பு வளாகத்தில் நடந்தது.

கிரானைட் தொழில் சம்பந்தமான நரேந்திரனின் அலுவலக ஃபைல்களுடன் தேவையான குறிப்புகளுடன் அதற்கு ஆவலாய் கிளம்பினாள் தரங்கினி.

அவள் நினைத்தது போலவே அவளது இரண்டு அண்ணன்மார்களும் கம்பீரமாக கூட்டத்திற்கு காரில் வந்து இறங்கினர். நரேந்திரன் கிரானைட்ஸ் சார்பில் இருக்கையில் அவள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தனர். மறுகணம் வேப்பங்காயை கடித்தது போல் முகத்தை அஷ்ட கோணலாக்கி வெறுப்பாய் திரும்பினர்.

அவர்கள் காட்டிய வெறுப்பை எரிச்சலைக் கண்டு அதிர்ந்து போனாள் தரங்கினி!

# 17

அண்ணன்கள் தன்னைப் பார்த்ததும் காட்டிய வெறுப்பைக் கண்டு தரங்கினியின் மனம் கலங்கியது ஒரு சில வினாடிகளே இருக்கக் கூடும்.

ஆனால் அவள் உள்ளுக்குள் கொண்டிருந்த உறுதிக்கு எவ்வித பாதிப்பும் வரவில்லை சொல்லப் போனால் தான் செய்த மிகப் பெரிய துரோக செயலுக்கு அவர்கள் காட்டும் கோபமும் வெறுப்பும் நியாயம்தானே? எனவும் உணர்ந்தாள்.

இன்னும் சொல்லப் போனால் அவளுக்கே அப்படி ஒரு சம்பவத்திற்குப் பின் அவர்களை நேருக்கு நேர் பார்ப்பது பெரும் சங்கடமாய்த் தோன்றியது. அவர்களைப் பார்த்ததும் பழையவைகளை எல்லாம் மறந்தது, முன்பு போல் முகம் மலர சிரிக்க வேண்டும் என அவள்



நினைத்திருந்தது எல்லாம் வெறும் நினைப்போடு போயிற்று!

அவர்களை நேருக்கு நேர் பார்ப்பதே சங்கடமாய் இருக்கும் போது.... சமாளித்துக் கொண்டு எப்படி இளிப்பதாம்? அதுவரை, 'சின்னக் குட்டிம்மா... சின்னக்குட்டிம்மா...' என சுற்றி வந்து குழைந்த முகங்கள் வீராப்புடன் கண்களை உருட்டி முறைத்தவாறு சென்ற போது அவளுக்கு உயிரே போய்விடும் போலத்தான் இருந்தது.

ஆனாலும் தரங்கினி மனதில் உறுதி கொண்டு எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டாள். அவமதிப்புகளை சமாளித்தாள். தான் கொண்டிருக்கும் காரியமும் தனது நோக்கமுமே முக்கியம் என்பது போல் அதிலேயே தனது மொத்த கவனத்தையும் செலுத்தினாள்.

சங்க மீட்டிங்கில் நரேந்திரன் கிரானைட்ஸ் ஏற்றுமதி செய்த விபரங்கள் அரசின் புது ஏற்றுமதி கொள்கை ஒன்றினால் ஏற்படும் பாதிப்பை புள்ளி விவரங்களுடன் விளக்கினாள்.

அவள் பேச்சு அவளது சொந்த அண்ணன்மார்களை கவர்ந்ததோ இல்லையோ மற்ற கிரானைட் சங்க உறுப்பினர்களை வெகுவாய் கவர்ந்தது. அதனாலே அவர்கள் அனைவரும் கூடிப் பேசி அவளை கிரானைட் சங்க கூட்டமைப்பின் முக்கிய சங்கப் பிரதிநிதி என்ற பதவியையும் அவளுக்கு வழங்கினர்.

அரசாங்க உயர் அதிகாரிகளை சந்திப்பது, சங்கத்தின் வளர்ச்சிக்காக தொழிலின் பாதிப்புகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி உரிமைகளுக்காக போராடுவது போன்றான பணிகளை அவளுக்கு வழங்க... சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டாள்.

ஆனாலும் தனசேகரனும் சரி பொன்சேகரனும் சரி அவள் பக்கம் கொஞ்சமும் திரும்பி கூட பார்ப்பதில்லை. அவளைப் பார்த்தாலே எள்ளும் கொள்ளும் வெடிக்காத குறையாய் அவர்கள் முகம் போவதைப் பார்த்த தரங்கினி அதிரவே செய்தாள்.

தனா அண்ணா, பொன் அண்ணா என ஆசையாய் கூப்பிட்டு பேசத்துடித்த உதடுகளை கஷ்டப்பட்டு அடக்கினாள். கூடவே அண்ணிமார்கள் கொடுத்த தைரியத்தினாலே தான் அப்படியொரு அசட்டுக் காரியத்தை நான் செய்ய நேர்ந்தது என அவர்களுக்கு சொல்லி தன் பங்கு நியாயத்தை கொஞ்சமாவது அவர்களிடம் உரைக்கலாமே என்று புத்தியும் போனது.

ஆனால் அதையெல்லாம் அவர்கள் காது கொடுத்து கேட்க வேண்டுமே? கேட்டாலும் நம்புவது பெரிய விஷயம் என்றே தோன்றிற்று. அப்படியே அவர்கள் நம்பினாலும் கடைசியில், 'எல்லாம் சரி... உனக்கு புத்தி எங்கே போயிற்று?' என்று கேட்டு விட்டால்... அவளால் என்ன பதில் சொல்ல முடியும்?

அதனால் நன்கு யோசித்த தரங்கினி அவர்களிடம் வலியப் போய் எதாவது பேச வேண்டும் என்று எழுந்த ஆசையை முதலில் அடக்கிக் கொண்டாள். தனது குழு கவனமும் தான் பொறுப்பு வகிக்கும் கிரானைட் சங்கத்தின் வளர்ச்சி பற்றியே இருப்பது போல் காட்டிக் கொண்டாள்.

ஒவ்வொரு வாரமும் சங்க கட்டிடத்தில் உறுப்பினர்களின் மீட்டிங் நடைபெற்றது. தனசேகரனும், பொன்சேகரனும் தவறாமல் ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்து கொண்டார்கள்.



அப்போது அரசாங்கம் புதிய பொருளாதாரக் கொள்கை ஒன்றை அமுல்படுத்தி ஏற்றுமதிப் பொருட்களுக்கு நிறைய கட்டுப்பாடுகள் விதித்திருந்ததால்... சங்கத்தில் அது பற்றி நிறைய விவாதங்கள் நடந்தது.

அதற்காகவே டிவி செய்திகள், பத்திரிகை பேட்டிகள், நிபுணர்களின் கருத்துக்கள் என எல்லாவற்றையும் குறிப்பெடுத்து தரங்கினி மீட்டிங்கில் எடுத்துரைத்தாள். அவளது விளக்கமான உரையைக் கண்டு கூட்டத்தினரே அதிசியக்க ஆரம்பித்தனர்.

ஓரிரு முறை அவளுடன் வந்த நரேந்திரன் கூட, "உன் மண்டைக்குள் இவ்வளவு சரக்கு இருக்கிறதா?" என வஞ்சிப் புகழ்ச்சியாய் பாராட்டி விட்டுப் போனான்.

ஆனால் அவள் நினைத்தது போல் அண்ணன்கள் தான் கொஞ்சமும் சலனம் காட்டவில்லை. இடித்த புளி போல் இருக்கைகளில் உட்கார்ந்து விட்டு சங்க உதவியாளர்களிடம் மட்டும் பேசிச் சென்றனர்.

தரங்கினிக்கு எது எப்படியோ ஒரு விஷயம் மிக ஆறுதலைத் தந்தது. இந்த சங்க மீட்டிங் என சாக்கு வைத்தாவது தனது அண்ணன்மார்களை பார்க்க முடிகிறதே என நினைத்தாள்.

அதனால் அப்படிப்பட்ட கூட்டங்களில் தன் அண்ணன்களை வைத்தகண் வாங்காமல் பார்த்து ஏங்குவது உண்டு. ஒரு சில மாதங்களிலே இவர்களுக்கு நாம் எப்படி அந்நியராய் எதிரி போல் ஆகிவிட்டோம் என உள்ளுக்குள் துடிப்பதும் உண்டு.

அண்ணன்கள் ஒரு போதும் தன் பக்கம் திரும்ப மாட்டார்கள் என்ற தைரியத்தில் அப்படி அவள்

அவர்களை விழுங்கும் பார்வை பார்த்துக் கொண்டிருக்க... ஒரு நாள் நடந்த கூட்டத்தில் இருவரும் ஒரு சேர அவளை நோக்கித் திரும்பினர்.

சட்டென அவர்களது பார்வையைத் தாங்க முடியாமல் அவள் குனியத்தான் வேண்டி இருந்தது. மறுபடி மெல்ல யதேச்சையாய் நிமிர்ந்து பார்த்த போது அவர்கள் இருவரும் தொடர்ந்து அவளையே சலனமில்லாத பார்வை பார்க்க நெளியத்தான் செய்தாள் தரங்கினி.

ஒருவாறு அன்று மீட்டிங் முடிந்து கிளம்பிய போது சங்க கட்டிட வளாகம் முன் தங்களது கார் பக்கம் நின்றபடி அண்ணன்மார்கள் யாருக்காகவோ காத்திருப்பது தெரிய.... வெளியே வந்தவள் குழம்பத்தான் செய்தாள்.

அவர்களைத் தாண்டித்தான் அவள் போய் ரெடியாய் இருக்கும் தனது காரில் ஏற வேண்டும். என்ன செய்வது? எப்படி அவர்களை தாண்டிச்செல்வது...? அப்படி கடந்து போகும் போது அவர்களை பார்ப்பதா...? அப்படியே பார்த்தாலும் எதாவது ஒரு இளிப்பு செய்வதா? அல்லது பாராமுகமாய் விறுவிறுவென்று கவனியாதவள் போல் போய் விடவா?

என்னென்னவோ கேள்விகள் குடைச்சலாய் எழுந்து அவளை இம்சிக்க... தவிப்பு கொண்டவளாய் மெல்ல அன்ன நடைபோட்டு நடந்தாள்.

தன்னை அப்படியே ரோட்டில் நிறுத்தி நாக்கைப் பிடுங்குகிற மாதிரி நாலு கேள்விகள் கேட்டு விடுவார்களோ என்ற பயமும் எழுந்து அவளுள் இனம் புரியா நடுக்கம் ஒன்றை ஏற்படுத்தி விட... பயத்துடனே நடந்தாள்.



மெல்ல மெல்ல... அன்ன நடை போட்டு அவர்கள் பக்கம் போய் தலையை குனிந்தபடியே அவள் கடக்க முயலும் போது,

''நில்! உன்னுடன் பேச வேண்டும்...!'' என அண்ணன்மார்களின் ஒய்யாரக்குரல் அவள் காதுகளில் ஒலித்த போது அதிர்ந்துதான் போனாள் அவள்!

# 18

அண்ணன்மார்களின் குரலுக்கு அப்படியே சட்டென உறைந்து விட்ட சிலை போல் நின்று விட்டாள் தரங்கினி.

என்ன... தன்னையா... நிறகச் சொன்னார்கள்? தன்னிடமா பேச வேண்டும் என்று சொன்னார்கள்? நம்ப முடியாத அதிசயத்துடன் அவள் திரும்பிப் பார்க்க இருவரும் அவளை நோக்கி நடந்து வருவது தெரிந்தது.

அவர்களது முகத்தில் எவ்வித சலனமுமில்லாமல் அப்படியொரு இறுக்கம்!

கடவுளே! என்ன சோதனை இது? என்ன கேட்கப் போகிறார்கள் இவர்கள்? அதற்கு என்ன பதிலைச் சொல்லப் போகிறேன் நான்...? என ரொம்பவும் பயந்து தான் போனாள் அவள்.

எதுவானாலும் சமாளிப்பதைத் தவிர வேறு வழியில்லை..., என அவள் நிமிர்ந்து கொண்ட போது அவள்

எதிரில் வந்து கைகளை கட்டியபடி அவளை ஊடுருவது போல பார்த்துக் கொண்டிருந்தனர் தனசேகரனும் பொன்சேகரனும்.

ஒரு சில வினாடிகள் அப்படி யாரும் பேசாமல் மௌனமாய் பயங்கரமாய் நகர்ந்தது.

தனசேகரன் கண்களை உருட்டி முறைத்துப் பார்த் தவன், ''ஆனாலும் உனக்கு என்ன துணிச்சல்? எங்கள் முன்னாலே வந்து உட்கார்ந்து கொண்டு சங்க மீட்டிங் அது இதுவென லெக்சர் அடித்துக் கொண்டிருக்கிறாய்? சரியான அழுத்தக்காரி!'' என்றான் கோபமாய்.

அவள் பதில் சொல்லாமல் குனிந்தாள்.

பொன்சேகரனோ முகத்தில் கடுமை பரவ, ''எல்லாம் தான் முடிந்தாயிற்றே? இன்னும் என்ன உனக்கு பாக்கி இருக்கிறது? எதற்காக இப்படி எங்கள் முன்னால் வந்து நடமாடி எங்களை எரிச்சல் படுத்துகிறாய்?'' என்றான்.

அவள் அதற்கும் பதில் சொல்லாமல் இருக்க பொறுமை இழந்தவர்கள் போல், ''பதில் சொல்...'' என்றார்கள் உறுமலாக.

மெல்ல தலைநிமிர்த்தி தரங்கினி கிளிப்பிள்ளை போல வார்த்தைகளை உச்சரித்தாள்.

''நான் செய்தது தப்புதான்...''

''மன்னிக்க முடியாத தப்பு...! துரோகம்!'' என சட் டென குறுக்கிட்டு திருத்தினான் தனசேகரன்.

''அதற்காக என்னை மன்னித்து விடுங்கள்...''

''அதான் மன்னிக்க முடியாத தப்பு என்று சொல்லி விட்டேனே... மேற்கொண்டு சொல்ல வந்ததைச் சொல்...''



''அப்படி நடந்து கொண்டதற்காக மிகவும் வருந்து கிறேன்...''

''உன் வருத்தத்தை குப்பையில் கொண்டு போடு...''

''உங்கள் கோபம் கூட நியாயமானதுதான்...''

''நியாயத்தைப் பற்றி உன்னிடம் பேச நாங்கள் வரவில்லை...! நாங்கள் கேட்டதற்கு பதில் சொல்! எதற்காக இப்படி சங்கப்பிரதிநிதி... மீட்டிங் என எங்கள் முன் வந்து எரிச்சல் படுத்துகிறாய்...?''

மிரட்டலாகவே கேட்டான் பொன்சேகரன்.

''அது...அது...''

சொல்லத் தயங்கினாள் தரங்கினி.

''எதுவானாலும் சொல்.... சொல்லித் தொலை...!''

அவர்கள் பொறுமையிழப்பது அவளுக்குப் புரிந்தது.

''உங்கள் அன்பை நான் மீண்டும் பெற வேண்டும்... அதற்காகத்தான்...''

''அது நடக்காத காரியம்...''

''அதற்காக பொறுமையாக போராடப் போகிறேன்...''

''முட்டாள் தனமான காரியம்...! நடக்கவே நடக்காத விஷயம்...!'' கோபமாய் கூறி பற்களைக் கடித்தான் தனசேகரன்.

பொன்சேகரனோ, ''அவள் சரியான முட்டாள்... தானே...! அதில் வேறு சந்தேகமா? இப்படி நமக்குப் பிடிக்காத நம் பரம எதிரியைப் போய் காதலித்திருக் கிறாளே... திருட்டுக் கல்யாணம் வேறு செய்திருக் கிறாளே...!'' என்றான் உரக்க.

''நீங்கள் சொல்வது உண்மைதான். நான் தான் முட்டாள் தனமாய் அவரைக் காதலித்திருக்கிறேன். ஆனால் அவர்... அவர்... நரேந்திரன் என்னை உண்மையாய் காதலிக்கவில்லை. காதலிப்பது போல் நடித்திருக்கிறார்...''

''இது என்ன புதுக்கதை?''

இருவரும் திரும்பி அவளை நேருக்கு நேர் பார்த்து முறைத்தார்கள்.

''கதையல்ல... உண்மைதான்...!'' என்றபடி தரங்கினி நரேந்திரன் தன்னிடம் சொன்ன விஷயங்களை எல்லாம் சொல்லி விளக்கினாள்.

அவள் சொன்னதைக் கேட்டு ஆத்திரத்தோடு இருவரும் கைளை குத்திக் கொண்டார்கள்.

''யமகாதகன்! திட்டம் போட்டு வலை விரித்திருக்கிறான். இவளும் பேக்கு மாதிரி போய் வலையில் விழுந்திருக்கிறாள்...''

''நான் பேக்கு தான்! சரியான முட்டாள் தான்! என்னை மன்னித்து விடுங்கள்!''

சந்தடி சாக்கில் அவர்கள் மனநிலையை மாற்றி விடலாம் என முயற்சித்தாள் தரங்கினி.

''ச்சீ...!'' என முகத்தை வெட்டி, ''அதற்காக உன்னை மன்னிக்கவெல்லாம் முடியாது...!'' என்றார்கள் திரும்பவும் ஒரே குரலில்.

தரங்கினி ஒன்றும் பேசாமல் மறுபடியும் முகத்தை குனிய வைத்துக் கொண்டு மௌனமானாள்.



அவர்கள் சொல்வது நியாயம் தானே! இவ்வளவு பெரிய துரோகத்தை எப்படி அவர்களால் லேசில் மன்னிக்க முடியும்? திரும்பி ஏற்றுக் கொள்ள முடியும்?

அதற்குள் அவர்கள் இருவரும் மெல்லிய குரலில் அவளைத் திரும்பிப் பார்த்தவாறே தங்களுக்குள் பேசினார்கள்.

பின் நிமிர்ந்தார்கள்.

''வேண்டுமானால் ஒன்று செய்யலாம்...'' என்று ஆரம்பித்தனர்.

''என்ன...? என்ன...? என்றாள் தரங்கினி ஆவலாய்.

தனசேகரன் முன் வந்து அவள் கண்களை ஊடுருவது போல பார்த்தான். ''மறுபடியும் எங்களது அன்பைப் பெற உனக்கு ஒரே ஒரு வழி இருக்கிறது...'' என்றான்.

''வழி இருக்கிறதா? சொல்லுங்கள்... சொல்லுங்கள்...!'' என்றாள் அவள் பிரயாசையாய்.

''ஆனால் அந்த வழியை நீ துணிந்து எங்களுக்காக செய்வாயா... என்பது தான் சந்தேகமிருக்கிறது...'' பொன்சேகரன் குறுக்கிட்டுப் பேசினான்.

''எதுவானாலும் சொல்லுங்கள்! கண்டிப்பாக செய்கிறேன்...''

அவள் ஆவல் மிகுதியாய் கேட்க அவளை ஒரு வினோதமாகப் பார்த்தவர்கள் நிதானமாய் அந்த வார்த்தைகளை உச்சரித்தனர்.

''நீ எங்களுக்கு செய்தது போல் ஒரு மிகப் பெரிய துரோகத்தை நரேந்திரனுக்குச் செய்ய வேண்டும். செய்வாயா? உன்னால் முடியுமா?''

அவர்கள் தொடர்ந்து சொன்னதைக் கேட்டு அப்படியே திகைத்துப் போனாள் தரங்கினி.

# 19

தரங்கினி அண்ணன்களுடன் பேசியவள், அவர்கள் சொன்ன அதிர்ச்சியான விஷயத்தைக் கேட்டு திகைத்து தான் போய்விட்டாள்!

அவள் கொஞ்சமும் எதிர்பாராத ஒரு விஷயத்தை அவர்கள் பேசினார்கள்.

அவர்கள் பேசியதில் இருந்து அவளுக்கு ஒன்று தெளிவாய்ப் புரிந்தது. நரேந்திரனை அவர்கள் வெறும் எதிரியாக மட்டும் பார்க்கவில்லை. ஜென்ம விரோதியாக நினைத்து முத்திரையும் குத்தி விட்டார்கள்!

அவர்களுக்கு கோபம் ஆத்திரம் அவளை விட அந்த நரேந்திரன் மேல் தான் என்று தோன்றியது. சும்மாவே தொழில் போட்டியில் ஏற்பட்ட பகை ஊதிக் கொண்டு கிடக்க... அவன் தரங்கினியை திருட்டுக் கல்யாணம் செய்தது... ஏதோ வசியம் போட்டு அவளை மயக்கி ஏமாற்றி விட்டதாகவே நினைத்து எரிமலையாய் கொதித்தனர்.

அதனாலே தரங்கினியிடம் தெளிவான குரலில், ''உன்னை ஏற்றுக் கொள்கிறோம். நடந்தவைகளை மறந்து



முன்பு போல் உன்னிடம் அன்பு செலுத்துகிறோம். ஆனால் அதற்கு நீ நரேந்திரனை பழி வாங்க வேண்டும். அவனது தொழிலில் சதி செய்து அவனை ஓட்டாண்டியாக்க வேண்டும். உன்னால் அதைச் செய்ய முடியுமா? செய்வதற்கு நீ தயாரா?'' என கூசாமல் அவளிடமே கேட்ட போது தரங்கினி ஸ்தம்பித்து தான் போனாள்.

என்ன ஒரு கேள்வி... என்ன ஒரு வேலை இது! நரேந்திரன் வேண்டுமானால் அவளிடம் நடித்திருக்கலாம். ஆனால் அவள் அவன் பால் நிஜமாகவே ஈர்க்கப்பட்டு நிஜமாகவே காதலில் விழுந்தவள் தானே!

என்ன தான் நரேந்திரன் மீது ஓரளவு வெறுப்பும் கோபமும் இருந்த போதும் அதற்காக அவனை பழி வாங்கும் அளவுக்கு அவளுக்கு விரோதம் துவேஷம் அல்லவே...!

யோசித்து ஓரிரு கணங்கள் என்ன சொல்வதென்று தெரியாமல் தடுமாறத்தான் செய்தாள்.

ஆனால் இரு அண்ணன்மார்கள் காட்டிய அவசரம் மிரட்டலான ஒருவித தொனி அவளை மேலும் சிந்திக்க விடாமல் பதிலைச் சொல்ல அவசரப்படுத்தியது.

இருந்தும் சமாளித்து, ''யோசித்து நாளை சொல்கிறேன்...!'' என்றாள்.

''ம்ம்...'' என ஒரு வித அழுத்தமான உறுமலுடன் இருவரும் வேகமாய் அகன்றனர்.

அவள் நடந்ததை நம்ப முடியாமல் வீடு வந்து சேர்ந்தாள்.

அவளுக்கு ஒரு விஷயம் தான் ஜீரணிக்க முடியவில்லை!

அண்ணன்மார்கள் தனது தவறை கூட விட்டுவிட்டார்கள். அவர்களது ஒரே குறி நரேந்திரன்! அவனை எப்படியாவது பழிக்கு பழி வாங்க வேண்டும். அந்த ஒரு வெறிதான் அவர்கள் கண்ணில் நிற்கிறது. வேறு எதுவும் இல்லை!

இவர்களுக்கு இருக்கும் வெறியைப் பார்த்தால் நரேந்திரன் இவர்கள் மீது கொண்டிருக்கும் பகைமைக்கு காரணமும் புரிந்தது.

அந்த பகையினால்தான் நரேந்திரனும் அண்ணன்களை பழிவாங்க அவளைப் பகடைக்காயாய் உபயோகித்திருக்கிறான்.

இருவரும் ஒருவர் மீது ஒருவர் இவ்வளவு வெறுப்பும் பகைமையும் கொள்ளும்படி அப்படி என்ன நடந்துவிட்டது? தொழிலில் ஏற்பட்ட போட்டி இவ்வளவு தூர விரோதத்திற்கு அவர்களைக் கொண்டு விட்டதோ?

விட்டால் இருவரும் கத்தி, அறிவாள் என எடுத்துக் கொண்டு ஒருவரை ஒருவர் வெட்டக் கிளம்பி விடுவார்கள் போலிருக்கிறதே?

என்ன செய்ய? இவர்கள் இருவரையும் எப்படி திருத்துவது? என தலையில் வைத்தபடி கவலையாகி விட்டாள் தரங்கினி.

தன்னை மீண்டும் ஏற்றுக் கொள்வதாக சொன்னது மிகுந்த சந்தோஷத்தை ஏற்படுத்தினாலும் அதற்கு அவர்கள் கேட்டிருக்கும் விலை எவ்வளவு அபாயகரமானது?



நரேந்திரனைப் பழி வாங்க வேண்டுமாம்... ஓட்டாண்டியாக்கி நடுத்தெருவில் நிற்க வைக்க வேண்டுமாம்...!

இதுவெல்லாம் நடக்கக் கூடியதா?

அதுவும் நரேந்திரனின் மனைவியாகி விட்ட அவளே அதைச் செய்ய வேண்டுமாமே!

என்ன இருந்தாலும் நரேந்திரன் அவள் விரும்பியவன்... அவளது கணவன் என கொஞ்சமாவது அவர்கள் யோசித்தார்களா?

இல்லையே...!

தங்கை தங்களுக்கு... செய்த துரோகத்திற்கு பதிலடி போல் நரேந்திரனுக்கு துரோகம் செய்யச் சொல்கின்றனர்!

இது மட்டும் நரேந்திரனுக்குத் தெரிந்தால் என்ன ஆட்டம் ஆடி விடுவான்?

சரி... அவனை விடுவோம்! அவளால் தான் இது முடியுமா? இழந்த அண்ணன்களின் பாசத்தைப் பெற கட்டிய கணவனை ஏமாற்றச் சொல்கிறார்கள். தொழில் துரோகம் செய்யச் சொல்கிறார்கள்.

எவ்வளவு கேவலமான செயல் இது?

ஆனால் அண்ணன்மார்கள் இருவரும் ஆத்திரமாய் கண்களை உருட்டி விரட்டிச் சொன்ன விதம் அவர்களது தீவிரத்தை எவ்வளவு தெளிவாய் காட்டியது.

அவள் அப்படி நரேந்திரனைச் செய்து நடுத்தெருவிற்கு கொண்டு வந்தால் தான் அவர்களும் மனம் இறங்

குவர். அவளை மீண்டும் பாசத்துடன் ஏற்றுக் கொள்வார்கள்.

இல்லையென்றால்... கிடையாது தான்!

அவளுக்கு அண்ணன்களிடம் இழந்த பாசமும் வேண்டும். அதே நேரத்தில் நரேந்திரனை கூடஇருந்தே அப்படி கழுத்தறுப்பதைப் போல் பழி வாங்குவதையும் செய்ய முடியாது.

பின் என்ன செய்ய...? இந்த பிரச்சனையை எப்படி சமாளிக்க?

யோசித்தாள்.

ஒன்றும் பிடிபடாமல் அப்படியே நடமாடினாள்.

அன்று மாலை நரேந்திரன் அவள் முகத்தைப் பார்த்து எதையோ கண்டுபிடித்தது போல்,

''ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?'' என்றான்.

சட்டென வரவழைத்த புன்னகையுடன், ''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை...'' என்றாள்.

பின் அதே கேள்விக்குறியுடன் பார்த்தவன், ''சங்கம் பிரதிநிதிகள் மீட்டிங் என அலைந்தாயே... எதுவும் உபயோகம் இருந்ததா?'' என்றான்.

''இருந்தது...'' என்றாள் மொட்டையாக.

''உன் அண்ணன்களை பார்த்தாயா?''

''பார்த்தேன். ஆனால் அவர்கள் பேசவில்லை. முகத்தை திருப்பிக் கொண்டார்கள்....'' என்றாள் நடந்ததைச் சொல்ல விரும்பாதவளாய்.



'ம்ஹூம்!' என நரேந்திரன் தோள்களை குலுக்கியபடி அலுத்தவன், ''நீ தோற்கப் போகிறாய், உன்னை ஒரு போதும் அவர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை...'' என்றான்.

''எனக்கு நம்பிக்கை இருக்கிறது. என்னால் முடியும்!'' என்றாள் அவள் உறுதியான தொனியில்.

''எப்படி?'' கேட்டபடி புருவங்களை ஆச்சரியமாய் உயர்த்தினான் அவன்.

''நான் உங்களது கிரானைட் பிஸினெஸில் நிர்வாகப் பொறுப்பில் இன்னும் தீவிரமாக பங்கேற்க வேண்டும். பிசினஸில் சில புதிய முயற்சிகளை செய்து அண்ணன்களை என் பக்கம் திருப்ப திட்டமொன்றும் வைத்திருக்கிறேன். அதனால் அப்படி... நிர்வாக பொறுப்புகளில் நானும் பங்கேற்க... நீங்கள்... நீங்கள்... உதவி செய்ய வேண்டும்... அனுமதி தர.... வேண்டும்...'' அவள் பேசி முடிப்பதற்குள் நரேந்திரன் கொஞ்சமும் யோசிக்காமல், ''தாராளமாக பங்கெடு. நான் அனுமதிக்கிறேன்!'' என்றான் வரப்போகும் விபரீதம் புரியாமல்.

## 20

நரேந்திரன் அனுமதித்ததும் மறுநாள் முதல் காரியமாய் போன் போட்டு அண்ணன்களிடம் பேச முயன்றாள். அலுவலக போனில் ரொம்ப நேர முயற்சிக்குப் பின் தனசேகரன் தான் லைனுக்கு வந்தான்.

அவள், ''தனா அண்ணா...'' என பேச்சை உற்சாகமாக ஆரம்பிக்க முயல சட்டென இடைவெட்டி, ''என்ன? விஷயத்தைச் சொல்லு...!'' என்றான் கறார் குரலில்.

தரங்கினியும் சுதாரித்து, ''நான் சம்மதிக்கிறேன். நீங்கள் செய்வது போல் செய்கிறேன்....'' என்றாள்.

''ம்ம்...'' என்றான் தனசேகரன் மறுமுனையில் அழுத்தமாக.

''ஆனால்...'' இழுத்தாள் தரங்கினி.

''என்ன?''

''எப்படிச் செய்வது என்று புரியவில்லை. கிரானைட் பிசினஸ் பற்றி எனக்கு அவ்வளவாக தெரியாது. நரேந்திரன் நிர்வாகப் பிரிவில் நான் தலையிட அனுமதி அளித்து விட்டார்....'' மறுபடியும் இடைமறித்தான் தனசேகரன்.

''அந்தக் கவலை உனக்கு வேண்டாம். என்ன செய்வதென்று நாங்கள் சொல்கிறோம்...''

''என்ன நீங்கள் சொல்வீர்களா?''

''ம்ம்... ஆனால் இப்போது அல்ல. இன்னும் ஒரு வாரத்திற்குள்.... பத்து நாட்களுக்குள்! முக்கியமான டெண்டர் கொட்டேஷன் ஒன்று வருகிறது.... அதில் நரேந்திரன் குறிப்பிடும் தொகையை கண்டுபிடித்து சொன்னால் போதும். அதே போல் இன்னொரு ஏற்றுமதி விகித கணக்கு ஒன்று இருக்கிறது. அதில் நாங்கள் சொல்கிற மாதிரி குறிப்புகளை மாற்றி எழுத வேண்டும். அப்படிச் செய்து விட்டால் அந்த அறிக்கை அரசாங்கத்திற்கு போகும் போது பெரும் சிக்கலாகி விடும். உரிமைகளை மீறி இருப்பதாய் காரணம் காட்டி அரசாங்கமே



கம்பெனியின் ஏற்றுமதி லைசென்ஸை ரத்து பண்ணி விடும். இது... இரண்டும் நடந்து விட்டால் ஒரே வாரத்தில் குப்புறக் கவிழ்ந்து ஓட்டாண்டியாகி விடுவான் அவன்...''

தாங்கள் வைத்திருக்கும் சதித்திட்டத்தை தனசேகரன் விவரித்த போது தரங்கினிக்கு நடுக்கமே ஏற்பட்டது.

எவ்வளவு பெரிய விஷயத்தை எவ்வளவு சாதாரணமாய் சொல்கிறான்? அப்படி ஒரு பழிவாங்கும் வெறியா? என திகைத்தாள்.

ஆனால் தனசேகரன் தனது திட்டத்தை விவரித்து விட்டு ''இன்னும் இரண்டு நாட்களுக்குள் திட்டத்தின் முழு விவரங்களுடன் நீ செய்ய வேண்டிய விஷயங்கள் பற்றியும் தெளிவாக கூறுகிறேன்...'' என்று சொல்லி விட்டு வைத்து விட்டான்.

ஆனால் மறுநாளே மறுபடியும் அவளுக்கு அண்ணன்களிடம் இருந்து போன் வந்தது.

மாலை மத்திய நூலக மையத்திற்கு நேரில் வருமாறும் சில முக்கிய விஷயங்கள் சொல்ல வேண்டியிருப்பதாக சொன்ன போது அவள் வியப்படையவே செய்தாள்.

அண்ணன்களை மறுபடி பார்க்கும் பேசும் சந்தர்ப்பம் என குதி போட்டுக் கொண்டே நூலக மையத்திற்கு கிளம்பிப் போனாள். விஸ்தாரமான பரப்பளவு கொண்ட நூலகமையம் அது. முகப்பில் பெரிய பெரிய மரங்கள் நிழலை பரப்பியபடி அமைந்திருக்க... ஆலமரத்தடியின் ஒன்றில் காரை விட்டு இறங்கி தயாராய் தனசேகரனும், பொன்சேகரனும்!

பார்த்த அவளது முகம் மேலும் வியப்பிற்குப் போனது. அவர்களுடன் இருவருடன் மூன்றாவதாய் வாட்டசாட்ட மான உடற்கட்டுடன் முப்பது வயதுக்காரன் ஒருவன்.

யார் இது...? என தரங்கினி திகைப்புடன் தனது ஸ்கூட்டியை நிறுத்தியவாறு அவர்கள் பக்கம் போனாள்.

வழக்கம் போல் அவர்களைப் பார்த்ததும் முகம் விரிய புன்னகைக்கப் போனவள் அவர்கள் காட்டிய முக இறுக்கத்தைப் பார்த்து பாதியிலேயே நிறுத்தி விட்டாள்.

தனசேகரன் அதே அவசரத்துடன் நேரிடையாய். விஷயத்திற்கு வந்து விட்டான்.

"இதோ பார்... தரங்கினி... இவர் மிஸ்டர் மோகன். ஆடிட்டர் மோகன்! அதாவது நரேந்திரனின் கம்பெனி விவகாரங்களை கவனிக்கும் அவனது ஆடிட்டர்...!"

"அப்படியா...?" என புருவம் உயர திகைத்தவள், அதே ஆச்சரியத்துடன், "அவர் எப்படி உங்களுடன்?" என எழுந்த கேள்வியை கேட்டே விட்டாள்.

"அவரை விலை கொடுத்து வாங்கி விட்டோம்...!" என தனசேகரனிடம் இருந்து அமைதியாய் பதில் வந்தது.

தரங்கினி அதிசயமாய் அவனைப் பார்க்க அந்த ஆடிட்டர் மோகன் தனது அத்தனை பற்களையும் காட்டி அவளைப் பார்த்து அசிங்கமாய் இளித்தான்.

இவன் பார்வை அந்த முழியே சரியில்லையே? என தரங்கினி முகம் சுருங்கியவள் தனசேகரன் அடுத்து சொன்ன விஷயத்தைக் கேட்டு அதிரவே செய்தாள்.

"இவர் மோகன்... நரேந்திரனின் நம்பிக்கைக்குரிய ஆடிட்டர். நாங்கள் இவருக்கு ஒரு பெரிய தொகையை



கொடுத்ததும் இவர் நம் பக்கம் வந்து விட்டார். நரேந்திரன் கம்பெனிக்கு எவ்வித துரோகச் செயலையும் செய்ய தயாராகி விட்டார். என்ன மோகன்?" கேட்டபடி தனசேகரன் அவனைப் பார்க்க... மாடு போல் தலையை பலமாய் ஆட்டினான் அவன்.

"கண்டிப்பாகச் செய்வேன்! அந்த நரேந்திரனுக்கு நான் ஆடிட்டராக இருந்தாலும் நீங்கள் எனக்கு நிஜமான பாஸ்! முதலாளி! நீங்கள் சொல்லியபடி காரியத்தை கச்சிதமாய் செய்கிறேன்..."

மறுபடியும் தலையாட்டி அசிங்கமாய் சிரித்தான் அவன்.

அதுவரை பேசாமல் பார்த்துக் கொண்டிருந்த பொன் சேகரன் தரங்கினி பக்கம் திரும்பி, "இனி நீ என்ன செய்ய வேண்டும், அலுவலகத்தில் அவர் சொல்லும் குறிப்புகளில் எந்த திருத்தங்களை எல்லாம் செய்ய வேண்டும். டெண்டர் தொகை விவரங்கள் ரகசியங் களை சாதுர்யமாய் எப்படி கண்டு பிடித்து... வர வேண் டும் என்பதை எல்லாம் இனி மோகன் உன்னிடம் விபர மாய் விவரித்து விளக்குவார். நீ அவர் சொல்படி நடந் தால் போதும். புரிகிறதா?" என ஏறக்குறைய விரட்டும் தொனியிலேயே கேட்டான் அவன்.

தரங்கினி அவனது இறுக்கம் விலகாத முகத்தை பார்த்தபடியே தலையாட்டினாள்.

அதன் பின் மோகன் தான் கையோடு கொண்டு வந்திருந்த சில பாண்டு பேப்பர்களை அவளிடம் கொடுத் தான். அதில் கம்பெனியின் முத்திரையை பதித்து... அவன் சொல்லும் விபரங்களை கம்பெனியின் ரகசிய

குறிப்பு ஃபைலில் இருந்து எடுத்து எழுதுமாறு அறிவுறுத்தினான்.

அவன் சொல்லிய விவரித்த எல்லாமே உளவு வேலை தான்! பாதகச் செயல் தான்! நரேந்திரனின் கம்பெனியை அடியோடு குழி பறிக்கும் நம்பிக்கைத் துரோகம் தான்!

ஆனால்... வேறு... வழியில்லையே! பலியாடு போல் சம்மதத்தின் அறிகுறியாய் தலையாட்டத்தான் செய்தாள் அவள்.

அண்ணன்மார்கள், எல்லாம் பேசி முடித்ததும், மோகன் இனி அவளை அவ்வப்போது போனில் தொடர்பு கொண்டு விஷயங்களைச் சொல்லுவான்... என அறிவித்து விட்டு கிளம்பப் போனார்கள்.

''அண்ணா ஒரு விஷயம்...'' என அவர்களை நிறுத்தினாள் தரங்கினி.

''இப்படி நீங்கள் சொன்னபடி செய்தால் என்னை மன்னித்து விடுவீர்கள் தானே?'' என பிரயாசையாய் கேட்டாள் அவள்.

''கண்டிப்பாக... தரங்கினி...!'' என்றபடி இருவரும் ஒருசேர அவளைப் பார்த்து திரும்பி இளித்தனர்.

## 21

மோகன் தனது ஆடிட்டர் அலுவலகத்தில் குறுக்கும் நெடுக்கமாய் நடந்து கொண்டிருந்தான்.



அவன் முகத்தில் சந்தோஷம் பொங்கி வெடிக்கும் அளவுக்கு போய்க் கொண்டிருந்தது.

உற்சாகமாய் ஒரு கையைக் கொண்டு மறுகையில் சந்தோஷமாய் குத்தினான்.

சபாஷ்! ஒரு கல்லில் இரண்டு மாங்காய்!

ஒன்று காலம் காலமாய் காத்திருந்தமைக்கு நரேந்திரனைப் பழிவாங்க சரியான சந்தர்ப்பம். இன்னொன்று அழகுக் கிளியான தரங்கினியை இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அடைந்து விட வேண்டும்!

விஷமத்தனமான அவனது முகத்தில் கொஞ்சம் கொஞ்சமாய் வில்லத்தனம் ஏறிக் கொண்டிருந்தது.

நரேந்திரன் மீது அவனுக்கு அளவு கடந்த ஆத்திரம். அடங்காத பகை!

அதற்கு காரணம் நரேந்திரனின் அலுவலகத்தில் உள்ள டைப்பிஸ்ட் பிரேமா!

பிரேமாவை தற்செயலாய் ஆடிட்டிங் கணக்கு பார்க்க வந்த சமயத்தில் தான் சந்தித்தான்.

பார்த்த உடனே... அவனுக்கு அந்த காதல் தீ பற்றிக் கொண்டது.

பரபரவென மனசுக்குள் வளர்ந்து ததிங்கிணத்தோம் ஆட்டம் போட... கொஞ்சம் கூட வெட்கமே படாது பஸ் ஸ்டாப்பில் நின்ற பிரேமாவிடம் லவ் லெட்டர் ஒன்றை பெரிய மன்மதன் போல் நீட்டி விட்டான்.

பிரேமா இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவள், சரியான நெட்டைக் கொக்கு! பேக்கு! என்றெல்லாம் அலுவலர்களிடம் கமெண்ட் அடித்து மோகனைக் காட்டி

சிரித்தது உண்டு. இன்று அவனே ரோமியோ போல் லவ்லெட்டருடன் அவளுக்கே கொடுத்தபடி என்ன ஒரு திமிர்!

அவளுக்கு வந்த கோபத்தில் முறைத்து ரௌத்திர மாகி அந்த லெட்டரை அப்படியே சுக்கு நூறாய் கிழித்து அவன் முகத்தில் விட்டெறிந்தாள்.

மோகன் அசரவில்லை.

காதலில் இது போன்ற மோதல்கள் எல்லாம் சாதா ரணம் என்பது போல் அடுத்த முயற்சிகளில் இறங்கி னான்.

பிரேமாவை தினம் பின் தொடர்வது அவள் வரும் பாதையில் எல்லாம் பல்லை இளித்துக் கொண்டு போஸ் கொடுப்பது போன்ற காதல் சேஷ்டைகள் செய்ய ஆரம்பிக்க பிரேமா ஒரு நாள் தன் செருப்பைத் தூக்கி காட்டினாள்.

அப்படியும் மோகன் அசரவில்லை.

அடுத்த முயற்சி ஒன்றைத் தொடங்கினான். நேரிடை யாகவே பிரேமா வீட்டுக்குப் போய் நின்றான்.

நான் கை நிறைய சம்பாதிக்கும் ஆடிட்டர். எனக்கு உங்கள் மகளை பெண் கொடுங்கள்... என்றான். பிரேமா வின் மிலிட்டரி ரிடையர்டு தந்தையும் விஷயத்தை பிரேமாவிடம் கேட்டு விட்டு தனது நீண்ட மீசையை முறுக்கினார்.

''ஒழுங்காய் எழுந்து ஓடி விடு. இல்லையெனில் மிலிட்டரி துப்பாக்கி ஒன்றை வைத்திருக்கிறேன். எடுத்து உன்னை சுட்டு விடுவேன்!'' என அந்த துப்பாக் கியையும் எடுத்துக் காட்டினார்.



அட... இது என்ன வம்பு! என அங்கிருந்து ஓட்டம் பிடித்தான் மோகன். ஆனாலும் பிரேமாவின் மீதான காதல் அவனுக்கு குறையவில்லை.

மன்மதனின் அம்பு போல அடுத்த முயற்சிகளை ஆரம்பித்தான்.

பிரேமாவை அலுவலகத்தில் அலுவலக கேண்டினில் வலிய வந்து சந்தித்து எதாவது சாக்கு வைத்து பேச ஆரம்பித்தான்.

வேலை நேரங்களில் அவள் எதிரில் உள்ள இருக் கையில் அமர்ந்து கொண்டு பெரிய சினிமா ஹீரோ போல் அவளையே உரிக்க உரிக்க பார்த்தான்.

பிரேமாவால் இம்முறையும் சகிக்க முடியவில்லை.

நாளுக்கு நாள் மோகனின் தொல்லை இடைஞ்சலாக மாறி தன்னை ரொம்பவும் இம்சைப் படுத்துவதை உணர்ந் தவள் விஷயத்தை அப்படியே முதலாளி நரேந்திரனின் காதில் போட தீர்மானித்தாள்.

மறுநாளே... அலுவலக நேரத்தில் நரேந்திரனை சந்தித்து நடக்கும் விஷயம் முழுவதையும் சொல்லி விட்டாள். 'அப்படியா... விஷயம்...?' என திகைத்துப் போன நரேந்திரன் கோபமாகவும் மாறி கொதிக்க ஆரம்பித்து விட்டான்.

அவனது அலுவலக பணியாளர்களிடம் பெரிதும் கண்ணியம் காப்பவன். ஒழுக்கத்தை எதிர்பார்ப்பவன், தனது அலுவலகத்தில் இப்படி ஒரு கூத்து நடக்கிறதா என வியந்து அதிர்ச்சிதான் கொண்டான்.

உடனே மோகனை வரச் சொல்லி விசாரிக்க நெளிந் தான் மோகன்.

''அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை ஸார்...'' என்றான் மோகன்.

''ஒன்றும் இல்லையா...? பின் எதற்கு பிரேமா உங்கள் மீது கம்ப்ளையின்ட் சொல்ல வேண்டும்...?''

அவன் கடுமையாய் வினவ மறுபடியும் தலை குனிந்து தடுமாறினான் அவன்.

''அது... அது... வந்து...'' என குழறலாய் ஆரம்பித்தவன், ''காதல்...'' எனவும் முடித்தான்.

''என்ன காதலா...?''

''ஆமாம் ஸார். நான் அந்த பிரேமாவை மனதார காதலிக்கிறேன்...'' என்றான் நரேந்திரனிடமே துணிச்சலாய்.

''ஆனால் அந்த பிரேமா உங்களை விரும்பவில்லையே...? உங்களை பிடிக்கவில்லை என முகத்திலடித்தாற் போல் கூறியும் நீங்கள் ஏன் தொடர்ந்து விரட்டுகிறீர்கள்? பெரிய மன்மதன் போல் துரத்துகிறீர்கள்?''

''அது...அது...'' என மீண்டும் வார்த்தைகள் வராமல் தடுமாறினான் அவன்.

உடனே கோபம் கொப்பளிக்க சிவந்த நரேந்திரன் முன்னால் வந்து சட்டென அவனது சட்டைக்காலரைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கினான்.

''ஆடிட்டர் தம்பி, இந்தக் காதல் விளையாட்டை இத்தோடு நிறுத்திக் கொள். இனியும் என் அலுவலகத்தில் இது போன்று நீ நடந்து கொள்ள முயன்றால் உன் மென்னி எலும்பு முறிந்து விடும். புரிகிறதா?'' என கண்களை உருட்டி ஒரு விரட்டு விரட்டினான்.

நரேந்திரன் பிடித்த வேகத்தில் அவன் காட்டிய கோபத்தில் அப்படியே அரண்டு போனான் மோகன்.



ஆனால் உள்ளுக்குள் நரேந்திரன் மீது பயங்கர கோபம் தகதகத்துக் கொண்டிருந்தது.

நாம் யாரைக் காதலித்தால் யாரைப் பின் தொடர்ந்தால் இவனுக்கென்ன? இவன் பாட்டுக்கு இவனது வேலையை பார்த்துக் கொண்டு இருக்க வேண்டியது தானே? அதை விட்டு விட்டு இப்படி தேவையில்லாமல் நம் விஷயத்தில் தலையிட்டு மிரட்டவும் செய்கிறானே? என எரிச்சலும் அடைந்தான்.

அதனாலே மனதில் கறுவிக் கொண்டு, சமயம் வரட்டும் நான் பழி தீர்க்கிறேன். நான் யாரென்று அவனுக்கு பாடம் புகட்டுகிறேன்...! என மனதுள் அப்போதே சூளுரைத்திருந்தான் மோகன்.

அதற்கு, பழம் நழுவி பாலில் விழுவது போல் நரேந்திரனைப் பழிவாங்க சரியான சந்தர்ப்பம் வர ஏக குஷியாகி விட்டான் அவன்!

## 22

தரங்கினி வீடு திரும்பியவள் அன்று முழுவதும் சோர்ந்தே இருந்தாள். மனதில் எந்த லயிப்புமில்லாமல் ஜன்னலையும் சுவரையும் வெறித்துக் கொண்டிருந்தாள்.

நரேந்திரன் முகத்தைப் பார்க்கவே சங்கடமாயிருந்ததால் அவனைப் பார்க்காமலே நடமாடினாள்.

ஒரே வீட்டில் அவனது மனைவி என்ற பெயரில் இருந்து கொண்டு அவனுக்கே நம்பிக்கைத் துரோகம் செய்வதா? அவன் கஷ்டப்பட்டு உருவாக்கிய கம்பெனி யின் ரகசியங்களைச் சொல்லி தொழிலில் பெரும் வீழ்ச்சியை உண்டு பண்ணுவதா?

இது எந்த விதத்தில் நியாயம்?

கேள்விகள் தொடர்ந்து கிளம்பி அவளை ரொம்பவும் இம்சித்தது.

இது போன்ற விபரீத விஷமச் செயல்கள் அவளுக்கு சுத்த மாய் பிடிக்காத சமாச்சாரங்கள். ஆனால் இன்று அவளே அது போன்ற ஒன்றைச் செய்ய துணிந்து விட்டாளே!

எல்லாம் சூழ்நிலைக்காக.... என அவள் சொல்லிக் கொண்டாலும் அவளது செயல்களை ஒரு போதும் நியாயப்படுத்த முடியாதே!

அப்படி நரேந்திரன் தொழிலில் வீழ்ச்சியடைந்து அண்ணன்மார்கள் விரும்புவது போல் நிஜமாகவே ஒட்டாண்டியாகி விட்டால்.... அவனை அவள் எந்த முகத்தைக் கொண்டு பார்க்க முடியும்?

அவள் அப்படிச் செய்த துரோகம் அவளை தினம் இம்சித்து வாழ்நாள் முழுவதும் உறுத்திக் கொண்டு இருக்குமே?

ஆகவே அவள் செயல் தலைவலிக்கு கொள்ளிக்கட் டையை எடுத்து சொரிந்து கொள்வது போலத்தானே இருக்கிறது?

என்ன செய்ய? எப்படியாவது இதைத் தடுக்க வழி இருக்கிறதா? அல்லது வேறு மாற்று வழிகள் தான் இருக்கிறதா? எனத் தேடினாள்.



நீண்ட நேரம் குறுக்கும் நெடுக்கும் தவிப்புடன் நடந்தும் தலையை குலுக்காத குறையாய் யோசித்தும் ஒன்றும் அவளுக்குப் பிடிபடவில்லை.

ஆனாலும் அவளுக்கு வேறு வழியில்லை! அண் ணன்களின் அன்பை முதலில் பெற வேண்டும். அப்படி பெற்று விட்டால் நரேந்திரனிடம் போட்டி சவாலில் ஜெயித்து விடலாம். அப்படி ஜெயித்து விட்டால் அவனும் அவளை ஏற்றுக் கொள்வான். ஆக... எல்லாம் ஓர் நேர் கோட்டில் தான் இருக்கிறது.

அவள் தான் கவனமாய் காய்களை நகர்த்த வேண்டும்.

என்ன... அவ்வளவு பெரிய பாதகத்தை அவனுக்குச் செய்த பின் நரேந்திரன் எப்படி அவளை சவால்படி ஏற்றுக் கொள்ள முடியும்? என்ற கேள்வியும் அவளைக் குடைந்தது.

ஆனாலும் அவள் அதுபற்றியெல்லாம் யோசிக்க முடியாமல் புறந்தள்ளினாள். தான் தற்போது செய்ய வேண்டிய விஷயங்களை மட்டும் திட்டமிடலானாள்.

அதனாலே மறுபடியும் அந்த ஆடிட்டர் மோகன் போன் செய்து அவளுக்கு சில தகவல்களைச் சொன்ன போது கவனமாக குறித்துக் கொண்டாள்.

அவன் திரும்பத் திரும்ப நரேந்திரனின் கம்பெனியை ஸ்தம்பிக்க வைத்து விடலாம் அவனது தொழில் சாம்ராஜ்யத்தை அழித்து விடலாம் எனச் சொன்னது அவளுக்கு எரிச்சலையே கிளப்பியது.

மேலும் ஆரம்பத்தில் இருந்தே தரங்கினிக்கு அந்த ஆடிட்டர் மோகனை சுத்தமாய் பிடிக்கவில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

அவன் பேச்சும் சரி அவனது பார்வையும் சரி தன் மீது அடிக்கடி விஷமமாய் ஊர்வதை முதல் சந்திப்பிலே உணர்ந் தாள். அதிலும் அவன் அடிக்கடி, 'நரேந்திரனின் கம் பெனியை ஒழித்து நரேந்திரனை தெருவிற்கு கொண்டு வந்து நிற்க வைக்கிறேன்...' என சூளுரைப்பது போல் சொன்னது அவளுக்கு எரிச்சலையே கிளப்பியது.

இவ்வளவு நாள் நரேந்திரன் கம்பெனியிலேயே ஆடிட்டராய் இருந்து கொண்டு அவனது நம்பிக்கைக் குரியவனாய் இருந்து கொண்டு, பணத்துக்காக தனது நிறத்தை மாற்றிக் கொண்டானே... எவ்வளவு கேவல மான செயல் அது!

உள்ளுக்குள் கொதித்தாலும் தானும் அப்படிப்பட்ட ஒரு துரோகத்தைத்தானே செய்ய முயன்று கொண்டிருக் கிறோம் என்பது முள்ளாய் மனதை உறுத்த அவள் சமாதானம் கொள்ள வேண்டியதாயிருந்தது.

இதற்கிடையே நரேந்திரனும் அவளை இரண்டு மூன்று நாட்களாய் கவனித்து, ''ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? உடம்பு எதுவும் சரியில்லையா?'' என அக் கறையாய் விசாரித்த போது, ''அப்படியெல்லாம் ஒன்று மில்லை...'' என சமாளித்தாள்.

எங்கே தனது திட்டத்தை எதுவும் கண்டுபிடித்து விடுவானோ என்ற பயமும் ஏற்பட்டது. அதனாலே காலை அலுவலகத்திற்கு புறப்படும் போது அவனுடன் காரில் செல்வதை தவிர்த்து தாமதமாக தனது ஸ்கூட்டியி லேயே கிளம்பினாள்.

அலுவலகத்திலும் அவளுக்கென நரேந்திரன் தனியறை ஒதுக்கிக் கொடுத்து விட்டதால் அடிக்கடி அவனைப் பார்க்கும் சந்தர்ப்பமும் ஏற்படாது.



மதியம் லஞ்ச்சை அலுவலக ஊழியர்களுடன் அமர்ந்து சாப்பிடுவாள். மாலை அவள் கிளம்புவதற்கு முன்பே நரேந்திரன் 'சைட்' பார்ப்பதற்காக சென்று விடுவான்.

இரவு வீடு திரும்பி புத்தகம் டிவி என நேரத்தைப் போக் கினால் ஒன்பது மணி வாக்கில் நரேந்திரன் நுழைவான்.

பணியாட்கள் தயாராய் சமைத்து வைத்திருக்கும் உணவை முடித்து விட்டு அவளுக்கு 'குட்நைட்' சொல் லியபடி அவனது தனி அறைக்கு படுக்கச் சென்று விடுவான்.

அவளுக்கே சில சமயம் நடப்பது எல்லாம் வினோத மாக இருக்கும். பெயருக்கு இருவரும் கணவன் மனைவி. ஆனால் தனித்தனி அறையில் சகவாசம். நண்பர்களோ எதிரியோ என்று கூட சொல்லிக் கொள்ள முடியாது.

சவால் விட்டு ஜெயித்துக் காட்ட முயலும் போட்டி யாளர்கள் போலவே இருவரும் நடந்து கொள்வது ஒரு பெரும் அதிசயமாகவே அவர்களுக்குத் தோன்றும்.

அவன் நரேந்திரன் கட்டிய கழுத்தில் தொங்கும் தாலியை விரல்கள் தனிச்சையாய் நெருடும் போது அவளுள் தவிப்பாய் இருக்கும்.

தான் நரேந்திரனை விழுந்து விழுந்து காதலித்தது... அவன் பின்னாலே... சுற்றியது... எதிர்கால வாழ்க் கையைப் பற்றி... ஓராயிரம் இனிமைக் கனவுகளை வைத்திருந்தது எல்லாம் அவளுக்கு ஞாபகம் வரும்.

ஆனால் நடந்தது தான் என்ன?

அவள் அண்ணன்மார்களுக்குத் தெரியாமல் திருட்டுக் கல்யாணம் செய்ததும் தான் எல்லாம் தலைகீழாயிற்றே...!

அண்ணன்மார்கள் எதிரிகளாயினர்! அண்ணிமார்கள் சூழ்ச்சிக்காரர்களாயினர்! எல்லாவற்றுக்கும் முக்கிய காரணமான கதாநாயகன் அவள் காதலித்த நரேந்திரன் வில்லன் போல் மாறி, நான் கல்யாணம் கட்டியதே உன் அண்ணன்களை பழி வாங்கத்தான்...! என டயலாக் பேசி விட்டான்.

ஆக அவளுக்கு நடந்தது கல்யாணம் அல்ல. தொழில் போட்டிக்காக இருவரும் ஒருவரை ஒருவர் முந்திக் கொள்ள முயன்ற பழி வாங்கும் படலம்! அவள் பலிகடா கவாக ஆக்கப்பட்டிருக்கிறாள்!

அந்த விரோதம், பழி வாங்கும் படலம் இன்னும் முடிந்து விடவில்லை.

நரேந்திரனை பழி வாங்க அவனது அண்ணன்மார்கள் அவளை வைத்து காயை நகர்த்துகிறார்கள். அதற்கு பிரதிபலனாக.... அவர்களுக்கு துரோகம் செய்த அவளைக் கூட மன்னிக்கத் தயாராகிவிட்டார்கள்!

அன்று இரவு முழுவதும் அதையே யோசித்துப் பார்த்த தரங்கினி தன் மனதை உறுத்திக் கொண்டிருந்த குற்ற உணர்ச்சியைத் துடைத்துக் கொண்டாள்.

எது எப்படியோ...? இது கணவனாக வந்து விட்ட நரேந்திரனுக்கும் உடன் பிறந்த அண்ணன்களுக்கும் நடக்கும் யுத்தம் தானே? யார் ஜெயித்தால் என்ன...?

அவள் மீண்டும் முயற்சி எடுத்து தோற்றவரை ஜெயித்தவரோடு சேர்த்து வைத்தால் போயிற்று!

ஒரு முடிவிற்கு வந்தவளாய் நிமிர்ந்து கொண்டாள் தரங்கினி.



அடுத்த இரண்டு நாளில் மோகன் அவளுடன் போனில் தொடர்பு கொண்டான்.

நரேந்திரனின் அலுவலகத்தில் இருக்கும் தகவல்களை கொண்ட முக்கிய 'டேட்டா சென்டரில்' சென்று கணினி களில் உள்ள ரகசிய உற்பத்தி குறிப்பு விபரங்களை எல் லாம் ஒரு சிடியில் காப்பி செய்து கொடுக்கும்படி சொன்னான்.

தலையசைத்த தரங்கினி மறுநாளே அந்த விஷயங் களை செயல்படுத்த நினைத்தாள்.

நரேந்திரனின் அலுவலகம் சென்று வழக்கம் போல் வேலை பார்த்தாள்.

வேலை நேரம் முடிந்து பணியாளர்கள் கிளம்பியதும் முக்கிய கோப்புகளைக் கொண்ட கணினி அறைக்குச் சென்றாள்.

அந்நேரம் அங்கு யாரும் இல்லாததால் டிரைவ்வில் சிடி ஒன்றைச் சொருகி தனக்கு வேண்டிய மோகன் சொல்லிய குறிப்புகளை எல்லாம் தருவித்து காப்பி எடுத்தாள்.

அவள் படபடப்புடன் கிட்டத்தட்ட எல்லா வேலை களையும் முடித்து விட்டு தற்செயலாய் திரும்பிய போது அதிர்ந்தாள்.

அறைவாசலில் நரேந்திரன்!

அப்படியே சப்தநாடி ஒடுங்கிப் போய் விட்டாள் தரங்கினி.

"என்ன... இந்நேரத்தில் வேலை...? என்ன செய்கிறாய்?" என அவன் சாதாரணமாய் அவள் பக்கத்தில் நடந்து வந்து

கேட்ட போது கொண்டிருந்த படபடப்பையும் நடுக்கத்தையும் சமாளிக்க அவள் ரொம்பவும் சிரமப்பட வேண்டியிருந்தது.

கணினியின் பட்டன்களைத் தட்டி டக்கென குறிப்புகளை மாற்றியவள் தான் முன்பு அடித்து வைத்திருந்த சங்க மீட்டிங்கிற்கான லெட்டரை திரையில் வரவழைத்தாள்.

அதைப் பார்த்து நம்பிய நரேந்திரனும், ''என்ன எப்போதும் சங்க மீட்டிங்... கூட்டம் என ஒரே சிந்தனை தானா?'' எனவும் முகத்தை இயல்புக்கு கொண்டு வந்து சிரிக்க ஆரம்பித்தாள்.

## 23

நரேந்திரன் அகன்றதும் தான் தரங்கினிக்கு மூச்சே வந்தது.

அவசர அவசரமாக மீண்டும் டிரைவ் செய்து முக்கியமான டாக்குமெண்ட்டுகள் எல்லாவற்றையும் காப்பி செய்தாள்.

ஆயினும் அவளுக்கு ஒரு விஷயம் குழப்பியது.

இது கம்பெனியின் உற்பத்தி பற்றிய விவரங்கள் தான். கம்பெனியின் ஏற்றுமதி ஆர்டர் அது தொடர்பான மற்ற கம்பெனி முகவரிகள் எல்லாம் டெலிவரி செலக்ஷனின் கணினிப் பிரிவில் இருந்தது.



ஆக... அவள் அதையும் கைப்பற்ற வேண்டும். அது தான் மிகவும் முக்கியமானதும் கூட.

அதை வைத்துதான் அந்த ஏற்றுமதி நிறுவனங்களுக்கு போலியான அறிக்கைகள், மதிப்பீடுகள் கொடுத்து அவர்களை குழப்ப முடியும். நரேந்திரனின் கம்பெனி மீது அவநம்பிக்கை வரும்படி செய்ய முடியும்.

இரண்டு நாள் யோசித்து , வழி தேடியவள் கடைசியில் கண்டும் பிடித்தாள்.

டெலிவரி செக்ஷனில் முக்கியப் பணியில் இருப்பது ரோஸிதான்.

ரோஸி ஓரளவு அவளுக்கு பரிச்சயமானவளே!

அவ்வப்போது அவளிடம் பேசிப் பழகி வைத்திருப்பதால் தரங்கினியைக் கண்டாலே பெரிதாக புன்னகைத்து பேச வந்து விடுவாள் ரோஸி.

அதனால் தரங்கினி மனதுள் திட்டம் போட்டவளாய் மறுநாள் ரோஸியைத் தேடிச் சென்றாள்.

வழக்கம் போல் உற்சாகமாக பேச வந்தாள் ரோஸி.

'சும்மாவாக... போரடித்தது, வந்தேன்...'' என பேச்சை ஆரம்பித்தாள் தரங்கினி.

''வேலையை முடித்து விட்டீர்களா?''

''ம்ம்...! இன்று அதிகம் வேலை ஒன்றும் இல்லை. ஒரு சில கடிதங்களையே நரேந்திரன் டைப் பண்ணச் சொன்னார்...'

''அப்படியா...? ஆனால் எனக்கு...?'' என்றபடி உடம்பை முறித்துக் காட்டினாள் ரோஸி.

''என்ன வேலையா?''

''ம்ம்...! எக்கச்சக்க வேலை! இது இயர் எண்டிங் வேறு என்பதால் பழைய கணக்குகளை எல்லாம் வேறு சரி பார்த்து வைக்க வேண்டியிருக்கிறது. சொல்லப் போனால் கணினி முன் உட்கார்ந்து உட்கார்ந்து விழியே பிதுங்கி விடும் போல் இருக்கிறது....''

ரோஸி சலிக்க... டக்கென ஞாபகம் வந்தவளாய் குறுக்கிட்டாள் தரங்கினி.

''நான் வேண்டுமானால் உதவட்டுமா?'' என்றாள்.

''உங்களுக்கு சிரமம் இல்லையே?''

''அதெல்லாம் இல்லை...''

''அப்படியானால் வாருங்கள்...!'' என தனது டேபிளுக்கு அழைத்துச் சென்றாள் ரோஸி. அங்கு பாதியில் விட்டிருக்கும் தனது பணியினை விளக்க... அதை முடித்து தருவதாய் சொல்லி ஆவலாய் அவளது இருக்கையில் அமர்ந்து வேலையை ஆரம்பித்து விட்டாள் தரங்கினி.

ரோஸி அந்த வேலையை தரங்கினியிடம் ஒப்படைத்து விட்டு பீரோவில் உள்ள குறிப்புகளை ஃபைல்களை ஒழுங்குபடுத்தச் சென்று விட்டாள்.

தரங்கினி பழம் நழுவி பாலில் விழுந்தது போல் உணர்ந்தவள் ரோஸியின் கணினியில் தனக்கு வேண்டிய ரகசிய குறிப்புகளை தேடினாள். சிறிது நேரத்தில் அவள் தேடிய குறிப்புகள் பெரிய ஃபைலாக அத்தனை விஷயங்களுடனும் இருக்க அதை அப்படியே தான் தயாராய் கொண்டு போயிருந்த சிடியில் காப்பி செய்தாள். ரோஸி அறியா வண்ணம் தனது ஹாண்ட் பேக்கில் பத்திரப்படுத்தியும் கொண்டாள்.



பின் ரோஸிக்கு எவ்வித சந்தேகமும் வந்துவிடக் கூடாது என்பதற்காக... மேலும் ஒரு மணிநேரம் அவளுக்காக செலவழித்து அவள் பார்க்க வேண்டிய வேலைகளை சிரமம் பாராது செய்து முடித்தாள்.

பின் ரோஸி உதவியதற்கு நன்றி கூற... புன்னகையுடன் விடைபெற்று கிளம்பினாள் தரங்கினி.

அத்தோடு தரங்கினி சும்மா இருக்கவில்லை. வீட்டிற்கு வந்து தனது லேப்டாப்பை உயிர்ப்பித்து கிடைத்த ரகசிய குறிப்புகளை எல்லாம் கோர்வைப் படுத்தினாள்.

எல்லாமே கடந்த ஐந்து வருடமாய் நரேந்திரன் தொழிலில் கடைபிடித்து வரும் வழிகள். அவனுக்கு ரெகுலராக ஆர்டர் கொடுக்கும் கம்பெனிகள் பற்றிய விபரங்கள் எல்லாம் விவரமாய் இருந்தது.

அந்த கம்பெனிகளின் முகவரியை வைத்துக் கொண்டு ஏற்றுமதி சரக்குகளின் சாம்பிள் அனுப்பும் போது தரம் குறைந்த சாம்பிள்களை அனுப்பினால் போதும். அந்தக் கம்பெனிகள் சரக்கு சரியில்லை ஆர்டர் வேண்டாம் என உடனே கேன்ஸல் செய்து விடும்!

அது தான் நரேந்திரனின் கம்பெனியை ஒழித்து ஒன்றுமில்லாமல் ஆக்க அண்ணன் மார்கள் போட்டிருக்கும் திட்டம்!

ஆக... இந்தக் குறிப்புகளை கொண்டு போய் அவர்களிடம் கொடுத்தால் போதும். மற்ற விஷயங்களை கனகச்சிதமாய் பார்த்துக் கொள்வார்கள்.

ஒருபுறம் இந்த சிடியை கொடுத்து விட்டால் அண்ணன்மார்கள் அவளை மன்னித்து மறுபடி பாசத்தோடு ஏற்றுக் கொள்வதாய் சொன்னது சந்தோஷத்தை உண்டு பண்ணியது.

மறுபுறம், அப்படி அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? அவர்கள் சொன்னது உண்மைதானா? இல்லை ஒப்புக் காகச் சொன்னார்களா? என்ற சந்தேகமும் வலுத்தது.

அதை விட... அந்த சிடிக்களை கொடுத்தால் அண்ணன்மார்கள் சந்தோஷப்படுவர்.

ஆனால்... ஆனால்... நரேந்திரன்... அவனது கம்பெனி யின் நிலை?

அது என்னவாகும்?

அவன் கஷ்டப்பட்டு கட்டிய அந்த தொழில் சாம் ராஜ்யம் சரிந்து விடுமா? அவனது தொழில் ஆர்டர்கள் எல்லாம் கான்ஸலாகி மொத்த அவனது வியாபாரமும் ஸ்தம்பித்து விடுமா?

பெரிய தொழிலதிபர்... பணக்காரன் என்றெல்லாம் அந்தஸ்தில் மிதக்கும் நரேந்திரன் ஒரே மாதத்தில் அப்படி ஓட்டாண்டி ஆகி விடுவானா?

அதற்கு அவளே, அவன் தாலி கட்டி ஸ்தானத்தில் இருக்கும் அவனது மனைவியே காரணமாயிருப்பாளா? ஸ்தம்பித்துப் போனாள் தரங்கினி.

## 24

அன்று மதியம் மூன்று மணி இருக்கும்.

தரங்கினியின் செல்போன் கிணுகிணுக்க எடுத்தாள் அவள்.



எதிர் முனையில் ஆடிட்டர் மோகன்! அவன் குரலில் எக்கச்சக்க பதட்டம்!

''தரங்கினி, ஒரு முக்கியமான விஷயம்...''

அவன் பதறினாலும் சுரத்தில்லாமல், ''என்ன?'' என்றே கேட்டாள் அவள்.

''நீங்கள் கொடுத்த சிடியில் இருந்து முக்கியமான பகுதியை மாற்றிவிட்டேன். அதை இப்போது நீங்கள் வாங்கி நரேந்திரனின் அலுவலக கணினியில் ஏற்றி விட்டால் போதும்... முக்கியக் குறிப்புகள் டேட்டாக்கள் எல்லாம் மாறி பெரும் குழப்பம் ஏற்பட்டு விடும். நரேந் திரனின் மொத்த வியாபாரமும் ஸ்தம்பித்து விடும், அதனால்...''

''சொல்லுங்கள்...'' என்றாள் தனக்குள் எழுந்த பட படப்பை மறைத்தவாறு.

''நீங்கள் உடனே கிளம்பி டிரைவ்இன் ஹோட்டல் பக்கம் வாருங்கள். உங்களுக்காக காரில் காத்துக் கொண்டிருக்கிறேன்...''

மோகன் சொல்லி முடித்து அவளை வருமாறு அவசரப் படுத்தி விட்டு போனை வைத்து விட்டான்.

தரங்கினிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரு கணம் உடம்பே நடுங்கியது.

கடவுளே! கடைசியில் அவள் நினைத்தது போலவே நடந்து விடுமா?

நரேந்திரனின் தொழில் சாம்ராஜ்யத்தை அவளே திட்டம் போட்டு தரைமட்டம் ஆக்கப் போகிறாளா?

அவளது கைகளைக் கொண்டே அவளது கண்களை குத்திக் கொள்ளப் போகிறாளா?

என்ன வருந்தி... என்ன பயம்?

எல்லாவற்றுக்கும் தலையாட்டி எல்லாற்றையும் செய்யச் சொல்லி விட்டு கடைசியில் எப்படி பின்வாங்குவது?

எது எப்படியோ... இப்போது வேறு வழியில்லை..! அவள் இந்த துரோகச் செயலை செய்து தான் ஆக வேண்டும்!

பின்னால் உப்பைத் தின்றவன் தண்ணீர் குடித்து தானே ஆக வேண்டும் என்பது போல அவள் செய்த தவறுக்கான தண்டனையையும் அனுபவித்தே தீர வேண்டும்!

வேறு வழியில்லை...!

மனதை திடப்படுத்திக் கொண்டு ஹாண்ட் பேக்குடன் கிளம்பினாள் அவள்.

அடுத்த அரைமணி நேரத்தில் அந்த டிரைவ் இன் ஹோட்டலை அவள் அடைந்த போது அவள் வருகைக்காக காரில் காரில் தயாராய் காத்திருந்தான் ஆடிட்டர் மோகன்.

ஆட்டோவை விட்டு இறங்கி அவன் பக்கம் போனாள்.

அவள் வருவதைக் கவனித்து பக்கவாட்டு கார் கதவைத் திறந்தான்.

''உங்களிடம் சில விபரங்கள் சொல்ல வேண்டும். காரில் ஏறிக் கொள்ளுங்கள். டிரைவ் செய்தபடியே சொல்கிறேன்...''' என்றதும் தரங்கினி எரிச்சலடையவே செய்தாள்.



போனால் கையில் சிடியை கொடுப்பான். வந்து விடலாம்... என்று பார்த்தால்... உடன் வரச் சொல்கிறானே? இவனுடன் காரில் செல்வதாவது? என முகத்தை சுழித்தவள் அவன் பணிவுக்குரலை மீண்டும் வீச... டக்கென ஏறிக் கொண்டாள்.

கார் கிளம்பியது.

மோகன் காரை வேகமாய் செலுத்தியபடியே... தனது பக்கத்து பையில் இருந்த சிடி ஒன்றை எடுத்து அவளிடம் நீட்டினான்.

''இது தான் அந்த சிடி. ஆனால்...'' என இழுத்தான்.

''சொல்லுங்கள்...''

''இது சாதாரண சிடி கிடையாது. இதில் நிறைய டெக்னிக்கல் விஷயங்கள் இருக்கின்றன. அது...''

''சொல்லுங்கள்...'' என்றாள் மீண்டும் எழுந்த எரிச்சலை அடக்கிக் கொண்டு.

''அது கணினி நிபுணர் ஒருவராலே மிகவும் துல்லியமாக உருவாக்கப்பட்டது. அதனால் நீங்க அந்த கணினி நிபுணரை சந்தித்தால் தான்... இந்த சிடியின் விஷயங்களை எப்படி நரேந்திரனின் அலுவலகத்தில் உள்ள மற்ற கணினிகளில் யாருக்கும் சந்தேகம் வராதபடி லோடு செய்ய முடியும். நாம் நினைத்த குழப்பத்தையும் உருவாக்க முடியும். அதனால் நாம் இப்போது... அந்த கம்ப்யூட்டர் நிபுணரை சந்திக்கப் போகிறோம். நீங்கள் என்னுடன் அதற்காக வருகிறீர்கள்...'' என முடித்த போது அவள் கோபம் பன்மடங்காகியிருந்தது.

''நான் எதற்காக சந்திக்க வேண்டும்? நான் மாட்டேன். நீங்களே போய் சந்தித்து விபரங்களை கேட்டுச் சொல்லுங்கள்...!'' என்றாள் உரத்த குரலில்.

மோகன் குரலில் பெரும் பணிவுடன், ''ஐயோ மேடம்! அப்படிச் சொல்லாதீர்கள். இது ரொம்ப முக்கியமான விஷயம். அவர் நேரிடையாக உங்களிடம் விளக்கினால் தான் உங்களால் புரிந்து கொள்ள முடியும். தயவு செய்து வாருங்கள்!''

மீண்டும் மீண்டும் அவன் கெஞ்ச வேறு வழியில்லாது தலையசைத்தாள்.

கார் விரைவாய் ஊரைத் தாண்டி புறநகர் பக்கமாய் சென்றது.

அவள் திகைப்பதைப் பார்த்து, ''அவர் வீடு இங்கு தான் இருக்கிறது...'' என்றான் மோகன்.

அடுத்த அரை மணி நேர பயணத்திற்குப் பின் மோகன் காரை ஒரு சிறிய பங்களா டைப் வீடு முன் நிறுத்தினான்.

இறங்கினார்கள்.

மரங்கள் சூழ நிசப்தமாய் இருந்த அந்த வீட்டின் கேட்டைத் திறந்து உள்ளே அழைத்துச் சென்றான்.

முன் ஹால் தாண்டி பெரிய ஹாலுக்குள் இருவரும் நுழைந்தார்கள்.

அறையின் உள்ளேயும் ஒரே அமைதி. யாரும் இருப்பதாய் தெரியவில்லை.

''மிஸ்டர் மோகன்... என்ன... இது? ஒருவரும் இல்லையே...?''



கேள்வியை வியப்பாய் எழுப்பியபடி அவள் திரும்பிய போது மோகன் அறைக்கதவை அவசரமாய் சாத்திக் கொண்டு இருக்க பயங்கரமாய் திடுக்கிட்டாள் அவள்.

''மோகன்... என்ன... என்ன இது?''

அவள் அலறலாய் கேட்க... விஷமமாய் தனது அசிங்கமான பற்களைக் காட்டிச் சிரித்தான் அவன்.

''என்ன இன்னும் உனக்குப் புரியவில்லையா? சரியான முட்டாள் பெண்ணாய் இருக்கிறாயே? உன் அழகில் மயங்கி உன்னை அடையத்தான் இப்படியொரு விபரித பிளான் போட்டு உன்னை ஏமாற்றி இங்கு கூட்டி வந்திருக்கிறேன்... இன்னும் ஒன்றும் புரியாதது போல் விழித்தால் எப்படி? வா... சீக்கிரம்.. உன்னை... உன்னை...'' என்றபடி அகோரமான சிரிப்புடன் சினிமா வில்லன் போல் மோகன் நெருங்க ஆரம்பித்தான்.

தரங்கினி அதிர்ச்சியில் பயந்து உறைந்து கோழிக் குஞ்சாய் பின் வாங்கினாள்.

மோகன் வெறியாய் அவளை நெருங்கி அவள் மீது ஆவேசமாய் பாயப் போனான்.

# 25

தரங்கினி அதை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

மோகன் வில்லனாய் அவளை நெருங்கிக் கொண்டு...

அவளுக்கு ஒரு கணம் சிந்திக்க முடியவில்லை. மூளை உறைந்து பேதலித்து... ஸ்தம்பித்து தான் போனது.

ஆனாலும் உள்ளுணர்வு விழித்து துரிதகதியில் வேலை பார்த்தது.

எதாவது செய்து இந்த மோகனை மாற்ற வேண்டும் இவனிடமிருந்து தப்பிக்க வேண்டும் என பரபரத்தது.

அதனாலே சுதாரித்தவள், மோகனிடம் அவசரமாய், ''மோகன்... என்னை... விட்டு விடு... உனக்கு... பணம்... நிறைய பணம் தருகிறேன்!'' என்றாள் குழறலாய்.

'பணம்...' என்ற வார்த்தையைக் கேட்டதும் டக்கென மோகன் நின்றான்.

''என்ன சொன்னாய் பணமா...?''

''ம்ம்... பணம்...! அதுவும் சில லட்சங்கள்...!

மோகனின் முகம் மேலும் மாறியது.

''லட்சங்களா...? என்ன உளறுகிறாய்?''

''ம்ம்.. கிட்டத்தட்ட ஐம்பது லட்சப் பணம். என்னை விட்டு விடு. உனக்குத் தருகிறேன்...''

மோகன் நிமிர்ந்து அவளை வெறித்தான்.

''அவ்வளவு பணம் உன்னிடம் ஏது? எதுவும் கதை விடுகிறாயா...?''

''கதை இல்லை... உண்மை...! எனக்கு சீதனமாய் அண்ணன்கள் கொடுத்தது...''

''சீதனமாகவா? எப்படி... சாத்தியம்...? உன்னையே நீ தங்கை இல்லை என் முகத்தில் விழிக்காதே என்று தான் சொல்லி விட்டார்களே?''



''உண்மைதான்! ஆனால் அதே கோபத்தில் கணக்குத் தீர்ப்பது போல் பேங்கில் எனது கணக்கில் ஐம்பது லட்சத்தை போட்டு விட்டார்கள்...''

மோகன் முகம் குழப்பமாய் மாறியது.

''எப்படி இதை நம்புவது?''

''நீ நம்பத்தான் வேண்டும். வேண்டுமானால் எனது அக்கவுண்ட் இருக்கும் பேங்க்கின் போன் நம்பர் தருகிறேன். மேனேஜரிடம் கேட்டால் உடனே விபரம் சொல்லிவிடுவார்...''

''அப்படியா...?'' என மறுபடியும் மோகன் யோசனையோடு திகைக்க.

தரங்கினி தாமதிக்கவில்லை.

கடகடவென மனதில் பட்ட ஒரு நம்பரை ஒப்புவித்தாள். நம்பியும் நம்பாமலும் அந்த நம்பரை உள்வாங்கி தனது செல்போனை எடுத்து டயல் செய்தான் மோகன்.

கடவுளே...! யாருடைய நம்பரோ... இது! நீ தான் காப்பாற்ற வேண்டும்...! என மனமுருக வேண்டிக் கொண்டாள் தரங்கினி.

அவளது நல்ல நேரம் மோகன் டயல் செய்த தொலைபேசி எண், லைன் பிஸியாக இருப்பதாய் தகவலை திரும்பத் திரும்ப தெரிவிக்க... அப்பாடி...! தப்பித்தோம்...! என நிம்மதி பெருமூச்சு விட்டாள் தரங்கினி.

மோகன் போனை அலுப்பாய் குலுக்கியபடி எரிச்சலுடன் பையில் போட்டுக் கொண்டவன் ''அட... இந்த லைன் வேறு கிடைக்க மறுக்கிறது.... நிஜமாகச் சொல்! நீ சொல்வது உண்மை தானா? உண்மையிலே உன்

னுடைய கணக்கில் ஐம்பது லட்சப் பணம் இருக்கிறதா?''

''என்னை நம்பு! நான் சொல்வது உண்மை. என்னிடம் பணம் இருக்கிறது...''

''ஆனால்... எப்படி என்னிடம் தருவாய்? அதைச் சொல்லு...!''

''மோகன் நீ என்னுடன் அப்படியே கிளம்பி வா...! வீட்டில் செக் புக் வைத்திருக்கிறேன். உடனே கையெழுத்துப் போட்டு உன்னிடம் கொடுத்து விடுகிறேன். நீ உடனே எடுத்துக் கொள்ளலாம்...''

அவள் பிரயாசையாய் சொல்ல மோகன் கடகடவென சிரித்தான்.

''ஆ...! இது நல்ல கதையாய் இருக்கிறதே? என்னை என்ன அவ்வளவு பெரிய இளிச்சவாயன் என நினைத்து விட்டாயா? உன்னை வெளியே விட்டால்... கூட்டிப் போனால் நீ சும்மாவாய் இருப்பாய்? தப்பித்து ஒரே ஓட்டமாய் ஓடி விடுவாயே...?''

''இல்லை... என்னை நம்பு! நான் சொன்னா வாக்கு மாற மாட்டேன். எனக்கு பணம் முக்கியமில்லை. அதனால் உன்னை ஏமாற்றாமல் கேட்டபடியே பணத்தைக் கொடுத்து விடுகிறேன்...''

மோகன் ஓரிரு நிமிடம் பேசாமல் அவளையே உற்றுப் பார்த்தான்.

தரங்கினியும் தவித்து திகைத்துக் கொண்டிருந்தாள்.

யாராவது வர மாட்டார்களா? சத்தம் கேட்டு வந்து உதவ மாட்டார்களா? என வாயில் கதவையும் வெளிப்புறத்தையும் மாறி மாறி பார்த்தாள்.



புத்தியில்லாமல் கொஞ்சமும் யோசிக்காமல் இந்த வஞ்சகனிடம் வந்து சிக்கிக் கொண்டோமே? இவன் விரித்த வலையில் எளிதாய் மாட்டிக் கொண்டோமே? என நொந்தவள் எப்படியாவது இவனிடமிருந்து தப்பிக்க வேண்டும் என வழிகளையும் தேடினாள்.

அவனிடம் எதாவது பேச்சுக் கொடுத்து நேரத்தைக் கடத்த வேண்டும் என்று தான் அவள் மூளையில் யோசனை ஓடியது.

''மோகன் யோசிக்காதே! என்னை விட்டு விடு! பணம் உனக்கு கண்டிப்பாக கிடைக்கும்...'' என்றாள் மறுபடியும்.

மோகன் கைகளை அசால்டாய் குத்திக் கொண்டு மெல்ல அவளை நெருங்க ஆரம்பித்தான். அவன் கண்களில் மறுபடியும் தொற்றிக் கொண்ட வில்லத்தனம் தரங்கினியை கலவரப்படுத்தியது.

''பணம் கிடைக்கும்... சரி... ஆனால்... ஆனால்... நீ கிடைக்க மாட்டாயே...''

சொல்லியபடி அசிங்கமாகச் சிரிக்க ஆரம்பித்தான் அவன்.

''என்ன சொல்கிறாய் நீ?''

''புரியவில்லை...? பணத்தை வைத்து என்ன செய்ய? அழகுச்சிலையாய் தங்கம் போல் ஜொலிக்கும் இந்த அழகை அனுபவிக்க அருமையான ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதைத் தவற விட நான் என்ன முட்டாளா? அதனால்...'' என்றபடி மேலும் அவளை வில்லத்தனத்துடன் நெருங்கினான்.

தரங்கினி பயந்து முகம் வெளிற பின் வாங்கினாள்.

''வா...! சந்தோஷத்தை அனுபவித்து விடுவோம்...!'' என்றபடி வெறியாய் அவள் மீது பாயப் போனான் மோகன்.

அப்போது தான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.

## 26

கனவு போல் சட்சட்டென நடந்த நிகழ்ச்சிகளை தரங்கினியால் நம்பக் கூட முடியவில்லை.

ஆனால் எல்லாமே அவள் கண் முன்னால் அதிசய மாய் நடந்தது.

திடீரென எங்கிருந்தோ தோன்றி அந்த அறையின் கதவை உடைத்துக் கொண்டு புலியாய் பாய்ந்தான் நரேந்திரன்! திகைத்து திரும்பிய மோகனை அடித்து துவைத்தான் என்று தான் சொல்ல வேண்டும். அப்படி யொரு அடி!

அவனது திடகாத்திரமான பலத்தை தாங்காது நோஞ்சான் போல் மோகன் துவண்டு விழுந்தான். நடந்த அதிர்ச்சியில் ஸ்தம்பித்த சிலை போல் நின்றிருந்த தரங்கினியின் கைகளைப் பிடித்து தரதரவென இழுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

வந்தவன் திகைத்தான்.



வெளியே... காரிலிருந்து பதட்டமாய் இறங்கி அவர் களை நோக்கி ஓடிவந்தபடி தனசேகரனும் பொன் சேகரனும்!

'இவர்கள் எப்படி இங்கு? யார் இவர்களுக்குச் சொன் னார்கள்?' என இருவரும் திகைக்கும் போதே பதறினார் கள்.

''ஐயோ... குட்டிம்மா...! என்னாச்சு உனக்கு? அந்தப் பாவி மோகன் எங்கள் கண்களில் மண்ணைத் தூவி விட்டு உன்னையே கடத்தி விட்டானா? அவன் தன் செல்போனை ஸ்விட்ச் ஆஃப் செய்து வைத்திருந்ததை அறிந்ததுமே லேசாக சந்தேகம் துளிர்க்க ஆரம்பித்தது. மேலும் காரில் உன்னை ஏற்றிக் கொண்டு புறநகர் தாண்டி போவதாய் எங்களது பணியாள் ஒருவன் பார்த்து போன் செய்யவும் பதறிப்போய் விட்டோம்... ஏதோ... வில்லத்தனம் செய்யப் போகிறான் என மனம் பதைக்க உடனே கிளம்பி... இங்கு புறநகர் பகுதியில் தேடி அலைந்து இந்த தனி பங்களாவை கண்டு பிடித்தோம். பாவிப்பயல்! இப்படி தப்புகளை பண்ணுவதற்கென்றே ஊருக்கு வெளியே ஒரு பங்களாவை கட்டி வைத்திருக் கிறான் பார்!...'' என்றபடி தங்கள் தரப்பு வாக்கு மூலங் களை கொடுத்துக் கொண்டே இருவரும் தரங்கினி பக்கம் ஓடினர். அதிர்ச்சியில் களைத்துப் போயிருந்த தரங்கினியை ஆளுக்கொரு பக்கம் கைத்தாங்கலாய் பிடித்தபடி பதட்டத்தோடு அவர்களைப் பார்த்தனர்.

''சொல் குட்டிம்மா! உனக்கு ஒன்றும் ஆகவில்லையே...? அந்தப் பாதகன் உன்னை... உன்னை... ஒன்றும் செய்து விடவில்லையே...?''

அவர்கள் தனக்காக துடித்துப் பதறிக் கேட்பதை தரங்கினி அந்த நிலையிலும் மகிழ்ச்சியுறப் பார்த்தாள்.

'அப்படியெல்லாம் ஒன்றும் நடக்கவில்லை...' என அவள் சொல்ல முயல்வதற்குள், ''நான் காப்பாற்றி விட்டேன்...!'' என்று இறுக்கமான குரலில் நரேந்திரனிடம், சற்றுத் தள்ளிப் போய் கைகளை கட்டியபடி நின்று கொண்டிருந்த நரேந்திரனிடமிருந்து பதில் வந்தது.

அப்போது தான் தனசேகரனுக்கும் பொன்சேகரனுக்கும் அவன் அங்கு நின்று கொண்டிருப்பது புத்தியில் உரைத்தது.

அவனை நேருக்கு நேர் பார்க்கத் திராணியில்லாதவர்களாய் குனிந்தனர்.

பின் தயக்கமாய் நிமிர்ந்து, ''எங்களை மன்னித்து விடு நரேந்திரா...! உன்னைப் பழி வாங்குவதாய் நினைத்துக் கொண்டு அதற்கு மோகன் போன்ற அயோக்கியன் மூலம் எங்கள் அருமைத் தங்கையையே பலிகடா ஆக்கப் பார்த்திருக்கிறோம். சரியான சமயத்தில் நீ வந்து காப்பாற்றி விட்டாய். உனக்கு ரொம்பவும் நன்றி...'' தழுதழுத்த குரலில் அவர்கள் உணர்ச்சி வசப்பட நரேந்திரனோ சாதாரணமாய் அவர்கள் பக்கம் திரும்பி,

''நன்றி எனக்கு எதற்கு? நான்... என்... மனைவியை... என் மனைவியைத்தானே காப்பாற்றி இருக்கிறேன்?'' என குரலில் அழுத்தம் கொடுத்தபடி சொன்னான்.

சொல்லியபடியே திரும்பி தரங்கினியைப் பார்த்தான். அவளது மை விழிக் கண்களை நேருக்கு நேர் சந்தித்தான். அவனது பார்வையைத் தாங்க முடியாதவளாய் குனிந்தாள் தரங்கினி.



''நீங்கள் எல்லோரும் மன்னிக்க வேண்டியது என்னை... என்னைத்தான்...!'' என்றபடி தழுதழுத்தாள் தரங்கினி.

அவள் கண்கள் கலங்குவதைக் கண்டு மூவருமே பதறினர்.

''ஐயோ... குட்டிம்மா! நீ... அழக் கூடாது... அழுகையை விடு...!''

''வேண்டாம் தரங்கினி! நீ அழத் தேவையில்லை. தப்பு ஒன்றும் நடக்கவில்லை...!''

நரேந்திரனிடமிருந்து குரல் வந்த போதும் கொண்டிருந்த வேதனையால் தாள முடியாமல் அரற்றினாள் அவள்.

பாசமாய் அன்பை ஊட்டிய அண்ணன்களுக்கு துரோகம் செய்தேன்... இப்போது தொட்டுத் தாலி கட்டிய கணவனுக்கும் துரோகம் செய்யத் துணிந்து...'' மேற்கொண்டு சொல்ல முடியாமல் குரல் அடைத்து மறுபடியும் தழுதழுத்தாள் அவள்.

''எல்லாம் எனக்குத் தெரியும்...'' என்றான் நரேந்திரன் அவளையும் மற்ற இருவரையும் அதிர வைத்தவாறு.

''என்ன தெரியுமா?''

திகைப்பாய் நிமிர்ந்து நோக்கினர்.

''ம்ம்... தரங்கினியின் ஒவ்வொரு நடவடிக்கையும் நான் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். அவள் அறியாமல் அவளை அவ்வப்போது பின் தொடர்ந்து கொண்டுதான் இருந்தேன். அன்று... நீங்கள் இந்த

ஆடிட்டர் மோகனை தரங்கினிக்கு அறிமுகம் செய்து வைத்த போது... அங்கு சாலையோர கார் ஒன்றில் இருந்தபடி எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந் தேன். அப்போதே ஏதோ வில்லத்தனம் என்பது புரிந்து விட்டது. ஆடிட்டர் மோகனுக்கு எல்லா கெட்ட பழக் கங்களும் உண்டு... அதனால் எப்போதும் அவன் மீது நல்ல அபிப்பராயம் கிடையாது. அவன் மூலமாக ஏதோ நீங்கள் செய்யத் திட்டமிடுவது கண்டு விஷயம் விபரீதம் என புரிந்து கொண்டேன். தொடர்ந்து தரங்கினியை கண்காணித்து விஷயத்தையும் யூகித்து விட்டேன். விஷயம் எப்போதும் என் கையை மீறி சென்று விடாது என்ற தைரியத்தில் தான் தொடர்ந்து தரங்கினியை ஃபாலோ செய்து... இன்று... இப்படி போனில் ஆடிட்டர் கூப்பிட்டதும் அவள் கிளம்பிச் செல்வதைக் கண்டு பின் தொடர்ந்து வந்தேன்.

நான் நினைத்தது போலவே அவன் தரங்கினியை தப்பான எண்ணத்துடன் இங்கு புறநகர் பங்களாவிற்கு கூட்டிவர.... பின் வந்த நான் புலியாய் பாய்ந்து அவளைக் காப்பாற்றினேன்...''

மூச்சு வாங்க சொல்லிய நரேந்திரன் நிறுத்தியபடி, ''ஆனால் இன்னொரு முக்கியமான விஷயம் உங்களுக் குத் தெரியாது. இந்த ஆடிட்டர் மோகனுக்கு எனது கம்பெனியில் குழப்படி செய்யும் அளவுக்கு விஷயமும் தெரியாது. அறிவும் கிடையாது. சும்மா உங்களிடம் பணம் கறக்க அப்படி நாடகமாடி இருக்கிறான்...!'' என்று முடித்தான்.

அவன் சொல்ல அதை ஆமோதிப்பது போல் தரங்கினி, ''உண்மை தான். அவன் முக்கியமான சிடி



என்று ரீல் விட்டு சொன்னதெல்லாம் வெறும் பொய். அதை அவன் வாயாலே சொல்லி விட்டான்.'' என்றாள்.

நரேந்திரன் இப்போது மெல்ல நடந்து தனசேகரன் பொன்சேகரன் பக்கம் வந்தான்.

''என் மேல் அப்படி என்ன கோபம் விரோதம் உங் களுக்கு? தரங்கினியை நான் திருட்டுத்தனமாய் மணந்தது தப்புதான். அதற்காக மனமார மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். ஆனால் அதற்கு முன்பு இருந்தே நீங்கள் என்னை தொழில் எதிரியாக பார்க்காமல் ஒரு ஜென்ம விரோதி போல் அல்லவா பார்த்தீர்கள்? அதற்கு என்ன தான் காரணம்? மேலும் இன்னமும் என் மேல் உள்ள ஆத்திரமும் கோபமும் தீரவில்லையென்றால்... என்னை என் முதுகில் இரண்டு அடி வேண்டுமானாலும் அடித்து விடுங்கள்...''

மனம் உருக நரேந்திரன் பேச அதிர்ந்து கூனிக் குறு கியவர்களாய் சட்டென அவனது கைகளைப் பிடித்துக் கொண்டு கண் கலங்கினர் தனசேகரனும் பொன் சேகரனும்.

''எங்களை மன்னித்து விடு நரேந்திரா! நாங்கள் வீணாக உன் மீது பகை கொண்டு. உனக்கு மிகுந்த இடைஞ்சல்களை ஏற்படுத்தி விட்டோம். எல்லாவற்றுக் கும் மூல காரணம் என்ன தெரியுமா?''

''என்ன?'' என்றான் நரேந்திரன் புரியாமல்!

''அதாவது... உன் தந்தை யோகேந்திரர் எங்களது கம்பெனியில் சாதாரண குமாஸ்தாவாக வேலை பார்த்து... இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு வேலையி லிருந்து விலகி தனியாக ஒரு கிரானைட் கம்பெனி

ஆரம்பித்து எங்களுக்கே போட்டியாக உயர்ந்த நிலைக்கு வந்தவர். அதை ஸ்போர்டிவ்வாக ஒரு பெருமையாக நினைத்துக் கொள்ளாத நாங்கள் அதை ஒரு விரோத மாய்.... எதோ.... எங்களிடமிருந்து எதையோ அபகரித்து தனிக்கம்பெனியை ஆரம்பித்தது போல் ஒரு வஞ் சினத்தை மனதில் வளர்த்துக் கொண்டோம். அதுவே உன் தந்தை மறைவிற்குப் பின் உன் மீது பகை கொள்ள காரணமாயிற்று...''

அவர்கள் சொல்வதைக் கேட்டு தரங்கினியை விட நரேந்திரனுக்கு பலமான அதிர்ச்சி.

''உண்மையாகவா? எனது தந்தை ஆரம்ப காலங் களில் உங்கள் கம்பெனியில் வேலை செய்தார்களா...? அது எனக்குத் தெரியவே தெரியாதே! என் தந்தை சொல்லாமல் விட்டு விட்டார்களே!''

பதிலுக்கு தலையசைத்த தனசேகரன்,

''உண்மைதான்! ஆனால் அவர்கள் வேலை பார்த்தது எங்கள் தந்தையிடம் தான்...! நாங்கள் சிறுவயதிலேயே அலுவலக பொறுப்பை ஏற்றுக் கொண்டு விட்டதால் இந்த விஷயம் எங்களுக்கு முன்பே தெரியும்...'' என்றபடி பொன்சேகரனைப் பார்க்க.... தொடர்ந்தான் அவன்.

''அப்படி ஏற்பட்ட அந்த சிறு பகைமைதான் விரோத மாய் வளர்ந்து ஆரம்பம் முதலே உன்னிடம் பகைமை கொள்ள வைத்தது. நீ கடுமையாய் உழைத்து உன் கம்பெனியை வளர்ச்சிப் பாதையில் கொண்டு வந்தது எங்களை மேலும் எரிச்சலாக்கியது. அதனாலே தொழில் முறையில் தெரிந்தே எங்கள் செல்வாக்கை பயன்படுத்தி



உனக்கு நிறைய இடைஞ்சல்கள் கொடுத்தோம்... அதற்காகவும் என்னை மன்னித்து விடு...''

அவர்கள் சங்கடத்துடன் கெஞ்சும் குரலில் அரற்ற பதிலுக்கு நரேந்திரனும், ''நீங்களும் என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் மேல் உள்ள கோபத்தில் தரங் கினியை பகடைக்காய் ஆக்கி காதல் செய்து திருட்டுக் கல்யாணம் செய்தது மிகப் பெரிய தவறு தான்...'' என்று சமாதானக்குரலில் பேச அங்கும் பெரும் அமைதி நிலவியது.

சகோதரர்கள் இருவரும் திரும்பவும் நரேந்திரனின் கையை மெல்ல அழுத்திப் பிடித்தனர். ''நரேந்திரா, எப்போ நீ பெரும் ஆபத்தில் மாட்டிக் கொண்ட என் தங் கையை துடித்துக் காப்பாற்றினாயோ அப்போதே... நாங்கள் உன்னைப் புரிந்து கொண்டோம். அந்த வினா டியே எங்களது மனமும் மாறிவிட்டது. நாங்கள் உன் மீது தவறாக வீணாக கொண்டிருந்த பகைமை கோபம் எல்லாம் தவிடு பொடியாயிற்று.

நாங்கள் நிஜமாகவே மனம் மாறிவிட்டோம். ஆனா லும்... கடைசியில் உன் கம்பெனியில் தரங்கினி மூல மாகவே சதிவேலைகள் செய்து உன்னை உனது கம் பெனியை ஸ்தம்பிக்க வைக்க நினைத்தோமே... அது... மிகப் பெரிய மன்னிக்க முடியாத தவறு... அதற்காக... பெரிய மனதுடன் எங்களையும், எங்களால் அதைச் செய் யத் துணிந்த தரங்கினியையும் மன்னிக்க வேண்டும்...''

தங்களது மொத்த மன்னிப்பு வாக்குமூலத்தையும் கொட்டி இருவரும் நிஜமாகவே மனம் வருந்த மன்னித்த வனாய் அவர்கள் தோள்களைத் தட்டிச் சிரித்தான் நரேந்திரன்.

''மச்சான்களை எப்போதோ நான் மன்னித்து விட்டேன்! தரங்கினி விஷயம் தனி! அவளைத் தனியாக நான் கவனித்துக் கொள்கிறேன்...'' என கண் சிமிட்டினான் அவன்.

புரிந்தவர்களாய் அங்கிருந்து அகன்றனர் சகோதரர்கள்.

தரங்கினி நரேந்திரன் தன்னை நோக்கி வருவது கண்டு சங்கடமாய் நெளிந்தாள். நிமிர்ந்து அவளைப் பார்க்க முடியவில்லை. அவனுக்கெதிராக இவ்வளவு சதிச் செயல்களை செய்யத் துணிந்து விட்டு... அந்த முகத்தை எங்கே கொண்டு வைப்பது? என தவித்தாள்.

பக்கத்தில் வந்தவன் அவள் நினைப்பை புரிந்தவன் போல், ''உன் முகத்தை வைக்க வேண்டிய இடம்... இங்கு... இங்கு தான்...!'' என தன் நெஞ்சைக் காட்டினான்.

அவனது பெருந்தன்மையைக் கண்டு நெகிழ்ச்சியுற்றவளாய், ''ஐயோ...! நரேந்திரன்...! என்னை... என்னை... மன்னித்து விடுங்கள்!'' என அவன் நெஞ்சில் பொதிந்து கதறத்தான் செய்தாள்.

கண்கலங்கியவளின் முகத்தை அவசரமாய் நிமிர்த்தி, ''ஊகூம்! அழுகையெல்லாம் இங்கு கூடாது...!'' என்றான் சிறிது கண்டிக்கும் தொனியில் அவளை கைகளால் அணைத்தவாறு.

அவன் கரங்களுக்குள் முழுமையாய் தன்னை சிறைப்படுத்திக் கொண்டவள், ''எப்படி... நரேந்திரன்... என்னை... அதுவும் உங்களுக்கு எதிராக இவ்வளவு தூரம் செய்யத் துணிந்து விட்ட என்னை.... மன்னிக்க முடிகிறது?'' அடக்க முடியாமல் அவள் கேட்க அமைதியாகச் சிரித்தான் அவன்.



''காதல்...'' என்றான் அவள் காதுகளில் இனிமையான குரலில்.

''காதலா...?''

''ம்ம்...! அதுவும் அந்தக் காதல் எப்படிப் பிறந்தது தெரியுமா?'' என அவன் ஆரம்பிக்க,

''சொல்லுங்கள்...'' என்றாள் அவள் ஆவலானவள் கூடவே, ''இன்னொரு முக்கியமான விஷயத்தையும் சொல்லி விடுகிறேன்...'' என்றாள் பீடிகையாய்.

''என்ன அது...?'' என்றான் நரேந்திரன்.

''என் அண்ணன்கள் சொன்னார்கள் என்பதற்காக நான் சதி செய்து உங்களது நிறுவனத்தை நான் ஸ்தம்பிக்க வைக்கத் துணிந்ததற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது...''

''என்ன காரணம் கண்மணி? அதையும் சொல்லு...!''

''அப்படி உங்கள் நிறுவனத்திற்கு பின்னடைவு ஏற்படுத்தினால் அண்ணன்மார்கள் என்னை மன்னித்து தங்கையாய் ஏற்றுக் கொள்வதாய் சொல்லியிருந்தார்கள். அப்படி அவர்கள் என்னை ஏற்றுக் கொண்டால் நீங்களும் என்னை மனைவியாய் ஏற்றுக் கொள்வதாய் சவால் வேறு விட்டிருந்தீர்கள். அதனால் அப்படி ஒரு கல்லில் இரண்டு மாங்காயை வீழ்த்துவது போல் அதற்காக துணிந்து உங்கள் கம்பெனியை வீழ்த்த நானே சில சதிகளை மனமில்லாமல் செய்தேன். என்ன... எல்லாம் சரியான பிறகு, உங்களுடன் அண்ணன்களுடன் சேர்ந்த

பிறகு, கடும் முயற்சி செய்து உங்களுடன் கம்பெனியை நல்ல நல்ல நிலைக்கு கொண்டு வந்து விடலாம் என்ற ஒரு அசட்டுத் தைரியம் தான் இவை எல்லாவற்றையும் செய்யத் தூண்டியது...'' அவள் விளக்க அதற்கு நரேந் திரன் சிரித்தவன், ''அது இருக்கட்டும் உன் மீது நான் கொண்ட காதலை விளக்குகிறேன்'' என்றபடி.

அவன் மென்மைக் குரலில் விவரிக்க ஆரம்பித்தான், ''தரங்கினி, முதலில் உன் மீது காதல் நடிப்பு செய்து நடித்தது உண்மைதான். ஆனால் திருமணம் என வந்து மூன்று முடிச்சுப் போட்டு நீ உன் பாசமான அண்ணன் களை பகைத்துக் கொண்டு என் பக்கம் வந்து நின்றபோது என் மனதுள் பகீரென்று ஒரு உணர்வு. 'இவ்வளவு அழகான பெண் எல்லாவற்றையும் தூக்கியெறிந்து விட்டு உன் பின் வந்து நிற்கிறாள்...? நடிப்பு அது இது வென உளறுகிறாயே... என்ன மனிதன் நீ?' என கேள்வி யாய் கேட்டு என்னை துடிதுடிக்க வைத்தது.

அப்போதுதான் உள் மனதில் உன் மீதான காதல் உருவாகி உண்மையாக வெளிப்பட்டு... வெளி வந்தது. ஆனால் அதைச் சொல்ல எனது குற்ற உணர்ச்சி தடுத்தது. அண்ணன்களைப் பழிவாங்க... அப்பாவியான உன் வாழ்க்கையில் விளையாடி விட்டோமே...? என தவித்தேன்.

உன்னை எப்படியாவது பழைய நிலைக்கு கொண்டு போய் உன் பாசக்கார அண்ணன்களுடன் சேர்த்து வைக்க வேண்டும். அது தான் நான் செய்த தவறுக்கான பிராய சித்தம்... என எண்ணி வருந்தினேன்.

அதனாலே உன்னிடம் சவால் விடுவது போல் உன் னையே உன் அண்ணன்களுடன் சேர்ந்து காட்டு... என



தூண்டியும் விட்டேன், நான் நினைத்தது போலவே சவாலை ஏற்றுக் கொண்டு.... நீயும் முயற்சிகளை எடுக்க ஆரம்பித்தாய்... உள்ளுக்குள் ரொம்பவும் சந்தோஷம் கொண்டு... உன்னை கவனித்தேன். சரியான சமயத்தில் எனது காதலைச் சொல்ல காத்திருக்க ஆரம்பித்தேன். அந்த சந்தர்ப்பம் இப்போது தான் வந்தது... அமைந் திருக்கிறது...'' என்றபடி சிரித்தவன் அதே புன்னகை யுடன் அவளை இறுக்கமாய் அணைத்து மென்மையாய் அவளது கன்னங்களில் முத்தமிடவும் செய்தான்.

அவள் அவனது அன்பான ஆளுகையில் திகைக்கத் தான் செய்தாள். ஆனாலும் அவளுள் உறுத்தல் கொஞ்ச மும் குறையவில்லை.

''உண்மையில்... உண்மையில்... எனது துரோகச் செயலுக் காக என் மீது உங்களுக்கு கொஞ்சம் கூட கோபம் வர வில்லையா?'' நினைத்ததை அப்படியே கொட்டிக் கேட்க மறுபடி சிரித்தான் நரேந்திரன்.

''கண்மணி, திரும்பத் திரும்ப துரோகம் துரோகச் செயல் என ஏன் மருகுகிறாய்? அப்படி ஒன்று நடக்க வாய்ப்பில்லை... அந்த ஆடிட்டர் மோகன் சொன்னது எல்லாம் பொய்... என விளக்கி புரிய வைத்து விட் டேன்? இன்னும் எதற்கு அந்த குற்ற உணர்ச்சி?'' என்ற போதும் அவள் விடாமல், ''என்ன இருந்தாலும் என் அண்ணன்கள் சொன்னதற்காக உங்களுக்கு எதிராக செயல்பட இருந்தேனே... அதற்காகவாவது என்னை மன்னித்து விடுங்கள்...'' என தொடர்ந்து தரங்கினி மருக, நரேந்திரனும் அவள் அழகான தலையை தட்டி வரு டியபடி, ''நான் மன்னிக்கிறேன். பதிலுக்கு நீயும் என்னை மன்னித்து விடு...'' என்றான்.

''உங்களை எதற்கு?'' என்றாள் புரியாமல் கண்கள் விரிய.

''அதான் முன்பே சொன்னேனே... காதல் நடிப்பு செய்தமைக்கு... இப்போது காதல் வந்தமைக்கு...''

''ஆஹா...!'' என அழகாக முறுவலித்து முதல் முறையாக பாரம் நீங்கி தரங்கினி சிரித்தவள், ''அந்தப் பொல்லாத காதல் இப்போதாவது... என் மீது ஐயாவிற்கு வந்ததே...?'' என சிலிர்க்க... அவளை மேலும் சிலிர்ப் பூட்டுப்பவனாய், ''அதற்காக காதல் பரிசு ஒன்றும் தரப் போகிறேன்...'' என்று கூறி அவளை அசரவும் வைத் தான்.

''காதல் பரிசா... என்ன?''

மைவிழிகளை அகல விரித்து அவள் ஆர்வம் பொங்க கேட்க நரேந்திரன், அமைதியாக,

''வீட்டோடு மாப்பிள்ளை...'' என்றான் செல்லமான கண்ணடிப்பு ஒன்றும் செய்தான்.

''பாதி புரிந்தாலும் புரியாதவளாய், ''விளக்கமாகச் சொல்லுங்கள்...'' என்றாள் ஆதங்கமாய்.

கனிவுப் பார்வையும் மென்மைக் குரலுமாய் விளக்கி னான் நரேந்திரன்.

''அதாவது கண்மணி, நான், நீ.... உன் அண்ணன் மார்கள் என மூவருமே அடித்துப் பிடித்துவென ஒரு விளையாட்டு விளையாடி விட்டோம். செய்த தவறு களை எல்லாம் உணர்ந்த நாம் மூவரும் இனி சேர்ந்து இருந்தால் தான்... அது இன்பமாய் இருக்கும். அதனால் இனி உன் பிறந்தக் குடிலுக்கு உன்னோடு வீட்டோடு



மாப்பிள்ளையாக வந்து விடலாமா என நினைக்கிறேன். மேலும் இதற்கு முக்கிய காரணமாய் அண்ணன்களின் பாசத்தை இழந்து நிற்கும் 'என் சின்னக் குட்டிம்மா...'' மீண்டும் அண்ணன்களின் 'செல்லக் குட்டிம்மாவாக' மாறி புன்னகையில் பூத்துக் குலுங்க வீட்டில் வலம் வரவும் ஆசைப்படுகிறேன். என்ன சம்மதமா? இதற்கு உன் அண்ணன்மார்கள் சம்மதிப்பார்களா?''

நரேந்திரன் நிறுத்த, ''என்ன ஒரு இன்ப அதிர்ச்சி, நிஜமாகவா சொல்கிறீர்கள்? தேனும் பாலும் கலந்து நா வினில் தடவினாற் போல் இனிப்பான செய்தியாயிற்றே? இதை யார் மறுப்பார்கள்? கேட்டதும் அப்படியே அள் ளிக் கட்டிக் கொள்ள மாட்டார்கள்?'' என்றபடி அவனை இறுகத் தழுவினாள். வெட்கத்தை மீறி அவன் கன்னங் களில் முத்தங்களைப் பொழிந்தாள்.

உற்சாகமாய் அவனைக் கூட்டிக் கொண்டு சற்றுத் தள்ளி கார்ப் பக்கம் நின்று கொண்டிருந்த அண்ணன் களை நோக்கி ஓடினாள்! அடுத்து இரண்டு தினங்கள் கழித்து வந்த சுபநாள் ஒன்றில் எல்லாம் சுபமாக நடந்தது. வருந்தி தங்கள் தவறுகளுக்காக மன்னிப்புகளை கேட்டு திருந்திய அண்ணியார்கள், சுலோச்சனாவும் கற்பகமும் ஆரத்தி எடுத்து வரவேற்க புதுத் தம்பதிகளாய் பிறந் தகத்தில் நரேந்திரனுடன் நுழைந்தாள் தரங்கினி.

அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட தனியறையில் நுழைந்ததும் தரங்கினியின் மெல்லிய இடையை இறுக்கிப் பிடித்தான் நரேந்திரன்.

''என்ன மகிழ்ச்சிதானா?'' என சந்தோஷமாய்க் குலுங் கியவளின் காதுகளில் மென்மையாகக் கேட்டான்.

''இன்னும் ஒரு விண்ணப்பம்...'' என்றாள் அவள் கெஞ்சலாய்.

''என்ன... கண்மணி? சொல்! உடனே நிறைவேற்றப் படும்!'' என்றபடி மேலும் இறுக்கினான் அவன்.

''என்னை... நீங்கள் இனி அப்படியே கூப்பிட வேண் டும்... அழைக்க வேண்டும்...'' என்றாள்.

''அப்படியே... என்றால்...?'' புரியாமல் புருவம் உயர்த்தினான் அவன்.

''அதான்... அந்தப்... பெயரில்... எனக்குப் பிடித்த அந்தப் பெயரோடு...!'' என்றபடி தன் மை விழிகளை அழகாக சிமிட்டிக் காட்டினாள். நரேந்திரனுக்குப் புரிந்தது.

''ஓ... அதுவா...? அதற்கென்ன...? அழைத்தால் போயிற்று..!'' என நரேந்திரன் பலமாய் தலையசைத் தவன் சட்டென குரலை மிருதுவாக்கி அவளை நோக்கி குனிந்தபடி, ''என் சின்னக் குட்டிம்மா... என் செல்லக் குட்டிம்மா.. என் பப்பு குட்டிம்மா... என் புஜ்ஜீ குட் டிம்மா... ப்ளீஸ்... இங்கே... வாயேன்...! வந்து இந்தக் கன்னங்களில் இந்த இதழ்களில் இதமாய் ஒன்று...''

அவன் மேலும் கொஞ்சக் கொஞ்ச அவன் பிடிகளில் இருந்து விடுபட்டு கலகலவென நகையொலி பொங்க துள்ளிக் குதித்து ஓடினாள் அவனது 'சின்னக் குட் டிம்மா...!'

# திருநிறைச் செல்வி...!

## 1

அன்றைய காலைப் பொழுது இனிமையாகத்தான் புலர்ந்தது மிதிலாவுக்கு. வழக்கம் போல் உற்சாகமாய் எழுந்தவள் பல் துலக்கி, குளித்து, இறைவணக்கம் சொல்லியவாறு, விறுவிறுவென அன்பு இல்லப் பணிகளில் ஆழ்ந்து விட்டாள்.

தோட்டச் செடிகளுக்கு நீர் பாய்ச்சுவது, இல்ல சிறுவர், சிறுமியரை தயார் செய்து பள்ளிக்கு அனுப்

புவது, இல்ல உணவகத்தில் சுடச்சுட தயாராகும் உணவு வகைகளை சுவை பார்த்து துரிதப்படுத்துவது வரை எல்லாமே அவளது வேலை தான்!

அன்றும் அப்படியே செய்து விட்டு உற்சாகமாய் திரும்பியவளை எதிரே எதிர்ப்பட்ட பணிப்பெண், ''மேடம் உங்களை வரச் சொன்னார்கள்...'' என்றது மேலும் உற்சாகப்படுத்தவே செய்தது.

குதி போடாத குறையாய் துள்ளல் நடை போட்டவாறு இல்ல அலுவலகத்தை நோக்கி நடந்தாள் அன்பு இல்ல நிர்வாகியான ''மேடம் ரங்கமணி அம்மாளை'' அவளுக்கு ரொம்பப் பிடிக்கும்.

முப்பது வருடங்களுக்கு முன் சமூக சிந்தனை நோக்கோடு சொந்த வாழ்க்கை பற்றி துளியும் கவலையுமில்லாமல் தன்னை முழுவதும் அர்ப்பணித்து இந்த அனாதை இல்ல விடுதியை தொடங்கியவள் ரங்கமணி அம்மாள்.

சாந்தம் தழுவிய முகம், புன்னகை ததும்பும் பேச்சு என மெல்ல இனிமையான குரலில் ரங்கமணி அம்மாள் பேசுவதே எல்லோரையும் பரவசப்படுத்தி விடும்... ''என்ன கண்ணு...'' என அன்பொழுக கூப்பிடுகையில் அப்படியே அவர்களை கட்டிக்கொண்டு அவர்கள் நெஞ்சினில் கண்களை மூடியபடி சாய்ந்து கொள்ளலாம் போலத் தோன்றும் மிதிலாவுக்கு.

சில சமயங்கள் அப்படியே செய்து பரவசமும் கண்டிருக்கிறாள் அவள்.

அந்த அன்பு அனாதை இல்லத்தில் மிதிலா மட்டுமல்ல அவளைப் போல் இன்னும் ஆதரவற்ற ஐம்பது



பேர் தங்கி வளர்கின்றனர் என்று சொன்னால் மிகையில்லை தான். அவ்வளவு பேருக்கும் நேசக்கரம் நீட்டி புகலிடம் கொடுத்திருப்பது ரங்கமணி அம்மாள் தான். அனாதைச் சிறுமிகள் முதல் கணவனால், பிள்ளைகளால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் என சகலரும் அன்பு இல்லத்தில் உண்டு.

அதிலும் மிதிலா ஐந்து வயதுச் சிறுமியாய் அன்பு இல்லத்திற்கு வந்து ரங்கமணி அம்மாளின் பராமரிப்பில் இருபது வயது குமரியாய் மாறி பி.காம்.டிகிரியையும் முடித்து இருப்பவள்.

''எனக்கு தாய், தந்தை, கடவுள் எல்லாம் நீங்கள் தான் அம்மா...'' என நெஞ்சுருக அவள் ரங்கமணி அம்மாளை கட்டிக் கொண்டு கொஞ்சும் போது அவள் அழகான முகத்தை திருப்பி, ''நீ நன்றி சொல்ல வேண்டிய இன்னொருவரும் இந்த உலகத்தில் இருக்கிறாரம்மா...'' என்று ரங்கமணி அம்மாள் ஒரு நாள் சொன்ன போது அவள் திடுக்கிடவே செய்தாள்.

ரங்கமணி அம்மாள் விவரித்தாள். ''கண்ணு, இந்த அன்பு இல்லம் நடத்துவதற்கு பராமரிப்பு செலவிற்கு நிறைய டோனர்களிடம் இருந்து நன்கொடை வாங்குவது உனக்குத் தெரியும் தானே? அப்படி டோனர்கள் இருப்பது போல் 'ஸ்பான்ஸர்களும்' உண்டு...'' என்றாள்.

''ஸ்பான்ஸர்களா?''

''ஆமாம்... அதாவது நீ வளர வளர உன் பராமரிப்பு படிப்புச் செலவெல்லாம் ஒரு ஸ்பான்ஸர்... ஒரு நன்கொடையாளி ஏற்றுக் கொள்வார். அப்படி இந்த அன்பு இல்லத்திற்கு நிறைய பேர் ஸ்பான்ஸர்களாக இருக்

கிறார்கள். அப்படி ஒரு ஸ்பான்ஸர் உனக்கும் உண்டு. அவர் தயவால் அவர் அனுப்பும் பண உதவியை வைத்துக் கொண்டு தான் அன்பு இல்லம் உன் பராமரிப்பு செலவுகளை ஏற்றுக் கொண்டு, உன்னை மேலும் மேலும் படிக்க வைத்திருக்கிறது. அதனால் நீ முக்கியமாய் வாழ்க்கையில் நன்றி சொல்ல வேண்டியது அந்த ஸ்பான்ஸருக்குத்தான்!'' என்று முடித்தாள் ரங்கமணி அம்மாள்.

''அப்படியா...? அந்த ஸ்பான்ஸர் யார் அம்மா? அவர் பெயர் தான் என்ன?'' என்றாள் மிதிலா ஆவலாய்.

''ம்ம்... சொல்கிறேன். அவர் பெயர் ''ரோஜர்.'' பெரிய பணக்காரர், கோடீஸ்வரர். உலகம் முழுவதும் தனது தொழில் காரணமாக சுற்றிக் கொண்டிருப்பவர். அவர் தான் உன்னைப் பார்த்து உன்னைப் பிடித்து விட்டதாகவும், உனக்கு ஸ்பான்ஸராக தான் ஆகி, உன் வாழ்நாள் முழுவதும் தேவைப்படும் எல்லா செலவுகளுக்கும் அவரது கம்பெனி பொறுப்பேற்பதாகவும் சொல்லி விட்டார். சொல்லப்போனால் இந்த விடுதியில் ஒரு சில பெண்களுக்கு மட்டும் கிடைத்திருக்கிற அதிர்ஷ்டம் இது. அந்த அதிர்ஷ்டக்காரியில் நீயும் ஒருத்தி!'' என்று ரங்கமணி அம்மாள் சொன்ன போதும் மிதிலாவின் மனம் அந்த ரோஜரைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது.

அதனாலே மேலும் மேலும் அவரைப் பற்றியே கேட்கலானாள்.

அதிலும் ரங்கமணி அம்மாள் ரோஜரைப் பற்றி விவரித்த போது மிதிலாவின் வியப்பு பன்மடங்காகியது.



''ரோஜர்'' ஒன்றும் வெளிநாட்டுக்காரர் இல்லை எனவும் சுத்த தமிழர் தான் எனவும் ரோஜரின் தந்தையார் அவருக்கு மிகவும் உதவியாயிருந்த வெள்ளைக்கார துரை ஒருவரின் பெயரையே தன் மகனுக்கு சூட்டியிருந்தார் எனவும் ரங்கமணி அம்மாள் விவரித்தாள்.

மேலும் ரோஜர் அவர் தந்தையார் காலம் முதல் பிறவி பணக்காரர் என்றும் மில்கள் ஏற்றுமதி நிறுவனங்கள், கடல் சார்ந்த தொழில்கள் என உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாட்டிலும் இருப்பதால் உலகம் முழுவதும் பிஸியாக சுற்றிக் கொண்டிருப்பார் என்றும் தெரிவித்தாள்.

அப்படிப்பட்ட பணக்கார கோடிஸ்வர ரோஜர் தான் அந்த விடுதியில் அவளுக்கும் அவளைப் போன்ற சில பெண்களுக்கும் ஸ்பான்ஸராய் பொறுப்பேற்றிருந்தார். அதனால் மிதிலாவின் படிப்புச் செலவு பராமரிப்புச் செலவு எல்லாவற்றுக்கும் ரோஜரிடம் இருந்து மாதம் தவறாமல் செக் வந்து விடும்.

மேலும் ரங்கமணி அம்மாளின் அறிவுரைப்படி அவள் பள்ளிப்படிப்பை முடிக்கும் தருணம் முதல் ரோஜருக்கு அவ்வப்போது லெட்டரும் எழுத ஆரம்பித்தாள்.

அதை ரோஜரின் சென்னை முகவரிக்கு அவள் அனுப்பி வைத்தால் போதும். அந்தக் கடிதம் இரண்டொரு நாளில் உலகில் எந்தப் பகுதியில் ரோஜர் இருந்தாலும் அவர் கைக்கு போய் சேர்ந்து விடும்.

அப்படிச் சேர்ந்த மறுநாளே ரோஜரிடம் இருந்து அவளுக்கு தவறாமல் பதிலும் வந்து விடும். அந்த கடிதத்திலும் அன்பாய் அவள் நலம் விசாரித்து அவளை உற்

சாகப்படுத்தும் விதமான வார்த்தைகளுடன் ரோஜர் எழுதி யிருப்பார்.

அந்த ரோஜரின் அன்பான வார்த்தைகளும் அவளை பாசத்தோடு உற்சாகப்படுத்தும் பாங்கும் மிதிலாவை ரொம்ப பூரிக்க வைக்கும். சந்தோஷமாய் அந்த லெட் டரை மற்ற மாணவிகளிடம் எல்லாம் படித்துக் காட்டி குதூகலிப்பாள்.

அது முதல் அவள் தான் விருப்பப்படும் சின்ன டிரான் ஸிஸ்டரில் இருந்து தனது கணினி படிப்பிற்கு தேவை யான லேப்டாப் தேவை வரை ரோஜருக்குத் தான் லெட்டர் எழுதி தெரிவிப்பாள்.

அவள் லெட்டர் கிடைத்த மறுநாளே ரோஜரிடம் இருந்து அவள் கேட்ட பொருளுக்குரிய 'செக்' தொகை வந்து விடும். மேலும் ரோஜர், என்ன அது...? உனக்கு அவசியம் தேவை தானா? என்றெல்லாம் கேள்வி கேட்ப தில்லை. அவள் எது கேட்டாலும் யெஸ் தான். உடனடி யாக செக் அவளைத் தேடி வந்து விடும்.

அதனாலே மிதிலாவுக்கு ரோஜர் மீது மிகுந்த மரி யாதை கலந்த பாசம் உண்டாயிற்று. அவரை பார்க்க வேண்டும், சந்தித்து பேச வேண்டும் என்றெல்லாம் ஆவல் மிகுதியாயிற்று.

ஆனாலும் ரோஜரின் தொழில் சாம்ராஜ்யத்தை கவ னிக்கும் வேலைப்பளுவோ என்னவோ ரோஜர் ஒரு நாளும் அவள் இல்லம் தேடி வந்ததில்லை. அவளும் ரோஜரைப் பார்த்தில்லை.

எல்லாம் இடையிடையே தொலைபேசி மூலம் அவர் அவளிடம் பேசுவதும் உண்டு. சற்று தடித்த பிசிறில்



லாத குரலில் பேசுவார் ரோஜர். அப்போதும் அன்பாய் தன்னம்பிக்கை ததும்பும் படிதான் அவளிடம் பேசுவார்.

உற்சாகமாய் கேட்கும் மிதிலாவும் அவரிடம் தான் அவரை நேரில் பார்க்க விரும்பும் ஆசையை தெரிவிப் பாள். அதற்கும் அவர், ''எனக்கும் ஆசையாய்த்தான் இருக்கிறது கண்மணி. சமயம் வரும் போது நாம் சந் திப்போம்...'' என்பார்.

ஒரு முறை மிதிலா தன் புகைப்படங்கள் சிலவற்றை அவருக்கு அனுப்பி வைக்க பதிலுக்கு ரோஜரும் தன் புகைப்படத்தை அனுப்பி வைத்தார். அதில் அறுபது வயது நரைத்த முடி பெரியவர் கம்பீரமாக தோற்றமளித் திருந்தார்.

மிதிலா தன் மனதில் உருக்கொண்டிருந்த ரோஜரின் உருவத்திற்கு அது சற்றும் பொருந்தவில்லை என்றாலும் பெரியவர். சிறந்த பண்பாளர், கொடையாளி என்ற நினைப்போட தனது பெட்டியில் அதை பத்திரப்படுத்திக் கொண்டாள்.

அதன் பின்னர் அவள் ரோஜரிடம் ''வாருங்கள்... உங்களைப் பார்க்க வேண்டும் சந்திக்க ஆவலாயிருக் கிறது...'' என்றெல்லாம் வற்புறுத்துவது கிடையாது.

அவ்வப்போது ரோஜரின் கம்பெனி மேனேஜர் என வாட்டசாட்டமான ஒரு முப்பது வயதுக்காரன் வருவது உண்டு. அவன் கடுகடுவென சிடுசிடுத்த முகத்துடனே விரட்டாத குறையாய் அவளிடம் பேசுவது அவளை நிஜமாகவே எரிச்சல் படவைக்கும்.

வந்தவன், அவள் செலவு கணக்கை மட்டுமில்லாமல் அவளது படிப்பு விஷயங்களிலும் தலையிட்டு, ''என்ன

இவ்வளவு குறைவாக மதிப்பெண்கள் எடுத்திருக்கிறாய்? நூற்றுக்கு நூறு எடுக்க வேண்டும். ஒழுங்காக படிக்க வேண்டும். புரிகிறதா?'' என்றெல்லாம் விரட்டுவது உண்டு.

அப்போதெல்லாம் மேனேஜராய் இருக்கிறவன் இந்த வரத்து வருகிறானே என மிதிலாவுக்கு கோபம் கொப்பளித்தாலும் ரோஜருக்காக பல்லைக் கடித்துக் கொண்டு அடக்கிக் கொள்வாள்.

ஓரிரு சமயம் அவன் பற்றி, அவன் அவளிடம் கடுமையாக நடந்து கொள்வது பற்றி லேசாக ரோஜரிடம் புகார் கூட சொல்லிப் பார்த்தாள். அதற்கு ரோஜரும், ''அவனா? அவன் என் தூரத்து உறவுப் பையன். அதனாலே அதிகம் பாசம் வைத்திருக்கிறான் அதனால் உரிமை எடுத்துக் கொள்கிறான். என்றாலும் அவனை கண்டிக்கிறேன்!'' என்பதோடு நிறுத்திக் கொண்டார்.

மிதிலாவும் இவன் ரோஜரின் உறவுக்காரனா? அதனால் தான் இந்த வரத்து வருகிறானா? இவனைப் பத்தி இனி ரோஜரிடம் புகார் சொல்லி பயனில்லை என விட்டு விட்டாள்.

அந்த வாட்டசாட்டமானவன் தான் இன்றும் விடுதிக்கு அவளைத் தேடி வந்திருந்தான். மேடம் ரங்கமணி அம்மாளின் அறைக்குள் அவள் நுழைந்த போது அம்மாளுக்கு எதிரே கால் மேல் கால் போட்டபடி அலட்சியமாய் அமர்ந்திருந்த அவனைப் பார்த்ததும் வேப்பங்காயை கடித்தது போலவே அவளது முகம் போனது.

ரங்கமணி அம்மாள் அவள் வந்ததை உணராமல் இருக்க நிமிராமலே அவள் வந்ததை உணர்ந்து விட்டவன் லேசான களைப்புடன், ''ம்ம்... வந்து விட்டாள்...''



என ரங்கமணி அம்மாளிடம் சொன்னது... ரங்கமணி அம்மாளின் கையில் ஒரு லெட்டர் இருந்தது எல்லாம் ஏதோ ஒரு முக்கியமான விஷயம் என்பதை உணர்த்தியது.

அப்படி என்ன முக்கியமான விஷயமாக இருக்கக் கூடும்? திகைத்தவள் நிமிர்ந்து பார்த்த இருவருக்கும் வணக்கம் சொல்லி அன்பு இல்ல வழக்கப்படி பெரிய கும்பிடு ஒன்றையும் போட்டாள்.

''வா... மிதிலா...! என்னாலே விஷயத்தை நம்ப முடியவில்லை. ஆனால் நடப்பது உண்மை. உன் வாழ்க்கையில் ஒரு மிகப் பெரிய மாற்றம் சந்தோஷம் நிகழப் போகிறது. ஏன் அதிர்ச்சி என்று கூட சொல்லலாம்... ஆனால் இது இன்பமான அதிர்ச்சி...!

ரங்கமணி அம்மாள் உற்சாகக் குரலில் சொல்லிக் கொண்டே போக திகைக்கத்தான் செய்தான்.

''இந்த அனாதையின் வாழ்வில் அப்படி என்ன அதிசயம். ஆச்சரியம் நிகழ்ந்து விடக்கூடும்? அவளை அப்படி அனாதையாய் ஆக்கிவிட்டுப் போன தாய் தந்தையர்கள் திரும்பவும் உயிர் பெற்று இந்தப் பூவுலகில் வந்து விடப் போகிறார்களா.... என்ன?

சலிப்பும் தன்னிரக்கமாயும் தன்னைப் பற்றி அவள் எண்ணிக் கொண்டு முகம் நிமிர்த்தியவளுக்கு அம்மாள் சொன்ன விஷயத்தைக் கேட்டதும் மை விழிகள் அகல விரிந்து அப்படியே ஆச்சரியத்தில் ஸ்தம்பிக்கத்தான் செய்தது.

அவள் அனாதை இல்லை எனவும் அவளுக்கு உண்மையிலே உயிரோடு தாய் தந்தையர் இருப்பதாக

வும். இனி அவர்களோடு தான் அவள் வாழப் போகிறாள் என்பதும் தான் அந்த செய்தி!.

# 2

அதற்குப் பின் நடந்தது நடப்பது எல்லாம் கனவு போல் தான் இருந்தது மிதிலாவுக்கு.

ரங்கமணி அம்மாள் அவளிடம் சொன்ன விஷயத்தைக் கேட்டு அவள் மயக்கம் போட்டு விழாதது அதிசயமே!

அவள் அனாதை இல்லையாம்! அவளுக்கு அப்பா அம்மா இருக்கிறார்களாம். அவர்கள் இவ்வளவு வருடங்களுக்குப் பிறகு அவளை இப்போது தான் அவள் இங்கிருப்பதை கண்டு பிடித்து வந்து விட்டார்களாம்!

''சும்மா விளையாடாதீர்கள் அம்மா...!'' என்றபடி கலகலவென நகைச்சுவை ததும்ப சிரிக்கத் தான் செய்தாள் மிதிலா.

''விளையாட்டில்லை கண்ணு. நிஜம்! இதோ பார் உன் ஸ்பான்ஸரான மிஸ்டர் ரோஜரின் கடிதம்...!'' என ரங்கமணி அம்மாள் நீட்டிய போது நடுங்கும் கரங்களோடு வாங்கி அதைப் பிரித்தாள்.

ரோஜர் தெள்ளத் தெளிவாய் எல்லாவற்றையும் விளக்கி எழுதியிருந்தார்.



ஐந்து வயதுச் சிறுமியாய் யார் மூலமாகவோ இந்த அன்பு இல்லத்திற்கு வந்தவள் அவள் எனவும் அதனால் அவளது பெற்றோர் பற்றி எந்த விஷயமும் அன்பு இல்ல நிர்வாகிகளுக்கு தெரியாது எனவும், அவளை ஆதரவற்றவள் சொந்த பந்தம் யாருமில்லாதவள் என கணக்கிட்டே அன்பு இல்லத்தில் வைத்து வளர்த்துக்க உறுப்பினராய் சேர்த்துக் கொண்டார்கள் என்றும் விளக்கியிருந்தார்.

மேலும் சென்ற வாரம் திடீரென ரங்கமணி அம்மாள் முன் ஒரு அறுபது வயதுப் பெரியவரும் நடுத்தரப் பெண்மணி ஒருவரும் தோன்றி இங்கு வளரும் மிதிலா எங்களது பெண் என உரிமை கோர... ரங்கமணி அம்மாள் பதறியடித்து விஷயத்தை ரோஜரிடம் உடனே தெரிவித்து அவரது ஆலோசனையை கேட்டிருக்கிறார்.

ரோஜரும் திகைத்து தனது உதவியாளரை அனுப்பி அந்தப் பெரியவர் சொன்ன விஷயங்களை, விபரங்களை எல்லாம் சரி பார்த்து கண்டு பிடிக்கச் சொல்லியிருக்கிறார்.

அப்படி விசாரித்து சரிபார்த்ததில் அவர்கள் சொல்வது எல்லாம் உண்மை தான் என தெரிய வந்ததாம். அதனால் இனியும் அவள் ஆதரவற்றவள் போல் அன்பு இல்லத்தில் இருக்கத் தேவையில்லை எனவும் அவள் அங்கிருந்து வெளியேறி தன் தாய் தந்தையோடு வசிக்கலாம் எனவும் அதற்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் எழுதியிருந்தார் ரோஜர்.

கடிதத்தை படித்து முடித்து மிதிலா ஒரு கணம் கற்சிலை போல் ஆகிவிட்டாள் என்று தான் சொல்ல வேண்டும்.

பேசாமடந்தையாய் சில நிமிடங்கள் திகைத்தவள் விழிகளால் வெறித்து விழிக்கத்தான் செய்தாள்.

என்ன இது? இத்தனை வருடங்களுக்குப் பிறகு அவ ளுக்கு இப்படி ஒரு செய்தியா?

அவளைப் பெற்றவர்கள் உயிரோடு இருக்கிறார்களா?

அவள் இந்த அன்பு இல்லத்தில்... வளர்ந்து படித்து டிகிரியையும் முடித்து விட்டாள். இனி வேலை தேடுவது ஒன்று தான் பாக்கி! ஆக.... இதுவரை அவளைத் தேடாத, சந்திக்காத அந்தப் 'பாசக்கார' பெற்றவர்கள் இப்போது எங்கிருந்து எப்படி திடீரென குதித்தார்கள்?

தனது நினைப்பை அப்படியே கேள்வியாய் ரங்கமணி அம்மாளிடம் கொதிப்பாய் வினவிய போது அவளைக் கனிவாய் பார்த்தார் ரங்கமணி அம்மாள்.

''உன் கேள்வி நியாயம் தான் கண்ணு. உன்னை சிறுவயதில் ரயில் நிலையத்தில் தொலைத்து விட்டார் களாம். பின் போலீஸ் புகார் அது இதுவென கொடுத்து எவ்வித பிரயோஜனமும் இல்லையாம்.

ஆனாலும் விடாமல் விசாரித்துக் கொண்டு தான் இருந்திருக்கிறார்கள். அதற்குள் வருடங்களும் ஓடிவிட் டது. யாரோ சொன்ன அறிவுரையில் அனாதை ஆதர வற்ற இல்லங்களைத் தேடிப் போய் விசாரிக்க ஆரம் பித்திருக்கிறார்கள்.

அப்படி அவர்கள் விசாரிக்கும் போது தான் அவர்கள் கையில் வைத்திருந்த உனது சிறு வயது புகைப்படம் மூலம் தான் அவர்கள் தேடிக் கொண்டிருக்கும் பெண் நீதான் என்பது எங்களுக்கும் புரிந்தது.



ஆனாலும் நான் அவசரப்படவில்லை. நன்கு விசாரித்த பிறகு உன் சம்மதம் பெற்ற பிறகே முடிவு செய்வேன் என்று கூறி அனுப்பி வைத்து விட் டேன்.

மேலும் அவர்கள் ஆவலாய் கெஞ்சியதால் உன்னை யறியாமல் உனக்குத் தெரியாமல் அவர்களை உன்னைப் பார்க்கவும் அனுமதித்தேன். ஐந்து வயதுச் சிறுமியாய் உன்னை பறிகொடுத்தவர்கள் இருபது வயதுக் குமரியாய் மாறி இருக்கும் உன்னை ஆசை தீர பார்த்து விட்டுத்தான் சென்றிருக்கிறார்கள்.

பின் உன்னுடைய ஸ்பான்ஸர் ரோஜரிடம் கலந்து பேசி அவரது யோசனைப்படி சில முடிவுகள் எடுத் திருக்கிறேன். அதற்கு நீ ஒப்புக் கொள்ள வேண்டும் கண்மணி...'' என ரங்கமணி அம்மாள் தனது நீண்ட உரையை முடித்த போது விஷயம் விபரீதமாகுவது போல் உணர்ந்து பயம் கொள்ளவே ஆரம்பித்தாள் மிதிலா.

உதட்டை அழுந்தக் கடித்தபடி நின்றவள், ''என்ன முடிவுகள் அம்மா?'' என்றாள் சற்றே நடுங்கும் குரலில்.

''அது வேறு ஒன்றுமில்லை கண்ணு... அவர்கள் உன்னைப் பெற்றவர்கள்... உன்னை சிறு வயதிலேயே நிஜமாக தொலைத்தவர்கள் என்பது தெரிந்து உறுதியாகி விட்டது. அதனால்... அதனால்... நீ...'' அதற்கு மேல் ரங்கமணி அம்மாள் சொல்ல முடியாமல் நிறுத்த பக்கத்தில் உட்கார்ந்திருந்த ரோஜரின் செகரட்டரியான அந்த திமிர்க்காரன், ''எதற்காக தயங்குகிறீர்கள்? பட் டென்று சொல்லி விடுவது தானே? நீங்கள் என்ன...?

நானே சொல்கிறேன்...!'' என்றவன், ''இதோ பார் மிதிலா, உனக்கென்று தாய் தந்தை என ஒரு குடும்பம் இருக்கிறது. இப்போது அது உன்னைத் தேடி வந்து விட்டது. இனியும் நீ அனாதை இல்லை. அதனால் இந்த அன்பு இல்லத்தை விட்டு நீ கிளம்பியாக வேண்டும். அவர்களுடன் தான் வாழ வேண்டும். நீ வாழப் போகிறாய்...'' என அதிகாரமாய்ச் சொன்னவன் அவள் தொடர்ந்து தன்னை முறைப்பதைப் பார்த்து, ''இது ரோஜரின் உத்தரவு...'' என முடித்தான்.

இம்முறை மிதிலாவின் கோபம் அந்த ரோஜரின் மீது திரும்பியது.

எதற்கெடுத்தாலும்.... ரோஜர்... ரோஜர்... ரோஜர் தானா? ரோஜர் அவளது ஸ்பான்ஸர் தான். இது நாள் வரை அவள் படித்து வளர்த்தமைக்கு முழுச் செலவையும் கொடுத்து உதவியவர், தான். அதற்காக...? அவர் சொல்வது எல்லாவற்றுக்கும் தலையாட்டி விடுவதா? அவளிடம் ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா?

மனதுள் நினைத்தவள் திரும்பி, ''நான் ரோஜருடன் பேச விரும்புகிறேன். பேசலாமா அம்மா?'' என ரங்கமணி அம்மாளைப் பார்த்து கேட்டாள்.

அம்மாள் பதில் சொல்வதற்குள், ''ரோஜர் ஒரு முக்கியமாக விஷயமாக வெளிநாடு சென்றிருக்கிறார். ஒரு பத்து நாட்களுக்கு அவரை தொடர்பு கொள்ள முடியாது...'' என கறாராய் நரேந்திரனிடம் இருந்து பதில் வர அதிர்ந்தாள்.

எப்படியாவது ரோஜரிடம் கெஞ்சி... இந்தப் புது சொந்த பந்தம் எல்லாம் எனக்கு வேண்டாம். நான் அன்பு



இல்லத்திலேயே இருந்து விடுகிறேன் என சொல்லி விடலாம் என்று பார்த்தால்... அதற்கும் ரோஜர் இல்லையாமே?''

என்ன செய்வது?

கைகளைப் பிசைந்தபடி அவள் தவிப்புடன் நிற்பதைப் பார்த்த ரங்கமணி அம்மாள் எழுந்து அவள் பக்கம் வந்தாள். அவளை கைத்தாங்கலாய் தோளோடு அணைத்துப் பிடித்தாள்.

''ஒன்றும் யோசித்து கலங்க வேண்டாம். எல்லாம் நல்லபடியாக நடக்கும் கண்மணி. இறைவன் இதன் மூலம் உன் வாழ்க்கையில் ஒரு புது திருப்பத்தை உருவாக்க நினைத்திருக்கலாம் அல்லவா?''

ஆயினும் மனம் சமாதானம் ஆகாதவளாய் மிதிலா தன் மனதில் தோன்றிய சந்தேகங்களை எல்லாம் கேள்வியாக்கி கேட்டாள்.

அவள் கேட்க ரங்கமணி அம்மாள் விளக்கம் சொல்ல அதற்கு மேல் பொறுமை இல்லாதவன் போல் நரேந்திரன் 'டக்கென' நிமிர்ந்தான்.

''நேரம் அதிகமில்லை. மற்ற விஷயங்களை எல்லாம் காரில் போகும் போது இவளிடம் விளக்கிச் சொல்லி விடுகிறேன்!'' என்று சொன்ன போது தான் அவனுடன் பயணப்பட போகிறோம் என்பதே அவளுக்குப் புரிந்தது.

ரங்கமணி அம்மாள் நரேந்திரனின் அவசரத்தை உணர்ந்தவள் போல் தலையசைக்க ''நான் செல்ல வேண்டுமா? எங்கு? எதற்கு? இவருடனா?'' என படபடவென கேள்விகளை அடுக்க அலட்சியமாய் சிரித்தான் அவன்.

''உன் பாசக்கார பெற்றவர்களை நீ பார்க்க வேண்டாம்? அதற்குத்தான்!''

பெற்றவர்கள் மீது அவளுக்கு எக்கச்சக்க சினமிருந்தாலும் மூன்றாம் நபரான அவன் 'பாசக்கார...' என்று அழுத்தம் கொடுத்து குத்தியது எரிச்சலையே கிளப்ப முறைத்தாள் அவள்.

ரங்கமணி அம்மாள் குறுக்கிட்டு, ''மிஸ்டர் ரோஜரின் விருப்பப்படி மிஸ்டர் நரேந்திரன் தான் உன் பெற்றவர்கள் பற்றிய எல்லா தகவல்களையும் விசாரித்து அறிந்திருக்கிறார்.

அதனால் அவரே சென்று உன்னை அவர்களிடம் சேர்ப்பது தான் முறையாக இருக்கும்...'' என விளக்கமளிக்க மௌனமானாள் அவள்.

ஆனால் எதற்கும் அவள் மனம் ஒப்பவில்லை. திடீரென அன்பு இல்லத்தில் இருந்து கழுத்தைப் பிடித்து விரட்டுவது போல் அல்லவா இது இருக்கின்றது?

எங்கிருந்து வந்தார்கள்? எப்படி திடீரென குதித்தார்கள்? அவர்கள் சொன்னால் இந்த ரோஜரும், ரங்கமணி அம்மாளும் அப்படியே கேட்டு நம்பி விடுவதா? யாராவது ஏமாற்றுக்காரர்களாய் கூட அவர்கள் இருக்கலாமே? இவ்வளவு நாள் அவளைத் தேடிக் கொண்டிருந்தவர்கள் என்று சொல்வது எல்லாம் நம்பும்படியாகவா இருக்கிறது?

அவளுள் ஓராயிரம் கேள்விகள்! ஆனால் அதற்கெல்லாம் ரங்கமணி அம்மாளிடம் இருந்து கடகடவென பதில்கள் வந்தது. போதாக்குறைக்கு அந்த நரேந்திரன்



வேறு குறுக்கிட்டு, ''போதும் போதும்! எதற்காக இவ்வளவு கேள்விகள்? என்னை நம்பி வா. உன்னைப் பெற்றவர்களிடம், உன் உண்மையான தாய் தந்தையர்களிடம் உன்னைச் சேர்த்து விடுகிறேன்? கவலையை விடு....!'' என அசால்டாகச் சொல்லி அத்தோடு பேச்சை முடிப்பது போல் முடித்து விட்டான்.

இனி வேறு வழியில்லை! அவள் கிளம்பித்தான் ஆக வேண்டும்! சட்டென விழிகளில் திரையிட்ட நீரை மறைத்தவாறு கிளம்ப முடிவெடுத்தாள் மிதிலா.

# 3

அடுத்த அரைமணி நேர அவகாசத்தில் தனது அறைக்குச் சென்று தனது உடைமைகளை எல்லாம் பெரிய லெதர்பேக் ஒன்றில் எடுத்து வைத்தவாறு மிதிலா கிளம்பி விட்டாள்.

அன்பு இல்லத்தோழிகளை எல்லாம் கண்ணீர் மல்க கட்டிப் பிடித்து விடைகொடுத்தவள், ரங்கமணி அம்மாளின் காலில் சாஷ்டாங்கமாய் விழுந்து ஆசிபெற்று விட்டு அவர்கள் தோளில் புதைந்து குலுங்கி குலுங்கி அழுதாள்.

அவளைச் சமாதானப் படுத்துவதற்குள் ரங்கமணி அம்மாளுக்கு போதும் போதும் என்றாயிற்று.

எல்லாவற்றையும் பெரிய ஆச்சரியம் போல் கை கட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் நரேந்திரன்.

''நேரம் ஆகுகிறது... சீக்கிரம்! சீக்கிரம்!'' என அடிக்கடி ஒலித்த அவனது குரல் அந்த நிலையிலும் மிதிலாவை எரிச்சல்படுத்தியது.

ஆனால் அவனே கௌரவம் பார்க்காமல் அவளது பெரிய லெதர்பேக்கை தூக்கிக் கொண்டு போய் காரின் டிக்கியில் வைத்தான். அன்பு இல்ல அலுவலகத்தில் இருந்த அவளது டிகிரி சம்பந்தப்பட்ட சர்டிபிகேட் ஃபைல்களையும் அக்கறையாய் வாங்கி காரில் பத்திரப் படுத்திக் கொண்டான். டிரைவிங் ஸீட்டில் ஏறிக் கொண்டு இயல்பாக கை நீட்டி மறுபுற கதவை அவளுக்காக திறந்து விட்டான்.

அன்பு இல்லத்தின் எல்லோருடைய பார்வையும் தன்னைத் துளைப்பதை சங்கடமாய் உணர்ந்தவள், கடைசியில் கனிவாய் தைரியம் சொல்லிய ரங்கமணி அம்மாளின் வார்த்தைகளை மட்டும் மனதில் ஏற்றிக் கொண்டு காரில் ஏறினாள்.

கார் புறப்பட்டது.

அன்பு இல்லத்தின் மஞ்சள் நிற காம்பவுண்டு கவரைத்தாண்டும் போதும், 'இனி இங்கு திரும்பி வரவே மாட்டோமோ?' என தவிப்பான சிந்தனையெழுந்து அவளை தடுமாற வைத்தது.

இல்லத்திற்கு வந்த யோகா மாஸ்டர் ஒருவர் கற்றுக் கொடுத்திருந்த 'கவுண்ட் டவுன்' மனப்பயிற்சி ஒன்றை மனதில் ஓடவிட்டு உணர்வுகளை கட்டுப்படுத்தினாள்.



அதை ஓரக்கண்ணால் பார்த்து ரஸித்த நரேந்திரன், ''அட... இப்படியெல்லாம் பயிற்சிகள் இருக்கிறதா?'' என கேலியுடன் வினவவும் இவன் பேச்சை வளர்க்க தூண்டில் போடுகிறான் என்ற நினைப்புடன் அதை விரும்பாது வெறும் தலையசைப்பு செய்தவள் உதடுகளையும் இறுக்கிக் கொண்டாள்.

அதற்குப் பின் நரேந்திரனும் எதுவும் பேசவில்லை. ஊரைத் தாண்டி அரை மணிநேரம் சென்ற பிறகு தான் அவளுக்கு அது உரைத்தது. அவளைப் பெற்றவர்களைப் பற்றிச் சொன்னார்கள் எந்த இடம் எந்த ஊர் என்று சொல்லவில்லையே...!

யோசித்தவள் அதே நினைப்புடன் நிமிர்ந்து, ''நாம் எந்த இடத்திற்குச் செல்கிறோம்? என்னைப் பெற்றவர்கள் சொன்ன ஊர் எது?'' என்றாள் அப்பாவியாய்.

திரும்பிய நரேந்திரன் அவளை ஒரு வினோத பார்வை பார்த்து விட்டு, ''ம்ம்.... இப்பவாவது அது பற்றி கேட்க வேண்டும் என்று உனக்குத் தோன்றியது.... சந்தோஷம் தான்!'' என்றான் ஒரு வித கணைப்புச் சிரிப்புடன்.

அது அவளை எரிச்சலாக்க, ''நீங்களாக சொல்வீர்கள் என்று பார்த்தேன்...'' என்றாள் வெடுக்கென.

''உனக்கு அல்லவா அது பற்றி ஆர்வம் இருந்திருக்க வேண்டும்....''

''எனக்கு ஆர்வம் சுத்தமாக இல்லை...!'' என்றாள் அவள் கைகளை விரித்துக் காட்டியவாறு.

''என்ன சொல்கிறாய்.... நிஜமாகவா?''

"நிஜம் தான்...!" என தலையை வேகமாய் அசைத்துக் காட்டியவள், "இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? இவ்வளவு வருடங்கள் இல்லையென்று நினைத்து வளர்ந்து விட்ட பிறகு, இனிமேல் அவர்களை கண்ணில் கண்டு என்ன மாற்றம் நிகழ்ந்து விடக்கூடும்? இவர்கள் இப்படி உயிரோடு இருந்தும் இவர்களோடு நாம் வாழ கொடுத்து வைக்காமல் போயிற்றே... என்ற ஏக்கம் தான் மிஞ்சும்...!"

"ம்ம்... நீ சொல்வது... ஒரு வகையில் உண்மை தான்..." என அதை ஆமோதித்தான் நரேந்திரன்.

கூடவே, "நீ விரும்புகிறாயோ இல்லையோ உன்னைப் பெற்றவர்களைப் பற்றி எனக்கு விசாரித்து தெரிந்த சில தகவல்களை நான் சொல்லியாக வேண்டும். சொல் லட்டுமா?" என்றான் அனுமதி கேட்பது போல்.

எதற்காக இப்படி குரலை இறக்கி பணிவாய் கேட் கிறான் எனப் புரியாமல் விழித்தவள், "ம்ம்... சொல் லுங்கள்..." என்றாள் லேசான புன்னகையுடன்.

அவன் நீளமான மூச்சை இழுத்தபடி ஆரம்பித்தான். "உன்னைப் பெற்றவர்கள் இருப்பது மதுரைக்கு பக்கத் திலிருக்கும் மேலூர் என்ற சிற்றூரில். அது தான் அவர் களது பூர்விகம். உனது தந்தை பெயர் சதாசிவம். தாயார் பெயர் கற்பகம். உனக்கு சித்தியாக அன்னபூரணி என்ற பெண்மணியும் உண்டு..."

அவன் முடிப்பதற்குள், "என்ன சித்தியா?" என்று அதிர்ந்து போனாள் அவள்.

"ம்ம்... உன் தந்தையின் இரண்டாவது மனைவி. நீ மூத்த தாரத்தின் பெண்...!"



நரேந்திரன் தெளிவாய் உச்சரிக்க மீண்டும் அவன் முடிப்பதற்குள், "ச்சீ...!" என்றாள் அருவெறுப்புடன். பின் அதே வேகத்தில், "மேற்கொண்டு எதுவும் சொல்ல வேண்டாம். நான் அவர்களை எல்லாம் பார்க்க விரும்ப வில்லை. நீங்கள் காரைத் திருப்புங்கள். என்னை அன்பு இல்லத்திலேயே கொண்டு போய் விட்டு விடுங்கள்..." என்றாள் படபடப்பாய் கெஞ்சுவது போல்.

நரேந்திரன் திரும்பி அவளை அழுத்தமான பார்வை பார்த்து விட்டு, "அவசரப்படாதே. முதலில் நான் சொல்ல வந்த விஷயங்கள் முழுவதுமாக கேட்டுக் கொள். அதற்குப் பின் முடிவெடு..." என சொல்ல ஆரம்பித் தான்.

"உன்னைப் போல் தான், நீ முதல் தாரத்தின் பெண் என்று சொன்னதும் எனக்கு எரிச்சல் வந்தது. ஆனால் தொலைந்து போன நீ என்றாவது வரமாட்டாயா...? என உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஒரு ஜீவன் இருப்பதைக் கண்டதும் தான் இரக்கம் வந்தது..."

"அது வேறா...?"

"ம்ம்... உன் தாயார் தான் அது! அவர்கள் உன்னை இன்னும் மறக்கவில்லை. உன் நினைவாகவே உனக் காகவே உயிர் வாழ்வது போலவே காத்திருக்கிறார்கள். அதற்காக, அவர்களுக்காகவாவது நீ சென்று பார்க்க வேண்டும்..." எனச் சொல்லி நிறுத்தியவன். "முதலில் சென்று உன் குடும்பச் சூழ்நிலையை, உன்னைப் பெற்ற வர்கள் பற்றியெல்லாம் நன்கு தெரிந்து கொள். அதற்குப் பின் முடிவெடு. உன்னை யாரும் நிர்பந்தப்படுத்தப்

போவதில்லை. புரிகிறதா?'' என அவன் விளக்கமளிக்கவும் மறுபேச்சில்லாமல் தலையாட்டினாள்.

மேலும் அரைமணி நேர பயணம் சென்று புறச்சாலையின் வெளியே இருந்த ஒரு ஹோட்டல் முன் நிறுத்தினான் நரேந்திரன்.

''எனக்குப் பசியில்லை. ஒன்றும் வேண்டாம்...!'' என்றாள் அவள்.

''இன்னும் இரண்டு மணி நேரம் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. லைட்டாக எதாவது சாப்பிட்டுக் கொள்வோம். இறங்கு...!'' எனச் சொல்லியபடி விறு விறுவென அவன் முன்னால் நடந்தான்.

இம்முறையும் அவன் பேச்சுக்கு மறுக்க வழியில்லாமல் பின் தொடர்ந்து போய் உட்கார்ந்தாள். பத்து நிமிடத்தில் உணவை முடித்து விட்டு கிளம்பினர்.

நரேந்திரன் சில சமயம் காட்டும் கடுமை அவளை எரிச்சல் படுத்தினாலும் அவனது ஒவ்வொரு செயலிலும், நடவடிக்கையிலும் ஒரு வித ஸ்திரத்தன்மை தெரிவதை கண்டு வியப்படையவே செய்தாள்.

அந்த நினைவிலே, ''நீங்கள் ரோஜரின் செகரட்டரியாக ரொம்ப வருடங்களாக வேலை பார்க்கிறீர்களா?'' என்றாள்.

காரைக் கிளப்பிய நரேந்திரன், ''ம்ம்... பத்து வருடங்களுக்கு மேலாக! ரோஜரின் தொழில் நிறுவனங்கள், வரவு செலவுகள் எல்லாவற்றையும் நிர்வகித்து உடனுக்குடன் அவருக்கு தகவல் தெரிவிப்பது தான் என்னுடைய வேலை. ரோஜர் செய்யும் சமூகத் தொண்டுகள் அவர் அனுப்பும் நன்கொடைகள் ஒழுங்காக தேவைப்படுவோரை சென்றடைகிறதா என்று கண்காணிப்பதும் என் வேலை தான்!'' என அவன் முடிக்க மிதிலாவின் எண்ணம் ரோஜரைப் பற்றிய நினைவுகளில் மூழ்கியது.

எத்தனை உதவிகள்! எவ்வளவு பேருக்கு நன்கொடைகள்! படிப்புச் செலவு மற்றும் மருத்துவ உதவிகள்! நிஜமாகவே ரோஜர் பெரிய பரோபகாரிதான்! சிறந்த மனிதர் தான்!

அவள் வாய் விட்டு உச்சரிப்பதைக் கவனித்த நரேந்திரன், ''அந்த ரோஜர்தான் இப்போது உன்னை உன் குடும்பத்தோடு சேர்த்து உன் வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏற்படுத்த விரும்புகிறார்... அதையும் புரிந்து கொள்...!'' என்றான்.

''புரிகிறது...'' என்றாள் மிதிலா.

கூடவே ரோஜர் நினைப்பது போல், தன் குடும்பத்தை இவ்வளவு வருடங்களுக்குப் பின் பார்ப்பது.... சேர்வது.. தனக்கு பாசத்தை வரவழைக்குமா? மகிழ்ச்சியை ஏற்படுத்துமா? என்றெல்லாம் பயத்தையும் ஏற்படுத்தியது.



## 4

நான்கு மணி நேர களைப்பான பிரயாணத்திற்குப் பிறகு மேலூரை அடைந்தார்கள். நரேந்திரன் விலாசம்

சரி பார்த்து தெருவை கண்டு பிடித்து வீட்டு முன் சரியாக நிறுத்தினான்.

மிதிலா நிமிர்ந்து பார்த்தாள். மாடியுடன் கூடிய சிறிய ஓட்டு வீடு தான். முன்புறம் சிறிய பால்கனி, பெரிய மரச் சன்னல்கள் இரண்டு பூந்தொட்டிகள். ஓரமாய் நெடிய அந்த மரம்... அது... அது... கொடுக்காய் புளிதானே? அன்பு இல்லத்திலும் அவள் அறை ஜன்னல் ஓரமாய் இது உண்டே?

வியந்தவாறு இறங்கியவள் வீட்டுக்கதவு எவ்வித பர பரப்பும் இல்லாமல் சாத்தப்பட்டிருப்பது கண்டு நரேந் திரனைப் பார்த்தாள்..

அவள் நினைப்பை புரிந்தவன் போல், ''நாம் வருவது அவர்களுக்குத் தெரியாது...'' என்றான்.

அவன் கதவை மெல்ல தட்ட ஆரம்பிக்க... அவள் திரும்பி அந்த வீட்டையும் தெருவையும் அதிசயமாய் பார்க்க ஆரம்பித்தாள். இது தான் அவளது பிறந்தகமா? இங்கு தான் அவள் சிறுவயதில் பிறந்து வளர்ந்து இந்தத் தெருக்களில் ஓடியாடிச் சென்று... ஐந்து வயது வரை வளர்ந்திருக்கிறாளா? ஞாபகத்தில் அப்படி எதையுமே நினைவுபடுத்த முடியவில்லையே!

அவள் மேற்கொண்டு சிந்திக்க முடியாதபடி கதவு திறக்கப்பட்டு அறுபது வயது பெரியவர் தனது மூக்கு கண்ணாடியை இடுக்கியபடி தலையை நீட்டினார்.

லேசான வழுக்கை. நரைத்த மீசை முடிகள். தெற்றுப் பற்கள் பெரிய பயந்த ஒரு சிரிப்பு. இவர் தான் அவள் தந்தையா? பெயர் கூட சதாசிவம் என்று நரேந்திரன் சொன்னானே?



அவள் அவரை உற்றுப் பார்ப்பதற்குள் பதறினார் அவர். ''ஐயோ! வந்துவிட்டீர்களா! நான் எதிர்பார்க்கவே இல்லையே! வாருங்கள்! உள்ளே... வாருங்கள்...!'' என்றவர் மிதிலாவைப் பார்த்து, ''வா! என் தங்கமே! உன் வலது காலை வைத்து உள்ளே வா...! நீ இல்லாமல் இந்த வீடே வெறிச்சோடி கிடக்கிறது பார்...'' என்றபடி ஓடி வந்து அவள் கையைப் பிடித்துக் கொண்டார். கையைப் பிடித்தபடியே உள்ளே அழைத்துச் சென்றார்.

மிதிலாவுக்கும் அந்த திடீர்ப் பாசம் நெகிழ்ச்சி யாய்த்தான் இருந்தது. இது தான் தந்தை பாசமா? இந்தப் பாசம் கிடைக்காமல் இதை அனுபவிக்காமலே அவள் வளர்ந்து விட்டாளே!

அதற்குள் உள்ளிருந்து இன்னொரு தலை எட்டிப் பார்த்து ஓடி வந்தது. பளபளவென ஜார்ஜெட் சரிகைப் புடவையொன்றில் சற்றே நாற்பதைத் தொடும் வயதில் அந்தப் பெண்மணி. அவளது சித்தி?

கேள்வியாய் திரும்பி பின்னால் வந்த நரேந்திரனைப் பார்க்க அவன் தலையாட்டினான்.

கழுத்தில் தாலியுடன் கூடிய தாமரை டாலர் செயின், கையில் பளபளக்கும் தங்க வளையல்கள். அவள் மேற்கொண்டு அளவெடுக்க முடியாதபடி சித்தி அந்தக் கரங்களால் அவளைத் தோளோடு அணைத்தாள்.

''வந்து விட்டாயா? உன்னைக் காணாமல் நாங்கள் எல்லாம் எவ்வளவு தவித்துப் போய் விட்டோம் தெரி

யுமா? கடவுளே! ஆனாலும் பாவம் இந்தப் பெண்...! இந்தப் பெண்ணை மட்டும் இரக்கமில்லாமல் எவ்வளவு சோதித்து விட்டாய்! என்றெல்லாம் எப்படி கவலைப் பட்டோம்...!''

அவள் சொன்ன வார்த்தைகளும் சரி சொல்லிய விதமும் சரி ஒப்புக்காக ஒரு வித போலித்தனமான பாசத்தை எதிரொலிப்பது போலவே மிதிலாவுக்கு உணர்த்தியது.

கட்டியணைத்தவள் விடுவித்து, ''என் பெயர் மாயா. உன் சித்தி முறை. இனி நீயும் என் பெண் தான். உன்னையும் என் மகளாகவே நான் பார்த்துக் கொள்வேன்!'' என்றபடி மறுபடியும் அவளை உச்சி முகர்ந்து அவள் நெற்றியில் அழுந்த முத்தமிட்ட போது கொஞ்சம் அதிகப்படியாகவே மிதிலாவுக்குத் தோன்றியது.

அடுத்து மிதிலாவின் கண்கள் ஆவலாய்த் தேடியது... அவளது தாயாரை!

என்ன இருந்தாலும் அவளைப் பத்து மாதம் சுமந்து பெற்றவள் அல்லவா?

யார் மிதிலாவை தேடுகிறார்களோ... இல்லையோ பெற்ற தாய் தேடியிருப்பாளே! தொலைந்து போன அவள் கிடைக்கவே கிடைக்க மாட்டாளா என அந்த நெஞ்சம் எவ்வளவு பதைத்திருக்கும்?

அவளுக்கும் மற்றவர்களை விட தன் தாயாரை தன்னைப் பெற்றவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் தான் அதிகரித்தது.



சித்தியும் தந்தை சதாசிவமும் அழைத்துப் போக நாலு தட்டு வீட்டின் வலது புற ஓரமாய் இருந்த அந்த சிறிய அறைக்குள் நுழைந்தாள்.

உள்ளே அவள் எதிர்பார்த்தது போலவே இரும்புக் கட்டிலில் போர்வையை போத்தியபடி அந்த ஜீவன்!

கொக்கியில் சீவனை வைத்தபடி நொந்து நொடிசலான உருவத்துடன் சிறு சிறு நோய்களின் பாதிப்புடன் அவளது தாயார் லட்சுமி அம்மாள்!

எங்கிருந்து தான் அவளுக்கு பாசம் வந்ததோ அவளையறியாமல், ''அம்மா...!'' என உரக்க கத்தியபடி அவளைக் கட்டிக் கொண்டாள் மிதிலா.

அப்படி ஓடிப்போய் தாயைக் கட்டிக் கொண்டதும் நடுங்கும் கரங்களோடு தாயும் அவளை அணைத்ததும் நிஜமாகவே மெய்சிலிர்த்தது மிதிலாவுக்கு!

தாயின் நெஞ்சில் அபயம் தேடும் குஞ்சு போல சிறிது நேரம் பொதிந்து அந்த நிம்மதியான விவரிக்க முடியாத சுகத்தை அனுபவித்தவள் மெல்ல நிமிர்ந்து தாயின் முகத்தைப் பார்த்தாள்.

நோயின் பிடியிலும், சோர்விலும் தளர்ந்த முகத்தில் வலுக்கட்டாய முறுவலோடு சந்தோஷத்தையும் பூரிப்பையும் ஒரு சேர படர விட்டுக் கொண்டிருந்தாள் அவளது தாய்.

அவளும் அவளைப் போலவே ஆவலாய் மிதிலாவின் முகத்தைப் பார்த்து ரஸித்துக் கொண்டிருந்தாள் என்று தான் சொல்ல வேண்டும்!

பின் ஐந்து வயதில் தொலைத்தவளை இருபது வயது அழகுக் குமரியாய் பார்த்தால் அந்தப் பிரமிப்பு, பூரிப்பு இருக்காதா?

நடுங்கும் விரல்களால் மிதிலாவை அவள் தொட்டுப் பார்த்து ரஸிக்க... மிதிலாவும் அன்னையின் முகத்தில் தெரிந்த பரவசத்தையும் பெயருக்கேற்றார் போல் லட்சுமி கரமாய் தெரிந்த முகப்பொலிவையும் கண்டவள், பதினைந்து வருடங்களுக்கு முன் அன்னையும் தன்னைப் போல் அழகாய் இருந்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்தாள்.

ஆனால் இறுகி இருக்க வேண்டிய உடம்பிற்குப் பதில் எலும்பும் பஞ்சுப் பொதிகளால் ஆன கூடு அல்லவா அன்னையின் உடம்பாக இருக்கிறது. இதற்கு யார் காரணம்? அவளது பிரிவுதானா?

அவள் நினைப்புக்கு ஏற்றார் போல் வாயைத் திறந்தார் சதாசிவம்.

''பதினைந்து வருடங்களுக்கு முன் நீ தொலைந்து போன அன்று வேதனை தாங்காமல் படுத்தவள் தான். உன்னைப் பிரிந்த ஏக்கத்திலேயே படுத்த படுக்கையாகி விட்டாள். தீராத நோயாளி ஆகிவிட்டாள்..'' என முடிக்கவும், ''அப்படி என்ன நோய் அப்பா அம்மாவுக்கு வந்திருக்கிறது?'' என்றாள்.

அப்படி, ''அப்பா'' ''அம்மா'' என்று அழைத்து உச்சரிப்பதே'' என்னவோ ஒருவித பரவச உணர்ச்சியை மிதிலாவினுள் ஏற்படுத்தியது. இது நாள் வரை அப்படி அழைக்க அவளுக்கு யாரும் இல்லை தானே?



அவளுக்குப் போலவே அவர்களுக்கும் அப்படி அவள் அன்பாய் விளித்தது நெகிழ்ச்சியை உண்டு பண்ணியது போலும். ''அதுவெல்லாம் ஒன்றும் இல்லை கண்ணு. சாதாரண காச நோயும் பிளட் சுகரும் தான்...!'' என்றாள் அம்மா அவளை தன்னோடு ஆசையாய் அணைத்துக் கொண்டு.

பக்கத்தில் உட்கார்ந்து பரிவாய் அவள் தலையைக் கோதிய தந்தை சதாசிவமும், ''அவளது பாதி நோய் உன் பிரிவால் ஏற்பட்ட தவிப்பு தான் தங்கம். இப்போது நீ கிடைத்து விட்டாய் அல்லவா.... இனி எல்லாம் சரியாகி விடும்...!'' என்றார்.

ஒரு புறம் கோழிக் குஞ்சு போல் தன்னை ஆசையாய் கட்டிக் கொண்ட அன்னை, மறுபுறம் தங்கம்... தங்கம்... எனக் கொஞ்சியபடி பரிவாய் தலையை வருடும் தந்தை என இருவரையும் பார்த்து நெகிழ்ந்தவள் தன்னை நிலை கொத்திய, கண்களின் பார்வையோடு யாரோ பார்ப்பதை உணர்ந்து திடுக்கிட்டாள்.

அந்தக் கண்கள் சித்திக்குச் சொந்தமானவை!

# 5

அவளை வீட்டில் விட்ட மூன்று மணி நேரத்தில் நரேந்திரன் கிளம்பி விட்டான்.

அவன் போகும் முன் சொன்ன சில வார்த்தைகள் அவளுக்கு ஒருவித எரிச்சலையே உண்டு பண்ணியது. ''இதோ பார் மிதிலா, உனக்கென்று ஒரு குடும்பம் தாய் தந்தையென்று சொந்தம் வந்தாகி விட்டது. அதனால்...'' என நிறுத்தினான்.

''அதனால்...?''

''இனியும் இந்த வாழ்க்கை ஒத்து வராது... பிடிக்க வில்லை என்றெல்லாம் சொல்லிக் கொண்டு திரும் பவும் 'அன்பு இல்லம்' சென்று விடலாம் என்ற எண் ணம் இருந்தால் இப்போதே அதை அழித்து விடு. என்று உனக்கென்று சொந்தங்கள் இருப்பது தெரிந்து விட் டதோ அன்று முதலே அன்பு இல்லத்தில் இருக்கும் தகு தியையும் நீ இழந்து விடுகிறாய் புரிந்ததா?''

அவன் விரட்டல் போல் சொன்ன விதம் மிதிலாவுக்கு கோபத்தை கிளறியது.

''இது பற்றியெல்லாம் நான் ரோஜரிடம் பேசிக் கொள் கிறேன்...'' என்றாள் வெடுக்கென.

ஆனால் நரேந்திரனும் விடாமல், ''ரோஜரின் எண் ணத்தை தான் நான் பிரதிபலிக்கிறேன். அதையும் புரிந்து கொள்!'' என்றபடி கையசைப்புடன் கிளம்பி விட் டான்.

அவன் காரில் ஏறிச் செல்வதை முறைப்புடன் பார்த்த படியே திரும்பினாள். சாந்தமே உருவான ரோஜரின் செக ரட்டரியாய் இருக்கிறான். ஆனால் அடிக்கடி விரட்டு வதும் கொட்டுவதுமாய் அல்லவா அவளிடம் பேசு கிறான்? என்ன மனிதன் இவன்? என நரேந்திரனை நினைத்து எரிச்சலும் கொண்டாள்.



ஆனால் அன்று தான் அவளது வீட்டுச் 'சூழ்நிலை யும்' கொஞ்சம் கொஞ்சமாக அவளுக்குப் புரிய ஆரம்பித்தது. சித்தியின் மகளாய் ஹேமா வந்து இறங்கிய போது விஷயங்கள் ஒவ்வொன்றாய் யாரும் சொல்லா மலே அவளுக்குப் புரிய ஆரம்பித்து விட்டது.

ஹேமாவுக்கு அவளை விட இரண்டு வயது குறைவு. காலேஜ் இரண்டாம் வருடப்படிப்பு படிப்பவள். கல்லூரி டூர் மூன்று நாளை முடித்து விட்டு அன்று தான் திரும்பி யிருந்தாள். அவளுக்கு புது விருந்தாளியான மிதிலாவைப் பார்த்ததும் திகைப்பு தான்!

சித்தி அவளை அறிமுகப்படுத்தி, ''சின்ன வயதில் பார்த்திருப்பாய் உன் தங்கை... இருவரும் ஓடிப்பிடித்து விளையாடி இருக்கிறீர்கள்... ஞாபகம் இருக்கிறதா?'' என்ற போது... இருவரும் சேர்ந்து தான் சிரித்தார்கள்.

மிதிலா ஹேமாவின் கையைப் பிடித்துக் கொண்டு அவள் படிப்பு பற்றியெல்லாம் அக்கறையாய் விசாரிக்க ஆரம்பித்து விட்டாள். ஹேமாவுக்கு மிதிலாவை பார்த்த தும் பெரும் வியப்பு தான்!

அதிலும் அவளைப் போல் விதவிதமான ஜடை மாட் டிகள், தொங்கும் காதணிகள், மின்னும் நகை அலங்காரங் கள், பேஸ் க்ரீம்கள் என எவ்வித செயற்கையழகும் இல் லாமல் இயற்கையாய் பளீரிட்ட மிதிலாவின் அழகு அவளை பிரமிக்கத் தான் வைத்தது.

''ஐயோ! தொலைந்து போன அக்காதானே... நீங்கள்! உங்களை நினைத்து அம்மா தினம் தினம் கண்ணீர் விட்டு அழுவார்களே...'' என மிதிலாவுக்காக உருகவும் செய்தாள்.

மிதிலா அவளை விசாரித்தது போலவே பதிலுக்கு மிதிலாவைப் பற்றி அவள் அன்பு இல்ல வாழ்க்கை முறை பற்றி ஆவலாய் விசாரித்தாள். தனக்காக வீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த பெரிய அறையில் மிதிலாவின் உடைமைகளை வைக்க இடம் கொடுத்ததோடு மட்டு மில்லாமல் தான் வைத்திருந்த சேலைக் குவியல்களில் இருந்து ஐந்தாறு நல்ல சேலை ரகங்களை எடுத்து மிதிலாவுக்கு அணிய கொடுத்தாள்.

புன்னகையோடு அவற்றை மறுத்த மிதிலா தன்னிட மிருந்த புத்தம்புது மயில் வண்ணச் சேலையொன்றை அவளுக்கு பரிசளித்து அவளை வியப்பூட்டினாள்.

ஹேமாவிற்கு மிதிலா தன்னை விட அழகு... என்ற விஷயம் உறுத்தலாகவே இருந்தது உண்மை தான்.

ஆனால் மிதிலா ஹேமாவை... அப்படி நினைக்காமல் வலியப் போய் பேசினாள். பழகினாள்.

ஹேமா பார்ப்பதற்கு கொஞ்சம் கோபக்காரி போல் தெரிந்தாலும் சரியான வெகுளி. எதையும் யோசிக்காமல் பட்பட்டென்று கொட்டி விடுவாள். அதனாலே மூன்றாம் நாளே மிதிலாவிடம், ''என் அம்மாவிற்கு உன்னை சுத்தமாய் பிடிக்காது. பிடிப்பது போல் நடிக்கிறாள்...!'' என்றும் உளறிக் கொட்டினாள்.

மிதிலாவுக்கு இந்த விஷயம் புரிந்தது தான். இரண் டாம் தாரமாய் சித்தி என்று வந்தவளுக்கு மூத்த தாரத்தின் பெண்ணை எப்படி பிடிக்கும்? எந்த ஊர் சரித்திரத்தில் அது நடந்திருக்கிறது?

அதனாலே கூடுமான வரை தாயின் அறையிலேயே தனது பொழுதுகளை கழிப்பாள். தாய்க்கு பணிவிடை செய்வதும் தாயின் கால்மாட்டில் உட்கார்ந்தவாறு இது வரை தான் கண்டிராத அந்தத் தாயை பார்த்து பார்த்து ரஸிப்பதுமாய் போயிற்று.



தாய்க்கு அன்பு இல்லத்தில் தான் வளர்ந்த விதம் ரோஜரின் பணஉதவி ரங்கமணி அம்மாளின் அன்பு என ஒன்று விடாமல் விளக்கினாள். எல்லாவற்றையும் ஊம் கொட்டியபடி ஆச்சரியமாய் கேட்டாள் தாய் லட்சுமி அம்மாள். கூடவே, ''சிறுவயதில் எவ்வளவு கஷ்டப் பட்டு விட்டாய் கண்ணு? இந்த பாவிக்கு உன்னை... ஆசை தீர சீராட்டி பாராட்டி வளர்க்க கொடுப்பினை இல்லாமல் போயிற்றே?'' என்பாள்.

அன்று தான் மிதிலாவும் தன்னைப் பற்றிய சிறு வயது விவரங்களை ஆவலாய் கேட்டாள்.

லட்சுமி அம்மாள் கதை போல் சொல்ல ஆரம்பித் தாள். ''கண்ணு, நீ பிறந்த ஒரு வயது முதலே சுட்டிக் குழந்தை தான். துறுதுறுவென சுற்றி வருவாய். பொக்கை வாய் சிரிப்பு சிரித்து எல்லோரையும் வசீகரிப் பாய். உன்னை பார்த்தாலே எல்லோரும் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சுவர் தெரியுமா?'' என்று ஆரம்பித்து விவரித்தாள்.

''அந்த நாளை ஒரு பயங்கரமான நாள் என்று தான் சொல்ல வேண்டும். அன்று பக்கத்து ஊர் அம்மன் கோவிலில் கொடை திருவிழா! பத்து நாட்கள் விமரிசை யாக நடக்கும். ஊரே திரண்டு சென்று கலந்து கொள் ளும். பாட்டு, கூத்து, நடனங்கள், கேளிக்கை விளை யாட்டுக்கள் என திருவிழா நடக்கும். கோவில் மைதா னமே களை கட்டி மக்கள் கூட்ட நெரிசலில் திணறும்.

அப்படி அந்த கூட்டத்தில் தான் நீ தொலைந்து போனாய். அன்று பார்த்து தலைவலி காரணமாக நான் உன்னுடன் வரவில்லை. உன் அப்பாவும் சித்தியும் தான் வந்தார்கள். அன்று தான் கூட்ட நெரிசலில் விதி வசத்தால் நீ பிரிந்தாய். காணாமல் போய்விட்டாய் என்று தான் சொல்ல வேண்டும். பின் நாங்கள் உன்னைத் தேடாத இடமில்லை. ஒரு இடம் விடாமல் ஒரு வாரம் தேடினோம். ம்ஹூம்...! எவ்வித பிரயோஜனமுமில்லை... கடைசி வரை நீ கிடைக்கவே இல்லை. அழுது... அழுது என் கண்களில் நீரே வற்றி விட்டது...'' என்று சொன்ன படி தாயார் மறுபடி கண்ணீர்த்துளிகளை சிந்த அவசர மாய் தாயை அணைத்துப் பிடித்து, ''பழைய கதையை விடுங்கள். அதான் நான் வந்து விட்டேனே அம்மா...!'' என தேற்றினாள்.

லட்சுமியும் ஒரு கணம் குழந்தையாகி மகளின் நெஞ் சில் அப்படியே ஒட்டிக் கொண்டாள். இருவரும் கட்டிப் பிடித்தபடி கொஞ்ச நேரம் கிடந்தனர். அந்த அணைப்பு ஸ்பரிசமே பேச வார்த்தைகளின்றி எத்தனையோ விஷ யங்களை அவர்களுக்கு புரிய வைப்பது போல் இருந்தது.

பின் அவள் தலை நிமிர்த்திய லட்சுமி அம்மாள், ''கண்ணு, இன்னொரு முக்கியமான விஷயத்தை சொல்ல மறந்து விட்டேன். உன் பெயர் மிதிலா இல்லை. நாங்கள் ஆசை ஆசையாய் உனக்கு வைத்து கொஞ்சிய பெயர் வேறு...!'' என்றாள்!

''என்ன பெயரம்மா அது...?'' மிதிலா ஆவலாய் கேட்க லட்சுமி அம்மாள் அமைதியாய் உச்சரித்தாள்.

''திருநிறைச் செல்வி...!''





# 6

அடுத்து வந்த மூன்று நாட்களும் மிதிலாவுக்கு என்னவோ போல் தான் இருந்தது. அன்பு இல்லத்தில் சுறுசுறுவென வழக்கமான பணிகள் செய்தபடி ஓடியாடி வந்தவளுக்கு திடீரென சொந்தம் என ஒரு வீட்டில் கொண்டு வந்து விட்டு விட்டு இது தான் உன் அப்பா இது.... உன் அம்மா... இது உன் சித்தி என் உறவுகளை சொல்லிக் கொண்டு....

நினைத்துப் பார்க்க வினோதமாய்க் கூட அவளுக்குத் தோன்றியது.

ஐந்து நாட்களுக்கு முன் கூட இப்படியெல்லாம் அவள் வாழ்க்கையில் நடக்கும் என்று நினைத்துப் பார்க்கவில் லையே!

அன்பு இல்லத்தில் வளர்ந்தவளுக்கு அவர்கள் எல்லோரும் தான் உடன் பிறப்புகள் தன்னுடைய உறவு கள் என்ற எண்ணம் வியாபித்திருந்தது. ஆனால் இப் போது புதியதாய் அவளுக்கென்று ஒரு குடும்பம் இருப்பது தெரிய வந்து விட்டதே!

இருந்தாலும் வாழ்க்கை நீரோட்டத்தில் மாற்றங்கள் என்பது தவிர்க்க முடியாதவை அவைகளை ஏற்றுக்

கொண்டு தான் ஆக வேண்டும் என்ற மனநிலையை வரவழைத்துக் கொண்டாள்.

அவளது வீடு சிறியதாக இருந்தாலும் சிறு சிறு அறைகளுடன் கூடியது. முன்பகுதி அறை இரண்டிலும் சித்தி மாயாவும், அவளது மகள் ஹேமாவும் தங்கிக் கொள்ள... பின்னறையில் அம்மா இருந்தாள்.

தன் உடைமைகளுடன் அம்மாவின் அறையிலேயே மிதிலா தங்கிக் கொண்டாள். தாயின் கட்டிலுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு கயிற்றுக் கட்டிலையே போர்வை விரித்து தனக்கு படுக்கையாக்கிக் கொண்டாள்.

தந்தை சதாசிவம் ஓய்வு பெற்ற தமிழாசிரியர். தனது ஓய்வு நேரத்தை கோயில் குளம் என்று இறைபணியில் ஈடுபட்டு பாதி நேரத்தை அப்படியே கழித்து விட்டு பெரும் பாலும் இரவிலேயே வீடு திரும்புவார்.

முன்ஹாலில் தனது பெரிய துண்டை விரித்து படுத்தும் கொள்வார். தாய் லட்சுமிக்குத் தேவையான மருந்து மாத்திரைகளை தினமும் சரிபார்த்து கடைவீதி யில் வாங்கிக் கொடுத்துவிட்டே வெளியே கிளம்புவார்.

மிதிலா வந்ததும் தாயை கவனிக்கும் பொறுப்பு முழுவதையும் தனதாய் ஏற்றுக் கொண்டாள். பக்கத்து மருத்துவரிடம் முதலில் கூட்டிச் சென்று தாயின் உடம் பிற்கு என்ன தான் நோவு என அறிந்து கொண்டாள்.

தந்தை முன்பு சொன்னது போலவே குளிர் நேரங் களில் வரும் இருமலும், சளித் தொல்லைகளுமே அம்மா வின் பிரச்சனை என்பதும் அவளுக்குப் புரிந்தது. நல்ல வேளை வேறு எதுவும் பெரிய நோயாக அம்மாவிற்கு



பாதிப்பு ஏற்படவில்லை என்று நிம்மதியாகவும் அவ ளுக்கு இருந்தது.

மேலும் மிதிலாவை மீண்டும் பார்த்த சந்தோஷத்தில் லட்சுமியின் உடல் நிலையும் வெகுவாக முன்னேற்றம் கண்டது. ''மிதிலா, உன் உண்மையான பெயர் 'திரு நிறைச் செல்வி...' என ஞாபகப்படுத்தினாள்.

மிதிலாவுக்கு ஒரே ஆச்சரியம்! அவள் பெயர் திரு நிறைச் செல்வியா? திருநிறைச் செல்வி.... திருநிறைச் செல்வி... என இரண்டு மூன்று முறை உச்சரித்துப் பார்த் தாள்.

இனிமையாக இருந்தது.

அந்த சந்தோஷ உணர்வில் கண்கள் மின்ன தாயாரைப் பார்த்தாள்.

''ஆனால் நானும் உன் அப்பாவும் செல்வி என்றே கூப்பிடுவோம்... செல்வி எனது பாட்டியின் பெயர். அதைத்தான் திருநிறைச் செல்வியாய் உனக்கு வைத்து அழகு பார்த்தோம்...'' என்ற லட்சுமி விடாது ''உன் அப்பாவிற்கு நீயென்றால் உயிர். பள்ளியில் வாத்தியார் வேலை முடிந்து வந்ததும் உன்னை தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்ச ஆரம்பித்து விடுவார். நீயும் ஒட்டுப் புல்லு போல உன் தந்தையிடமே ஒட்டிக் கொள்வாய்...!'' என்று முடிக்க மிதிலா திடீர் ஞாபகம் வந்தவளாய் சட்டென, ''பின் அவ்வளவு பாசம் வைத்திருந்தவர் எதற் காக அம்மா.... இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டார்?'' என்றதும் தாயின் முகம் கறுத்து மாறியது.

கேட்கக் கூடாத கேள்வியொன்றை கேட்டு விட் டோமோ என மாறிவிட்ட தாயின் முகத்தைப் பார்த்து

மிதிலாவே திகைத்தாள். ஆனால், செல்ல மகளுக்கு புரிய வைப்பது இனி அவசியம் என்பதாலோ என்னவோ லட்சுமி அம்மாள் வறட்டுப் புன்னகையொன்றை உதிரவிட்டவள் சற்று இறங்கிய குரலில், ''அது எல்லாம் விதி தான் கண்ணு. பக்கத்து வீட்டுக்கு யாருமில்லாத அனாதை போல் குடி வந்தவள் தான் உன் சித்தி. உன் அப்பாவுக்கு இரக்க சுபாவம். பாவம் ஆதரவற்றவள் என்று அவ்வப்போது உதவப் போனார். அவள் வரு மானத்திற்கு ஒரு வேலை வாங்கி கொடுக்க முயற்சி செய்தார். அந்த நேரம் தான் இருவருக்கும் நெருக்கம் வந்தது. அவள் இவரைப் பார்த்து மயங்கினாளோ இல்லை இவர் அவளைப் பார்த்து மயங்கினாரோ... என் னவோ... ஒன்று நடந்து ஊர் அசிங்கமாய் இருவரையும் பற்றி பேச ஆரம்பித்து விட்டது.

இவரிடம் என்ன எதுவென்று கேட்டால் இடித்த புளி போல் தலை குனிய நிற்கிறார். அவளோ சாஷ்டாங்க மாய் என் காலில் விழுந்து ''வாழ்க்கை கொடுங்கள் அக்கா!'' என அழுகிறாள். என்ன செய்ய முடியும் என் னால்?

கடைசியில் கடவுள் மேல் பாரத்தை போட்டு விட்டு இருவருக்கும் இறைவன் சந்நிதியில் நானே மாலை மாற்ற வைத்து மாயாவை இரண்டாம் தாரமாய் ஆக்கியும் வைத்தேன். அது பழைய கதை. அதை விடு கண்ணு!'' என சலிப்பு பொங்க முடித்தாள் லட்சுமி!''

அந்த நிலையிலும் தாயின் சுருக்கமான முகத்தில் தெரிந்த வேதனையையும் வெறுப்பையும் அவளால் உணர முடிந்தது.



அம்மாவால் தான் என்ன செய்ய முடியும்? இப்படி ஒரு தப்பு நடந்து ஊர் உலகத்துக்கு தெரிந்து அசிங்கமாகி விட்ட பிறகு எப்படி தப்பிக்க முடியும்? அம்மா செய்தது கூட ஒருவித நியாயம் தான்! ஆனால் அப்பா...?

அப்பா... இப்படி ஒரு சபலப்புத்திக்காரராய் இருப்பா ரென்று அவளால் கொஞ்சமும் கற்பனை பண்ண முடிய வில்லை தான்! இன்று நரைத்த தாடியும் நெற்றியில் விபூதி பட்டையுமாய் சாமியார் போல இருப்பவரா அன்று அப்படி நடந்த கொண்டிருக்கிறார்?

ஆனாலும் கட்டிய மனைவி லட்சுமிகரமாய் பக்கத் தில் இருக்க... அப்பா இன்னொரு பெண்ணை நாடியது மன்னிக்க முடியாத ஒன்று. மிதிலாவுக்கு அது பெரும் அருவெறுப்பான ஒரு விஷயமாகவே பட்டது.

அதனால் தானோ என்னவோ நரேந்திரன் சித்தியும் உனக்கு உண்டு என விவரித்தது முதல் அம்மாவைத் தான் பாசத்திற்காக நாடி தேடியது அவளது மனம் தவிர தந்தை மேல் எந்தவொரு ஈடுபாடும் அன்பும் உருவாக வில்லை.

இங்கு வீட்டிற்கு வந்த போது கூட சதாசிவம் தான் தங்கமே... தங்கமே... என நொடிக்கொருதரம் கூப்பிட்டு உருகினார் தவிர அவளுக்கு பெரிதான ஈர்ப்பு ஒன்றும் அவரிடம் ஏற்பட்டதில்லை.

மேலும் தந்தை விஷயத்தில், இரண்டாம் மணம் புரிந்தமைக்கு அப்படி என்ன நியாயத்தை தந்தை உணர்த்திட முடியும்? என்ற வலுவான கேள்வி எழுந்து விட்டதாலே தந்தையை வெறுக்கும் எண்ணமும் அவளுள் துளிர் விட ஆரம்பித்து விட்டது.

இருந்தாலும் கடந்த பத்து நாட்களாய் அதையெல்லாம் வெளிப்படுத்தாதவாறு தான் நடமாடினாள். பல மணி நேரம் தாயுடன் தாயின் அறையிலேயே அடைந்து கிடந்தாலும் அவ்வப் போது தந்தையுடன் நூலகம், பக்கத்து சிவன் கோவில், கடை வீதி என்று வெளியில் சென்றும் வந்தாள்.

ஒரு கையில் குடையும், மறுகையில் அவளை ஆதரவாய் பிடித்துக் கொண்டு நடக்கும் தந்தையின் வயோதிக கோலம் கண்டு அவள் மனம் இரங்கத்தான் செய்யும். அவளாகவே உற்சாகமாய் வலிய ஏதாவது பேசிக் கொண்டு தான் வருவாள்.

இடையிடையே சதாசிவம் தான் அவளை ஒரு வித நெருடும் பரிதாபப் பார்வை பார்ப்பார். அந்தப் பார்வைக்கு ஏதோ ஒரு வித வலுவான காரணம் இருக்கக் கூடும்? என்றும் மிதிலா வியந்ததுண்டு.

வேறு என்ன... எவ்வித காரணமுமில்லாமல் தன்னை மகள் கேவலமாக நினைக்கத்தானே செய்வாள் என்ன எண்ணம் தானே?

அதே போல் சித்தி மாயாவின் தேன் தடவிய பேச்சும் சற்று அதிகப்படியான கவனிப்பும் இது அவளது இயல்பான சுபாவம் அல்ல என்பதையே மிதிலாவுக்கு உணர்த்தியது. எதற்காக இந்தக் கரிசனம்? என்று கூட நினைப்பாள்.

சில சமயம் சித்தியே தான் போட்டிருப்பது வேஷம் தான் என்பதை உணர்த்துபவள் போல், ''ஆமாம்... அனாதை இல்லத்தில் வளர்ந்தாயே... அங்கு ஆதரவற்ற அனாதைகள் மட்டும் தானா... இல்லை... ஊனமுற்றோர்... கூன்... குருடு... என்று எல்லோருமா?'' என்பாள். பின் அப்ப




டியே இந்தச் சாப்பாடு கூட கல்யாண வீடுகளில்.... ஹோட்டல்களில் மிஞ்சி மிச்சம் மீதி இருக்கிற உணவு தான் என்பார்களே! அதைத் தின்று தான் நீங்கள் எல்லாம் வளர்ந்தீர்களா?'' எனக் கேட்டு குத்திக் கிழிப்பதும் உண்டு.

ஆனால் மறுகணமே மிதிலாவின் முகம் போகும் போக்கை உணர்ந்து டக்கென பேச்சை மாறிக் கொண்டு, ''அது.... அது... ஒன்றுமில்லை... கண்ணு... நீ... நீ... அப்படியெல்லாம் அங்கு கிடந்து கஷ்டப்பட்டிருப்பாயே... என்று சொல்ல வந்தேன்...'' என முடிப்பாள்.

அது போதாதென்று அவள் மிதிலாவிடம் அன்பு வைத்திருப்பதை அவளுக்கு உணர்த்த அடிக்கடி பக்கத்தில் வந்து மிதிலாவை ஒரு அணைப்பு செய்து வேறு விடுவித்தாள். சில சமயம் உச்சி முகர்வது போல் முத்தம் வேறு. அவ்வளவு பிரியம் மிதிலா மேல் வைத்திருக்கிறாளாம்!

இது என்ன கன்றாவிக் கூத்து? எனவே மிதிலாவே நினைத்தாள். ஆனால் சித்தியின் இந்தப் பாச நடிப்பிற்குப் பின்னால் வலுவான ஒரு காரணம் இருந்ததை மறுவாரமே அவள் உணர்ந்த போது அவள் அதிரவே செய்தாள்!



# 7

மிதிலா தனது புது உறவுகளில், புது வீட்டில் ஓரளவு பழகிக் கொண்டாள் என்று தான் சொல்ல வேண்டும்.

அன்றாடம் எழுந்ததும் தாயைக் கவனித்து பணி விடைகள் செய்வது. சமையலில் சித்திக்கு உதவுவது. தங்கை ஹேமாவுக்கு புரியாத பாடங்களை சொல்லிக் கொடுப்பது என நேரம் கழிந்தது.

ஆயினும் ஏதோ ஒன்று வீட்டில் நெருடலாய் இருப்ப தாய் மனதில் உறுத்திக் கொண்டே இருந்தது. அது என்னவென்று அவள் எவ்வளவு யோசித்துப் பார்த்தும் அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனால். தாயின் உடல்நிலையில் அவள் வந்த பிறகு தெரிந்த மாற்றம், முன்னேற்றம் அவளை ரொம்பவும் சந்தோஷப்படுத்தியது. எவ்வளவோ வருடங்கள் சிரிப்பைத் தொலைத்து வாடி வதங்கியிருந்த அந்த முகம் இப்போது தானே லேசான புன்முறுவலுடன் சிரிக்க ஆரம்பித் திருக்கிறது?

அந்தப் புன்னகையை எப்போதும் தாயிடம் இருக்கும் படி பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற உறுதியும் கொண்டாள்.

இதற்கிடையே அவளது ஸ்பான்ஸரான ரோஜர் ஒரு நாள் போன் செய்து அவளது நலம், புது இடம் பற்றி யெல்லாம் விசாரிக்க விரிவாக எடுத்துச் சொன்னாள். தான் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருப்பதாகவும் அதற்கு காரணமான அவருக்கு மீண்டும் தனது நன்றியைத் தெரிவிப்பதாகவும் எடுத்துரைத்தாள்.

அன்று தான் தாயிடம் விலாவாரியாக ரோஜர் பற்றி யும் அன்பு இல்லத்தில் அவள் வரை சிறு வயது முதல் அவர் உதவி வருவது பற்றியும் எடுத்துக் கூறினாள்.



''அப்படியா...? அவரைப் பார்த்தால் நான் காலில் விழுந்து நன்றி சொல்ல வேண்டுமே கண்ணு?'' என பரிதவித்தாள் தாய்.

''நானே அவரை இன்னும் பார்த்ததில்லை. தன் முகம் தெரியாமல் உதவி செய்ய நினைக்கும் பரோபகாரி அவர்...!'' என்று மிதிலா பதிலுக்கு விளக்கினாள்.

அப்படி பேச்சு வாக்கில் பேசும் போது தான் லட்சுமி அம்மாள் தயங்கித் தயங்கி அந்தப் பேச்சையும் ஆரம் பித்தாள்.

''இன்னொரு முக்கியமான விஷயம் ஒன்று இருக் கிறது கண்ணு. அதைச் சொன்னால் நீ பயந்து விடு வாயோ...? உன்னிடம் அதைச் சொல்லவா... வேண் டாமா.... என்றெல்லாம் தவிப்பாய் உணர்வு எழுந்து என்னை... வாட்டுகிறது கண்ணு...'' என குரல் உடைய தாய் அங்கலாய்த்த போது மிதிலா நிஜமாகவே பயந்து தான் போனாள்.

ஆனாலும் தாயின் மனக்குறை என்ன ஏதுவென்று தெரிந்து கொள்ளும் ஆவலில், ''எதுவானாலும் சொல் லுங்கள் அம்மா. நீங்கள் உடன் இருக்கும் போது எனக்கு பயம் துளியும் இல்லை. மிகவும் தைரியமாய் இருக் கிறேன். சொல்லுங்கள்!'' என்றாள்.

லட்சுமி அம்மாளும் சித்தி மாயா, அவளது மகள் ஹேமா, தந்தை உறுதி செய்து விட்டு அந்த சிறிய அறையின் கதவைப் பூட்டச் சொன்னாள். பின் பெரிய ரகசியமாய் அதை விவரிக்க ஆரம்பித்தாள். அதைக் கேட்ட மிதிலாவுக்கு தளும்பிய கண்ணீர்த்துளிகளை அடக்கவே முடியவில்லை!

''கண்ணு... ஐந்து வயதில் நீ தொலைந்து போனது விதி அல்ல... சதி! அதுவும் உன் சித்தி மாயாவின் சதி...!'' என ஆரம்பித்த லட்சுமி அம்மாள் நடந்த எல்லாவற்றையும் விவரிக்க ஆரம்பித்தாள்.

''பக்கத்து ஊர் கோயில் கொடை திருவிழாவிற்கு நானும் உன் தந்தையும் மட்டும் தான் செல்வதா இருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் பாழாய்ப் போன தலைவலி ஒன்று என்னை வாட்டியதால் நான் வர வில்லை என்று உன் தந்தையிடம் கூறி உன்னை மட்டும் திருவிழாவிற்கு கூட்டிச் சென்று காட்டும்படி சொல்லி விட்டேன். அப்போது தான் உன் சித்தி குறுக்கிட்டு தனக்கு கோயில் திருவிழாவை பார்க்கும் ஆசையிருப்ப தாய் கூறி அப்போது கைப்புள்ளையாய் இருந்த அவளது மகள் ஹேமாவைத் தூக்கிக் கொண்டு கிளம்பி விட்டாள்.

எனக்கு மாயா மீது எவ்வித நல்ல அபிப்ராயம் கிடை யாது என்றாலும் அவளை ஓரளவு நம்பினேன். அத னாலே அவளுடன் உன்னைத் திருவிழாவிற்கு அனுப்பி வைத்தேன். ஆனால் அங்கு தான் ஆரம்பித்தது வினை! மாயாவின் திட்டம் போட்ட சூழ்ச்சி! பாவி, பாதகி... கொஞ்சங் கூட இரக்கமில்லாமல் என்ன காரியம் செய் தாள் தெரியுமா?''

அம்மாவின் முகத்தில் கோபமும், ஆத்திரமும் ஒரு சேர ஆவேசமாய் படர்வதை அதிசயமாய் பார்த்தவாறு, ''அப்படி என்ன செய்து விட்டார்கள் அம்மா?'' என்றாள் மிதிலா.

''உன்னைத் திருவிழா கூட்டத்தில் தொலைத்து விட்டதாக சொன்னார்களே...? அது சுத்தப் பொய்! உன்னை வேண்டுமென்றே அவளது மாமன் மகன் ஒரு



வனின் துணையோடு. அவன் மூலம் அனாதை போல் ஆக்கி உன்னை அன்பு இல்லத்தில் சேர்த்து விட்டவளே இந்த மாயா தான்! உன் இரக்கமற்ற சித்தி தான்!'' மூச்சு வாங்க முடித்தாள் லட்சுமி அம்மாள்.

கேட்ட மிதிலாவும் பயங்கரமாய் அதிர்ந்து தான் போனாள்.

என்ன... திருவிழா கூட்டத்தில் ஒன்றும் அவள் தொலைந்து போகவில்லையா?

சித்தி தான் சதித்திட்டம் போட்டு நடத்தி அவளைத் தொலைத்ததாய்ச் சொல்லி யார் மூலமாகவோ அவளை அனாதை போல் அன்பு இல்லத்தில் சேர்த்து விட்டிருக் கிறாளா...?

இப்படியா.... நடந்தது? நடந்திருக்கக் கூடும்? சேர்க்கு மளவுக்கு கள்ளங்கபடமற்ற ஐந்து வயதுச் சிறுமியான அவளை அனாதை போல் ஈவு இரக்கமற்ற பிறவியா இந்தச் சித்தி? அவ்வளவு கொடுமைக்காரியா. பாவியா... அவள்?

மிதிலா நம்ப முடியாத அதிர்ச்சியில் வாய் பிளக்க... ''உண்மை தான் கண்ணு... மிகப் பெரிய பாவி அவள்! தனது சுயநலத்திற்காக தாயையும் கன்றையும் பிரித்த கொடுமைக்காரி அவள்! இந்த வீட்டில் தன் மகள் மட்டும் தான் வாரிசாக வளர வேண்டும்... என்ற ஆங்காரத்தில் அவள் செய்த அநியாயம் தான் இது! இது எனக்கு பதினைந்து வருடங்களுக்குப் பின் போன மாதம் தான் அந்த மாமன் மகன் மூலம் தெரிய வந்தது. அவன் சரியான போக்கிரி. அடிக்கடி மாயாவிடம் வந்து பணம் கேட்டு தொல்லை செய்வான். அப்படி ஒரு நாள் அவன்

மாயாவிடம் தகராறு செய்கையில் பேச்சோடு பேச்சாக இதைச் சொல்ல நான் அதிர்ந்து போனேன். அதே அதிர் வோடு உன் தந்தையிடம் போய் விஷயத்தைச் சொன் னால் அங்கும் எனக்கு மிகப் பெரிய அதிர்ச்சி.''

''என்னம்மா சொல்கிறீர்கள்? தந்தை அப்படி என்ன தான் சொன்னார்கள்?''

''ஒன்றும் சொல்லவில்லை...! இடித்த புளி மாதிரி மௌனம் காத்தார். ஏனென்றால் நடந்த எல்லா விஷய மும் அவருக்குத் தெரியுமாம்! அவர் இதைச் சொன்ன போது எனக்கு கண்கள் சொருக மயக்கமே வந்து விட்டது...''

''என்னம்மா... அப்பாவுக்குத் தெரியத்தான் இது நடந்ததா? எப்படி இது?''

மிதிலா துடித்துப் போய் கேட்க அவளை ஆறுதலாய் பிடித்து அணைத்துப் பிடித்துக் கொண்ட லட்சுமி அம் மாள், ''அதற்கு அவர் சொன்ன காரணம் தான் விநோத மாய் மேலும் அதிர்ச்சியூட்டும்படி இருந்தது. மிதிலா'' என்றாள்.

''அப்படி என்ன காரணத்தைச் சொன்னார் அம்மா?''

''உன் கொடுமைக்கார சித்தி இங்கு நீ வளர்ந்தால் உன்னை ரொம்பவும் சித்ரவதைப் படுத்தி அவஸ்தை ஏற்படுத்துவாளாம். அதனால் நீ அங்கு வளர்வது தான் உத்தமமாம்! அவரும் இதையெல்லாம் யோசித்துப் பார்த்து தான் மனதை கல்லாக்கி கொண்டாராம்...''

''என்ன ஒரு கல் மனசு...!''

மிதிலா வாய் விட்டே அரற்ற... லட்சுமி அம்மாளும் தலையை வெகுவாய் ஆட்டியவள், ''இதையே தான் நானும் அவரிடம் கேட்டேன். அதற்கும், ''வேறு வழி யில்லை... லட்சுமி... இந்த அடங்காப் பிடாரி கையில் வகையாய் சிக்கிக் கொண்டேன். இவளது பிடியிலிருந்து எப்படி மீள்வது என்றே தெரியவில்லை. நான் எதாவது கேட்டு சண்டையிடப் போய் நோய்வாய்ப்பட்டிருக்கும் உன்னை வீட்டை விட்டு வெளியே போ.... என விரட்டி விட்டால் என்ன செய்வது...? அதனால் தான் எல்லா வேதனைகளையும் மனதுள் வைத்து புழுங்கிக் கொண்டு நடைப்பிணமாய் அலைகிறேன். ஆனால் இவ்வளவு வருடங்களாக இந்த உண்மையை உன்னிடம் மறைத்த தற்கு என்னை மன்னித்து விடு...!'' என காலில் விழாத குறையாய் அழுதே விட்டார். பின் அவரை என்ன செய்வது?''



அம்மா நிறுத்த, ''எல்லாம் நடிப்பு சுயநலம். அந்த பசப்புக்காரி மாயாவின் வலையில் என்று வீழ்ந்தாரோ அன்றே பந்தம், பாசம், சுயபுத்தி என எல்லாவற்றையும் அப்பா... இழந்து விட்டார்... சே...!'' எனப் பொருமியவள் வெறுப்பாய் முகத்தை திருப்பவும் செய்தாள்.

''அதற்காக அவரை ஒரேடியாய் வெறுத்துவிடாதே கண்ணு...!'' என்று தாய் பதைப்பாய் சொல்லவும், 'இப்படி அப்பாவியாய் அம்மா இருப்பதால் தான் அப்பா இவ்வளவு தூரம் விஷயங்களை மறைத்து ஏமாற்றியிருக் கிறாரோ...?' என்றும் நினைத்தாள்.

இருந்தாலும் விடாமல், ''அப்புறம் என்ன நடந்தது?'' என்றாள்.

''விஷயம் தெரிந்த நான் தான் கண்ணு துடித்துப் போய் விட்டேன். என் உடம்பு நோவையும் மீறி மாயா விடம் சண்டை போட்டேன். ஆனால் அந்த கல்நெஞ்சக்

காரி கொஞ்சமும் அசரவில்லை. ஆமாம் நான் தான் உன் மகளை அனாதை இல்லத்தில் சேர்த்து விட்டேன். என் வாரிசுதான் இந்த வீட்டில் வளர வேண்டும் என்று ஒய்யாரமாய் சொன்னாள். அப்போது தான் எனக்கு இந்த எனது பாட்டியின் பூர்விகச் சொத்தான இந்த வீட்டை தன் பெயருக்கு மாற்றி எழுதி வைக்கும்படி மாயா நச்சரித்துக் கொண்டிருந்தது ஞாபகத்திற்கு வந்தது.

இவளைப் போன்ற கபடதாரியிடம் இருந்து உண்மையை வரவழைத்து உன்னை மீட்க வேண்டுமென்றால் அதுதான் ஒரே வழி என முடிவெடுத்தேன். அதனால் மாயாவிடம் என் மகளை அனாதை இல்லத்தில் இருந்து மீட்டு என்னிடம் ஒப்படைத்தால் உடனே வீட்டை அவள் பெயருக்கு மாற்றி பத்திரம் எழுதித் தருவதாக உறுதி சொன்னேன்.

அப்படி உறுதி சொன்னதும் தான் இந்த கல்நெஞ்சக்காரி மாயா மனசு மாறி அவளது மாமா மகன் மூலம் உன்னைச் சேர்த்து விட்ட அன்பு இல்லம் பற்றிச் சொன்னாள். உடனே உன்னைப் பார்க்கத் துடித்தேன். என் உடம்பு நோவையும் பொருட்படுத்தாது உன் அப்பாவைக் கூட்டிக் கொண்டு உன் சிறு வயது புகைப்படத்துடன் அன்பு இல்லத்திற்கு வந்து அழாத குறையாய் முறையிட்டேன்.

அப்போது தான் நான் சொன்ன விபரங்களை எல்லாம் சரிபார்த்து நான் தேடும் தொலைந்து போன சிறுமி நீதான் என்பதை கண்டுபிடித்து.... எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டார்கள். பின் தான் உன் ஸ்பான்ஸர் ரோஜரிடம் விசாரித்து, மேலும் சில தகவல்களை சரி பார்த்து விட்டு உன்னை எங்களிடம் ஒப்படைப்பதாக



அறிவுறுத்தி அனுப்பி விட்டார்கள். நானும் அவர்கள் சொல்வதின் நியாயம் உணர்ந்து வந்து விட்டேன். இங்கு வந்து உன் வருகையை எதிர்பார்த்து பொறுமையாய் காத்திருந்தேன். நீயும் எங்களைத் தேடி வந்து விட்டாய். இது தான் நடந்தது கண்ணு...!''


அம்மா எல்லாவற்றையும் உணர்ச்சி பொங்க சொல்லி முடித்தாள். கேட்ட மிதிலாவுக்கு தலையே பாரமாகி வலிப்பது போல் இருந்தது.

எல்லாம் சரி. நடந்த எல்லாம் அப்பாவுக்கு தெரியும் என்று தானே அம்மா சொன்னாள்.

அப்படியானால்... அப்பாதான் இவ்வளவு வருடங்கள் இந்த உண்மையை, அவள் திருவிழாவில் தொலைந்து போகவில்லை, அனாதை இல்லம் ஒன்றில் சேர்க்கப்பட்டு வளர்ந்து வருகிறாள் என்ற உண்மையை அம்மாவிடம் சொல்லாமல் சித்தியுடன் கூட்டுச் சேர்ந்து மறைத்து விட்டாரா?

அவ்வளவு கல்நெஞ்சமா அவருக்கு?

அம்மாவிடம் அதையே கேள்வியாய் கேட்ட போது பதில் சொல்ல முடியாமல் தலைகுனிந்தாள். அந்தத் தாய்.



## 8

மிதிலா தாயிடம் இருந்து இவ்வளவு பெரிய விஷயத்தை அதிர்ச்சியாய் எதிர்பார்க்கவில்லை.

கேட்டவள் நிலை குத்திய கண்களுடன் அரண்டு தான் போனாள்.

எவ்வளவு பெரிய துரோகம்?

பெற்ற பிள்ளையையே சித்திக்குப் பயந்து அனாதை போல் அன்பு இல்லத்தில் சேர இந்த அப்பாவும் துணை போயிருக்காரே?

அதுவும் அம்மாவிடம் விஷயத்தைக் கூறாமல் மறைத்து... ஒன்று... இரண்டல்ல.... பதினைந்து வருடங்கள்...

இந்த பதினைந்து வருடங்களிலும் அவருக்கு உறுத்தலே வரவில்லையா? தனது ஐந்து வயது மகள் அந்த அநியாச் சிறுமி எப்படி இருக்கிறாள் எப்படி வளர்கிறாள்? என தெரிந்து கொள்ளும் ஆர்வம், ஆசை தந்தைக்கு ஏற்படவில்லையா?

மிதிலா மீண்டும் ஆற்றாமையாய் தாங்க முடியாமல் தாயிடம் கேட்ட போது, ''இல்லை கண்ணு! இடையிடையே உன்னை அன்பு இல்லத்தில் வந்து பார்த்திருக்கிறார். நீ வளர்வது பற்றி அறிந்திருக்கிறார்...'' என்றாள்.

''என்ன சொல்கிறீர்கள்? என்னை வந்து பார்த்திருக்கிறாரா? எப்போது...?'' என்றாள் துடிப்பாய் மகள்.

இவள் தந்தையை எப்படி மதிப்பாள்? அவரை ஒரேடியாய் வெறுக்கக் கூடும்! என உணர்ந்தவள் போல் லட்சுமி அம்மாளும், ''அவர் செய்தது தவறு தான்... மன்னிக்க முடியாத தப்பு தான்! ஆனால் அது அவர் மனதை உறுத்தப் போய்தான் அவர் அன்பு இல்லம் தேடி வந்து



பார்வையாளர் போல் சிறு சிறு தொகையை நன்கொடையாய் கொடுக்கும் 'டோனர்' போல் எல்லாம் வந்து உன்னைக் கவனித்திருக்கிறார். நீ நிர்வாகி ரங்கமணி அம்மாளின் பராமரிப்பில் நல்ல படியாக வளர்ந்து வருவதைக் கண்டு நிம்மதியும் அடைந்திருக்கிறார்... ஆனால் என்ன... இந்த விஷயத்தை அடியோடு என்னிடம் சொல்லாது மறைத்து விட்டார்....'' என முடித்த போதும் மிதிலா கற்சிலை போல் தான் அமர்ந்திருந்தாள்.

இது உண்மையோ... இல்லை பொய்யோ? அப்படியே உண்மையாக இருந்தாலும் அவள் அறியாமல் அவளுக்குத் தெரியாமல் வந்து பார்த்து என்ன ஆகப் போகிறது?

அப்படிப் பார்க்கும் போது தான் பெற்ற மகள் இப்படி அனாதை போல் வாழ்கிறாளே...? என்ற வேதனை அல்லவா அவர் மனதில் துடித்து எழுந்திருக்க வேண்டும்?

அப்படி துடித்து எழும் நினைப்பில், என்ன ஆனாலும் சரி.... இவளை வீட்டுக்குக் கொண்டு போய் ஊரறிய வளர்ப்போம் என்ற எண்ணமல்லவா வந்திருக்க வேண்டும்?

அதுவும் வரவில்லையே....? அப்படியானால் அப்படியொரு இரக்கம் கூட துளிர்க்காத கல்மனசு தானே அவருக்கு?

பெற்ற மகளுக்குச் செய்த மிகப்பெரிய கொடுமையை பெற்றவளிடம், தான் தொட்டுத் தாலி கட்டிய மனைவியிடம் கூட மறைத்தவர் எப்படிப்பட்ட மனம், குணம் உடையவராய் இருப்பார்?

அப்படிப்பட்ட ஒருவர் தான் அவளது தந்தையா? இந்த பூமியில் அவருக்குத் தான் மகளாக நாம் பிறந்திருக்கிறோமா?.... சே!

மிகவும் அருவெறுப்பாய் உணர்ந்தாள் மிதிலா.

அவள் இறுகிய முகத்தையும் அழுத்தமாய் உதடுகளைக் கடித்திருந்த விதத்தையும் பார்த்த தாய் லட்சுமி அம்மாள் அவள் கோபத்தைக் குறைக்கும் வண்ணம் அவள் தலையை பரிவாய் வருடி வாஞ்சையாய் அவள் கைகளைப் பிடித்தாள்.

''விடு கண்ணு! எல்லாம் விதிப்படி என்று நினைத்துக் கொள்!....'' என்றவள் அதற்கு மேல் கட்டுப்படுத்த முடியாதவளாய் குரல் உடைய, ''இந்தப் பாவியின் வயிற்றில் மகளாய்ப் பிறந்து நீயும் இவ்வளவு வேதனைகளையும் கொடுமையையும் அனுபவித்து விட்டாயே அம்மா...!'' என்றபடி அரற்ற.... அப்படியே அவளை இறுக கட்டிக் கொண்டாள் மிதிலா.

கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீரை தாய்க்குத் தெரியாமல் அவசரமாய் துடைத்துக் கொண்டாள்.

தாயின் உடம்பு வேதனையில் குலுங்குவது கண்டு அதிர்ந்தவள், ஆறுதல் சொல்ல வேண்டியது தனது முறை என்பதையும் உணர்ந்தாள்.

அதனாலே கொண்டிருந்த முழுக் கோபத்தையும் உதறி விட்டவள் போல், ''ஐயோ! அம்மா... நீங்கள் வருந்தாதீர்கள்! எவ்வளவு விஷயங்களை நீங்கள் ஜீரணித்திருக்கிறீர்கள்! எவ்வளவு கஷ்டங்களை நீங்கள் அனுபவித்திருக்கிறீர்கள்! ஆனால் இன்னமும் எவ்வளவு பெருந்



தன்மையாய் அவர்களை எல்லாம் மன்னிக்க நினைக்கிறீர்களே.... அது எவ்வளவு பெரிய விஷயம்...!'' என்றவள் அத்தோடு, ''அதனால் உங்கள் வயிற்றில் பிறந்ததற்கு நான் ரொம்ப ரொம்ப பெருமைப்படுகிறேன். மேலும் எத்தனையோ வேதனை, சோதனைகளுக்கிடையே நல்ல மனதுடன் நல்லவர்களாய் வாழ்வது கஷ்டம்தான். ஆனால் அதிலும் ஒரு சுகம் இருக்கிறது....'' என்று எதையோ கண்டு பிடித்தவள் போல் முடித்தாள்.

பின் கொஞ்ச நேரம் அப்படியே மௌனமாய் இருந்தார்கள்.

பின் மிதிலா ஞாபகம் வந்தவளாய், ''அம்மா இந்த வீட்டை சித்தியின் பெயருக்கு மாற்ற நீங்கள் ஒப்புக் கொண்டிருந்தீர்களே.... அது என்னாயிற்று?'' என்றாள்.

''ம்ம்... நீ வீட்டிற்கு வந்த அன்றே மாயா நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள். நான் தான் அவளிடம் ஒரு மாதம் அவகாசம் கேட்டிருக்கிறேன்...''

''இனி... எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன்...'' என்றாள் மிதிலா.

''என்ன சொல்கிறாய் கண்ணு?''

''அப்பாவிடமும் சித்தியிடமும் நானே பேசி ஒரு முடிவு எடுக்கிறேன்...'' என்றாள் குரல் உயர்த்தி.

அவள் முகம் இறுக அழுத்தமாய் சொன்ன விதத்தைப் பார்த்த லட்சுமி அம்மாளுக்கு பயமே ஏற்பட்டது.

''கண்ணு.... அவர்களுடன் வீணாய் சண்டை போட்டு வாதம் செய்து... அதனால்...''

அம்மா மேற்கொண்டு சொல்வதற்குள், ''பயப்படா தீர்கள் அம்மா....! நான் சண்டை போடப்போவதில்லை. நானும் உங்களைப் போல் தான். வாயில்லாப் பூச்சி...!'' முடித்தாள் மிதிலா.

மறுநாள் முதலில் தந்தையிடம் பேசினாள் மிதிலா. வழக்கம் போல் அவருடன் கோவிலுக்குச் சென்றவள் கோவில் குளக்கரையில் பேச்சை ஆரம்பித்தாள்.

அவள் கேட்ட எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்ல முடியாமல் தலையைக் குனிந்தார் சதாசிவம்.

ஆனால் மிதிலாவால் விட முடியவில்லை. ''சொல் லுங்கள் அப்பா! பெற்ற மகளான என் மீது கொஞ்சம் கூட இரக்கம் கொள்ளாத அளவுக்கு உங்கள் மனசு கல் லாகி விட்டதா.... சொல்லுங்கள்!''

அவளது ஆவேசக் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் திணறியவர் கடைசியில் கைகளை கூப்பி னார். ''என்னை மன்னித்து விடு மிதிலா! உனக்கு தந்தை ஸ்தானத்தில் இருக்கவே நான் லாயக்கற்றவன் என்று உன் சித்தியின் மாய வலையில் விழுந்தேனோ.... அன்றே என்னுடைய சிந்தனை சுய கௌரவம் எல்லாம் போயிற்று.... இப்படி ஒரு சுயநலக்காரனாய் நான் மாறுவேன் என நானே எதிர்பார்க்கவில்லை. என்னை மன்னித்து விடு...!''

அவள் காலைப் பிடித்து கெஞ்சாத குறையாய் அரற்றி னாள்.... தந்தை.

அதற்கு மேல் அவளால் என்ன செய்ய முடியும்?

மௌனமாய் எழுந்து நடக்க ஆரம்பித்தாள் அவள்.



# 9

தந்தையிடம் பேசி முடிந்த பிறகு மிதிலாவின் பார்வை சித்தியின் பக்கம் திரும்பியது.

''வா.... கண்ணு...! வா... தங்கம்...!'' என வார்த்தைக்கு வார்த்தை கொஞ்சிப் பேசி அவளிடம் ஒரு அன்பு நடிப்பு நடித்துக் கொண்டிருக்கிறாள் இந்த மாயா. அவளது முகத்திரையை இன்று கிழித்து விட வேண்டியது தான்!

யோசித்த மிதிலா வீட்டில் வைத்துப் பேசினால் அது அம்மாவை பதற வைக்கும் பயப்படச் செய்யும் என நினைத்த மாயாவிடம் வெளியே எங்காவது வைத்து பேச முடிவு செய்தாள்.

வீட்டிற்கு சற்றுத் தள்ளி சிறுவர் பூங்கா ஒன்று இருந்தது. நடைபாதையும் மரங்கள் சூழ்ந்த புல் தரையுமாய் அங்கு அமைதியாய் இருக்கும். அது தான் பேசுவதற்கு சரியான இடம் என்று சித்தியை அழைத்தாள்.

மாயா புரியாமல், ''எதற்கு கண்ணு?'' என்றவளிடம், ''எல்லாம் வீட்டுப் பத்திரத்தை உங்கள் பெயருக்கு மாற்றி எழுதுவது சம்பந்தமாக....'' என்றாள் சுருக்கமாக. மாயாவின் முகம் மாறியது.

''உன்னிடம் லட்சுமி விஷயத்தை சொல்லி விட்டாளா? சொல்ல வேண்டாம் என்று சொல்லியிருந்தேனே....?''

மாயா மறுபடியும் முகம் மாறியவளாய் இழுக்க, ''இல்லை! எல்லாவற்றையும். முழுவதுமாக சொல்லி விட்டார்கள்...'' என்றாள் குரலில் அழுத்தத்தோடு.

மறுகணமே மாயா தலையாட்டி விட்டாள்.

அன்று மதியம் சமையல் முடிந்த கையோடு உண வருந்தி விட்டு இருவரும் கிளம்பினர்.

லட்சுமி அம்மாள் பொதுவாக மதிய நேரத்தில் இரண்டு மணி நேரம் தூங்குவது வழக்கமானதால் தாய் தூங்கு வதற்கு ஏற்பாடு செய்து விட்டு நிம்மதியுடன் கிளம்பி னாள் மிதிலா.

ஆள் நடமாட்டம் குறைந்த அந்த பூங்காவின் காலி யான இருக்கையொன்றில் சித்தியுடன் போய் அமர்ந்தாள்.

''என்ன கண்ணு... சொல்லு...?'' இந்த சித்தியிடம் அப்படி என்ன உனக்கு பேச வேண்டி இருக்கிறது?'' என்று அப்பாவி போல் முகத்தை வைத்துக் கொண்டு ஆரம்பித்தாள் மாயா.

அவள் கொஞ்சும் நடிப்பையும், பாசமான வேஷத் தையும் பார்த்த மிதிலாவுக்கு கோபமே கொதிப்பாய் படர்ந்தது.

''சித்தி! இனியும் நடிக்காதீர்கள்! அம்மா நீங்கள் செய்த துரோகம் எல்லாவற்றையும் சொல்லி விட்டார்கள்...'' என்றாள் ஆவேசமாய்.

''துரோகமா...? என்ன சொல்கிறாய்?'' கேட்ட மாயாவின் முகத்தில் புன்னகை மறைந்து இறுக்கம் பரவியது.

''பின்... எனக்கும் என் தாய்க்கும் நீங்கள் செய்த கொடு மைக்குப் பெயர் என்னவாம்? நீங்களே சொல்லுங்கள்!''



நிதிலா துடித்து கேட்க ஒரு கணம் முறைத்துப் பார்த் தவள் என்ன நினைத்தாளோ மாயா பின் டக்கென குரலையும் மாற்றினாள்.

''அதான் எல்லாம் தெரிந்தாயிற்று என்று சொல்லி விட்டாயே? இன்னும் எதற்கு நானும் நடிக்க வேண் டும்? விஷயத்தைச் சொல்...!'' என்றார் கறார் குரலில்.

''விஷயத்தைச் சொல்லவா? நீங்கள் செய்தது எவ் வளவு பெரிய துரோகம்... கொடுமை? கொஞ்சமாவது அதற்கு வருந்துகிறீர்களா... அல்லது பெற்றவளையும் மகளையும் பிரித்து அனாதையாக்கியது சரிதான் என் கிறீர்களா?''

அவள் ஆவேசமாய் கேட்க பவ்யமான நடிப்புகளை விட்டிருந்த மாயா அசால்டாக தோள்களை குலுக்கினாள்.

''சரிதான்! எனது கணக்குப்படி சரிதான்!'' என்றாள்.

''அது என்ன உங்கள் கணக்கு?''

''இந்த வீட்டில் என் மகள் மட்டும் வாரிசாக வளர வேண்டும் என்று எண்ணினேன். நீ இருந்தால் அதற்கு இடைஞ்சல் என முடிவு செய்தேன். உன்னை கௌரவ மாக அன்பு இல்லம் என்ற அனாதை இல்லத்திலும் சேர்த்து விட்டேன்.... அவ்வளவு தானே?''

ஏதோ தான் தவறை நியாயப்படுத்திப் பேசுவது போல் மாயா பேச மிதிலாவுக்கும் பற்களைக் கடிக்கும் ஆத்திரம் பொங்கியது.

''என்ன அவ்வளவு தானா? இது எவ்வளவு பெரிய குற் றம்? என் அம்மாவிடம் என்னைத் தொலைத்து விட்ட தாகச் சொல்லி நாடகமாடியது எந்த வித நியாயம்? நான்

மட்டும் புகாராய் இதை போலீசிடம் கொடுத்தால் நீங்கள் பத்திரிகைச் செய்தியாகி கம்பி எண்ண வேண்டி இருக்கும்.... அது தெரியுமா?''

போலீஸ் என்றாள் சித்தி ஓரளவு பயம் கொள்வாள் என்று எதிர்பார்த்த மிதிலாவுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. ஏனெனில் அவள் சொன்னதைக் கேட்டு மாயா கடகட வென சிரித்தாள்.

''என்ன மிரட்டுகிறாயா? அதற்கெல்லாம் பயந்து போகிறவள் இந்த மாயா இல்லை. தாராளமாய் போய் புகார் கொடு. ஆனால் ஒன்று கம்பி எண்ணி களி திங்கப் போவது நான் மட்டும் இல்லை. உன் அருமைத் தந்தை யும் தான்! அதையும் ஞாபகம் வைத்துக் கொள்!''

மாயா தந்தை எனக் குறிப்பிட்டதும் தான் அவளுக்கு பக்கென்றது. அவரை மறந்து விட்டோமே? என நினைத் தாள்.

அவள் திகைத்து நிற்பதைப் பார்த்து, ''என்ன விழிக் கிறாய்? உன்னைப் பெற்றெடுத்த உன் அருமைத் தந் தையும் இதற்கு உடந்தை தான். அவருக்குத் தெரியத் தான் எல்லா விஷயமும் நடந்தது. உனக்குத் தைரிய மிருந்தால் அவருடைய சட்டையைப் பிடித்து உலுக்கி சண்டையிடு. அதை விட்டு விட்டு என்னை இப்படி போலீஸ் அது இதுவென விரட்டிப் பார்க்க நினைத்தால் பின் நான் பொல்லாதவளாகி விடுவேன்...!'' எச்சரிப்பது போல் கைகளை ஆட்டி மாயா ஒய்யாரமாய் பேச மிதிலா வாயடைத்து தான் போனாள்.

பாவி, இந்தக் கொடுமைக்காரி சொல்வதை எல்லாம் செய்தாலும் செய்வாள்!



இவள் செய்வாள் என்ன? இவள் சொல்வது போல் அவளது அருமைத் தந்தையும் நடந்த எல்லா கொடுமை களுக்கும் மாயாவுக்கு பயந்து உடந்தையாகத்தானே இருந்திருக்கிறார்?

அப்படியானால் அவரும் குற்றவாளி தானே?

நாளை.... குற்றம் தண்டனை என்று பார்த்தால்.... அவரும் அதை அனுபவிக்க வேண்டிய நபர் தானே?

ஆனால்... ஆனால்... அம்மாவால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாதே? குற்றவாளிக் கூண்டில் அவரை நிறுத்தினால் துடித்துப் போவாளே?

யோசித்தவள் இப்படி மாயாவுடன் மோதுவது எவ்வித பலனையும் தராது என்பதையும் உணர்ந்தாள். அவள் எந்த பேச்சை எடுத்தாலும் தந்தையையும் துணைக்கழைத்து தப்பித்து விடுவாள் என்றே தோன்றியது.

அதனாலே தான் கேட்க நினைத்த விஷயத்திற்கு வருவது போல், ''எல்லாம் சரி... அம்மாவிடம் வீட்டை உங்கள் பெயருக்கு மாற்றி எழுதித் தரும்படி கேட்டது எதற்காக?'' என்றாள்.

மாயா அதற்கும் அசரவில்லை. ''நான் எங்கு கேட் டேன்... உன் அம்மாவாக வலிய வந்து நீ இருக்கும் இடத்தை நான் சொன்னால் வீட்டை எழுதித் தருவதாய் ஒரு வியாபாரம் பேசினார்கள். நானும் சரியென ஒத்துக் கொண்டேன். சொன்னது போல் உன்னை மீட்டு உன் அருமைத் தாயிடம் ஒப்படைத்தும் விட்டேன். அதே போல் உன் தாயும் என்னிடம் ஒப்பந்தம் செய்து கொண்டபடி இந்த வீட்டை என் பெயருக்கு மாற்றுவது தானே முறை...? நீயே யோசி!''

மாயாவின் பேச்சுக்கு மிதிலாவால் எதுவும் பதில் சொல்ல முடியவில்லை.

மறுபடியும் சிந்தனை வயப்பட்டவளாய் மௌன மானாள் அவள்!

# 10

மிதிலா மனதுள் தீர்மானமாய் சில முடிவுகளை எடுத்துக் கொண்டு முதலில் தாயிடம் தெரிவித்தாள். ''இதுவெல்லாம் சரிப்பட்டு வருமா கண்ணு? பேசாமல் இப்படியே... வாழ்ந்து...'' என்ற ஆரம்பித்த அம்மாவின் குரலை இடைவெட்டி, ''இப்படி ஒரு மோசமான, இரக்க மில்லாத ஜீவன்களுடன் வாழ்வதை விட கண்ணை மூடிக் கொண்டு பாழுங்கிணற்றில் குதித்து விடலாம்...'' என தான் முடிவெடுத்த அவசியத்தையும் உணர்த்தினாள்.

அதற்குப் பின் அவள் முடிவிற்கு ஒப்புக் கொள்பவள் போல் தலையசைத்து விட்டாள் லட்சுமி அம்மாள்.

அதற்குப் பின் மிதிலா தொடர்பு கொண்டது தனது ஸ்பான்ஸரான ரோஜரை. ரோஜரிடம் அவ்வளவு விஷயத்தையும் விவரித்துப் பேசினாள்.

அம்மா வேறு உடன் இருக்கிறார்கள். இனி மறுபடி அன்பு இல்லம் செல்ல முடியாது. அதனால் அவள் படித்த படிப்பிற்கு ஏதாவது வேலை ஒன்று கிடைத்து விட்டால் போதும். அந்த வருமானத்தை வைத்து ஒரு தனி வீடு எடுத்து தங்கிக் கொள்வாள். அம்மாவையும் தன்னோட வைத்து கடைசி வரை பார்த்துக் கொள்வாள்!



இது தான் அவள் எடுத்த முடிவு! மேலும் இதில் முக்கியமான விஷயம் நிபந்தனை என்னவென்றால்... நிச்சயம் அவள் இந்த ஊரில் இருக்கக் கூடாது...' அவளது சித்திக்கும் தந்தைக்கும் கண்ணில் படாத ஊர், அந்தப் பாவப்பட்ட ஜென்மங்களை விட்டுத் தள்ளி அவர் கள் பார்வையில் படாத ஊராய் அது இருக்க வேண்டும். அது போதும்!

அவள் சொல்லச் சொல்ல மறுமுனையில் கேட்டுக் கொண்டிருந்த ரோஜருக்கு சிரிப்பு வந்து விட்டது.

''அவ்வளவு வெறுப்பு அவர்கள் மீது உனக்கு வந்து விட்டது...? அந்த அளவுக்கு உனக்கு கொடுமைகள் இழைத்திருக்கிறார்கள்?'' என்றும் வருத்தம் கொண்ட ரோஜர், ''நீ ஒன்றும் கவலைப்படத் தேவையில்லை மிதிலா. தேனிக்குப் பக்கத்தில் எனக்கான எஸ்டேட் ஒன்று இருக்கிறது. அதை எனது செகரட்டரி நரேந்திரன் தான் கவனித்து வருகிறான். அந்த எஸ்டேட்டில் தேயிலைத் தோட்டத்தில் உனக்கு அலுவலக வேலை ஒன்றும் ஏற்பாடு செய்து விடுகிறேன். அங்குள்ள எனது பங்களாவின் அவுட்ஹவுஸ் வீடு ஒன்றும் காலியாக உள்ளது. அங்கு நீ உன் தாயாருடன் தங்கிக் கொள்ள லாம். என்ன சொல்கிறாய்?'' என்று கேட்ட போது, ''ரொம்பவும் நன்றி ரோஜர் ஸார்....!'' என்று குரல் தழுதழுக்கத்தான் அவளால் சொல்ல முடிந்தது.

திரும்பத் தாயிடம் வந்து இந்த விஷயத்தைச் சொன்ன போது தாய்க்கும் மகிழ்ச்சி தான்! ஆனால் மாயாவிடம்

வாக்குக் கொடுத்தபடி வீட்டை அவள் பெயருக்கு மாற்றிக் கொடுக்க வேண்டுமே! அதற்கு மிதிலா ஒப்புக் கொள்வாளா மாட்டாளா என்ற பயம் தான் அவளை அலைகழித்தது.

ஆனால் மிதிலா அதையும் தெளிவாய் உணர்த்தி விட்டாள். "நீங்கள் ஒப்புக் கொண்டபடி வீட்டை மாயா பெயருக்கு மாற்றி விடுவோம்! என்ன... உங்களுக்குச் சேர வேண்டிய இருபது லட்சப்பணம்! அதை உங்களுக்கு தாலி கட்டிய கணவரும், அவர் கட்டிக் கொண்ட அந்த பாவப்பட்ட மாயாவும் அனுபவித்து விட்டுப் போகட்டும். எனக்கு உழைப்பில் நம்பிக்கை இருக்கிறது. நிறைய பணம் சம்பாதித்து உங்களுக்கு நான் சொந்த வீடு ஒன்று கட்டித் தருகிறேன். நீங்கள் கவலையை விடுங்கள்!" என உற்சாகம் கொள்பவள் போல் கூறிவிட்டாள்.

அதன்படியே மறுநாள் வக்கீல் முன்னிலையில் பத்திரம் மாற்றி எழுதினார்கள் ரிஜிஸ்தர் செய்தார்கள். மிதிலா கொடுத்த தைரியத்தில் லட்சுமி அம்மாள் எவ்வித சங்கோஜமுமில்லாமல் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாள்.

மாயா நடப்பதை நம்ப முடியாமல் பத்திரத்தை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டாள். "கண்ணு! தங்கம்! நிஜமாகவே... நீ அறிவுக்காரி தான்! புத்திசாலி தான்! அம்மாவின் வாக்கை சொன்னபடியே... காப்பாற்றி விட்டாய்!" என்றபடி அவள் வழக்கமாய் செய்யும், கட்டிப்பிடிக்கும் அணைப்பைச் செய்ய வர பட்டென அங்கிருந்து அகன்றாள் மிதிலா.

தந்தை சதாசிவம் நிலை தான் தவிப்பாய் இருந்தது. மிதிலாவையும் லட்சுமி அம்மாளையும் பரிதாபப் பார்வை பார்த்தவர் மாறி மாறி கெஞ்சினார்.



"எதற்கு... இதெல்லாம்? அம்மாவின் பெயரிலே வீடு இருக்கட்டும் எல்லோரும் இங்கே சந்தோஷமாய் இருக்கலாம். மாயாவால் உங்களுக்கு எவ்வித பிரச்சனையும் வராது. நான் பார்த்துக் கொள்கிறேன்...!" என அவர் பாட்டுக்கு அடுக்கிக் கொண்டே போக கையை உயர்த்தி தடுத்தாள் மிதிலா.

"வேண்டாம் அப்பா! நீங்களும் சந்தோஷமாய் இருங்கள். எங்களையும் சந்தோஷமாய் இருக்க விடுங்கள். அது போதும்!" என குரலை உயர்த்தி ஒரே வார்த்தையில் முடித்து விட்டாள் மிதிலா.

அதற்கு மேல் சதாசிவத்தால் வேறு எதுவும் பேச முடியவில்லை.

மிதிலாவுக்கு ஓரிரு கணம் தான் எடுத்த முடிவு சரி தானா? என்ற தடுமாற்றமும் வந்தது. ஆனால் மாயா எது செய்தாலும் வாயை மூடிக் கொண்டு தலையாட்டும் அப்பாவின் முன்... நாளை எது வேண்டுமானாலும் நடக்கலாமே?

அந்தப் பாதகி மாயா நாளை மிதிலாவையும் அவள் தாயையும் தனக்கு இடைஞ்சலாக கருதி விட்டால். அவர்களை உணவில் விஷம் வைத்துக் கொல்லக் கூட துணிந்து விடுவாளே? தனது சுயநலத்திற்காக எது வேண்டுமானாலும் செய்யக் கூடியவளாயிற்றே அவள்!

அதனால் இப்படிப்பட்ட பாவப்பட்ட ஜென்மங்களை விட்டுப் பிரிந்து தனியொரு வாழ்க்கை தொடங்குவது சிறந்த முடிவு தான்! என நிம்மதியான சந்தோஷமும் கொண்டாள் மிதிலா.

மறுநாள் ரோஜர் போனில், தெரிவித்தபடி நரேந்திரன் திரும்பவும் காருடன் வந்து விட்டான். வழக்கம் போல்

விரைப்புடன் இறங்கி உள்ளே வந்தவனைக் கண்டதும் மிதிலாவுக்கு தன்னையறியாமல் உற்சாகம் வந்து விட்டது.

ரோஜர் மூலம் அவன் அவ்வளவு விஷயங்களையும் அறிந்திருந்தாலும் தன் பங்கிற்கு எடுத்துச் சொன்னாள் அவள்.

நரேந்திரன் வியப்பாய் எல்லாவற்றையும் கேட்டு விட்டு, ''அப்படியானால் நீ எடுத்த முடிவு சரிதான்!'' என முடித்து விட்டான். அத்தோடு நில்லாமல் அவளது, அவள் தாயாரது உடைமைகளை எல்லாம் பாக் செய்ய அவளுக்கு உதவினான்.

மிதிலாவுக்கு உள்ளுக்குள் ரோஜரை நினைத்து ஒரே பெருமிதம் தான்!

மனிதருக்கு என்ன ஒரு இரக்க குணம்! எவ்வளவு பெரிய பெருந்தன்மை! அவள் சொன்னதும் கொஞ்சமும் யோசிக்காமல் சரி என்று விட்டாரே! தானே வேலைக்கும் தங்குவதற்கும் ஏற்பாடு செய்வதாய் சொல்லி விட்டாரே!

அவர் மட்டும் அப்படி உதவாவிட்டால் மிதிலா துணிந்து இப்படியொரு முடிவு எடுத்திருக்க முடியாது? அவள் விரும்பாத அவளை வெறுக்கும் மனிதர்கள் மத்தியிலே அவலமான ஒரு வாழ்க்கை நடத்த வேண்டிய சூழ்நிலை யும் ஏற்பட்டிருக்கும்!

திரும்பவும் போன் மூலம் ரோஜரிடம் தொடர்பு கொண்டு அவருக்கு நன்றி தெரிவிக்க மிதிலா முயன்றபோது அவரது லைன் பிஸியாக இருக்க... அவளால் தொடர்பு கொள்ள முடியவில்லை.



நரேந்திரனிடம் அதைச் சொன்ன போது, ''காலை நேரங்களில் ரோஜர் பிஸியாக இருப்பார்... மாலையில் பேசுவது உத்தமம்...'' என்று சொல்லி விட்டான்.

ஒரு வழியாய் உடைமைகளை பாக் செய்து நரேந் திரன் கொண்டு வந்த காரில் ஏற்றிக் கொண்டு கலங்கிய தந்தையை மேலும் நோக அடிக்க விரும்பாமல் தைரிய வார்த்தைகளைச் சொல்லி விட்டு தாயுடன் ஊரை விட்டு கிளம்பி விட்டாள் மிதிலா.

ரோஜரின் அந்தத் தேயிலை எஸ்டேட்டில் அவள் வாழ்க் கையையே புரட்டிப் போடும் பல ஆச்சரியங்கள் காத் திருப்பது அப்போது அவளுக்குத் தெரியவில்லை தான்!



## 11

மிதிலாவின் பிடிவாதத்தில், அவள் கொடுத்த தைரியத் தில் லட்சுமி அம்மாள் கிளம்பி விட்டாள் தவிர உள்ளூர அவள் மனம் ஒப்பவில்லை தான்!

அதனாலே கிளம்பும் போது தந்தை சதாசிவம் அவள் கையைப் பிடித்துக் கொண்டு தழும்பிய போது அவரை சமாதானப்படுத்தியவள், அத்தோடு சாஷ்டாங்கமாய் கண வரின் காலில் விழுந்து ஆசீர்வாதமும் வாங்கிக் கொண்டாள்.

மிதிலா சொன்ன ஊருக்குச் சென்றதும் தவறாது அவர்களது முகவரியைத் தெரிவித்து லெட்டர் போடுவ தாகவும் சொல்லி கிளம்பியிருந்தாள்.

கார் வீட்டைத் தாண்டி வீடு சிறு புள்ளியாகி மறையும் வரை ஏக்கமாய் பார்த்து விட்டு திரும்பினாள்.

எத்தனை வருடம் வாழ்ந்த வீடு? எத்தனை வருடங்கள் உடன் இருந்த கணவர்? என்ன இருந்தாலும் இது ஒரு வகை பிரிவு தானே?

தாயின் கஷ்டம் உணர்ந்தவள் போல் ஆதரவாய் அவளது கைகளை பற்றி தன்னோடு சேர்த்து வைத்துக் கொண்டாள்.

பின் ஸீட்டில் உட்கார்ந்திருந்த இருவரையும் ஆழமான ஒரு பார்வை பார்த்து விட்டு வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான் நரேந்திரன்.

மிதிலா கொண்டு வந்திருந்த கைப்பையில் தாய்க்கு அவ்வப் போது கொடுக்க வேண்டிய மருந்து மாத்திரைகளை எடுத்து பத்திரப்படுத்தியிருந்தாள்.

அதை குனிந்து சரிபார்த்துக் கொண்டிருந்த போது நரேந்திரன் திரும்பி அந்த கேள்வியைக் கேட்டான்.

''ஆமாம்! என்ன தான் நடந்தது?'' என்றான்.

மிதிலாவுக்கும் அப்போது தான் வீட்டுப் பிரச்சினை பற்றி அவனிடம் தான் எதுவும் கூறாதது ஞாபகத்திற்கு வந்தது.

அதனால் சுருக்கமாய் சித்தி மாயா நடத்திய கபட நாடகம் பற்றி விளக்கினாள்.

''இவ்வளவு மோசமானவர்களா? நம்பவே முடியவில்லையே...!'' வியந்தான் அவன் கூடவே, ''ஆனாலும் உனக்கு துணிச்சல் ஜாஸ்திதான் மிதிலா. துணிந்து முடிவெடுத்து அம்மாவைக் கூட்டிக் கொண்டு கிளம்பி விட்டாயே?'' என்றான்.

''எல்லாம் ரோஜர் கொடுத்த தைரியம் தான்!'' என்றாள் மிதிலா.



அப்போது தான் லட்சுமி அம்மாளும் அவர்கள் பேசுவதை கவனித்து, ''என்ன கண்ணு? நீ எடுத்த முடிவு சரிதானே? வேலையும் தங்குவதற்கு இடமும் உனக்கு கிடைத்து விடும் தானே?'' எனவும் நரேந்திரன் குறுக்கிட்டுச் சிரித்தான்.

''ஐயோ! பயப்படாதீர்கள் அம்மா. மிதிலாவுக்கு தயாராக வேலையும் தங்கிக் கொள்ள வீடும் ரெடியாக இருக்கிறது. எல்லாம் ரோஜரின் ஏற்பாடு. நான் சும்மாவாக மிதிலாவை பயமுறுத்த அப்படிக் கேட்டேன்'' எனவும் மிதிலாவும் நகைத்தாள்.

''ஆமாம் அம்மா...! இந்த நரேந்திரன் சாருக்கு எப்போதும் என்னை இப்படி பயமுறுத்தி விரட்டிப்... பேசுவது பிடிக்கும். அப்படித்தானே ஸார்?'' என முன்பு தான் அன்பு இல்லத்தில் இருந்த போது படிப்பிற்காக அவன் விரட்டி தன்னுடன் பேசியதை ஞாபகப்படுத்துவது போல் கேட்டாள்.

நரேந்திரனும் முறுவலுடன் தலையாட்டியவன், ''அதற்காக கோபம் கொண்டு ஒரு முறை ரோஜரிடமே என்னைப் பற்றி புகார் சொல்லியிருந்ததும் எனக்குத் தெரியும்!'' என்றான்.

''ஓ...! அதை ரோஜர் சொல்லி விட்டாரா?'' என வியப்பாய் பார்த்தவள். ''அதற்காக ஸாரி... வேண்டுமானாலும் கேட்டுக்கொள்கிறேன். ஆனாலும் உண்மையைத் தானே நான் சொல்லியிருக்கிறேன்...'' என்றாள் தன் பேச்சை நியாயப்படுத்துவது போல்.

அவள் சொன்னதற்கு முகம் மாறாமல் முறுவலை பெரிதாக்கிய நரேந்திரன், ''எல்லாம் ரோஜரின் உத்தரவு! நான் அப்படி கொஞ்சம் கடுமைகாட்டிப் பேசினால் தான்

ஒரு பயம் ஏற்படும். நம்மை கண்டிக்க ஆள் இருக்கிறார்கள் என்ற பயத்தில் மனதை வேறு வழிகள் எதிலும் ஈடுபடுத்தாமல் படிப்பு ஒன்றிலே லயிக்க வைக்க முடியும்... என்று ரோஜர் வெகுவாய் நம்பினார். அதனாலே என்னையும் அப்படிச் செய்யச் சொன்னார். என்ன நான் சொல்வது உண்மை தானே? கொஞ்சம் யோசித்துப் பார்...!'' என்ற போது மிதிலாவால் அவன் சொன்னவைகளை புரிந்து கொள்ள முடிந்தது.

அதனால் தான் அப்போது எரிந்து விழாத குறையாய் நம்மீது கடுமை காட்டினானா...? உண்மையான அவனது சுபாவம் அது இல்லையா? என வியக்கவும் செய்தாள்.

மேலும் அன்பு இல்லத்தில் இருந்து வெளியேறி அவள் வீட்டிற்காக மேலூர் வந்த போதும் சரி இப்போது அங்கிருந்து கிளம்பி வரும்போது சரி... அவன் எவ்வித கடுமையையும் காட்டவில்லையே... பரிவாகத்தானே நடந்து கொள்கிறான் என நினைத்தாள்.

மேலும் அன்று தான் அவளுக்கு அவனைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது போலும். அக்கறையாய் அவனைப் பற்றி விசாரித்தாள்.

''நானா? நானும் சிறுவயதிலேயே தாய் தந்தையை இழந்து அன்பு ஆசிரமம் ஒன்றில் வளர்ந்தவன். ஆசிரமத்தில் வளர்ந்து டிகிரி முடித்த நேரத்தில் தான் ரோஜரை சந்திக்க நேர்ந்தது. அவர் என்னை வேலைக்கு சேர்த்துக் கொண்டார். ரோஜரின் பேக்டரி மற்றும் நிர்வாகப் பொறுப்புகளை அன்றிலிருந்து நான் தான் கவனித்து வருகிறேன்...'' எனச் சொல்லி முடித்ததும் மிதிலாவுக்கு அவன் மேல் இரக்கமே வந்தது.



தன்னைப் போலவே சொந்தங்களற்று ஆசிரமத்தில் வளர்ந்திருக்கிறான்... என்ற விஷயம் அவளைப் பாதித்து அவன் மீது ஒரு ஈடுபாட்டைக் கொண்டு வந்தது.

நிமிர்ந்து அவனை உற்றுப் பார்த்தாள். நெடுவான உயரத்தில், இறுகிய திடமான உடற்கட்டுடன், பரந்த நெற்றியில் சுருள் முடிகள் புரள, ஆழமான பார்வையைச் சுழற்றும் கருவிழிகளும் இறுக்கம் தளர்ந்து அடிக்கடி வசீகரமான புன்னகையொன்றை வீசும் உதடுகளும், முகத்தில் ஓடும் அந்த அசாத்திய பொலிவு... இவன் நிஜமாகவே கம்பீரமானவன் தான்... கம்பீரமாகத்தான் இருக்கிறான் என நினைத்தாள் மிதிலா.


மேலும் இதுவரை அப்படி அவனை உற்றுப் பார்க்காதவள் திடீரென அவனை பார்க்க ஆரம்பித்திருப்பது அவளுக்கே வியப்புக்குரிய விஷயமாய்த் தோன்றியது.

பயணத்தின் போது காரை வழியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நரேந்திரன் நிறுத்தியவன், தாய்க்கு இறங்கி ஏற சிரமம் ஏற்படும் எனக் கருதி அவனே இருவருக்கும் உணவை பார்சலாய் வாங்கி கொடுத்து சாப்பிடச் சொன்னான்.

செல்லும் வழியில் உள்ள ஊர்களை... முக்கியமான தடங்களை எல்லாம் மிதிலாவுக்கு காட்டி விளக்கினான். அன்பு இல்ல வாழ்க்கையில் வெளியுலகம் பற்றியோ வேறு ஊர்கள் பற்றியோ எவ்வித அனுபவமும் இல்லாத அவளும், ஒரு குழந்தையின் ஆர்வத்துடன் எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

வழி நெடுக நரேந்திரனுடன் சகஜமாய் பேசியதாலோ என்னவோ அவனை அவ்வளவு பழக்கமில்லாத அந்நியன் போல் எண்ணத் தோன்றாமல் அவனுடன் நெடுநாள் பழகியது போன்ற உணர்வே அவளுள் ஏற்பட்டது.

அது ஒரு புது விதமான நெருக்கமான சூழ்நிலையை பின்னால் ஏற்படுத்தும் என்பதை அவள் அப்போது உணரவில்லை...!



# 12

மூன்று மணி நேர அலுப்பில்லாத பிரயாணத்திற்குப் பின் தேயிலைத் தோட்டத்தை அடைந்தார்கள்.

ரோஜரின் தேயிலைத் தோட்டம் தேனியிலிருந்து முப்பது கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சிறிய கிராமமான குடகுமலையில் அமைந்திருந்தது. அதனாலே அதற்கு குடகுமலை எஸ்டேட் என்ற பெயரும் உண்டு.

மலையடியோரமாய் பச்சைப்பசேல் புல் தரைகள், அடர்ந்த மரங்கள், தூரத்து சிறு சிறு குன்றுகளுக்கிடையே ஐந்து ஏக்கர் பரப்பளவில் இருந்தது ரோஜரின் தேயிலைத் தோட்டம். சில்லென்று காற்றுடன் ரம்மியமான அந்தச் சூழ்நிலையைப் பார்த்ததுமே கொண்டிருந்த பாரம் எல்லாம் நீங்கி மனது லேசாகுவது போல் மிதிலா உணர்ந்தாள்.

''இது தான் ரோஜரின் டீ எஸ்டேட். இங்கு சுமார் நூறு தொழிலாளர்கள் குடும்பத்தோடு பணியாற்றுகிறார்கள். தேயிலைத் தூள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது...'' என கமெண்டரி சொல்வது போல் நரேந்திரன் ஒவ்வொன்றையும் காட்டி விளக்கியபடி காரைச் செலுத்தினான்.



மிதிலாவின் கண்கள் அவளையறியாமல் தாயின் பக்கம் சென்றது. லட்சுமி அம்மாளும் முகம் எல்லாம் விரிய வெளியே தெரிந்த இயற்கையின் செழிப்பை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

சொல்லப் போனால் குண்டு சட்டியில் குதிரை ஓட்டுவது போல அவளுள் ஆசிரமத்திலும் அம்மா அந்த மேலூர் ஓட்டிலும் உலகமறியா வாழ்ந்தவர்கள் தானே?

தன்னை விட தாயின் முகத்தில் ஓடிய ஒரு விதமான பூரிப்பு மிதிலாவை மிகவும் மகிழ்ச்சியுறச் செய்தது. இனி எப்போதும் இந்த சந்தோஷமும், பூரிப்பும் முகத்திலிருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வளவு நாள் தன்னைப் பிரிந்து, ஒவ்வொரு நாளையும் நரகமாய் கழித்தவளுக்கு இந்த ரோஜரின் தோட்டத்திலாவது நிம்மதி கிடைக்க வேண்டும். அப்படி கிடைக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அது நம் கடமை!

தனக்குத்தானே அவள் சொல்லிக் கொண்டு நிமிர்ந்த போது நரேந்திரன் அவள் முகமருகே சொடுக்கிட்டுக் கொண்டு சிரித்தான்.

''என்ன பகல் கனவா?''

அவன் வினவியதற்கு அவசரமாய் காது மடல்களை ஆட்டியவள், ''இல்லை... இந்த இடம் ரம்மியமாய் பிரமிப்பாய் இருக்கிறது...'' என்றாள்.

''இதை விட பிரமிப்பான விஷயங்கள் நிறைய இருக்கிறது. நீ பார்க்கத்தான் போகிறாய்...?'' என்றபடி நரேந்திரன் அந்த மரங்கள் சூழ்ந்த பங்களாவின் முன் காரை நிறுத்தி இறங்கினான்.

அவன் சொல்வதன் அர்த்தம் புரியாமல் இறங்கினாள். மறுபடியும் மலையடிவார ஓரமாய் கட்டப்பட்டிருக்கும் அந்தச் சிறிய பங்களாவின் இயற்கை அழகில் பிரமித்தாள்.

அதற்குள் காரின் ஹாரன் ஒலி கேட்டு இரண்டு பணியாளர்கள் ஓடி வந்து நரேந்திரனுக்கு வணக்கம் போட்டனர்.

அவர்களிடம் டிக்கியில் இருந்த உடமைகளை எல்லாம் எடுத்து அவுட் ஹவுசில் வைக்கச் சொன்னான் நரேந்திரன்.

பங்களாவை ஒட்டியே வலப்புறமாய் அவுட் ஹவுஸ் இருந்தது. படுக்கையறையுடன் கூடிய அறைகள் மாடிப் படி வழியாகச் சென்றால் காற்று வாங்க சிறிய பால்கனி.

அவளுக்கும் அம்மாவுக்கும் தங்குவதற்கு ஏற்ற இடம். அருமையான சூழ்நிலை. இதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும்!

''இருவரும் வாருங்கள்! முதலில் என் வீட்டு உறுப்பினர் ஒருவரை உங்களுக்கு அறிமுகம் செய்கிறேன்...'' என்றபடி முன்புற பங்களாவிற்கு அவர்களைக் கூட்டிச் சென்றான் நரேந்திரன்.

அப்போது தான் நரேந்திரன் தங்கியிருப்பது அந்த பங்களாவில் தான் என்பதே அவளுக்கு புரிந்தது. ஆனாலும் தனது கம்பெனி மேனேஜருக்காக இவ்வளவு பெரிய பங்களாவை பெருந்தன்மையுடன் ரோஜர் ஒதுக்கியிருக்கிறாரே... என்றும் வியந்தாள்.

முன் ஹாலைக் கடந்து கூட்டிச் சென்ற நரேந்திரன் நடு ஹாலில் நின்றான். அங்குள்ள மர இருக்கை ஒன்றில் அறுபது வயது பெண்மணி ஒருவர் மூக்குக் கண்ணாடியுடன் குனிந்து நூல் பந்துகளால் ஸ்வெட்டர் ஒன்றை அக்கறையாய் பின்னிக் கொண்டிருப்பது தெரிந்தது.

அரவம் கேட்டு நிமிர்ந்தவளைப் பார்த்த நரேந்திரன் புன்னகையை பெரிதாக்கினான். ''ஐயோ அம்மா...! ஒரு நிமிடம் கூட உங்களால் சும்மா இருக்க முடியாதே...! ஏதாவது வேலையை இழுத்துப் போட்டு செய்து கொண்டிருப்பீர்களே...'' என செல்லமாய் கடிந்தவன் பின் நிமிர்ந்தவாறு இருவரையும் அறிமுகப்படுத்தினான்.



''இது... மிதிலா... இது தாயார் லட்சுமி அம்மாள்....!'' என்ற போது இருவரும் கை கூப்ப பதிலுக்கு பெரிதாய் வணங்கிய அந்தப் பெண்மணி வெள்ளைச் சிரிப்புடன் பக்கத்தில் வந்து மிதிலாவை கட்டிக் கொண்டாள்.

''ஓ...! எந்த மிதிலா... நீ... நீ... தானா? உன்னைப் பற்றி நிறைய நரேன் சொல்லியிருக்கிறானே...?'' என்றபடி இருவரையும் கைத்தாங்கலாய் அழைத்துச் சென்று பெரிய சோபா இருக்கை ஒன்றில் உட்கார வைத்தாள்.

மிதிலா விழிப்பதைப் பார்த்து விட்டு, ''நான் நரேந்திரனின் தாயார் அன்னபூரணி. நானும் நரேனும் தான் இந்த பங்களாவில் பத்து வருடமாய் வசித்து வருகிறோம். இன்று எங்களுக்கு துணை போல் நீங்கள் அவுட்ஹவுசில் குடி வருவது ரொம்பவும் மகிழ்ச்சியை எனக்கு ஏற்படுத்துகிறது...'' என்றவள் எதையோ உணர்ந்தவள் போல், ''ஆமாம் நாலு ஐந்து மணி நேரம் பிரயாணம் செய்து களைத்து வந்திருக்கிறீர்கள். முதலில் உணவருந்தி விட்டு சிறிது ஓய்வெடுங்கள். சாயங்காலமாய் நாம் நிறைய பேசலாம்...'' என்று முடித்தாள்.

மிதிலா தன்னை விட, தாயின் களைப்பை உணர்ந்து அன்னபூரணி சொல்வது கண்டு அதிசயித்தவள் முகம் மலர அவளைப் பார்த்து புன்னகைக்கவும் செய்தாள்.

கனிவு முகத்துடன் வார்த்தைக்கு வார்த்தை புன்னகை மலர ஒரு தாயின் பாசத்தோடு பேசும் அன்னபூரணி அம்மாளை அவளுக்கு பார்த்த முதல் சந்திப்பிலேயே பிடித்து விட்டது என்று தான் சொல்ல வேண்டும்.

அதனாலேயே அவள் சொன்னதற்கெல்லாம் பலமாய் தலையாட்டினாள். அன்னபூரணி பணியாட்களை

கூப்பிட்டு தயாராயிருந்த உணவு வகைகளை எடுத்து மேஜையில் வைக்கச் சொன்னாள்.

டைனிங் டேபிளில், அவர்களை உட்காரச் சொல்லி அவளே பரிமாறினாள். நரேந்திரனும் அவளை சாப்பிடச் சொல்லி வற்புறுத்தியபடி பக்கத்திலேயே சாப்பிட உட்கார்ந்து விட்டதால் அவளால் சங்கோஜமின்றி உணவருந்த முடிந்தது.

உணவு முடிந்து கைகளை அலம்ப தாயுடன் சென்றவளுக்கு அப்போது சுரீரென அது ஞாபகம் வந்தது.

ஆமாம்... இந்த நரேந்திரன் தான் யாருமில்லாத அனாதையாய் அவளைப் போல் ஆசிரமம் ஒன்றில் வளர்ந்ததாய் தானே சொன்னான். பின் எப்படி இவர்கள்.... இந்தத் தாயார்?

கைகளை துடைக்க அவள் அதே யோசனையில் நடக்க பூத்துவாலை துண்டு ஒன்றை நீட்டியபடி நரேந்திரன் வந்தவன், அவள் முகம் போன போக்கைப் பார்த்தே அவள் நினைப்பை யூகித்து விட்டான் போலும்.

''ம்ம்... உன் சந்தேகம் புரிகிறது... அவர்கள் என் தாயார் தான்! நானாக தத்து எடுத்துக் கொண்ட எனது வளர்ப்புத் தாயார்!'' என முடித்தான்.

''வளர்ப்புத் தாயாரா?''

''ம்ம்... சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன் தான் ஒரு சமூக சேவை நிலையத்தில் இவர்களைச் சந்தித்தேன். விபத்து ஒன்றில் தனது கணவரை பிள்ளைகளை பறி கொடுத்து விட்டு மனம் வெறுத்த நிலையில் இருந்தார்கள். அவர்களுக்கு ஆறுதல் சொல்லி என்னுடன் கூட்டி வந்துட்டேன். சொந்தங்களற்ற எனக்கு அவர்களையே தாயாக்கிக் கொண்டேன். இந்த புதுவித உறவு இருவருக்குமே ஆறுதலையும் மகிழ்ச்சியையும் தர நிஜமான



தாய் மகன், அம்மா பிள்ளை போல நாங்கள் பாசமாகி விட்டோம்...'' நினைத்தோம்... ரோஜருடன் சேர்ந்ததினால் இவனுக்கும் அப்படி ஒரு இரக்கமான பரோபகார குணம் வந்து'விட்டதா? என வியந்தாள்.

அதனாலே அன்னபூரணி மீது தனிப்பாசமும் ஒருவித பரிவும் அவளுக்கு கூடியது.

பின் அவர்களிடம் விடைபெற்று தங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த அவுட்ஹவுஸ் வீட்டிற்கு வந்தார்கள். நரேந்திரன் அன்று ஓய்வு எடுத்து விட்டு மறுநாள் வரும்படியும் பின் எஸ்டேட் அலுவலகத்திற்கு கூட்டிச் சென்று அவளுக்கான வேலை பற்றி விளக்குவதாகவும் சொல்லி விட்டான்.

அவுட்ஹவுஸ் வீடு சிறியதாக இருந்தாலும் இரண்டு மூன்று அறைகளுடன் கச்சிதமாக இருந்தது. பின்புற கிச்சன் அங்கு சமையலுக்கு தேவையான பாத்திரங்கள், கேஸ் ஸ்டவ், ப்ரிட்ஜ் என சகல வசதிகளோடும் தயாராயிருந்தது.

பணியாளர்கள் வீடு முழுவதும் துடைத்து விட்டாற் போல் பளிச்சென சுத்தப்படுத்தியிருந்தார்கள். அதை ரஸித்தவள் அம்மாவை படுக்கையில் அமரச் செய்து விட்டு மருந்துகளை தனது உடைமைகளை எல்லாம் அடுக்கி வைக்க ஆரம்பித்தாள்.

பின் ரோஜரின் ஞாபகம் வரவே அறையில் இருந்த லேண்ட் லைன் போனில் ரோஜரின் நம்பர்களைச் சுற்றினாள்.

மறுமுனையில் ரோஜர் உற்சாகமாய் கேட்க நன்றி தெரிவித்து மிகுந்த மகிழ்ச்சியோட தான் இருப்பதாய் உருகத்தான் செய்தாள்.

லட்சுமி அம்மாளும் ஆனந்தத்தில் அழாத குறையாய்த் தான் பேசினாள். நன்றி தெரிவித்தாள். ஐந்து நிமிடம் விடாது பேசி விட்டு இருவரும் போனை வைத்தனர்.

லட்சுமி அம்மாளின் முகத்தில் ரோஜரிடம் பேசியபின் ஒருவித திகைப்பும், வியப்பும் ஓடியது மிதிலாவை ஆச்சரியப்படுத்தியது. மிதிலா வினவ, ''இவர் தான் நீ சொன்ன ஸ்பான்ஸர் ரோஜரா...? இது தான் அவரது குரலா?'' என்றாள் லட்சுமி அம்மாள்.

மிதிலா தலையசைக்க லட்சுமி அம்மாளின் முகம் தீவிர யோசனைக்குப் போனது.

''இந்தக் குரலை எங்கோ கேட்டிருக்கிறேன். ரொம்பவும் பரிச்சயமான ஒருவரின் குரல் போல் அல்லவா ஒலிக்கிறது...?'' என்றாள்.

தாய் கேட்ட கேள்விக்கு மிதிலா அடக்க முடியாமல் தனது கிண்கிணிப்பு சிரிப்பை உதிர்த்தவள், ''ஐயோ! அம்மா! நானே இன்னும் ரோஜரை பார்த்ததே இல்லை. இதில் நீ குரலை பரிச்சயமானது போல் உள்ளது என்கிறாயே?'' என்றபடி மீண்டும் சிரிப்பைத் தொடர்ந்தாள்.

ஆனால் தாய் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை அப்போது அவள் உணரவில்லை!

# 13

மறுநாள் காலை சீக்கிரமே குளித்து தாயாருக்கான உணவுகளை மருந்துகளை தயார் செய்து விட்டு கிளம்பி விட்டாள் மிதிலா.

நரேந்திரனும் தயாராகவே அவள் வருகைக்கு காத்திருப்பது போல் முன் ஹாலில் இருந்தான்.



நீல நிற புல் சபாரி சூட்டில் அவன் இருந்தது அவனைப் பார்த்ததும் சட்டென முறுவலித்தது. எல்லாமே கம்பீரமாகத் தெரிந்தது. அதில் வியந்தவளாய் 'குட்மார்னிங்கை'ச் சொன்னாள்.

பதிலுக்குச் சொல்லியவன் அதே சிரிப்புடன் கிளம்பி விட்டான். நடுஹாலில் இருந்து வெளிவந்த அன்னபூரணியும், ''என்ன வேலைக்கு கிளம்பி விட்டாயா? சென்று வாம்மா! அம்மாவை இடையிடையே அவுட்ஹவுஸ் பக்கம் சென்று நானும் கவனித்துக் கொள்கிறேன்...'' என வலிய வந்து சொன்னது மிதிலாவை மகிழ்ச்சிப்படுத்தியது.

அதற்கும் நன்றி தெரிவித்து விட்டுக் கிளம்பினாள்.

காரில் ஏறி பத்து நிமிட பயணத்தில் அலுவலகத்தை அடைந்து விட்டார்கள்.

தேயிலை தோட்டங்களுக்கு நடுவே நிர்வாக கட்டிடம் அமைந்திருந்தது. அங்கு இருபதுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் வேலையில் ஈடுபட்டிருந்தனர். பேக்ஸ் மிஷின், கணினி, ப்ரிண்டர் என எல்லாமே பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது.

''இங்கு ஏற்றுமதி சம்பந்தமான அனைத்து வேலைகளும் நடைபெறுகிறது. உலகின் எந்த மூலையில் உள்ள ஊருக்கும் இங்கிருந்தே தொடர்பு கொள்ளலாம். அப்படியொரு தொடர்பு ஏற்பாடுகளை செய்திருக்கிறேன்...'' என விவரித்தான் நரேந்திரன்.

பின் அலுவலகத்தில் அவளை எல்லோருக்கும் அறிமுகப்படுத்தியவன் அவளுக்கான வேலையையும் விளக்கினான்.

பி.காம். படித்திருந்த அவளுக்கு ஏற்ற அக்கவுண்டிங் வேலை, கம்பெனியின் வரவு செலவுகளை மானிட்டர் மூலம் கிடைக்கும் ரிப்போர்ட்களை எல்லாம் சரி பார்த்து

ஒவ்வொரு வாரமும் நரேந்திரனின் பார்வைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அவள் படிப்புக்கு கொஞ்சம் அதிகப்படியான, உயர்வான வேலை தான். ரோஜர் தனது செகரட்டரி நரேந்திரனுக்கு கம்பெனியின் மேனேஜிங் டைரக்டர் பதவி கொடுத்து அழகு பார்ப்பது போல் தனக்கும் உயர் பதவி கொடுத்து அழகு பார்க்கிறார். அதில் திறம்பட செயல்பட்டு அவரின் நன் மதிப்பை நாம் பெற வேண்டும் என எண்ணிக் கொண்டாள்.

அவளுக்கான பணியிடமாய் நரேந்திரனின் அறைக்கு நேர் எதிராய் போல் இருந்த கேபினிலே ஒதுக்கப்பட்டது.

எல்லாவற்றையும் பொறுமையாய் விளக்கிய நரேந்திர னுக்கு நன்றி சொல்லி விட்டு வேலையில் ஈடுபட ஆரம்பித்தாள்.

இரண்டு மூன்று நாள் பிரமிப்பாய் இருந்த வேலை நாலாம் நாள் அவளுக்கு பிடிபட்டு இலகுவாய் போனது. தினமும் உற்சாகமாய் ஈடுபட ஆரம்பித்தாள்.

தாயிடம் அந்த விஷயத்தைச் சொல்லி ஆனந்தப்பட் டவள் மறவாமல் ரோஜரிடமும் போனில் தொடர்பு கொண்டு நன்றி சொன்னாள்.

அவளுக்கு அந்த குடகுமலை வாழ்க்கையும் ஓரளவு பழ கிப் போயிற்று. பிடித்தும் போயிற்று. தினமும் வேலைக் குச் செல்வது, வேலை முடிந்து மாலை வந்ததும் தாயாரை கவனிப்பது, தாயாரை அமைதியான பூங்கா பகுதியில் நடைப்பயிற்சிக்கு அழைத்துச் செல்வது... அங்கு பூங் காவில் உள்ள இருக்கையில் உட்கார்ந்து மணிக்கணக் காய் பழங்கதைகளை அன்பு இல்லக் கதைகளை பேசி ரஸிப்பது என பொழுது போயிற்று.

இப்படியே... தாய்க்கு நாமும்... நமக்கு தாயும் துணையாய் இருந்து வாழ்க்கையை ஓட்டி விடலாம்.



எவ்வித பிரச்சினையும் இருக்காது. வாழ்க்கை முழுவதும் நிம்மதியும் சந்தோஷமும் இருக்கும். அது போதும் நமக்கு! என அடிக்கடி நினைத்து பரவசமும் கொள்ள ஆரம்பிப் பாள் அவள்.

பொழுது போகாத சில சமயங்களில் இரவில் தாயாரை படுக்கையில் தூங்க வைத்து விட்டு, மாடிப்படி வழியாக பால்கனி சென்று கைகளை கட்டியபடி எதிரே கருந்திர ளாய் தெரியும் மலைக்குன்றுகளையும் அதில் பளீர் பளீர் என பளிச்சிடும் ஒளிக்கீற்றுகளையும் வானில் மிதக்கும் அமைதியான பால் நிலாவையும் நேரம் போவது தெரி யாமல் ரொம்பவும் ரஸித்துப் பார்ப்பாள்.

அப்படித்தான் அன்று பால்கனியில் அவள் இரவு நேரத்தில் பார்த்துக் கொண்டிருந்த போது பின்னால் யாரோ வரும் ஒலி கேட்டு திரும்பிப் பார்த்தாள்.

வந்தது நரேந்திரன்!

கைகளை கட்டியபடி புன்முறுவலை பெரிதாக்கியபடி அவளை நோக்கி வந்தான்.

''தற்செயலாய் ஜன்னல் பக்கம் நின்று பார்த்தேன். நீ பால்கனியில் காற்று வாங்கியபடி இயற்கையை ரஸிப்பது தெரிந்தது...'' என்றான்.

பதிலுக்கு அவனைப் போலவே முறுவலை படர விட் டவள் தொலையில் தெரிந்த மலைக்குன்றுகளின் அழகை, அவற்றுக்குப் பின்னால் பளிச்சிடும் நட்சத்திரங்களின் வரிசையைக் காட்டினாள்.

''பாருங்கள்! எவ்வளவு ரம்மியமாய் இருக்கிறது...'' என்றாள்.

நரேந்திரன் அவள் காட்டியதை ஆவலோடு பார்த்து விட்டு பார்வையை அப்படியே அவள் பக்கம் திரும்பினான்.

மை விழிக் கண்கள்... விரிய அவள் ஆவலோடு ரஸிப்பதை அவனும் ரஸித்தான்.

மிதிலா தற்செயலாய் பார்வையை திருப்பியவள் நரேந்திரன் தன்னையே உற்றுப் பார்ப்பது கண்டு திடுக்கிட்டாள். அவளையறியாமல் அவள் முகம் சிவந்து குங்குமம் சிவப்பாகியது.

நரேந்திரன் அத்தோடு நில்லாமல் நடந்து செல்ல அவள் பக்கம் வந்தான்.

இதுவரை அப்படியொரு பார்வையை அவனிடமிருந்து எதிர்பார்க்காதவள் தடுமாறத்தான் செய்தாள். அதே நேரம் அவன் கண்களை உற்றுப் பார்க்கும் தனது மைவிழிகளையும் அவளால் விலக்க முடியவில்லை.

நரேந்திரன் அவள் பக்கம் நெருங்கியவன், "மிதிலா..." என மெல்லமாகவே அழைத்து, "நீ நிஜமாகவே அழகு... அதிலும் இந்த பால் நிலவொளியில் என்னமாய் ஜொலிக்கிறாய் தெரியுமா?" என்றான்.

மீண்டும் கன்னக் கதுப்புகள் நாணத்தில் சிவந்து சூடேற, 'அப்படியா?" என்று தான் அவளால் கேட்க முடிந்தது.

மேலும் அவளை ஓரிரு நிமிடங்கள் ஆசை தீர பார்த்து விட்டு, "இந்த அழகுச் சிலை யாருக்குச் சொந்தமாகப் போகிறதோ..?" என பெருமூச்சொன்றை உதிர்த்தபடி மீண்டும் பார்த்தான்.

பின் என்ன தோன்றியதோ திரும்பி விடுவிடுவென நடக்க ஆரம்பித்து விட்டான் நரேந்திரன். பால்கனிப் படியாக கீழே சென்று அவனது பங்களாவை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அப்படி அவன் ஒரு விரைப்புடன் செல்வதைப் பார்த்த மிதிலாவுக்கு முதல் முறையாய் தவிப்பான உணர்வுகள் மனதுள் எழ ஆரம்பித்தது.





# 14

அன்று இரவு மிதிலாவால் நிம்மதியாக தூங்க முடியவில்லைதான். என்னவோ ஒரு இனம் புரியா உணர்வொன்று இனிமையாய் அவளைப் பிடித்து ஆட்டியது என்று கூட சொல்லலாம்.

இதுவரை அன்பு இல்லத்தில் சக மாணவியர்களோடு மட்டுமே பழகி வளர்ந்தவளுக்கு நரேந்திரனுடனான பழக்கம் அவனுடன் வேலை பார்ப்பது யதேச்சையாய் ஏற்படும் ஸ்பரிசம் எல்லாம் புதுமையாய் புது அனுபவமாகவே இருந்தது.

ஆரம்பத்தில் கடுமையாய்த் தெரிந்த நரேந்திரன் இப்போதும் முற்றிலும் மாறி அன்பைக் காட்டுவது, தனது தாயாரையும் ரொம்பவும் அக்கறை காட்டி கவனிப்பது, அவர்களுக்கும் தேவையான உதவிகளை ஓடோடி வந்து செய்வது எல்லாம் அவள் கவனத்தை வெகுவாய் கவர்ந்தது.

அவனும் தன்னைப் போலவே ஆதரவற்று அனாதையாய் இல்லம் ஒன்றில் வளர்ந்த விஷயம் அவளை மேலும் பாதித்து அவனுக்காக இரக்கப்படவும் வைத்தது.

மேலும் முந்தைய இரவில் நிலவொளியில் அவன் அவள் பக்கம் வந்து விழுங்குவது போல் ஆசையாய் ஒரு பார்வை பார்த்தானே... அதற்கு அர்த்தம் தான் என்ன?

பெருமூச்சொன்றை இழுத்தவாறு, இந்த அழகுச்சிலை யாருக்கு சொந்தமாகப் போகிறதோ? என்று வேறு ஏக்கமாக கூறினான்.

எதனால் அப்படிக் கூற வேண்டும்?

மைவிழிக் கண்கள், அழகு... ஜொலிப்பு, என்றெல் லாம் கூட வர்ணனை செய்து பாராட்டினானே... எதனால்?

இதே நேரம் இப்படி மற்ற யாரும் இப்படி விழுங்குவது போல் பார்த்தாலோ... இப்படி அவள் அழகைப் புகழ்ந் தாலோ... அவள் கோபம் கொண்டு சட்டென திரும்பி நடந்திருப்பாள்.

ஆனால்... அவள் அப்படி நடக்கவில்லையே...! நரேந் திரன் சொல்லும் போது அவளுக்கு கோபம் வரவில் லையே! மாறாக இன்னும் எதாவது அவளைப் பற்றி பேசமாட்டானா என்ற ஏக்கம் தானே எழுந்தது.

எதனால் அப்படி...? என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். தூக்கம் வராமல் ரொம்ப நேரம் புரண்டு அப்படியே தூங்கியும் போனாள்.

மேலும் பத்து நாட்கள் சென்ற போது அவள் நரேந் திரனுடன் வொர்க்கிங் ஸைட், பேக்டரி ஸைட் என வெவ் வெறு இடங்களுக்கு செல்ல வேண்டியிருந்தது.

காரில் அவனுக்கு பக்கத்து ஸீட்டிலே குறிப்புகளைத் தூக்கி வைத்துக் கொண்டு உட்கார்ந்து வருவாள். நரேந் திரன் அது போன்ற பயணத்தில் பெரும்பாலும் அலுவலக விஷயங்களையே எதாவது பேசிக் கொண்டு வருவான்.

சில சமயம் கேண்டின் பக்கம் நிறுத்தி சிறிதாக ஸ்நாக்ஸ் களை உணவருந்தி விட்டு கிளம்புவது உண்டு. அவள் மறுத்து தயக்கம் காட்டினாலும், ஸைட்டுக்குச் சென்றால் திரும்ப நேரமாகும் என வற்புறுத்தி சாப்பிடச் சொல்வான்.

ஓரிரு சமயங்கள் மாலை நேரம் ஸைட்டை பார்வை யிட்டு விட்டு திரும்பும் போது மலையடிவார ஏரிப்பக்கம் வண்டியை நிறுத்தி விடுவான்.



சில்லென்ற காற்றுடன் சுற்றிலும் அடர்ந்த மரங்கள் சூழ அமைந்த அழகான ஏரி அது. அதில் கொக்கு, நாரை, கூர்மூக்கு, பெலிகான் போன்ற விதவிதமான பறவைகள் வந்து செல்வதுண்டு.

அதையெல்லாம் ஆர்வமாய் அவளிடம் விளக்கிக் காட்டுவான். மிதிலாவும் அதை வெகுவாய் ரஸித்துப் பார்ப்பாள்.

அப்படித்தான் ஒரு நாள் மாலை வேளையில் ஏரிக் கரைப் பக்கம் இருவரும் இயற்கையை ரஸித்தபடி காலாற ஏரிமணலில் நடந்து கொண்டிருந்த போது பேசிக் கொண்டே வந்த நரேந்திரன் பேச்சு வாக்கிலே கரங்களை வீசியபடி அவள் கையோடு தனது விரல்களை கோர்த்துக் கொண்டான்.

அவன் பாட்டுக்கு எதுவும் நடைபெறாதது போல் தொடர்ந்து பேசியபடி நடக்க அவள் தான் தவித்தாள். அந்த விரல்களின் ஸ்பரிசம் ஜிவ்வென்று அவளுள் உணர்வுகளைத் தூண்டியது.

என்ன இது காதலர்கள் போல் கை கோர்த்து ஜோடி யாய் செல்கிறோமே...? என வெகுண்டு போய் கேள்வி எழுப்பி ஒரு மனம் நினைத்தாலும் எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் இன்னொரு மனம் அதை அனுமதித்தது.

சட்டென நிகழ்ந்த ஒரு தோள் இடிப்பும், கவனியாத கல் ஒன்றில் அவள் கால் வைத்து தடுமாறி கீழே விழப் போன போது அவன் தாங்கிப் பிடித்ததும், ஒரு கணம் பூக்குவி யல் போல் அவளை நெஞ்சோடு அணைத்து விடுவித்த தும் அவளால் மறக்க முடியாதவைகளாய் ஆயிற்று!

அன்று வீட்டுக்கு வந்தவள் வெகு நேரமாய் அப் படியே பிரக்ஞையில்லாதவள் போல் கற்சிலையாய்

உட்கார்ந்து விட்டாள். தாயார் அவளை ரொம்ப நேரம் கவனித்து, ''என்ன கண்ணு...?'' என உலுக்கிய போது தான் முகம் சிவக்க...., இன்று என்ன ஆயிற்று? ஏன் இப்படி ஆகிவிட்டேன்?' என தன்னையே கேள்வி கேட்டுக் கொண்டாள்.

அன்று இரவும் நரேந்திரனின் நினைப்பால் அவளுக்கு தூக்கம் போயிற்று. அவனுடன் ஏரிக்கரையில் நடந்தது பேசியது என ஒவ்வொன்றாய் ஞாபகம் வந்து மனத்திரையில் ஓடியது. அந்த மெல்லிய மென்மையான அவனது அணைப்பு அவளை ரொம்பவும் இம்சித்தது.

இவ்வளவு நாள் இல்லாமல் திடீரென இப்படி நினைவுகள் பீறிடுகிறதே? என நினைத்தவளுக்கு அதிர்ச்சியாய் அந்த விஷயமும் புரிந்தது.

தன்னையறியாமலே தினமும் அவள் நரேந்திரனை பார்க்கத் துடிப்பதையும், வேலையின் போது வலிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி எதாவது அவனுடன் பேச தான் முயல்வதையும் திடுக்கிடலாகவே அவள் உணர்ந்தாள்.

ஆஹா...! அன்பு இல்லத்தில் எப்படி வளர்ந்தவள் அவள்! வெளியில் செல்லும் போதும் குனிந்த தலை நிமிராமல் எந்த ஆணையும் நிமிர்ந்து பார்க்காமல் அவள் செல்வதை அவளது அன்பு... இல்லத் தோழிகளே வியந்து எப்படி பாராட்டி இருக்கிறார்கள்...?

அப்படிப்பட்டவளா இன்று இப்படி...? என்ன தான் ஆயிற்று? எப்போதும் நரேந்திரன் பார்ப்பதும் நரேந்திரனுடன் பேசுவதை எண்ணியுமே மனம் அலைபாய்ந்து பரபரக்கிறதே?

இனி... நரேந்திரனை நினைத்தபடி தலையை விரித்துப் போட்டுக் கொண்டு ஆடாதது ஒன்று தான் பாக்கி!



மிதிலா திகைப்பாய் தன்னை உணர்ந்து அதுபற்றி நரேந்திரனிடம் ஒரு நாள் விரிவாய் மனம் விட்டு பேசி விட வேண்டும் என்று முடிவெடுத்த நிலையில் தான் நரேந்திரனும் அந்த அதிர்ச்சியான விஷயத்தைச் சொன்னான்.

வழக்கம் போல் வேலை முடிந்து கிளம்பப் போன வளிடம், ''ஒரு நிமிடம் மிதிலா...'' என நிறுத்தியவன், ''ஒரு முக்கியமான விஷயம் உன்னிடம் பேச வேண்டியிருக்கிறது. எப்போது பேசலாம்?'' என அவளையே கேள்வி கேட்டான்.

மனதுள் பட்டாம்பூச்சிகள் சிறகடிக்க பரவசமாய் உணர்ந்தவள், ''என்ன விஷயம்? இப்போதே சொல்லுங்கள் ஸார்?'' என்றாள் ஆவலுடன்.

''அது ரோஜர்... ரோஜர் பற்றிய விஷயம் மிதிலா...'' என்ற போது அவளது முகம் மெல்ல மாறியது.

ஆனால் தனது தெளிவான குரலில் நரேந்திரன் விஷயம் முழுவதையும் சொன்ன போது அவளது முகம் பேயறைந்தது போல் ஆகி விட்டது.

## 15

**ந**ரேந்திரன் ஒரு வரி விடாமல் எல்லாவற்றையும் தெளிவாய் சொல்லி விட்டு சென்று விட்டான்.

மிதிலா ஏறக்குறைய சிற்பமான கற்சிலை போலவே ஆகிவிட்டாள்!

அவள் இதை இப்படி கொஞ்சமும் எதிர்பார்க்க வில்லை!

ரோஜர்... வழக்கம் போல் எதாவது யோசனை சொல் வார் வழிகாட்டுவார் என்று பார்த்தால் இன்று இப்படி ஒரு இடியைத் தூக்கிப் போட்டு விட்டாரே?

நரேந்திரன் தயங்கித் தயங்கி சொன்ன விஷயம் இது தான்.

'ரோஜர் இப்போது ஒரு திடீர் முடிவுக்கு வந்து விட் டாராம். தனது பெரும் தொழில் நிர்வாகத்தையும், அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் முக்கால் சதவீதத்தை சமுக நலப் பணிகளுக்கு உதவி வரும் தனது அறக்கட் டளையையும் தனது காலத்திற்குப் பின்னாலும் பாது காத்து நிர்வகிக்க ஒரு சரியான ஆள் தேவையாம்.

மேலும் அப்படி அவர் தேர்ந்தெடுக்கும் நபரை வெறும் மூன்றாம் மனிதராய் இல்லாமல் சட்டப்படி தனது உறவு போன்ற ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டால் தான் பிற்காலத்தில் எவ்வித இடைஞ்சலுமில்லாமல் அந்த நபர் செயலாற்ற முடியும் எனவும் நம்புகிறோம்.

அப்படி அவர் யோசித்துப் பார்த்ததில் அவர் தேர்ந் தெடுக்கும் அந்த நபரை தனது 'மனைவி' போல் ஆக்கிக் கொண்டால் தான் சரி வரும் என அவரது வழக்கறி ஞர்கள் சொன்னார்களாம். அதனால் இவ்வளவு வருடங் கள் கல்யாணமே வேண்டாம் என பிடிவாதமாய் இருந்த அவர் இப்போது மனம் மாறி விட்டாராம்.

தனது குறிக்கோள் தனக்குப் பிறகும் நல்லபடியாக செயல்பட்டு மக்களுக்கு உதவ வேண்டும் என்ற கார ணத்திற்காக, இப்போது திருமணம் செய்து கொள்ளலாம் என்ற முடிவை எடுத்து விட்டாராம்?



நரேந்திரன் கதை போல் இதைச் சொல்ல, ''மிக நல்ல முடிவு தான். இதை நானும் வரவேற்கிறேன்...'' என உற்சாகமாய்த்தான் மிதிலாவும் சொன்னாள்.

ஆனால் நரேந்திரன் சொன்ன அடுத்த வரி தான் அவளை மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாகி விட்டது.

''ரோஜர் அப்படி திருமணம் செய்ய பெண்ணைத் தேடி சரியான பெண்ணையும் தேர்ந்து எடுத்து விட் டாராம். அப்படி அவர் தேர்ந்தெடுத்த பெண் வேறு யாருமல்ல. நீதான்...!''

நரேந்திரன் சொல்ல, ''என்ன நானா? என்னையா ரோஜர் தேர்ந்தெடுத்திருக்கிறார்?'' என்ற அதிர்ச்சியோடு உரக்கக் கூவி விட்டாள்.

நரேந்திரன் அமைதியாக தலையாட்டியவன், ''அதற்கு தகுந்த காரணமும் இருக்கிறது. அன்பு இல்லச் சூழ்நிலை யில் நீ அமைதியாக வளர்ந்திருப்பதால் உனக்கு மிகுந்த பொறுப்பும் அமைதியான குணமும் இயல்பிலேயே அமைந்து விட்டதாகவும், மேலும் ரங்கமணி அம்மாள் மூலம் உனது நடவடிக்கைகளை எல்லாம் கவனித்து இந்த முடிவிற்கு தான் வந்ததாகவும் சொல்லியிருக்கிறார்.

''அப்படியா?''

அவள் ஷாக் அடித்தது போல் வியக்க நரேந்திரன் தொடர்ந்தான். ''ஆக ரோஜருக்கு பிடித்தது, அவர் தனது வாழ்க்கைத் துணையாய் செலக்ட் செய்திருப்பது உன்னைத் தான்! ஆனால் அதே நேரம் எல்லாமே உன் சம்மதத்தைப் பொறுத்து தான். உன் முடிவை வைத்து தான், அதற்கு மரியாதை கொடுத்து தான் ரோஜர் மற்ற விஷயங்களை தீர்மானிப்பார்.

உனக்கு இதில் இஷ்டமில்லை என்றால் துளியும் உன்னை வற்புறுத்தமாட்டார் வற்புறுத்தக் கூடாது என்பது அவர் எனக்கு போட்டிருக்கும் கண்டிப்பான கட்டளை.

அதனால் எவ்வித நிர்பந்தமும் உனக்கு இல்லை. நீ நீதானமாய் யோசிக்கலாம். யோசித்து தெளிவான ஒரு முடிவு எடுக்கலாம். சரிதானா?''

நரேந்திரன் தனது நீண்ட உரையை முடித்து விட்டான்.

மிதிலாவுக்கு பட்டென அந்த சந்தேம் உதித்தது. அவளுக்கு முன்பு ஒரு முறை ரங்கமணி அம்மாள் காட்டிய புகைப்படத்தில் ரோஜர் வயதானவராகத்தானே இருந்தார்?

அதையே நரேந்திரனிடம் கேள்வி கேட்க அதிர்வில்லாமல் சிரித்தவன், ''அது அவருடைய புகைப்படம் அல்ல. அவருடைய தந்தையுடையது. ரோஜர் எப்போதும் தனது முகத்தை, தனது அடையாளத்தை தான் உதவி செய்பவர்களுக்கு காட்ட விரும்பியதில்லை. அதனாலே அப்படிச் செய்தார். உண்மையிலேயே அவர் ஒரு நடுத்தர வயதுக்காரர் தான். என்ன... என்னை விட ஒரு பத்து... பதினைந்து வயது அதிகமாய் இருக்கும். நீயே கற்பனை பண்ணிக் கொள்! மற்றபடி உனக்குத் தெரியுமே? குணத்தில் பெரும் பரோபகாரியாய் அவர் தங்கம், வைடூரியம்... என இன்னும் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம்!

இதில் இன்னொரு விஷயமும் இருக்கிறது மிதிலா. ரோஜர் எடுத்திருக்கும் இந்த முடிவை உன்னிடம் நேரிடையாகச் சொல்லி உன் மன நிலையை அறியத்தான் ரோஜர் விருப்பப்பட்டார். ஆனால் அவருக்கு உன்னிடம் அப்படிக் கேட்க ரொம்ப தயக்கமும் கூச்சமும் ஏற்பட்டு விட்டது.



அதனாலே என் மூலமாக உன்னிடம் தெரிவிக்கச் சொன்னார். உன்னை ஒரு நாள் முழுக்க யோசிக்கும்படி கேட்டிருக்கிறார். நாளை இதே நேரம் உனக்கு ரோஜர் போன் செய்து பேசுவதாக சொல்லியிருக்கிறார். அப்போது நீ சிந்தித்து எடுக்கும் தெளிவான முடிவை அவரிடமே சொல்லி விடுவது உத்தமம்...!''

நரேந்திரன் எல்லா விஷயத்தையும் கொட்டி விட்டு அகன்று விட்டான். கற்சிலை போலவே நடந்து மிதிலா வீட்டிற்கு வந்தாள்.

இதுவரை அவள் ரோஜரை முன் பின் பார்த்தது கூட கிடையாதே? முன் பின் பார்க்காதவரை எப்படி திடீரென மணக்க முடியும்?

அதற்கும் ரெடிமேடாய் அவளிடம் பதில் சொல்லியிருந்தான் நரேந்திரன். ''மிதிலா, நீ உன் சம்மதத்தை சொல்லி விட்டால் அடுத்த நாளே ப்ளைட் பிடித்து உன் முன் வந்து நின்று விடுவார். மேலும் தன்னை கட்டிக் கொள்ளப் போகிற பெண் எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாமல் தனது பரோபகார குணத்தை மட்டுமே பார்க்க வேண்டும் என நினைக்கிறார். அதனாலே இந்த ஏற்பாடு...'' என்றும் விளக்கியிருந்தான்.

எல்லாம் சரிதான்! ஆனால்... ஆனால்.. அதற்காக அவரை மணக்க முடியுமா?

எவ்வளவு பெரிய உதவியாளர் பரோபகாரி அவர்! அவளுக்கு மட்டும் செய்த உதவிகள் கொஞ்ச நஞ்சமா?

அவர் ஸ்பான்ஸர் செய்து பணஉதவி செய்ததால் தானே அவளால் படிக்க முடிந்தது? அன்பு இல்லத்தில் எவ்வித பிரச்சினையுமில்லாமல் வளர முடிந்தது?

இன்று "மிதிலா..." என சொல்லிக் கொள்ளும்படி ஒருத்தி இருப்பதே அவனால் தானே?

அது மட்டுமா...? திடீரென அப்பா அம்மா உறவுகள் வந்து, சித்தியால் வஞ்சிக்கப்பட்டதை அறிந்து அவள் துடித்து நின்ற போது... சட்டென உதவிக்கரம் நீட்டி அவளுக்கு வழிகாட்டியதும் அவர் தானே?

இன்று அவரது தேயிலை எஸ்டேட்டில் கௌரவமான ஒரு வேலை, அவளும் அவள் தாயும் தங்கிக் கொள்ள அவுட்ஹவுஸ் வீடு, என எவ்வளவு ஏற்பாடுகள் செய் திருக்கிறார்?

அவர் மட்டும் அப்படி உதவாவிட்டால் அவள் தன் தாயுடன் தெருவில் அல்லவா நின்றிருக்க வேண்டும்?

அப்படி அவளுக்கு மட்டுமல்ல எத்தனையோ ஆயிரக் கணக்கான பேருக்கு முகம் தெரியாமல் உதவி வரு கிறாரே?

அப்படிப்பட்டவர் முதல் முறையாய் தயங்கி ஒரு விஷ யத்தைக் கேட்கிறார். அதற்கு எப்படி மறுத்துச் சொல்ல முடியும்?

அவர் செய்த உதவிகளின் நன்றிக்காக அவளால் சம் மதத்தை தவிர வேறு எதை பதிலாகச் சொல்ல முடியும்?

ஆனால்... ஆனால்... அதற்காக ரோஜரை மணந்து கொள்வதா...?



என்ன தான் ரோஜர் கொடைவள்ளலாய் இருந்தாலும் அவர் நடுத்தர வயதுக்காரர்தான் என்றெல்லாம் இந்த நரேந்திரனே சொல்லி விட்டானே?

மேலும் கடந்த ஒரு மாதமாய் அவளுக்கு 'நரேந்திர மயக்கம்' ஏற்பட்டு அவளையறியாமலே அவளுள் என்னென்னவோ ஆசைகள் கோட்டைகள் எழும்பி விட்டனவே!

ஆனால்... ஆனால்... ரோஜர் அவளை வாழ்க்கைத் துணைவியாய் ஆக்க நினைக்கும் போது... அதையெல் லாம் அவள் உடைத்து தூக்கி எறிந்து தானே ஆக வேண்டும்!

மேலும் பல மணி நேரம் யோசனை செய்தாள் மிதிலா.

மறுநாள் போனில் தன்னுடன் பேசிய ரோஜரிடம், தன் முழு சம்மதத்தையும் முகம் இறுகச் சொன்னாள் மிதிலா.

## 16

மிதிலா ரோஜரிடம் தன் சம்மதத்தைச் சொன்ன போது மறுமுனையில் பேசிய ரோஜர், "ஒன்றும் அவசர மில்லை மிதிலா. இன்னும் ஒரு வார கால அவகாசம் எடுத்து நீ யோசிக்கலாம்..." என்ற போது அவசரமாய் மறுத்தாள்.

''அவகாசம் தேவையில்லை... ரோஜர் ஸார்... நீங்கள் முகூர்த்த நாளை பார்த்து குறித்து விடுங்கள். எனக்கு முழு சம்மந்தம்!'' என்றாள் மீண்டும் அதே குரலில்.

''அப்புறம் மிதிலா, நீ என்னுடைய குரலைத்தான் கேட்டிருக்கிறாய். என் முகத்தை இன்னும் பார்க்கவில்லையே... பின் எப்படி சம்மதிக்கிறாய்?''

மிதிலா பதிலுக்கு புன்னகையொன்றை மலர விட்டவாறு, ''ரோஜர் ஸார், என்னைப் பொறுத்தவரையில், உங்களது மற்றவர்களுக்கு உதவி செய்யும் பரோபகார மனது தான் உங்களது முகம்! அதை நான் எப்போதோ பார்த்து விட்டேன். அந்த இனிமையான மனதின் அழகில் மயங்கித்தான் உங்களை திருமணம் செய்யவும் சம்மதித்திருக்கிறேன். அதனால் நீங்கள் எதுவும் கவலைப் படாமல் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்...'' என்றாள்.

''அப்புறம் மிதிலா.... என்னுடைய வயது...'' என ரோஜர் ஆரம்பிக்க அவசரமாய் குறுக்கிட்டு, ''ஐயோ ரோஜர் ஸார்! அதுவெல்லாம் ஒரு பொருட்டல்ல...! நீங்கள் உடனே ஏற்பாடு செய்யுங்கள். மேலும் நான் உங்கள் தாராளமான மனதை வெகுவாய் விரும்புகிறேன் என்பதைக் காட்ட உங்களை திருமணத்தன்று திருமண மேடையில் தான் சந்திக்கப் போகிறேன். பார்க்க விரும்புகிறேன். உங்களுக்குச் சம்மதம் தானா?'' என்றாள்.

மறுமுனையில் பெரும் சிரிப்பு சத்தம் எழுந்து ஓய்ந்தது.

''உன் இஷ்டம் அதுவானால் எனக்கும் ஓ.கே.தான் மிதிலா! ரைட்... அப்போது நான் உடனே கல்யாண ஏற்பாடுகளை கவனிக்கிறேன். சரிதானா?''



''சரி ஸார்...!''

மறுமுனையில் அதே சிரிப்பு எதிரொலிக்க ரோஜர் போனை வைக்க கணத்த மனதுடன் ரிசீவரை வைத்தாள் மிதிலா.

ரிசீவரை வைத்தவளுக்கு அவள் சொல்லிய ஒவ்வொரு வார்த்தையும் சத்தியமான உண்மை என்று தோன்றியது.

அவள் ரோஜரின் முகத்தைப் பார்க்கவில்லை. அவரது உயரிய பரோபகார குணம் மட்டும் தானே அவளுக்குத் தெரியும். அதற்காகத்தானே சம்மதித்திருக்கிறாள்!

அன்று இரவு தாயிடமும் செல்ல இந்த விஷயத்தைச் சொன்னாள். தாய் லட்சுமிக்கு ஒன்றும் சரிவர புரியவில்லை என்றாலும் ரோஜர்... பெரும் தாராள மனசு கொண்டவர் என்பதெல்லாம் மிதிலா மூலம் அறிந்து வைத்ததினால், ''நீ முடிவு செய்தால் எல்லாம் சரியாகத் தான் இருக்கும் கண்ணு...'' என சம்மதம் கூறி விட்டாள்.

பாவம்... தாய்க்கு ரோஜரின் வயது தெரியாது. அவளறிந்த வரையில், அந்த ரோஜரின் புகைப்படத்தை பார்த்த வரையில் ரோஜருக்கு கண்டிப்பாக அறுபது வயதுக்கு மேலாகத் தான் இருக்கும். அது... மட்டும் தாய்க்குத் தெரிந்தால் இப்படி சம்மதத்தை சொல்ல முடியுமா? என்று நினைத்தாள்.

அலுவலகம் சென்றால் எதிரில் அடிக்கடி குத்துக்கல்லாய் நரேந்திரனே வந்து சென்று கொண்டிருந்தான். அவனை நிமிர்ந்து முகம் பார்க்கவே அவளுக்கு சங்கடமாய் இருந்தது.

அதில் அவன் வேறு, ''என்ன மிதிலா, ரோஜர் சாருக்கு பதில் சொல்லி விட்டாயா?'' என்று கேட்க, ''ம்ம்... எனது

சம்மதத்தை சொல்லி விட்டேன்...'' என்றாள் உணர்ச்சி யற்ற குரலில்.

அத்தோடு அவன் முகத்தையும் ஆழமாய் உற்றுப் பார்த்தாள். 'இவனுக்கு... இந்த முடிவில் சந்தோஷமா? வருத்தம் தானே கொள்வான்...? அவளோடு ஏரிக்கரை, பால் கனி, நிலவொளி என பல இடங்களில் காதல் பார்வை பார்த்தவன் தானே? அதற்குள் மனம் மாறி விட்டானா... அல்லது ரோஜருக்காக மனசை மாற்றி விட்டானா?

அவள் அப்படி நரேந்திரனை உற்றுப் பார்க்க அவனது முகம் எவ்வித சலனமுமில்லாமல் இருந்தது. அவளால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

சரிதான்! சரியான கல்லுளி மங்கன்! ரோஜரின் உதவியைப் பெற்ற நாமே இப்படி மனம் மாறி இருக்கும் போது அவர் உடனே செகரட்டரியாக இருப்பவன் ரோஜருக்காக தனது மனதை மாற்றிக் கொள்ள மாட் டானா?

அப்படித்தான் இருக்கும்! தன்னைப் போல் நரேந்திர னும் ரோஜருக்காக தனது உணர்வுகளை மறைத்து தியாகம் செய்திருக்க வேண்டும்!

யோசனையில் அந்த முடிவை கண்டுபிடித்தவள் போல் நிம்மதியும் அடைந்தாள் அவள்!

அதற்குப் பின் வந்த நாட்கள் வேகமாய் சுழன்றது.

ரோஜரின் ஏற்பாட்டின்படி மறுவாரமே ஒரு முகூர்த்த நாள் குறிக்கப்பட்டு கல்யாண வேலைகள் தொடங் கியது.

அடுத்த இரண்டு நாளில் ரோஜர் கூரியர் பார்சல் மூலம் கல்யாண அழைப்பிதழ்களை அனுப்பி விட



தனது அன்பு இல்லத் தோழிகளுக்கு, மேடம் ரங்கமணி அம்மாளுக்கு என அனைவருக்கும் முகவரி எழுதி அழைப்பிதழ் அனுப்புவதில் மும்முரமாகி விட்டாள் மிதிலா.

நரேந்திரனும் சும்மா இருக்கவில்லை.

கல்யாண வேலைகளை தன் தலையில் எடுத்துப் போட்டுக் கொண்டு பம்பரமாய் சுழன்றான். வேண்டிய ஏற்பாடுகளை கரெக்டாக செய்தான்.

இதோ நாட்கள் உருண்டோடி... இன்று முகூர்த்த நாள்!

மிதிலா சொன்னபடியே இரண்டு நாட்களுக்கு முன் ரோஜர் அங்கு குடகுமலைக்கு வந்து அவருக்குச் சொந்த மான இன்னொரு பண்ணை வீட்டில் தங்கியிருப்பது தெரிந்தும், அவரை சந்திக்க அவள் முயலவில்லை, விரும்பவில்லை.

அதனாலே மணப்பெண் மேலும் அவள் அலங்காரத் தில் இருந்து மணமேடை செல்லும் வரை குனிந்த தலை நிமிரவில்லை. குனிய வைத்த முகத்தை உயர்த்த வில்லை!

ஐயர் மந்திரம் சொல்ல சடங்குகள் ஒவ்வொன்றாய் நடந்தது.

மணப்பெண்ணாய் குனிந்த தலை நிமிராமல் இருந்த மிதிலாவின் பக்கத்தில் பட்டு வேஷ்டி சட்டை பளபளப் புடன் மாப்பிள்ளை கோலத்தில் ரோஜர் உட்கார்ந்தார்.

சரியான முகூர்த்த நேரத்தில் மிதிலாவின் கழுத்தில் தாலியையும் கட்டினார்.

நிமிர்ந்து அவரைப் பார்த்த மிதிலா பலமாய் அதிர்ந் தாள்!

# 17

மிதிலாவுக்கு பயங்கரமான அதிர்ச்சி!

நம்பமுடியாமல் கண்களை விரித்து விரித்து பார்த்தவள் அப்படியே இன்பமாய் அதிர்ந்து விட்டாள்!

அவள் பக்கத்தில் உட்கார்ந்து மாப்பிள்ளையாய் தாலி கட்டியது ரோஜரில்லை.. சாட்சாத் நரேந்திரன் தான்!

''என்ன... இது நீங்களா...? நீங்கள் எப்படி?''

அதிர்ந்து உரக்கவே கூவி விட்டாள்.

நரேந்திரன் பதில் சொல்லாமல் புன்னகைக்க... நிமிர்ந்து பார்த்தவர்களுக்கு மேலும் அதிர்ச்சி!

அவளது தாய் லட்சுமி, ரங்கமணி அம்மாள், இன்னும் கம்பெனியின் முக்கியமான உறுப்பினர்கள் எல்லாம் குறும்பாய் அவளைப் பார்த்து புன்னகைத்தபடி!

என்னதான் நடக்கிறது இங்கு?

திகைத்துப் போய் மேலும் மைவிழிகள் விரிய அவள் வியக்க... மெல்ல தனது கரங்களால் அவளது விரல்களை அழுத்தினான் நரேந்திரன்.

''பயப்படாதே! எல்லாம் சரியாகத்தான் நடக்கிறது. கல்யாணச் சடங்குகள் முடியட்டும். எல்லாவற்றையும் விரிவாகச் சொல்கிறேன்...!'' என்றான்.

அவன் சொல்லா விட்டாலும் அவளால் சும்மா இருக்க முடியவில்லை. மை விழிக்கண்கள் மறுபடி அலைபாய ரோஜரைத் தேடினாள்.



ரோஜர் அங்கு இல்லை!

என்னாயிற்று? ரோஜர் சொன்னபடி வரவில்லையா?

மேலும் தவிப்பாய் சில நிமிடங்கள் அவளுக்கு நகர்ந்தது.

ஐந்து நிமிடங்கள் கழித்து தனியறையில் அவளும் நரேந்திரனும் பால் பழம் சாப்பிட்ட ஓய்வுடன்.

கதவை லேசாக சாத்தியவள் பிலுபிலுவென அவனைப் பிடித்துக் கொண்டாள்.

திகைத்து துடித்தவளை ஆறுதலாய் தனது மடியில் அவள் திமிறினாலும் அழுத்தி உட்கார வைத்தவன், ''உனது எல்லா கேள்விகளுக்கும் ஒரே வரியில் பதில் சொல்லிடட்டுமா? சொன்னால் உனக்கு புரிந்து விடும்?'' எனக் கேட்டான்.

''சொல்லுங்கள்...! சொல்லுங்கள்...!'' என்றாள் அவள் பரபரப்பு கொஞ்சமும் விலகாமல்.

''ரோஜர் என்பது வேறு யாருமல்ல. நான் தான்! இந்த நரேந்திரன் தான்!''

அமைதியாய் நரேந்திரன் வார்த்தைகளை முத்து உதிர்த்தான்.

அவள் திகைத்தாள்.

மறுபடியும் விழிகள் வட்டமாய் விரிய நம்ப முடியாமல் அவனைப் பார்த்தாள்.

''என்ன சொல்கிறீர்கள்...? நீங்கள்... நீங்கள் தான் ரோஜரா?''

நரேந்திரன் பதிலுக்கு மென்மையாய் சிரித்தான்.

''என்ன நம்ப முடியவில்லையா? நம்புவது உனக்கு கஷ்டம் தான்! ஏனெனில் நான் அப்படியொரு வயதான முகமூடியை வலிய போட்டுக் கொண்டு... நிறைய பேரிடம் உண்மையை மறைத்திருந்தேன்...''

அவன் தொடர்வதற்குள் அவசரமாய் குறுக்கிட்டாள் அவள். ''ரோஜர்... ரோஜரிடம்... நான் பலமுறை போனில் பேசியிருக்கிறேனே? அவர் குரல் கொஞ்சம் தடிப்பாய்... ஒரு வயதான தோற்றத்தை ஏற்படுத்தும் குரலாய் அல்லவா ஒலிக்கும்?''

அவள் கேள்வி எழுப்ப, ''ஓ... அதுவா?'' என நரேந்திரன் மேலும் சிரித்தவன், அதற்கென்ன? அதே குரலில் பேசிக்காட்டி விட்டால்... போயிற்று...'' என்றபடி தன் பைக்குள் கைவிட்டு அதை எடுத்தான்.

அது... விளையாட்டு பல்செட் போன்ற அமைப்புடன் பிளாஸ்டிக்கால் உருவாக்கப்பட்டிருந்தது. அதை அப்ப டியே தன் வாய் பக்கம் கொண்டு போய் பற்களுக் கிடையே பொருத்தினான்.

பின் கடகடவென, ''என்னம்மா மிதிலா? இப்போது எப்படி என் குரல் ரோஜர் மாதிரி இருக்கிறதா? உண்மை யான ரோஜர் நான் அவனால் ஊர் உலகிற்கு உருவாக் கப்பட்ட கற்பனைப் பாத்திரம். என்ன புரிந்ததா?'' என ரோஜரின் வயதான தடித்த குரலில் நரேந்திரன் அப் படியே பேசிக் காட்ட அவள் வியப்பின் உச்சிக்கே சென்று விட்டாள்.

அதே குரல்! சாட்சாத் ரோஜரின் குரலே தான்! அப்படி யானால் நிஜமாகவே... இந்த நரேந்திரன் தான் ரோஜர் போல் பேசி நடித்திருக்கிறானா?

மேலும் நரேந்திரன் உடன் இருக்கும் போது ரோஜரை தொடர்பு கொண்டாலும் லைன் பிஸியாக இருப்பதாய் தானே அறிவிப்பு வரும். ஒரு முறை கூட நரேந்திரன் முன்னிலையில் ரோஜரிடம் பேசியது கிடையாதே! அந்த ரகசியத்தின் பின்னணி இது தானா?



ஆமாம்! எதற்காக நரேந்திரன் இப்படி நடிக்க வேண் டும்? நல்ல காரியங்கள் பலவற்றை அவளுக்கும் மற்றவர் களுக்கும் செய்து விட்டு எதற்காக ஓடி ஒளிய வேண் டும்?

அவள் புரியாமல் கேள்வி எழுப்ப, ''எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்கிறேன் கண்மணி...'' என்றபடி நரேந்திரன் பேச ஆரம்பித்தான்.

''மிதிலா, நான் சிறுவயதிலேயே தாய் தந்தையை இழந்தவன் என்று நான் சொன்னது உண்மை. ஆனால் தூரத்து சொந்தமான மாமா ஒருவர் என்னை தத்து எடுத்து வளர்த்தார். விபத்தொன்றில் அவர் தனது குடும்பம் முழு வதையும் பலி கொடுத்து விட்டதால் என்னையே தனது முழு வாரிசாக நினைத்து முடிவெடுத்தார்.

இதில் முக்கியமான விஷயம் என் மாமா பணக்காரர். இரண்டு மில்களுக்கு அதிபதி. தன் குடும்பமே விபத் தில் பலியாகிவிட்ட விரக்தியில் அவர் தனது தொண் ணூறு சதவிகித வருமானத்தை சமுக சேவைகளுக்கு மற்ற வர்களுக்கு உதவி செய்ய பயன்படுத்த ஆரம்பித்தார்.

என்னை வளர்த்த அவர் சிறு வயது முதலே அப்படி மற்றவர்களுக்கு உதவி அதனால் நிலையான சந்தோஷம் ஏற்படும் என்பதை அடிக்கடி உணர்த்தினார். தனக்குப் பின் நான் அப்படியே பலருக்கு உதவி செய்யும் பரோப காரியாய் உருவாக வேண்டும் என விரும்பினார்.

நானும் அப்படியே இது போன்ற சமூகப் பணிகளில் மற்ற வர்களுக்கு உதவி புரிவதில் ஆர்வம் கொண்டு வளர்ந் தேன். படித்து முடித்து என் அயராத உழைப்பினால் என்

மாமாவின் தொழிலை விரிவு படுத்தினேன். லட்சங்களில் நடந்த விற்பனைகளை கோடிகளாக மாற்றினேன். ஐந்து வருடங்களில் நான் நினைத்த மாதிரியே ஒரு பெரிய தொழில் சாம்ராஜ்யத்தையே உருவாக்கி விட்டேன்.

எனது மாமாவுக்கு பெரும் திருப்தி. என்னைச் சரியாக வளர்த்து விட்ட சந்தோஷம். அந்த சந்தோஷத்திலேயே ஒரு நாள் அவரையறியாமல் தூக்கத்திலேயே இறந்தும் போனார். மாமாவிற்குப் பின் அவர் நினைத்த விஷயங்களை எல்லாம் செயல்படுத்த மும்மரமானேன்.

சமூக அமைப்புகளுக்கு பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கு தொழிலில் கிடைத்த லட்சக்கணக்கான லாபத்தை அப்படியே கொடுக்க ஆரம்பித்தேன்.

அப்படி நான் செய்யும் உதவி ஒழுங்காக யாராலும் சுரண்டப்படாமல் உரியவர்களுக்கு ஒழுங்காய் போய் சேருகிறதா என்று கண்காணிக்கவே 'ரோஜர்' என்ற ஒரு கற்பனைப் பாத்திரத்தை உருவாக்கினேன்.

ரோஜர் வெளிநாட்டில் இருக்கும் ஒரு முதலாளி மாதிரியும் நான் அவரது தொழில்களை, அவர் செய்யும் உதவிகளை கண்காணித்து வரும் செகரட்டரி மாதிரியும் ஆக்கிக் கொண்டேன்.

நான் இப்படிச் செய்து விட்டு நேரிடையாக நான் பணம் அனுப்பும் தொண்டு நிறுவனங்களுக்கு அனாதை இல்லங்களுக்கு செல்ல ஆரம்பித்தேன். எனது கம்பெனி மூலம் நான் அனுப்பும் உதவிகள் ஒழுங்காய் உரியவர்களுக்கு கிடைக்கிறதா என்றும் அடிக்கடி சோதனை செய்து திருப்தி அடைந்தேன்... மேலும்...''



''சொல்லுங்கள்...''

''உன் விஷயத்தில்... என் மாமா உனக்கு ஸ்பான்ஸராகி ஏற்கனவே உன்னைத் தேர்ந்தெடுத்திருந்தார். அதனால் அவரது மறைவுக்குப் பின் நான் அந்த பொறுப்பை ஏற்று... அன்பு இல்லத்தில் நீ வளர எல்லா உதவிகளையும் செய்தேன்...''

''புரிகிறது... புரிகிறது...'' என குறுக்கிட்டு தலையாட்டினாள் மிதிலா.... கூடவே, ''எனக்கு ஸ்பான்ஸராய் நீங்கள் பொறுப்பெடுத்து ரொம்ப வருடங்கள் நீங்களே வந்ததாக மேடம் ரங்கமணி அம்மாள் சொல்லியிருக்கிறார்களே?'' என்றாள் விழி உயரும் சந்தேகத்துடன்.

நரேந்திரன் கொண்டிருந்த முறுவலை பெரிதாக்கியவன், ''ம்ம்... உண்மை தான்! உன்னை விட எனக்கு பத்து வயது அதிகம். இப்போது யோசித்துப் பார். உனக்கு எல்லாம் புரியும்...'' என்றான்.

அவள் காதுமடல்கள் அதிர தலையாட்டி, ''புரிகிறது. ஆனால் உங்களைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே...'' என வியப்பு காட்டியவள், ''சரி முக்கியமான விஷயத்தை இன்னும் நீங்கள் சொல்லவே இல்லையே... சொல்லுங்கள்...!'' என்றாள்.

''அது... என்ன முக்கியமான விஷயம்?'' என அவன் திகைப்பாய் பார்க்க அவள் குறும்பாய் முறுவலித்து அவன் கட்டிய தாலிச் சரடை தூக்கிக் காட்டினாள்.

''இதை இப்படி ரோஜர் பெயரைச் சொல்லி பலவந்தமாக கட்டிய பின்னணி?'' என இழுத்தாள்.

நரேந்திரன் கடகடவென சிரித்தவன், ''ஆமாம். ஒரு வகையில் பலவந்தம் தான்!'' என்றவன் தொடர்ந்து,

''எனது மாமா என்னைத் தேர்ந்தெடுத்தது போல் நானும் என்னுடன் துணையாக என் சமூகப் பணிகளை எல்லாம் ஊக்குவித்து எனக்கு பக்க பலமாக இருக்கும் ஒரு வாழ்க் கைத் துணையாக ஒருவரை தேர்ந்தெடுக்க எண்ணி னேன். அப்படி நான் தேடியதில் கிடைத்த வைரம் தான் நீ! அன்பு இல்லச் சூழ்நிலையில் வளர்ந்ததால் இயல்பிலேயே இரக்கத்தோடும், ஒழுக்கத்தோடும் உனது குணம் அமைந்திருப்பதைக் கண்டு பிடித்தேன் ஆனாலும் உன்னிடம் உடனே சொல்லாமல் பொறுமை யாய் இருந்தேன். இதில் திடீரென உன் குடும்பம் உன் பெற்றவர்கள் பற்றியெல்லாம் தெரிய வர மகிழ்ச்சி யோடு உன்னை அவர்களோடு சேர்த்தேன்.

ஆனால் அங்கும் சூழ்ச்சிகளையும் விஷமத் தனத்தை யும் கண்டு சகிக்க முடியாமல் நீ தவிக்க... உனக்கு உதவி செய்ய இந்த தேயிலை எஸ்டேட்டில் வேலைக்கும் தங்குவதற்கும் ஏற்பாடு செய்தேன்...''

நரேந்திரன் மேற்கொண்டு தொடருவதற்குள், ''ஸ்டாப்...! ஸ்டாப்...!'' என கைகளை உயர்த்தினாள் மிதிலா.

''மீதியை... நான் சொல்லட்டுமா?'' என்றபடி கண் களை அகல விரித்தவள், ''அப்படி நான் உங்கள் எஸ் டேட்டிற்கு குடி வந்தவுடன் உங்களது மன்மத வீச்சை ஆரம்பித்து என்னை மயக்கப் பார்த்தீர்கள், என்ன நான் சொல்வது சரி தானே?'' அவள் ஆவல் பொங்க கேட்க தலையை பலமாய் ஆட்டினான் நரேந்திரன்.

''நூறு சதவிகிதம் சரி...! அச்சுப் பிசகாமல் சொல்லி விட்டாய்... நானும் உன்னை வசீகரிக்க வேலையிடத்



திலும் சரி, ஏரிக்கரை, பால்கனி போன்ற இயற்கை. என்னென்னவோ சில்மிஷங்கள் செய்து பார்த்தேன்...'' என்றவன் நீளமூச்சுடன் அலுத்துக் கொண்டு, ''நீ என்னடாவென்றால் அந்த காதல் விஷயத்தில் சரியான எல்.கே.ஜி.யாய் இருந்து கொண்டு... குழம்பிக் கொண் டிருந்தாய். வெறும் பார்வையால் மட்டும் அடிக்கடி என்னைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதுமா...? டக்கென ஒரு அணைப்பு மட்டும் செய்திருந்தால்... எவ் வளவு சந்தோஷப்பட்டிருப்பேன்... உன் மனநிலையை அன்றே கண்டு பிடித்திருப்பேனே...?''

அவன் சொல்ல, ''ஆஹா...! நல்ல ஆராய்ச்சிதான் பண்ணியிருக்கிறீர்கள். நான் பார்வை செய்தேனாம்... அணைக்காமல் தயக்கம் காட்டினேனாம்.... நல்ல கண்டு பிடிப்பு தான்...'' என்றபடி அவள் தனது கிண்கிணிப்பு சிரிப்பை பெரிதாக்க... அவன் ஒரு கணம் திகைத்து, ''என்ன அப்படி இல்லையா...?'' என்றான் வியப்புடன்.

''அட... பதட்டத்தைப் பாரேன்...!'' என அவனைக் கேலி செய்தவள், ''மிகச் சரியானது தான் உங்களது யூகம். அதை உடனே நிருபிக்கட்டுமா?'' என்றபடி தனது கைகளால் இறுக ஒரு நிமிடம் அவனை அணைத்து தனது பட்டான இதழ்களை அவனது கன்னங்களில் பதித்து விடுவித்தாள்.

''இப்போது சந்தேகம் தீர்ந்ததா?'' என்றதும் அவளது முத்த ஸ்பரிசத்தில் சிலிர்ப்பானவனாய் ''தீர்ந்தது... புரிந்தது...'' என்றவன், ''கண்மணி, நீ அன்பு இல்லத்தில் கட்டுப்பாட்டுடன் வளர்ந்தவள்; உனக்கு இது போன்ற காதல் சமாச்சாரங்கள் எல்லாம் புதிது என்று அறிந்து

தான் உன்னை வேகப்படுத்த மீண்டும் 'ரோஜர்' முக மூடியை எடுத்து அவர் உன்னை மணந்து கொள்ள விரும்புவதாய்ச் சொல்லி அவசரப்படுத்தினேன். நீயும் நான் நினைத்தது போல் நன்றிக் கடனுக்காக ரோஜரை திருமணம் செய்ய சம்மதித்தாய். ஆனாலும் உன் மனம் முழுவதும் நான் இருந்ததால் இருதலை கொள்ளி எறும்பு போல் தவித்தாய்.

வேறு வழியில்லாமல் உன் ஆசைகளை எல்லாம் நன்றிக்கடனுக்காக புதைத்து ரோஜரை மணக்க குனிந்த தலை நிமிராமலே மணமேடையும் ஏறிவிட்டாய்...''

அவன் சொல்லச் சொல்ல குங்குமப் பூரிப்புடன் சிவந்த தனது முகத்தை கரங்களால் வெட்கமாய் மூடிக் கொண்டு குனிந்தாள். கொண்டிருந்த இனிமைப் புன்முறுவலை மேலும் மேலும் பெரிதாக்கினாள்.

அவனோ, ''ஊகூம்...! இந்த வெட்கப் பாசாங்கு எல் லாம் இனியும் என்னிடம் கூடாது... கூடவே கூடாது! நானும் ரொம்ப நாள் காத்திருந்தாயிற்று. இனி அதிரடி நடவடிக்கை தான்...!'' என்றபடி சிணுங்கியவளின் முகம் நிமிர்த்தி அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட் டான்.

பின் ரகசியக் குரலில், ''என்ன ஆரம்பிக்கட்டுமா?'' என்று அவன் கேட்க, அதற்கு மேல் அவனை பேச விடாதபடி இறுக தன் நெஞ்சோடு அவனை அணைத்து தனது வழக்கமான கிண்கிணிச் சிரிப்பை இனிமையாய் உதிர்ந்தாள் மிதிலா!

★